மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு முதல் தூத்துக்குடி வரை எடுக்கப்பட்ட சாலை 11 மாவட்டங்கள் தொடர்புடைய சாலை. உலக வங்கி நிதியுதவியோடு செயல்படுத்தப்படும் அந்தத் திட்டத்தில் 13 புறவழிச் சாலைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே ஆற்காடு நகரத்திற்குப் புறவழிச் சாலை அமைப்பது விடுபட்டுவிட்டது. அது நியாயமான கோரிக்கை. எனவே, அது குறித்துத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், அந்த மாவட்டத்தைச் சார்ந்த நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் எங்களுடைய கவனத்திற்கு ஆய்வுக் கூட்டத்திலே கொண்டு வந்ததார்கள். அதற்குப் பிறகு உலக வங்கியைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், அந்தப் புறவழிச் சாலையை அமைப்பதற்கு அரசு அதற்காக என்ன செய்ய முடியுமோ, அதைத் தொடர்ந்து செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்.

[2010 மே 4

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரினுடைய போக்குவரத்து நெரிசலைத் தீர்ப்பதற்காக மதுரை நகருக்கு வெளியே வெளிவட்டச் சாலை ஒன்று நான்கு புறங்களும் இணைக்கின்ற வகையிலே அமைக்கப்பட்டது. ஆனால் மூன்று புறங்களில்தான் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உத்தங்குடியிலிருந்து சமயநல்லூர் வரை அந்த இணைப்புச் சாலை இன்னும் அமைக்கப்படவில்லை. அந்தச் சாலையை அமைத்தால்தான் அந்தப் புறவழிச் சாலை முழுமை அடையும் என்பதை அரசுக்குத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் புறவழிச் சாலை முழுமையடைவதற்கு எப்போது அறிவிப்பார் என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக தேசிய நெடுஞ்சாலை எண் 7-இல்தான் அந்தப் புறவழிச் சாலை அமைப்பதற்குரிய திட்டம், மத்திய அரசின் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலமாக எடுக்கப்பட்டது. இடையிலே கட்டுமானப் பொருள்களுடைய விலையேற்றம் போன்ற பிரச்சினைகள் காரணமாக, ஒப்பந்ததாரருக்கும், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதற்குப் பிறகு, கருத்து வேறுபாட்டிற்குத் தீர்வு காணப்பட்டு, பணிகள் சில இடங்களிலே வேகமாக நடைபெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற அந்தக் குறைபாட்டை சரி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

140—

விடுதி

***113205—திரு. சுப. மதியரசன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 மே 4

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரினுடைய போக்குவரத்து நெரிசலைத் தீர்ப்பதற்காக மதுரை நகருக்கு வெளியே வெளிவட்டச் சாலை ஒன்று நான்கு புறங்களும் இணைக்கின்ற வகையிலே அமைக்கப்பட்டது. ஆனால் மூன்று புறங்களில்தான் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உத்தங்குடியிலிருந்து சமயநல்லூர் வரை அந்த இணைப்புச் சாலை இன்னும் அமைக்கப்படவில்லை. அந்தச் சாலையை அமைத்தால்தான் அந்தப் புறவழிச் சாலை முழுமை அடையும் என்பதை அரசுக்குத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் புறவழிச் சாலை முழுமையடைவதற்கு எப்போது அறிவிப்பார் என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக தேசிய நெடுஞ்சாலை எண் 7-இல்தான் அந்தப் புறவழிச் சாலை அமைப்பதற்குரிய திட்டம், மத்திய அரசின் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலமாக எடுக்கப்பட்டது. இடையிலே கட்டுமானப் பொருள்களுடைய விலையேற்றம் போன்ற பிரச்சினைகள் காரணமாக, ஒப்பந்ததாரருக்கும், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதற்குப் பிறகு, கருத்து வேறுபாட்டிற்குத் தீர்வு காணப்பட்டு, பணிகள் சில இடங்களிலே வேகமாக நடைபெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற அந்தக் குறைபாட்டை சரி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

140—

விடுதி

***113205—திரு. சுப. மதியரசன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 மே 4]

(அ) இளையான்குடியில் ஆதி திராவிட மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இளையான்குடியில் ஆதி திராவிட மாணவியர் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன்.

திரு. சுப. மதியரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளையான்குடியில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றும், அஹமதியா உயர்நிலைப் பள்ளி ஒன்றும், இளையான்குடி மேல்நிலைப் பள்ளி ஒன்றும், மேலப் பள்ளிவாசல் முஸ்லிம் மேல்நிலைப் பள்ளி ஒன்றும், ஹாஜி கே.கே. இப்ராஹிம் மேல்நிலைப் பள்ளி ஒன்றும், ஆக மூன்று மேல்நிலைப் பள்ளிகளும், இரண்டு உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. இங்கு அதிக அளவில் கிராமப்புற மாணவர்கள் வந்து படிக்கிறார்கள். அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு, இளையான்குடியில் இந்த நிதியாண்டிலேயே ஒரு மாணவர் விடுதி அமைத்துக் கொடுத்திட முன்வருவாரா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் 24 பள்ளி மாணவர் விடுதியும், 9 பள்ளி மாணவியர் விடுதியும், கல்லூரி விடுதியைப் பொறுத்தவரையில் 6 விடுதிகளும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆக மொத்தம் 39 விடுதிகள் சிவகங்கை மாவட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. வருகின்ற நிதியாண்டில் உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும். நம்முடைய இராமநாதபுர மாவட்ட அமைச்சர் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர் ஐயா அவர்கள் இதைக் குறிப்பிட்டு, இந்தப் பகுதியில் நீங்கள் அமைத்துக் கொடுங்கள் என்று சொன்னார்கள். வருகின்ற ஆண்டிலே அது குறித்துப் பரிசிலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2010 மே 4

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன்.

திரு. சுப. மதியரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எனது தொகுதியிலுள்ள இளையான்குடிக்குக் கேட்டிருக்கிறேன். நீங்களும் இங்கேதான் தங்கிப் படித்தீர்கள். தயவுசெய்து, விரைவிலே எனது தொகுதியிலுள்ள இளையான்குடியில் ஒரு மாணவியர் விடுதி அமைத்துக் கொடுத்திட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் அதே இடத்தில் அமைக்க வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதே இடத்தில்தான் அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். நிச்சயமாக இந்த ஆண்டு விடுதி அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. மத்திய திட்டக் குழுவிடம் தமிழகத்திற்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்றுத் தந்த மாண்புமிகு முதலமைச்சருக்குப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் முதலில் உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன், நீங்கள் உட்கார்ந்துகொண்டு கையைத் தூக்கினாலும் எனக்குத் தெரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

[2010 மே 4

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன்.

திரு. சுப. மதியரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எனது தொகுதியிலுள்ள இளையான்குடிக்குக் கேட்டிருக்கிறேன். நீங்களும் இங்கேதான் தங்கிப் படித்தீர்கள். தயவுசெய்து, விரைவிலே எனது தொகுதியிலுள்ள இளையான்குடியில் ஒரு மாணவியர் விடுதி அமைத்துக் கொடுத்திட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் அதே இடத்தில் அமைக்க வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதே இடத்தில்தான் அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். நிச்சயமாக இந்த ஆண்டு விடுதி அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. மத்திய திட்டக் குழுவிடம் தமிழகத்திற்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்றுத் தந்த மாண்புமிகு முதலமைச்சருக்குப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் முதலில் உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன், நீங்கள் உட்கார்ந்துகொண்டு கையைத் தூக்கினாலும் எனக்குத் தெரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

2010 மே 4]

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னாலே தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று, திட்டக் குழுவைச் சந்தித்து, இந்த ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடுகளைப் பற்றி விவரமாகவும், விளக்கமாகவும் பேசியதன் காரணமாக, 20,068 கோடி ரூபாயை தமிழகத்தினுடைய திட்டங்களுக்காக (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 2,600 கோடி ரூபாய் அதிகமாகத் தமிழகம் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு அரசுப் பணிகள் சீரோடும், சிறப்போடும் நடைபெறுவதைத் திட்டக் குழு உறுப்பினர்களெல்லாம் பாராட்டியிருக்கிறார்கள். அப்படிப் பாராட்டியதன் அடிப்படையில், சுமார் 150 கோடி ரூபாய் மானியமாகவும், ஊக்கத் தொகையாகவும் அரசுக்கு வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திட்டங்களைப் பாராட்டி, ஊக்கத் தொகை பெற்றிருக்கிற முதல் மாநிலம் தமிழ் மாநிலம் என்பதை இந்த அவையிலே நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு மூல காரணமாக இருந்த காங்கிரஸ் கட்சித் தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) திட்டக் குழுவின் துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியா அவர்களுக்கும் இந்த அவையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல், இதை வாதாடிப் பெற்று வந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த அவையின் சார்பாகப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

சென்னை, இராயபுரம் தனியார் சேமிப்புக் கிடங்கில் காலாவதியான உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்து பொது மக்களுக்கு விற்பனை செய்து வருவதைத் தடுக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றையதினம் மூன்று மானியக் கோரிக்கைகள்மீது உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. மூன்று அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. எனவே, ஒரேயொரு பிரச்சினை மட்டும் ஆய்விற்கு

2010 மே 4]

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னாலே தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று, திட்டக் குழுவைச் சந்தித்து, இந்த ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடுகளைப் பற்றி விவரமாகவும், விளக்கமாகவும் பேசியதன் காரணமாக, 20,068 கோடி ரூபாயை தமிழகத்தினுடைய திட்டங்களுக்காக (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 2,600 கோடி ரூபாய் அதிகமாகத் தமிழகம் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு அரசுப் பணிகள் சீரோடும், சிறப்போடும் நடைபெறுவதைத் திட்டக் குழு உறுப்பினர்களெல்லாம் பாராட்டியிருக்கிறார்கள். அப்படிப் பாராட்டியதன் அடிப்படையில், சுமார் 150 கோடி ரூபாய் மானியமாகவும், ஊக்கத் தொகையாகவும் அரசுக்கு வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திட்டங்களைப் பாராட்டி, ஊக்கத் தொகை பெற்றிருக்கிற முதல் மாநிலம் தமிழ் மாநிலம் என்பதை இந்த அவையிலே நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு மூல காரணமாக இருந்த காங்கிரஸ் கட்சித் தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) திட்டக் குழுவின் துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியா அவர்களுக்கும் இந்த அவையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல், இதை வாதாடிப் பெற்று வந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த அவையின் சார்பாகப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

சென்னை, இராயபுரம் தனியார் சேமிப்புக் கிடங்கில் காலாவதியான உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்து பொது மக்களுக்கு விற்பனை செய்து வருவதைத் தடுக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றையதினம் மூன்று மானியக் கோரிக்கைகள்மீது உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. மூன்று அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. எனவே, ஒரேயொரு பிரச்சினை மட்டும் ஆய்விற்கு

எடுத்துக்கொள்ளப்படுகிறது. சென்னை, இராயபுரம் சேமிப்புக் கிடங்கில் காலாவதியான உணவுப் பொருட்கள் மீண்டும் வேறு பெட்டிகளில் அடைக்கப்பட்டு, பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுவது குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பி.கே. சேகர்பாபு, திரு. எல். ரவிச்சந்திரன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. சி. ஞானசேகரன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ஆர். ஞானதாஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார் ஆகியோர் பேரவை விதிகள் 56 மற்றும் 55-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்புக் கொடுத்தவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு. (குறுக்கீடுகள்) அதைத்தான் நான் சொன்னேன். இன்று வேறு எந்தப் பிரச்சினையும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. திரு. பி.கே. சேகர்பாபு, பேசுங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அதிர்ச்சிகளின் உறைவிடமாக சென்னை மாநகரம் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. காலாவதியான பொருட்களைக் குறைந்த விலைக்கு வாங்கி, கொள்ளை இலாபம் ஈட்டுகின்ற கொள்ளைக் கூட்டக் கும்பல் ஒன்று சென்னையிலே உருவாகிக் கொண்டிருக்கின்றது. காலாவதியும், கலப்படமும் தாராளமாகக் கால் முளைத்துக் களியாட்டம் ஆடுகின்ற ஒரு நிலை இன்றைக்குச் சென்னையிலே ஏற்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட பொருள்கள் குடிசைப் பகுதிகளில்தான் அதிகமாக விற்பனைக்கு உள்ளாகின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஏழையெளிய மக்கள்தான் இதனால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றார்கள். காலாவதி உணவுப் பொருள்களை விற்பதற்கு முன்னணி வணிக நிறுவனங்களே முனைப்புக் காட்டிக்கொண்டிருக்கின்றன. உணவுக் கலப்படங்களைக்

2010 மே 4] [திரு. பி.கே. சேகர்பாபு]

கண்காணிப்பதற்கு என்று இருக்கின்ற அதிகாரிகள் மாதா மாதம் இந்த உணவுக் கலப்படங்களைக் கண்டறிவதற்குக் கடைகளுக்குச் சென்று கண்காணித்து வந்தாலே இப்படிப்பட்ட குற்ற நிகழ்வுகள் தடுக்கப்பட்டுவிடும். காலாவதி என்பது மருந்து மாத்திரைகளிலிருந்து மாறி, இப்போது உட்கொள்கின்ற உணவிலும் புகுத்தப்பட்டிருக்கின்றது. உடல் நலத்தோடும், உயிரோடும் விளையாடுகின்ற தொந்தரவான ஒரு விஷயம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. இந்தக் காலாவதி மருந்துகளால் குடல் புண், மயக்கம், வாந்தி போன்ற உடல் உபாதைகள் ஏற்படுவதாக மருத்துவர்கள் கருத்துத் தெரிவித்து இருக்கின்றார்கள்.

முற்பகல் 10-35

நேற்றைக்கு முன்தினம், திருவள்ளூர் மாவட்டம் பேரம்பாக்கத்தில் ஓட்டலிலே உணவு அருந்திய 34 பேர் இந்தக் கலப்பட உணவால் வாந்தி, மயக்கம் போன்ற உடல் உபாதைகளுக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். ஒரு சில சமயங்களில் சத்துணவுக் கூடங்களில் இப்படிப்பட்ட உணவுகளை உட்கொள்கின்றபோது, ஏதும் அறியா பிஞ்சுக் குழந்தைகள்கூட உடல் நல பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். பல சமயங்களில் இப்படிப்பட்ட காலாவதி மருந்துகள் விற்பவர்கள், கலப்படத் தொழில்கள் செய்பவர்கள் கோடீஸ்வரர்களாகவும், குபேரர்களாகவும் இருக்கிறார்கள். இந்தக் காலாவதி மருந்துகளால், காலாவதி உணவுப் பொருட்களால் மக்களின் உயிரோடு விளையாடிக் கொண்டிருக்கின்ற இந்த சமூக விரோதக் கூட்டத்தின்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படிப்பட்ட கோடீஸ்வரர்கள் மக்களின் உயிர்களைப் பணயமாக வைத்து சம்பாதிக்கின்ற பணத்தால் சுலபமாக ஜாமீனில் வெளியே வந்துவிடுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. சட்டத்தைக் கடுமையாக்க வேண்டும். இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே, இப்படிப்பட்ட கலப்பட, காலாவதி மருந்துகளை, உணவு வகைகளைத் தயாரிக்கின்றவர்களை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்கின்ற நடவடிக்கை எடுக்கின்ற அதே நேரத்தில், இப்படிப்பட்ட குற்றங்களை விளைவிப்போர்களுக்கு ஆயுள் தண்டனை போன்ற உச்சபட்ச தண்டனை கிடைக்கின்ற வகையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, இந்தச் சட்டமன்றக் கூட்டத்திலேயே சட்டமாக்க வேண்டும் என்ற என்னுடைய கருத்தை வலியுறுத்தி, காலாவதிகளும், போலிகளும் முடங்கியிருந்த காலம் போய், காலாவதிகளும், போலிகளும் கால் முளைத்து இன்று சென்னையிலே நடமாடிக் கொண்டிருப்பதைத்

[திரு. பி.கே. சேகர்பாபு] [2010 மே 4

தடுக்க வேண்டும் என்று இந்த அவையின் கவனத்தை ஈர்த்து, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு, வடசென்னை பகுதியிலே மத்திய தர வர்க்கத்தைச் சார்ந்த ஒரு பெண் தனது 2 வயதுக் குழந்தைக்கு நெஸ்லே கம்பெனியினுடைய பால் பவுடரை வாங்கி, அந்தப் பால் பவுடரைக் கரைத்துக் கொடுத்தவுடனேயே அந்தக் குழந்தை மயங்கிய சூழ்நிலையில், குழந்தையை மருத்துவரிடம் அழைத்துச் சென்றபோது, நீங்கள் கொடுத்த பால் பவுடர் சரியானதுதானா என்று சரிபார்த்து வாருங்கள் என்று சொல்லியிருக்கிறார். அவர்கள் பரிசோதனை செய்தபோது, ஒரு பெரிய, சர்வதேச நிறுவனத்தினுடைய தயாரிப்பு, அதிலே புழுக்கள் இருந்ததைப் பார்த்த பின்னாலே அதனுடைய expiry date, எதுவரை shelf life உள்ள product என்பதைப் பார்க்கின்றபோது, அது 2011 டிசம்பர் என்று அதிலே அச்சிடப்பட்டு இருக்கின்றது. 2011 டிசம்பர் வரை பயன்படுத்தத் தகுதியான ஒரு பொருள் அதற்கு முன்பே எப்படி இவ்வாறு அது பயன்தரத்தகாத, பயனற்ற வகையிலே சிரழிந்து இருக்கிறது என்பதைப் பார்க்கின்றபோது, ஒரு வேளை அந்தத் தேதிகள் திருத்தப்பட்டு இருக்குமோ என்கின்ற ஒரு சந்தேகம் எழுகிறது. ஒரு மாதத்திற்கு முன்னால் Indian Express பத்திரிகை அந்தத் தகவலைத் தன்னுடைய பத்திரிகையிலே பிரசுரித்தது. நம்முடைய Civil Supplies C.I.D. போலீசார், Food Cell, அவர்களை நாம் பாராட்டவேண்டும். சரியாக ஒரு மாதத்திற்கு பிறகு அவர்கள் பழைய வண்ணாரப்பேட்டையிலேயுள்ள G.A. சாலையிலே உள்ள ஒரு குடோனை, தங்களுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பரிசோதனை செய்கின்றபோது, 10 இலட்சம் ரூபாய் பெறுமான காலாவதியான உணவுப் பொருட்களை அங்கே மூட்டை மூட்டையாக அள்ளியிருக்கிறார்கள். 200 மூட்டைகள் பாசுமதி அரிசி, நூற்றுக்கணக்கான மூட்டைகள் பருப்பு வகைகள், புளி, மிளகாய் வற்றல், காபி பவுடர், டீ தூள் போன்ற பிரபல கம்பெனிகளுடைய தயாரிப்புகள், எல்லாத் தயாரிப்புகளுமே காலாவதியாகிப் போனவை. அங்கே என்ன நடந்திருக்கிறது என்பதை விசாரிக்கின்றபோது, பாசுமதி அரிசி, மிளகாய்த் தூள், புளி மூட்டை ஆகியவற்றை, அவை இருந்த பொட்டலங்களிலிருந்து

2010 மே 4] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

அவிழ்த்து, முழுவதையும் repack செய்து மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்திருக்கிறார்கள். காபி தூள், டீ தூள் போன்றவற்றை sachets—சிறிய, சிறிய பாக்கெட்டுகளில் மீண்டும் அடைத்து, சந்தைக்கு விநியோகம் செய்திருக்கிறார்கள்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் பேசுகின்றபோதுகூட, கலப்படம் செய்பவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட வேண்டும், அதற்கான சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்று சொன்னார்கள். நான் அவருடைய தகவலுக்காகச் சொல்கிறேன், கலப்படத்தினுடைய பரிணாமத்தை உணர்ந்த மத்திய அரசு, உணவுக் கலப்படச் சட்டத்தைத் திருத்தி, உணவுக் கலப்படம் செய்பவர்களுக்கு ஆயுள் தண்டனை என்பதை ஏற்கெனவே சட்டமாக நிறைவேற்றியிருக்கிறது.

அந்தச் சட்டத்தை நிறைவேற்றுகின்ற Food Inspectors, இன்று நகர்ப் பகுதியிலே Sanitary Inspectors, கிராமப் பகுதியிலே Health Inspectors, இவர்கள்தான் Food Inspector—களாக Food Adulteration Act-ன்கீழே அங்கீகாரம் பெற்று, அந்த உணவுக் கலப்படத்தைத் தடை செய்வதற்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள். இரண்டு பகுதிகளிலுமே, நகர்ப்புறங்களிலே வேலை செய்கின்றவர்களானாலும் சரி, கிராமப்புறங்களில் இருக்கின்றவர்களானாலும் சரி, they are only part-time Food Inspectors. சென்னை மாநகரத்திலே அல்லது நகராட்சிப் பகுதிகளிலே Sanitary Inspectors பகுதிநேர உணவு ஆய்வாளர்களாகச் செயல்படுகிறார்கள். பஞ்சாயத்து யூனியன், கிராமப் பஞ்சாயத்துகளிலே வேலை பார்க்கிற Health Inspectors பகுதிநேர Food Inspector ஆகச் செயல்படுகிறார்கள்.

இப்பொழுது மத்திய அரசு Food Safety Act—உணவுப் பாதுகாப்புச் சட்டம் என்றே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே ஒரு Food Safety Commissioner-ஐ உடனடியாக நம்முடைய மாநில அரசு நியமிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், கடந்த வாரத்திற்கு முந்தைய வாரம், காலாவதியான மருந்துப் பொருட்கள் சந்தையிலே தாராளமாக உலா வருவதையும், இன்று காலாவதியாகிப் போன உணவுப் பொருட்கள் மூட்டை, மூட்டையாக அள்ளப்படுவதையும் பார்க்கின்றபோது, இந்த நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பான உணவை வழங்க வேண்டிய பொறுப்பும், அதைக் கண்காணிக்க

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2010 மே 4

வேண்டிய பொறுப்பும் நம்முடைய அரசுக்கு இருக்கிறது. அதற்கு சரியான mechanism, அந்தப் பகுதியை அமல்படுத்துவதற்கு சரியான ஒரு Agency, அதாவது Food Commissioner என்று தனியாக ஓர் அதிகாரியை நியமனம் செய்ய வேண்டும்.

முதலில் நகர்ப் புறங்களிலும், கிராமப் புறங்களிலும் பணிபுரியும் Food Inspectors—உணவு ஆய்வாளர்களை முழுநேர ஆய்வாளர்களாக உடனடியாக அரசு நியமனம் செய்ய வேண்டும். இரண்டாவதாக, இதற்கு யார் நடவடிக்கை எடுப்பது என்பதிலே மிகப் பெரிய குழப்பம் இருக்கிறது. நேற்றுக்கூட, Civil Supplies C.I.D. போலீசார் போய் அதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்கள் உள்ளூர் Police Station-லே கொண்டு போய் அந்தப் புகாரைத் தாக்கல் செய்து, F.I.R. பதிவு செய்திருக்கிறார்கள். இதிலே நடவடிக்கை எடுக்கப் போகிறவர்கள் யார்? உணவுக் கலப்படத் தடைச் சட்டத்தை அமல்படுத்துகின்ற Food Inspector-களா அல்லது தாலுகாவிலே District Supply Officer, Civil Supplies அதிகாரிகளா அல்லது Food Cell C.I.D. போலீசாரா அல்லது லோக்கல் போலீசாரா என்பதைப்போன்ற குழப்பங்கள் இருப்பதையெல்லாம் தவிர்த்து, Food Safety, Drug Safety, உட்கொள்கின்ற மாத்திரைகள், உட்கொள்கின்ற மருந்துகளுக்கு முற்றிலுமான பாதுகாப்புத் தருவதற்கு, எந்தவிதமான குழப்பமும் இல்லாமல் தனியாக ஒரு அதிகார அமைப்பு வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக Consumers' Counsels, எல்லா மாவட்டத்திலும், எல்லாப் பகுதிகளிலும் உபயோகிப்பாளர்களுடைய, நுகர்வோருடைய சங்க அமைப்புகள் இருக்கின்றன. அந்த சங்க அமைப்புகளுடைய ஒன்றியங்களுக்கு, இந்தக் கடைகளையெல்லாம் பரிசோதிக்கின்ற அதிகாரத்தை வழங்க வேண்டும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இறுதியாக நான் ஒன்றைச் சொல்வேன். மிகப் பெரிய நிறுவனங்கள், இன்றைக்கு மிகப் பெரிய chain super markets, பல்லாயிரக்கணக்கான கோடி முதலீட்டிலே பெரிய, பெரிய, வண்ண, வண்ண விளக்குகளைப் போட்டு, பெரிய கடைகளை வைத்து, மிகவும் பளபளப்பாக வியாபாரம் செய்கிறார்கள். அவர்கள்தான் காலாவதியாகிப் போன பொருட்களை சந்தைக்கு விற்கிறார்கள். எனவே, இதைப் பதுக்கி வைத்திருந்தவர்கள்மீது என்ன நடவடிக்கையை அரசு எடுக்கிறதோ, அதே நடவடிக்கையை அவர்களுக்கு காலாவதியான பொருட்களை விற்ற super markets, மிகப் பெரிய தொழிலதிபர்கள் பின்னால்

2010 மே 4] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

இருக்கிறார்கள், அவர்கள்மீதும் இந்தச் சட்டம் பாய வேண்டும், அவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே, இந்தக் கலப்படப் பொருட்களை சேர்த்து வைத்திருந்தவர்கள்மீது எந்த குண்டர்கள் சட்டம் பாய்கிறதோ, தேசியப் பாதுகாப்புச் சட்டம் பாய்கிறதோ, அதே குண்டர்கள் சட்டம், அதே தேசியப் பாதுகாப்புச் சட்டம், காலாவதியாகிப் போன பொருட்களை மீண்டும் சந்தையிலே விற்ற அந்தப் பெரிய super markets மீதும் பாய வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டு, அமைகின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

முற்பகல் 10-45

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்து, மாத்திரைகளில் போலிகள் வந்து, அந்தப் பிரச்சினையை ஒழிப்பதற்கான மும்முரமான நடவடிக்கையை நம்முடைய அரசு எடுத்து வருகிறது. அந்த வகையில், இன்றைக்கு உணவுப் பொருட்களிலும் கலப்படம், நாம் அன்றாடம் பயன்படுத்துகிற சோப்பு, பவுடர், எண்ணெய், சீயகாய்த் தூள் என்று அனைத்திலும் கலப்படம். உட்கொள்கிற அனைத்து உணவுப் பொருட்களிலும் கலப்படம். குறிப்பாக, இந்த நாட்டிலே மிகப் பெரிய ஷோரூம்களை உருவாக்கி, அதற்கு மிகப் பெரிய அளவில் விளம்பரத்தைக் கொடுத்து, பாக்கெட்டுகளிலும், பாட்டில்களிலும் அடைத்து வைத்து விற்கின்ற பன்னாட்டு நிறுவனங்களை எந்த ஒரு அரசு அதிகாரியும் சென்று சோதனையிடுவதற்கான வாய்ப்புகளை அவர்கள் வழங்குவதில்லை. காரணம், Sanitary Inspectors மற்றும் Food Inspectors எல்லாம் இங்கேயிருக்கிற Reliance Wal-Mart, Spencer-க்கோ மற்றும் Food World-க்கோ எதையும் சென்று பார்ப்பதற்கு வாய்ப்பே இல்லை. அவர்கள் எல்லாம் மிகப் பெரிய பண முதலாளிகள். மிகப் பெரிய இடத்தில் தொடர்புள்ளவர்கள். ஆதலால், அவர்கள் என்ன விலை நிர்ணயம் செய்கிறார்களோ, Date of Production, எந்தத் தேதியில் அதன் தன்மை முடிகிறது, மற்றும் விலை என்று அச்சிட்டு ஒட்டுகிறார்களோ, அதன் விலைக்கு விற்கப்படுகிறது. அதனை எந்த விலைக்கு விற்கிறார்கள் என்பதனைக்கூட நம் அரசு அதிகாரிகள் சென்று கேட்பதில்லை.

அதேபோல, உணவுப் பொருட்களை எடுத்துக்கொண்டால், ஒரு இட்லி ஒரு ஓட்டலில் ரூ.10-க்கும், ஒரு ஓட்டலில் ரூ.5-க்கும்

[திரு. தி. வேல்முருகன்] [2010 மே 4

அதே இட்லி வேறொரு ஓட்டலில் ரூ.2-க்கும் விற்கப்படுகிறது. அது குறித்துக் கேட்பதற்கு யாரிடமும் அதிகாரம் இல்லை. அதன் விலைகளை அவர்கள் இஷ்டத்திற்குத் தீர்மானித்துக்கொள்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், இந்த உணவுக் கட்டுப்பாட்டுத் துறை குறித்து இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, உணவுப் பொருட்களான இட்லியை எப்படி பார்சல் செய்ய வேண்டும், அதேபோல, மிளகாய்த் தூளை எப்படி பார்சல் செய்து சீல் வைக்க வேண்டும் என்பதைக்கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், அதற்கு நேர்மாறாக இன்றைக்கு செயல்பட்டு வருகின்ற இந்த நிறுவனங்கள், கலப்படம் மற்றும் காலாவதியாகிவிட்டதை அந்த மிகப் பெரிய நிறுவனங்கள் சில்லறை வியாபாரிகளுக்குத் தருகின்றபோது, அதை ஒரு ஏஜென்சி அல்லது ஒரு கூட்டுக் குழுவாக இருந்துகொண்டு ஒரு கும்பல் அவற்றை எடுத்துச் சென்று, அடைத்து வைக்கப்பட்டிருக்கும் பாட்டில்களையும், அந்த பாலிதீன் கவர்களையும் எடுத்துவிட்டு, புதிதாக அதற்கான கவர்களை உருவாக்கி, அதை விற்பனை செய்வது என்பது தமிழ்நாட்டிலே இருக்கிற இலட்சோப இலட்சம் மக்களின் உயிரோடு விளையாடக்கூடிய ஒரு சமாச்சாரம். ஆகவே, இதைக் கண்டுபிடிப்பதற்காக மத்தியில் அமைச்சராக இருந்த எங்கள் சின்ன அய்யா அவர்கள் ஏற்கெனவே இந்த உணவு மற்றும் மருந்துக் கலப்படத் தடுப்பிற்காக மத்திய அரசினுடைய கேபினட்டிலேயே முன்மொழிந்தார்கள். இதுபோன்ற கலப்படங்களில் ஈடுபடுகின்றவர்கள்மீது கடுமையான தண்டனை விதிக்க வேண்டும், அதற்கு உடந்தையாக இருந்தவர்களுக்குத் தூக்குத் தண்டனை கொடுக்க வேண்டுமென்று முன்மொழிந்தபோது, அன்றைய அமைச்சரவை அதனை ஆயுள் தண்டனையாக மாற்றி, அதற்குரிய சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. திரு. என்.டி. சண்முகம் அவர்கள் Food Minister-ஆக மத்தியில் இருக்கின்றபோதுதான், இந்த உணவுக் கலப்படத்திற்கும் மிகப் பெரிய கடுமையான சட்டம் கொண்டு வர வேண்டுமென்று, அன்றைக்கே அதிலே சில திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். அண்ணன் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னதைப்போல, 14 ஆண்டு காலம் என்றில்லை, இந்தக் குற்றம் நிரூபிக்கப்பட்டால், உயிரோடு விளையாடுகிற அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நம்முடைய சட்டங்கள் இருந்தும்கூட, அதனை நடைமுறைப்படுத்தக்கூடிய அதிகாரிகள் அதைச் சரிவர செய்யவில்லை. குறிப்பாக, இந்தப் பன்னாட்டு கம்பெனிகளைச் சென்று ஆய்வு செய்வதற்கான அதிகாரம் படைத்த ஒரு குழுவாக

2010 மே 4] [திரு. தி. வேல்முருகன்]

அந்தக் குழு இருக்க வேண்டும். அந்த அடிப்படையிலேயே, இப்படி உயிரோடு விளையாடுகிற இத்தகைய உணவுக் கலப்படக்காரர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக, என்னுடைய தொகுதி குறித்து மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நாம் தினமும் அருந்துகிற தேநீரில், முந்திரியை உடைத்தால் முந்திரித் தொழும்பு கிடைக்கும். அந்தத் தொழும்பிற்குப் பிறகு முந்திரிப் பருப்பினை உரிக்கும்போது சிறிய அளவில் சிலேடை மாதிரி வரும். அது கிட்டத்தட்ட டீ தூளுக்கு நிகரானது என்று சொல்லி, அதை அரைத்து டன் கணக்கிலே கலப்படம் செய்கிறார்கள். நான் கடந்த முறை இந்தப் பிரச்சினையை சட்டமன்றத்தில் எழுப்பி, அதன் காரணமாக அங்கு சோதனை செய்யப்பெற்று, சேலத்திலும், பண்ருட்டியிலும் டீ தூளில் கலக்கின்ற முந்திரித் தூசுகள் வைக்கப்பட்டிருந்த இரண்டு குடோன்களுக்கு சீல் வைத்திருக்கிறார்கள், கைது செய்திருக்கிறார்கள். அது தற்போதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், என்னவாக இருந்தாலும் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் குடிக்கின்ற தேநீரில் கலப்படம் இருக்கிறது என்று சொல்ல வருகிறேன். அதனால் தயவுசெய்து தேநீரிலிருந்து, குழம்பிலிருந்து, எல்லாவிதத்திலும் கலப்படத்தைச் செய்துகொண்டிருக்கிற அந்த சமூக விரோதக் கும்பலின்மீது நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கட்டுப்பாட்டில் வருகிற அந்த ஃபுட் செல் மற்றும் காவல் துறை மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நம்முடைய மாநகரக் காவல் துறை ஆணையர் அவர்கள் நேற்றையதினம், நாங்கள் தன்னிச்சையாக நடவடிக்கை எடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய சட்டத்தை மத்தியில் இருந்த எங்களுடைய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வருகிறபோது, காவல் துறை தன்னிச்சையாக நடவடிக்கை எடுக்கலாம் என்ற திருத்தம் அதில் அமல்படுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காவல் துறைக்கு சட்டத்தில் அத்தகைய அதிகாரம் தரப்பட்டிருக்கிறது, மத்திய அரசு 2008 ஆம் ஆண்டு கொண்டு வந்த அந்த உணவு அல்லது உயிர் காக்கும் மருந்துகள் கலப்படத் தடுப்புச் சட்டத்தில் உரிமை இருக்கிறது. ஆதலால், மாநகராட்சி

அதிகாரிகள் வரவேண்டும், அதனுடைய சானிட்டரி இன்ஸ்பெக்டர் வரவேண்டுமென்று இல்லை. காவல் துறை இதில் நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை மாநகரக் காவல் துறைக்கும், மாவட்டக் காவல் துறைக்கும் எடுத்துச் சொல்லி, கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அவையின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், சுருக்கமாகச் சொன்னால், அது எல்லோருக்குமே உதவியாக இருக்கும். *(குறுக்கீடு)* எல்லோரும் 15 நிமிடங்கள் என்று அல்ல, கருத்தைத்தான் சொல்ல வேண்டும். *(குறுக்கீடு)* அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி. *(குறுக்கீடு)* சரி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பாக திரு. கே. மகேந்திரன்.

முற்பகல் 10-50

திரு. கே. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் இராயபுரம் பகுதியிலே இருக்கக்கூடிய ஒரு தனியார் உணவுக் கிடங்கில், 10 இலட்சத்திற்கும்மேல் மதிப்புள்ள காலாவதியான உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாகப் பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. கடந்த 2 மாத காலமாக தமிழகத்தைப் பொறுத்த வரையில், குறிப்பாக, சென்னை மாநகரத்தில் "காலாவதி" என்ற வார்த்தையும், "போலி" என்ற வார்த்தையும் கூடுதலாக உலா வரக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. மக்களது உயிர்களைப் பாதுகாக்க வேண்டிய மருந்துப் பொருட்கள், காலாவதியான மருந்துப் பொருட்களாக விநியோகிக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. அரசாங்கம் இன்றைக்கு இவற்றின்மீது நடவடிக்கை எடுத்துகொண்டிருந்தாலும், தொடர்ந்து அத்தியாவசியப் பொருட்கள் கலப்படப் பொருட்களாக உருவாகி, நகரத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கடந்த 2 மாதங்களுக்கு முன்பாக இராயபுரம் பகுதியிலே இருக்கக்கூடிய ஒரு குழந்தைக்குக் கொடுத்த பால் பவுடர்—அருமை அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னதைப்போல—காலாவதியானது மட்டுமல்லாமல், உயிர்களைப் பறிக்கக்கூடிய அளவிற்கு, நோய்களை உருவாக்கக்கூடிய அளவிற்கான கலப்படம் அதிலே இருக்கிறது. ஏதோ நம்முடைய நாட்டில் சாதாரணமாக இருக்கக்கூடியவர்கள்

2010 மே 4] [திரு. கே. மகேந்திரன்]

இதுபோன்ற நிலைமைகளை உருவாக்க முடியுமா என்றால், நிச்சயமாகக் கலப்படங்களை உருவாக்க முடியாது.

பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு பெரிய நிறுவனங்கள் நடத்தக்கூடிய அல்லது உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பொருட்கள்கூட இன்றைக்குக் கலப்படப் பொருட்களாக அல்லது காலாவதியான பொருட்களாக சந்தையிலே விற்கக்கூடிய நிலைமை ஏற்படும் என்ற காரணத்தினால், மனித உயிர்கள் பலியாவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. நேற்று மதுரை மாநகரத்தில் உள்ள ஒரு உணவகத்தில் உணவு அருந்திய மூன்று மாணவர்களில், ஒரு மாணவர் உயிரிழந்திருக்கிறார், மற்ற இரண்டு மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக இன்றைக்குப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. இதற்கெல்லாம் காரணம், கலப்படமான உணவுப் பொருட்கள் சந்தைகளிலே விற்கப்படக்கூடிய நிலைமைதான். ஆகவே, இதுபோன்ற கலப்படங்களைத் தடுப்பதற்கு, உணவுக் கலப்படத் தடுப்புப் பிரிவின் மூலமாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய நடவடிக்கைகளை எடுக்கும்போது, சாதாரணக் குற்றங்களில் ஈடுபடக்கூடியவர்கள் எப்படி ஜாமீனில் வெளிவருகிறார்களோ, அதேபோன்று இத்தகைய கலப்படங்களில் ஈடுபடக்கூடியவர்கள் அல்லது காலாவதியான பொருட்களை விற்பவர்கள், போலியான பொருட்களை விற்பவர்கள்கூட, சாதாரணமாக வெளிவரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய மாநிலத்திலுள்ள மக்களது உயிர்களைப் பாதுகாக்கின்ற வகையில், உணவுக் கலப்படத் தடுப்புப் பிரிவு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, மக்களது உயிர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கூறி, இந்த அவையின் கவனத்தை ஈர்த்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலாவதியான உணவுப் பொருட்கள் விற்கப்படுவது குறித்துப் பல உறுப்பினர்களும் தங்களுடைய வருத்தத்தையும், ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில், உயிர் காக்கும் மருந்துகளிலே கலப்படம்; உணவுப் பொருட்களிலே கலப்படம் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இது மிகப் பெரிய அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாக நான் உணருகிறேன். மிக முக்கியமாக, உயிர் காக்கும் மருந்துப் பொருட்களிலேயும்,

உணவிலேயும் கலப்படம் என்று சொல்லிவிட்டால், பொதுவாகவே சாதாரண மக்கள் அனைவருக்குமே தாங்கள் பயன்படுத்துகின்ற மருந்துகள் மற்றும் உணவுப் பொருட்களின்மீது சந்தேகமும், அச்சமும் ஏற்படுகிறது என்று சொன்னால், இதை ஒரு சாதாரண விஷயமாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. இதன்மீது உரிய முறையிலே நம்முடைய அரசு விரிவான செயலாக்கத்தின் மூலமாக இதைத் தடுப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, உணவுப் பொருட்களைப் புதுப்பிப்பது குறித்து இங்கே உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, மிகப் பெரிய கம்பெனிகள், பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியா முழுவதும் வந்திருக்கின்றன. தமிழகத்திலேயும் அவர்கள் ஊடுருவி விட்டார்கள். 'Reliance Fresh' என்ற பெயரிலே நிறையக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. 'Spencers' என்ற பெயராலும், 'More' என்ற பெயராலும், பல நிறுவனங்கள் செயல்படுகின்றன. உலக அளவில் மிகப் பெரிய நிறுவனமாக இருக்கிற Wal-Mart Company எல்லா இடங்களிலும் கால் பதித்திருக்கிறது. ஆகவே, மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனம் என்ற காரணத்தினாலே, அவர்கள் வசதியாக இப்படிப்பட்ட மாபெரும் தவறுகளைச் செய்கிறார்கள். இதை மத்திய அரசு கண்காணிக்க வேண்டும். நம்முடைய மாநிலத்தில் இதைப் பரவாமல் செய்வதற்குரிய முயற்சிகளை தமிழ்நாடு அரசு விரைவாக எடுக்க வேண்டுமென்பதுதான் என் கருத்து.

நேற்றையதினம்கூட, மதுரை இரயில் நிலையத்திற்கு எதிரே இருக்கிற ஒரு உணவுக் கடையிலே, வேலூர், கடலூர், பாண்டிச்சேரி பகுதிகளிலிருந்து தீத் தடுப்புப் பயிற்சி பெறுவதற்காக வந்த மாணவர்கள், உணவு அருந்தியதாகவும், அந்த உணவு அருந்திய மாணவன் வாந்தியெடுத்து நேற்றையதினம் அவன் மரணமடைந்துவிட்டான் என்ற செய்தியும் இன்றைக்கு 'தினகரன்' பத்திரிகையிலே வந்திருக்கிறது. மேலும் 3 மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. ஆகவே, கடைக்கு உணவு அருந்தச் சென்றால்கூட உயிரிழப்பு ஏற்படுகிறதென்ற நிலைமை வருமானால், இது ஒரு மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்துவதற்கான சூழல் இந்தக் கலப்படத்தின் மூலமாக நடைபெறுகிறதென்று அறிகிறேன். ஆகவே, எல்லா வகையிலும் அரிசி, பருப்பு, மைதா, கோதுமை, ராகி, இப்படிப்பட்ட பொருட்களை பாக்கெட்டிலே அடைத்து விற்பனை செய்கிறபொழுது, அது காலாவதியானதாக இருக்கிறபொழுது, பல

2010 மே 4] [திரு. வை. சிவபுண்ணியம்]

இடங்களில் வாங்கிப் பயன்படுத்துகிறபொழுது, அதிலே புழுக்கள், பூச்சிகளெல்லாம் வந்த செய்திகளெல்லாம் ஏராளமாக இருக்கின்றன.

ஆகவே, இதையெல்லாம் தடுப்பதற்கான ஒரு விரிவான திட்டம், மாண்புமிகு திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதுபோல, அந்தத் துறைக்குப் போதுமான அளவிலே அதிகாரிகளை நியமனம் செய்து, விரிவான அளவிலே ஆய்வு செய்து, அன்றாடம் அதைக் கவனிப்பதன் மூலமாகத்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். நம்முடைய நாட்டிலே ஏழ்மை, வறுமை அதிகமாக இருக்கிறது. வறுமையிலும், ஏழ்மையிலும் வாழ்கிற மக்கள் இப்படி கலப்படத்தின்மூலமாக உயிரிழப்பார்களென்று சொன்னால், அது மோசமான விளைவுகளாகக் கருதவேண்டிய அவசியமிருக்கிறது என்பதை மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதை விரைவாகத் தடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ம.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்கால சந்ததியினரைக் காப்பதற்கு, கலப்படமற்ற, காலாவதியில்லாத, ஆரோக்கியமான உணவு வகைகளைக் கொடுப்பது நமது தலையாய கடமையாகும். உலக சுகாதார நிறுவனம்கூட வாழ்க்கை முறை மாற்றத்தால் ஏற்படுகின்ற நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு, காலாவதியான, ஆரோக்கியமற்ற உணவுகளைத் தவிர்க்கவேண்டுமென்று ஒரு சுற்றறிக்கையில் கேட்டுக்கொண்டிருக்கின்றது. கடந்த 20, 25 ஆண்டு காலமாகத்தான் நம்முடைய மனித இனத்தில் சர்க்கரை, உயர் இரத்த அழுத்தம், பருமன் போன்ற வியாதிகள் அதிகரித்துள்ளன. அதற்குக் காரணம், நம்முடைய பாரம்பரிய உணவுகளை விட்டு மாற்று உணவுக்கு மாறியதன் காரணமாகத்தான். மாற்று உணவுகள் சாப்பிடுவதால் கலப்படமும், காலாவதியும் அதிகரித்து வருகின்றது. காலாவதியாகிவிட்ட உணவுப் பொருட்களில் வண்டுகள், புழுக்கள் கலந்து ஆரோக்கியமற்ற உணவாக மாறி, மனித இனத்திற்கே கேடு விளைவிக்கக்கூடியதாக இருக்கிறது. அதுவும் குறிப்பாக, குழந்தைகளுக்கு மிகவும் கேடு விளைவிக்கக்கூடிய ஒரு பொருளாக மாறிவிடுகிறது. "There are no poisons as such; all depends upon the quantity" என்று சொல்வார்கள். குழந்தைகளுக்குப் பால் பவுடரைக்

கொஞ்சம் அதிகளவு கொடுத்தால், குறிப்பாக காலாவதியான, ஆரோக்கியமற்ற உணவு வகைகளைக் கொஞ்சம் அதிகளவில் கொடுக்கும்பொழுது, 'அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு' என்று சொல்வதுபோல், அது நஞ்சாக மாறி குழந்தைகளின் உயிருக்கே உலை வைத்துவிடுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஆகவே, நம்முடைய சுகாதாரத் துறையும், உணவுத் துறையும் இதில் கவனம் செலுத்தி, ஆரோக்கியமான, கலப்படமற்ற உணவுகள் தயாரிப்பதற்கு முனைப்பு காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இதற்குத் தனியாக Food Inspectors நியமனம் செய்து இதைக் கட்டுப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கலப்படம், காலாவதி, ஆரோக்கியமற்ற உணவுகளை சில விளம்பரங்களால் முன்னிலைப்படுத்தி, குறிப்பாக, விளையாட்டு வீரர்கள், நடிகர், நடிகைகளை வைத்துக்கொண்டு விளம்பரம் செய்து, அதுவும் கிரிக்கெட் வீரர்கள் ஒரு drink-ஐக் குடித்தால், இளைய தலைமுறையினர் அதையே குடிக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். இதுபோன்று ஆரோக்கியமற்ற உணவுகளை விளம்பரப்படுத்துவதைத் தடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கலப்படம், காலாவதி, ஆரோக்கியமற்ற உணவுகளை விற்பனை செய்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த அவையின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

முற்பகல் 11-00

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கோடைக் காலம் என்பதனால். இன்றைக்கு பெரும்பாலோர், கிராமப் பகுதி மக்கள்கூட பாட்டில்களில் அடைக்கப்பட்ட குடிநீரை வாங்கி அருந்துவது சகஜமாக மாறிவிட்டது. அப்படி பாட்டில்களில் அடைத்து விற்கப்படுகிற குடிநீர் Mineral water என்று பொதுவாக அழைக்கப்பட்டாலும், Mineral water தயாரிக்கின்ற தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அது தயாரிக்கப்படுவதில்லை. அந்த பாட்டில்களை எடுத்துப் பார்த்தால், அதில் Packaged Drinking Water என்று மட்டும்தான் அச்சடித்திருக்கிறார்கள். Mineral water-க்கு காசு வாங்கிக்கொண்டு வெறுமனே குடிநீரை பாட்டில்களிலே அடைத்து விற்கிறார்கள். இது பெரும்பாலோருக்குத் தெரிவதில்லை. அதுமட்டுமல்லாமல்,

அந்தக் குடிநீரை எந்தத் தேதி வரையில் பயன்படுத்தலாம் என்பதை அச்சிட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், அந்தத் தேதி பெரும்பாலான குடிநீர் பாட்டில்களிலே இருப்பதில்லை. இப்படி காலாவதியான குடிநீரை அருந்துவதால், கோடைக் காலத்திலே அதிகமான நோய்கள் மக்களுக்குப் பரவிக்கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், பாலிதீன் பாக்கெட்டுகளிலே குடிநீர் அடைத்து விற்கப்படுகிறது, Water packet-கள். இன்றைக்கு சென்னை மாநகராட்சி அதைத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறது என்ற செய்தியைப் பார்த்தோம். இந்த Water packet-கள் மிக, மிக சுகாதாரக் கேட்டை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக, பேருந்து நிலையங்களிலே அல்லது பேருந்து சென்று நிற்கின்ற இடங்களிலே இந்த குடிநீர் பாட்டில்களும், Water packet-களும் மிக அதிக அளவில் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த Water packet-களை முழுமையாகத் தடை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். அதுமட்டுமல்லாமல், இந்தக் கோடைக் காலத்திலே குளிர்பானங்கள். பெரும்பாலும் பன்னாட்டு நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகிறது. அவர்கள்தான் உற்பத்தி செய்கிறார்கள். அவர்கள் இங்கே licence பெற்றுவிட்டு, ஒரு குறிப்பிட்ட அளவு தண்ணீரை மட்டுமே உறிஞ்சுவதற்கு licence பெற்றுவிட்டு, இலட்சக்கணக்கான லிட்டர் அதிகமாக உறிஞ்சுகிறார்கள் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், அவர்கள் அதிலே குறிக்கப்பட்டிருக்கின்ற சுகாதார நெறிமுறைகள் எதையும் பின்பற்றுவது கிடையாது. அதுமட்டுமல்லாமல், வெளியிலே போகும்போது, அந்த பாட்டில்களிலே வேறு விதமான குளிர்பானங்களைக்கூட அடைத்து அந்த brand-களிலே விற்கின்ற ஒரு வழக்கமும் இருக்கிறது. அதேபோல குளிர்பானங்கள், இவற்றிலே நடைபெறுகின்ற இந்த முறைகேடுகளை அரசு விழிப்போடு இருந்து தடுத்து நிறுத்த வேண்டும். இன்னொன்று, உணவுப் பொருட்களிலே இன்றைக்கு அதிகமாக நாம் கோழி இறைச்சியைப் பயன்படுத்துகின்றோம். அதிலே இன்றைக்குப் பன்னாட்டு நிறுவனங்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரவிக்குமார், உரையை முடியுங்கள். இன்னும் நிறைய அலுவல்கள் உள்ளன.

திரு. து. ரவிக்குமார்: K.F.C. என்று சொல்லி, Kentucky Fried Chicken போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் வந்திருக்கிறார்கள்.

அவர்கள் எல்லாம் தங்கள் நாடுகளில் காலாவதியாகிப் போன அந்தக் கோழி இறைச்சியை இங்கே கொண்டு வந்து விற்பனை செய்கிறார்கள் என்கின்ற செய்திகள் அவ்வப்போது வந்துகொண்டிருக்கின்றன. எனவே, இந்தக் குடிநீர் பாக்கெட்டுகளை, பாட்டில்களை விற்பதையும், இதேபோன்ற கோழி இறைச்சிகளை விற்பதையும், குளிர்பானங்கள் விற்பதையும் அரசு விழிப்போடு கண்காணித்து, அத்தகைய முறைகேடுகள் செய்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் வலியுறுத்தி அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்த அளவிற்கு, பாதுகாக்கப்பட்ட உணவைப் பொதுமக்களுக்கு வழங்குவதிலே இரு வேறு கருத்துகள் இருக்க முடியாது. எனவே, பாதுகாக்கப்பட்ட உணவுகளைத்தான் மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதிலே இந்த அரசு உறுதியாக இருக்கிறது. ஆனாலும்கூட, இன்றைக்கு காலாவதியான சில பொருட்களை சில தனியார் குடோன்களிலே வைத்து அடைத்து விற்பனை செய்வதாக வந்த தகவல்களின் அடிப்படையிலே, சென்னை நகரத்தில், வண்ணாரப்பேட்டைப் பகுதியில், G.A. சாலை, 4-வது சந்தில் உள்ள ஒரு கிடங்கில் காலாவதியான உணவுப் பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகத் தொலைபேசியில் தகவல் பெறப்பட்டு, இணை ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர், குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர், மாநகராட்சி சுகாதாரத் துறை அலுவலர் மற்றும் உள்ளூர் காவல் துறை அலுவலர் ஆகியோருடன் 30-4-2010 அன்று இரவு சோதனை செய்தபோது, கிடங்கு பூட்டப்பட்டிருந்தது, போதிய தகவல் அளித்தும், கிடங்கை வாடகைக்கு எடுத்த திரு. துரைப்பாண்டி என்பவர் அங்கு வரவேயில்லை. அதன் விளைவாக, சோதனையில் அந்தக் கிடங்கில் காலாவதியான அரிசி, துவரம் பருப்பு, மிளகாய், உணவுப் பொருள்கள், டீ தூள், புளி, சாக்லேட், சோப்பு, பவுடர்கள், பிஸ்கட், பேஸ்ட் போன்ற காலாவதியான பொருட்கள் பதுக்கி வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. பொது மக்கள் உடல்

2010 மே 4] [திரு. எ.வ. வேலு]

நலனுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் காலாவதியான உணவுப் பொருட்கள் காலாவதியான அழகுசாதனப் பொருட்கள் மற்றும் இதர பொருட்களை அந்தக் கிடங்கிலே வைத்து திரு. துரைப்பாண்டி என்பவர் விற்பனை செய்து வருவது தெரிய வந்ததால், காவல் துறை மற்றும் சுகாதாரத் துறை அலுவலர்கள் முன்னிலையில், 30-4-2010 அன்று இரவு ரூ.10 இலட்சம் மதிப்புள்ள 47 வகையான பொருட்கள் கைப்பற்றப்பட்டன. காலாவதியான பொருட்களை விற்பனை செய்து வந்த திரு. துரைப்பாண்டி என்பவரை இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழும், உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின்கீழும் நடவடிக்கை எடுக்க, இராயபுரம் மண்டல உதவி ஆணையரால், இராயபுரம் காவல் நிலையத்திலே புகார் அளிக்கப்பட்டு, இராயபுரம் காவல் நிலையத்திலே 1-5-2010 அன்று குற்ற எண் 380/2010-ன்கீழ் under sections 273, 420 of Indian Penal Code, read with section 27 of Drugs and Cosmetics Act-ன்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, திரு. ஜெகன், S/o. கணேசன், திரு. சுடலை ஈஸ்வரன், S/o. தங்கசாமி ஆகிய இருவரையும் கைது செய்துள்ளனர். இந்த வியாபாரத்தை நடத்திய திரு. துரைப்பாண்டி என்பவரைக் காவல் துறை தனிப் படை அமைத்துத் தேடி வருகிறது.

முற்பகல் 11-05

உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின்கீழ் உரிய நடவடிக்கை எடுக்க மாநகராட்சி சுகாதாரத் துறைக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதை ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், உணவு கடத்தல் செய்வதைப்போலவே, இந்த உணவுப் பொருட்கள் சென்னை போன்ற நகரங்களில் பல்வேறு பன்னாட்டு கம்பெனிகள்மூலம் சில நேரங்களில் பெறப்பட்டு godown-ல் வைத்து, repack செய்து விற்கப்படுகின்றன என்ற தகவல் தொலைபேசியின் மூலமாக வந்ததன் காரணமாகத்தான், இந்த அரசு மிக விரைந்து நடவடிக்கை எடுத்ததன் வாயிலாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டு, ஒருவரைத் தேடிக்கொண்டிருக்கிறோம்.

அதே நேரத்திலே, அரசாங்கமே அனைத்து இடங்களிலும் இதையெல்லாம் நேரடியாகக் கண்டுபிடிக்கும் என்கிற சாத்தியக்கூறு இருக்க முடியாது. ஏனென்றால் தமிழ்நாட்டிலே 6 கோடியே 61 இலட்சம் பேர்கள் உணவினை உட்கொள்கிறோம். பல இடங்களிலே கடைகள் நடத்தப்படுகின்றன. பலசரக்குக் கடைகள்,

[திரு. எ.வ. வேலு] [2010 மே 4

super market என்ற கடைகளும் நடைபெறுகின்றன. இதைப் பற்றி முதலில் பொது மக்களிடம் விழிப்புணர்வு தேவைப்படுகிறது. ஆகவே. பொது மக்களுக்கு விழிப்புணர்வு தேவை என்கிற காரணத்தினால்தான், இன்றைக்கு நுகர்வோர் மையங்கள், நுகர்வோர் சங்கங்கள் என்பவை மாவட்ட அளவிலே, நகர அளவிலே இருப்பது போன்று கல்லூரிகளிலும் தொடங்கப்படுகின்றன. சில நேரங்களில் பெற்றோர்கள், படிக்காதவர்கள் இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் அரசாங்கம் உணர்ந்திருக்கிற காரணத்தினாலேதான், உயர்நிலைப் பள்ளிகளிலேயும், கல்லூரிகளிலேயும், இந்த நுகர்வோர் மையங்கள் தொடங்கப்பட்டு, பெற்றோர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறோம். இந்தப் பொருட்களை எப்படிப் பெற வேண்டும், கலப்படப் பொருள்களைக் கண்டுபிடிப்பது எப்படி என்பதைப் பற்றியெல்லாம்கூட நீங்கள் சொல்ல வேண்டும். இன்றைக்கு உயர்நிலைப் பள்ளிகளிலேயும், கல்லூரிகளிலேயும் இந்த நுகர்வோர் மையங்கள் தொடங்கப்பட்டு, விழிப்புணர்வை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். விழிப்புணர்வு என்பது நமக்கு இன்றைக்குத் தேவையான ஒன்று.

அதோடு மட்டுமல்லாமல், இன்று சென்னையிலே நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை மையமாக வைத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். சட்டத்தைப் பற்றி திரு. வேல்முருகன் சொன்னார், சட்டத்தைப் பொறுத்த அளவுக்கு, இது சுகாதாரத் துறையின்கீழ் வருகிறது. ஆனால், உணவு என்று வருகிறபோது, உணவுத் துறை அமைச்சர் இந்த செய்தி கிடைத்தவுடனேயே, அரசாங்கம் என்று சொல்வது ஒரு கூட்டு முயற்சிதான். அதனால் இது மக்கள் நல்வாழ்வுத் துறை சம்பந்தப்பட்டது என்று விட்டுவிடாமல், உடனேயே சம்பந்தப்பட்ட இணை ஆணையரை அனுப்பி, மாநகராட்சியினுடைய சுகாதாரத் துறையையும் இணைத்துக் கொண்டு செயல்பட்டோம். அடுத்து Law and Order—நேரடியாக இதில் இருக்கிற Penal Code சட்டப் பிரகாரம் காவல் துறை தலையிடலாம்; அதனால் அவர்களை நேரடியாகத் தொடர்பு கொண்டு உடனே வழக்கைப் பதிவு செய்திருக்கிறோம். வழக்குப் பதிவு செய்திருந்தாலும் வழக்கை நடத்தப் போவது சுகாதாரத் துறைதான். ஆனாலும்கூட அவர்கள்தான் நடத்த வேண்டும் என்று

2010 மே 4] [திரு. எ.வ. வேலு]

இந்த அரசாங்கமே மெத்தனமாக இல்லை, உடனே நடவடிக்கை எடுக்கச் சொன்னோம். அதோடு மட்டுமல்ல, மாநிலம் முழுவதும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கெல்லாம் அறிவுரை சொல்லப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆங்காங்கே இதுபோன்ற கலப்படப் பேர்வழிகள் இருக்கிறார்களா, repack செய்கிறார்களா என்பதைக் கண்டறிய வேண்டுமென்று சொன்னதன்மூலமாகத்தான் நேற்றையதினம் கோயம்புத்தூரிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அனுப்பி ஒவ்வொரு கடையாகப் பார்க்கச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தச் சட்டமன்றத்திலே, நீங்கள் எல்லாம் சொன்ன கருத்து, கவனத்தை ஈர்த்ததன்வாயிலாக உங்களுக்கெல்லாம் நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், நாட்டுக்கு நேரடியாக நாளையதினம் பத்திரிகை நண்பர்கள்மூலமாக இந்தச் செய்தி, செல்லும். அதனால் நாட்டு மக்கள் இந்தச் செய்தியின் மூலமாக விழிப்புணர்வு பெறுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. இந்த விழிப்புணர்வு என்பது மக்களுக்குத் தேவையாக இருக்கிறது. சட்டத்தைப் பொறுத்த அளவில் கடுமைப்படுத்தலாம். அது ஒன்றும் பெரிய காரியம் அல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, இந்தச் சட்டத்தை மேலும் எப்படிக் கடுமைப்படுத்தலாம் என்பதை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்ல இருக்கிறேன்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. சேகர் பாபு ஒரு கருத்தைச் சொன்னார், சத்துணவுக் கூடங்களிலேகூட சில நேரங்களில் உள்ளன என்றார். அப்படியல்ல. பொதுமக்கள் கடைகளில் வாங்குகிற பொருள் என்பது வேறு. சத்துணவுக் கூடங்களுக்கு அனுப்புகிற பொருட்கள் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலமாக Quality Inspector—தரக் கட்டுப்பாட்டு அதிகாரியின் மூலமாகத் தரத்தைப் பரிசோதனை செய்துதான் ஒவ்வொரு சத்துணவுக் கூடத்திற்கும் அனுப்பப்படுகிறது. அதனால் சத்துணவுக் கூடத்திற்குப் போகிற பொருட்கள் எல்லாம் தரமான பொருட்கள்தானேயொழிய,, தவறான பொருட்களாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. தயார் செய்கின்ற இடங்களிலே சிறிய தவறு இருப்பதன்மூலமாக ஏதாவது food poison ஆகி குழந்தைகள்

மயக்கத்திற்கு வரலாமேயொழிய, பொருட்களைப் பொறுத்த அளவுக்கு நுகர்பொருள் வாணிபக் கழகம் தரமான பொருள்களைத்தான் அனுப்புகிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

நுகர்வோர் மையங்கள் என்பதும், நுகர்வோர் சங்கம் என்பதும், உயர்நிலைப் பள்ளிகள் அளவிலே, கல்லூரிகள் அளவிலே தொடங்கப்பட்டிருக்கிற காரணத்தால் அதுகுறித்த விழிப்புணர்வு மேலும் மேலும் வளரும். இன்னும் சொல்லப் போனால், வந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், பொது நிகழ்ச்சியிலே கலந்துகொள்கிறபோதுகூட பொது மக்களுக்கு கொஞ்சம் இந்தச் செய்திகளையெல்லாம் சொல்லி விழிப்புணர்வினை உருவாக்கலாம். *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை. சொல்கிறேன். அரசாங்கத்தைப் பொறுத்த அளவுக்கு செய்து கொண்டிருக்கிறது, விழிப்புணர்வை உருவாக்கிக் கொண்டுதான் இருக்கிறது. அதனால்தான் சொன்னேன், நுகர்வோர் மையம் என்பதை நாங்கள் உயர்நிலைப் பள்ளி அளவிலே இப்போது தொடங்கியிருக்கிறோம், கல்லூரியிலே தொடங்கியிருக்கிறோம். ஆனால், ஏன் உயர்நிலைப் பள்ளிகளிலே தொடங்குகிறோம் என்று சொன்னால், பெற்றோர்கள் படிக்காதவர்களாக இருப்பார்கள். பொருளை எப்படி வாங்க வேண்டுமென்பது அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். அதனால் அங்கேகூட நாங்கள் நுகர்வோர் மையங்களை உருவாக்கி இருக்கிறோம். இந்த அரசைப் பொறுத்த அளவுக்கு இதுபோன்ற தவறான பொருட்களைக் கடத்துபவர்கள், அதைக் கடத்திச் சென்று repack செய்பவர்கள்மீது கடுமையான சட்டத்தில் நடவடிக்கை எடுக்கும். துரைப்பாண்டியைப் பொறுத்த அளவிற்கு அந்தப் பொருளுக்கு சொந்தக்காரராக இருந்து செய்தவர். இது சம்பந்தமாக இன்றைக்குத் தனிப் படை அமைத்து இருக்கிறோம். ஆய்வு செய்து, அவர்மூலமாகப் புகார் பெறப்பட்டு, எந்தப் பன்னாட்டு கம்பெனியிலே இவர் பெற்றிருக்கிறார் என்பதையும் விசாரணை செய்து, அதற்குப் பின்னால் உரிய நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் மகிழ்வோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(குறுக்கீடுகள்)*

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்) இவ்வளவு நேரம் பேசியாகிவிட்டது. திரும்பவும்* **clarification** *கேட்டால் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) அமைச்சர் இவ்வளவு நேரம் பதில் சொல்லியிருக்கிறார், அதற்குப் பிறகும் சந்தேகமா? (குறுக்கீடுகள்)*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை-பெரியார் மாவட்டத்தினுடைய திராவிட பஞ்சாலை முன்னேற்றச் சங்கத்தினுடைய நிருவாகம், மறுமலர்ச்சி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுசம்பந்தமாக நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) நான் அதைப் பரிசிலனை செய்து எடுத்துக்கொள்வேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பரிசிலனையில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இன்றைக்குத்தான் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)* **Zero hour-ஐ** *எல்லாம் தாண்டி வந்தாகிவிட்டது, இனிமேல் முடியாது. அனுமதியில்லை. அமைச்சர் பதிலுரை அளித்ததில்* **clarification** *ஏதாவது கேட்க வேண்டுமென்றால், கேளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், சொல்லுங்கள்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *4-5-2010-ல்தான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) எனக்குத் தெரியாது. என்னிடம் 4-5-2010 அன்றுதான் கொடுத்திருக்கிறீர்கள். காலை 9-08-க்கு கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய ஆய்வில் இருக்கிறது. நான் பார்த்து எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், சொல்லுங்கள். மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள்.*

திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10696, திரு. இல. வேலுசாமி, அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11933, திரு. கோ. எதிரொலி மணியன்.

திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 12570, திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 12900, திரு. கே.எல். இளவழகன்.

திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6345, திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7534, திரு. கே.எஸ். விஜயகுமார்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *10916*, திரு. இரா. துரைக்கண்ணு.

திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *11729*, திரு. எல். ரவிச்சந்திரன்.

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *12231*, திரு. ஆர். சின்னசாமி.

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7862, திரு. எஸ். இராசசேகரன்.

திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 12782, திரு. வை. சிவபுண்ணியம், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 770, திரு. எம்.ஆர். சுந்தரம்.

திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆத்தூர் தொகுதியில் இயங்கும் பால் குளிரூட்டும் நிலையத்தை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1136, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, தேவிகோடு ஊராட்சியில் ஒரு மாட்டுப் பண்ணை அமைக்க வேண்டியதன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1965, திருமதி இளமதி சுப்பிரமணியன்.

திருமதி இளமதி சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் தொகுதி, அம்மாபேட்டையில் பால் விற்பனை அங்காடி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2376, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் ஆவின் அலுவலகம், வெளியில் பி.எம்.சி. முறையில் சங்கம்மூலம் கொள்முதல் செய்து சென்னைக்கு அனுப்பும் பாலுக்கு உரிய விலை தராமல், சென்னைத் தலைமையிட ஆவின் குறைந்த விலை தருவதால், கோடி ரூபாய்க்கு மேல் வேலூர் ஆவினுக்கு நட்டம் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2581, திரு. கோ. அரி.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதி, திருவாலங்காடு, கடம்பத்தூர், வேடிப்பாக்கம் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3188, திரு. ஆர்.டி. கணேசன்.

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி மாவட்டம், தேனியில் இயங்கி வரும் பால் நிலையத்தில், அதிக நிறுவு திறன் கொண்ட குளிர்விப்பான் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3202, திரு. ந. கணபதி.

திரு. ந. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்

வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4800, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முகையூர் தொகுதி, முகையூரில் பால் பண்ணை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5517, திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புறப் பெண்களுக்கு மானியத்துடன் கறவை மாடுகள் வழங்கி, பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5590, திரு. தா. மலரவன்.

திரு. தா. மலரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5709, திரு. ஆர்.எம். பழனிசாமி.*

திரு. ஆர்.எம். பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6419, திரு. பி. பலராமன்.*

திரு. பி. பலராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் ஜெர்சி மற்றும் முர்ரா வகைக் கால்நடைகளை அரசே சலுகை விலையில் தருவித்து, வங்கிமூலம் மக்களுக்குப் பசுக்களை வழங்கி அதிகளவில் பால் உற்பத்தி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6478, திரு. ஞா. செந்தமிழன்.*

திரு. ஞா. செந்தமிழன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையில் ஏற்பட்டுள்ள ஆவின் பால் தட்டுப்பாடு*

மற்றும் ஆவின் பொருட்கள் பற்றாக்குறையைப் போக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6629, திரு. ஓ.கே. சின்னராஜ்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதியில் பால் உற்பத்தியாளர்களுக்கு சொந்தக் கட்டடம் இல்லாத மையங்களில் அரசே பால் உற்பத்தியாளர்கள் சங்கக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6926, திரு. செ.ம. வேலுசாமி.

திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சூலூர், செங்கத்துறை, பல்லடம், சுல்தான்பேட்டை பகுதிகளில் பால் குளிரூட்டும் நிலையங்கள் விரைந்து அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7072, திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொடக்கக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க ஊழியர்களை ஆவின் ஊழியர்களாகப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7136, திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கையில் பால் பவுடர் தொழிற்சாலை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7201, திரு. கு. சீனிவாசன்.

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக மக்களுக்குத் துறையின் சார்பில் பால் விநியோகம் குறைந்து, ஆவின் பால் அதிக அளவில் அண்டை மாநிலங்களுக்கு (குறிப்பாக கேரளா) வழங்கப்படுவதையும் தடுத்திட வேண்டியது குறித்தும், தமிழகத்தில் தனியார் பால் உற்பத்தியாளர்கள் மிகப் பெரிய அளவில் இலாபம் ஈட்டுவதைத் தடுத்திட வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7588, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8324, திருமதி ஜி. லதா.

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மத்தியக் கூட்டுறவு வங்கி, தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கிகள்மூலம் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 13494, திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காட்டுமன்னார்கோவில் தொகுதிக்குட்பட்ட வானமாதேவியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8417, திரு. வை. காவேரி, அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8808, திருமதி பி. பத்மாவதி.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலத்தில் புதியதாகப் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9376, திரு. சு.ப. வேலுமணி.

திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேரூர் தொகுதிக்குட்பட்ட நாச்சிபாளையம் ஊராட்சியில் பால் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9505, திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், வரகூர் தொகுதி, கண்டிகுறும்பலூர் அல்லது பெருமத்தூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

2010 மே 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9568, திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையில் தட்டுப்பாடின்றிப் பொது மக்களுக்கு வெண்ணெய் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 9689, திரு. செ. பொன்னுதுரை.

திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள வெட்டையங்கிணறு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10188, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கலசப்பாக்கம் சட்டப் பேரவைத் தொகுதியிலுள்ள எலத்தூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் செயல்பட வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10364, திருமதி ராணி வெங்கடேசன்.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தான்குளம் தொகுதியில் உள்ள ராமானுஜம்புதூரில் பால் குளிரூட்டும் நிலையம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10390, திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கறவை மாடுகளை மானிய விலையில் விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10758, திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பால் உற்பத்தியாளர்களுக்குக் கட்டுப்படியான விலையை அரசு

வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 10971, திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பால் கொள்முதல் விலையை அதிகரித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 11491, திரு. எஸ். ராஜகுமார், அவையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12062, திரு. இ. மகேந்திரன்.

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் பால் வளத்தைப் பெருக்க. கலப்பினப் பசு மாடுகள் உருவாக்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 12428, திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை ஆவின் பாலக தினக் கூலித் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 12631, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.*

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் தொகுதியில் நகர்ப் பகுதியில் ஓர் ஆவின் பாலகம் கொண்டு வரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 12743, திருமதி ஆர். பிரேமா.*

திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவினாசி தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

TRUTH ALONE TRIUMPHS

2010 மே 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 13056, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் பால் உற்பத்தியாளர்கள் பாலை உரிய விலை கொடுத்து வாங்கி, விவசாயிகளின் வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,73,91,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ளவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 217 முதல் 304 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்வளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ளவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ளவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று மூன்று மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மூன்று அமைச்சர்கள் பதிலுரை வழங்க உள்ளார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் மூன்று மானியக்

@ 305 முதல் 361 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@ 362 முதல் 394 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கோரிக்கைகளின்மீதும் சேர்த்தே பேசலாம். நேரத்தின் அருமையைக் கருதி, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் உரையை முடித்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன். முதலில், அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் *15* நிமிடங்கள்.

திரு. பி. பலராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைத் துறை, மீன்வளத் துறை, பால் வளத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பை நல்கிய, பார்வைக்குத் தெரியாமல் பாறைக்குள் மறைந்திருக்கும் தேரைக்கும் உணவு வழங்கிய கருணையின் பிறப்பிடம், அன்பின் உறைவிடம், பண்பின் இருப்பிடம், கடும் விலைவாசி உயர்வால் நலிவடைந்த மக்களுக்காகப் போராடும் ஏழையின் காவல் தெய்வம், தரணி போற்றும் எங்கள் தங்கத் தாரகை, உலகம் போற்றும் உத்தமத் தலைவி, வருங்காலத் தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

கடந்த 30-5-2009 அன்று தமிழ்நாட்டைச் சார்ந்த 8 மீனவர்கள் ஒரே படகில் மீன் பிடிக்கச் சென்றபோது, திசை மாறி வங்காளத் தேசத்துக்குச் சென்றுவிட்டார்கள். அவர்கள் மூன்று பேரைத் தவிர, மீதியுள்ள ஐந்து பேரின் கதி என்னவென்று தெரியவில்லை. எனவே, காணாமற்போன அந்த ஐந்து நபர்களின் குடும்பங்களுக்கு எவ்வளவு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை இந்த அரசு தெரிவிக்கவேண்டும். மீன் பிடிக்கக் கடலில் சென்று காணாமல் போகும் மீனவர்கள் ஏழு ஆண்டு காலமாகியும் கரைக்குத் திரும்ப வராவிட்டால், அவர்கள் இறந்ததாகக் கருதி Affidavit *பெற்று, எங்கள் அம்மா ஆட்சியில் அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. அதேபோல் உங்களுடைய ஆட்சியில் எத்தனை பேருக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது? மேலும், கடந்த 4 ஆண்டுகளாகக் காணாமற்போன மீனவர்கள் எத்தனை பேர், எத்தனை படகுகள் சேதமடைந்தன? அவர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை எவ்வளவு என்ற முழு விவரங்களையும் அமைச்சர் தன் பதிலுரையில் தெரிவிக்க வேண்டும்.*

மீனவர்களுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக டீசல் மானியத் தொகை வழங்கப்படாமல் உள்ளது. நிலுவையில் உள்ள இந்தத் தொகையை உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம், 2010-2011 இல் பக்கம் 31, பத்தி 7.5-ல், மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை இந்த ஆண்டு செயல்படுத்தப்படும் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இந்த ஆண்டு 2008-2009 இல் ரூ.23 கோடியே 85 இலட்சம் மானியமாக இதற்கு வழங்கியதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால், 2009-2010-இல் எந்தவித மானியமும் யாருக்கும் வழங்கப்படவில்லை என்பதுதான் உண்மை. எனவே, இந்த தி.மு.க. ஆட்சியில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை செயலற்றுப் போய் உள்ளது என்பது தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது.

மத்திய அரசு மீனவர்களுக்கு உட்பொருத்து எஞ்சின் வாங்குவதற்கு மாநில அரசுமூலம் மானியம் வழங்கி வருகிறது. ஆனால், இந்த அரசு முறைப்படுத்தி வழங்கவில்லை எனத் தெரிகிறது. கடந்த 4 ஆண்டுகளில் எவ்வளவு தொகை மானியமாகப் பெறப்பட்டது, எத்தனை மீனவர்களுக்கு வழங்கப்பட்டது என அமைச்சர் விளக்க வேண்டும்.

முற்பகல் 11-40

அதேபோல், வெளிப்பொருத்தும் இன்ஜின்களுக்கு 2009-2010-ல் 20,000 ரூபாய் மானியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, விண்ணப்பித்த தகுதி வாய்ந்த அனைவருக்கும் வழங்காமல் மிகக் குறைந்த அளவில் வழங்கப்பட்டது. அனைத்து மீனவர்களுக்கும் மானியம் சென்று சேர வகை செய்ய அரசு விரைந்து செயல்படுத்த வேண்டும்.

சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தில் கீழ்க்கண்ட 4 ஆண்டுகளாக இந்த அரசு புதிய மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படுமென்று தொடர்ந்து அறிவித்து வருகிறது. 2010-2011 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் பக்கம் 21, பத்தி 5.26-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் அண்ணாமலைச்சேரி, பெரிய மாங்கோடு, எண்ணூர் முகத்துவாரக் குப்பம் உள்ளிட்ட பகுதிகளில் இதுநாள் வரையில் எந்தவிதப் பணிகளும்

நடைபெறவில்லை. கடந்த 4 ஆண்டுகளாக இத்துறையின் மந்தமான செயல்பாட்டைத் தெரிந்துகொள்ள முடிகிறது. 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்பதை இந்த அரசு உணர வேண்டும். இப்போது எனக்கு ஒரு சினிமா டயலாக்குதான் ஞாபகத்தில் வருகிறது. 'வரும், ஆனால் வராது.' (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில், சிறு விசைப் படகுகளுக்கு டீசலுக்கான விற்பனை வரியை ஒரு நிமிடத்திற்கு 10,000 லிட்டர் என்ற அளவில் தள்ளுபடி செய்தார்கள். 2006 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின்போது, தற்போதைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாதம் 5,000 லிட்டர் என்ற அளவில் விற்பனை வரியைத் தள்ளுபடி செய்வதாகக் கூறினார். தற்போது ஒரு மாதத்திற்கு 500 லிட்டர் மட்டுந்தான் விற்பனை வரியைத் தள்ளுபடி செய்துவிட்டு, தேர்தல் வாக்குறுதியில் 90 சதவிகிதம் நிறைவேற்றி விட்டோம் என்று கூறுவது எந்த வகையில் நியாயம்? இது மக்களை ஏமாற்றுகின்ற செயல். சுனாமி, இயற்கைக் கடல் சீற்றம், சிங்கள வெறியர்களின் கொடூரத் தாக்குதல் இப்படி சொல்லொணாத் துயருக்கு ஆளாகி உள்ள மீனவ மக்களுக்கு இந்த 500 லிட்டர் கூடுதலான விற்பனை வரித் தள்ளுபடி என்பது, யானைப் பசிக்கு சோளப் பொரி போன்றது ஆகும். கடலோரங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 1,088 மீட்டர் தடுப்புச் சுவர் கட்டிக் கொடுக்கின்ற பணி பாதியில் நிறுத்தப்பட்டது. உயிரைக் கையில் பிடித்து இரவு நேரத் தூக்கத்தைக் கலைத்து, அலைபாய்கின்ற மனித உயிரைக் காப்பாற்ற உடனடியாகத் தடுப்புச் சுவர் கட்டித் தர வேண்டும்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மீனவ மக்களுக்கு ஒரு லிட்டர் டீசலுக்கு ஒரு ரூபாய் 50 பைசா மானியம் வழங்கப்பட்டது. இதில் மத்திய அரசும், மாநில அரசும் சமமாக மானியம் வழங்க வேண்டும். 2005 ஆம் ஆண்டில் சுமார் 60,000 சிறு விசைப் படகுகளுக்கு டீசல் மானியம் வழங்கப்பட்டது. 10-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டம் தொடர வேண்டுமென்றால், மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே கூட்டணியின் ஆட்சி இருக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் பேசும்போது குறிப்பிட்டார். தற்சமயம் புதிதாக எந்தவித உரிமையும் வழங்காமல், இருக்கின்ற உரிமைகளையும் பறிக்கின்ற விதத்தில் இந்த அரசு செயல்படுகின்றது.

55 வயதுக்கு மேற்பட்ட மீனவப் பெண் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் பெறும் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். சுனாமியால் பாதிக்கப்பட்டு தனித்து வாழும் மீனவப் பெண் தொழிலாளர்களுக்கு ஒருங்கிணைந்த நிவாரணம் மற்றும் மறு சீரமைப்புத் திட்டத்தை அறிவிக்க வேண்டும். மீன் சந்தைகள் உள்ள பகுதிகளில் மீனவப் பெண்களுக்குக் கழிப்பறைகள், ஓய்வறைகள் போன்ற தங்கும் வசதிகளை அமைத்துக் கொடுக்க வேண்டும். குறிப்பாக, இந்த வசதிகளைக் கடலோர மாவட்டத்தில் உள்ள மீன்பிடி நகரங்களில் உள்ள சந்தைகளுக்குக் கட்டாயம் ஆக்க வேண்டும். மீன் விற்பனை செய்யும் பெண்களின் சமூகப் பொருளாதார நலன் கருதி, அவர்களுக்கு மீன்களை சந்தைக்குக் கொண்டு செல்வதற்கும், திரும்ப எடுத்து வருவதற்கும் இரயில் மற்றும் பேருந்துகளில் தனி வசதி செய்து தரப்பட வேண்டும். மீன்பிடித் தொழிலைச் சார்ந்த பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்து மீனவப் பெண்களையும் தொழிலாளர்களாக அங்கீகரிக்க வேண்டும். மீனவர்கள் நலனுக்காக மீன்வளத் துறையில் எடுக்கப்படுகின்ற நலத் திட்ட முடிவுகளில் மீனவப் பெண்களுக்குப் பங்கு இருக்க வேண்டும். மீன்களை விலை நிர்ணயம் செய்வதில் இடைத்தரகர்கள் ஆதிக்கத்தை, குறுக்கீடுகளைப் போக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் முதல் தூத்துக்குடி வரை உள்ள மன்னார் வளைகுடாப் பகுதியில் 21 தீவுகள் உள்ளன. அந்தப் பகுதிகளை இந்த அரசு தேசிய கடல் பூங்கா பகுதியாக அறிவித்து, அந்தப் பகுதிகளைச் சுற்றி மிதவைகளை மிதக்கவிட்டு மீன் பிடிப்பதைத் தடுத்துள்ளது இந்த அரசு. இந்தப் பகுதிகளில் மீன் பிடிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது பால் வளம். பிறக்கின்ற குழந்தை முதல் தள்ளாத முதியோர் வரை உட்கொள்ளும் உயிர் மருந்தாம் பால். அந்தப் பால் வளத் துறையில் உங்கள் ஆட்சியில் 150 கோடி ரூபாய் நஷ்டத்திலே இருந்ததை இலாபகரமாக்கி, தொட்டது துலங்குகிற வேலையைச் செய்தவர் எங்கள் அன்னை என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சென்னை மாநகரத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 11 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டது. கடந்த 4 ஆண்டுகளில் 10 இலட்சம் லிட்டர் பால் மட்டுந்தான் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றது. நிருவாகத் திறமை மிக்கவர்கள்

என்று கூறிக்கொள்ளும் நீங்கள், இந்த ஆட்சியில் மக்களுக்குத் தேவை இருந்தும், வழங்குவதற்கு முற்படவில்லை. ஏனென்றால், கவின்கேர் மில்க் போன்ற தனியார் நிறுவனங்கள் பயன்பெறுகின்ற வகையில் விற்பதற்காக விற்பனை அளவைக் குறைத்திருக்கிறீர்கள். சென்னை மாநகராட்சியின் தேவையை நிறைவு செய்வதற்கு 1995 ஆம் ஆண்டு சோழிங்கநல்லூரில் பால் குளிரூட்டும்... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் பதில் சொல்லாமல் இருக்க முடியாது அல்லவா?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையிலும் அன்பிற்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் நிருவாகத்தைப் பற்றிச் சொன்னார்கள். இப்போதும் சொல்லிக் கொண்டிருக்கிறார். 2006-லே நாங்கள் ஆட்சிக்கு வருகிறபோது, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே குவிந்த நட்டமாக இருந்தது 336 கோடி ரூபாய். இன்றைக்கு இந்த நான்கு ஆண்டு காலத்தில் அந்த 336 கோடி ரூபாயை 296 கோடி ரூபாயாகக் குறைத்துக் கொண்டு வந்திருக்கிறோம். ஒன்றியங்களிலேயிருந்து பால் பண்ணைகளுக்கு, ஒன்றியங்களிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செலுத்த வேண்டியது 51 கோடி ரூபாய் பாக்கி வைத்திருந்தார்கள். இப்போது நாங்கள் 19 கோடி ரூபாயாகக் குறைத்துக் கொண்டு வந்திருக்கிறோம். (குறுக்கீடு) நான் சொன்னதற்குப் பிறகு பேசுங்கள். சென்னையிலே இப்போது 10 இலட்சத்து 38 ஆயிரம் லிட்டர் பால் தினந்தோறும் வழங்கிக்கொண்டிருக்கக்கூடிய அரசு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-45

திரு. பி. பலராமன்: மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் இந்தியாவிலேயே குஜராத் மாநிலம் முதலிடத்திலும், தமிழகம் இரண்டாமிடத்திலும் இருந்தது. இப்போது, இந்த ஆட்சியிலே தமிழகம் 7-வது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 13-வது இடத்திலிருந்த கர்நாடகம்கூட இன்றைக்கு இரண்டாவது இடத்திற்கு வந்துவிட்டது. எல்லாத் துறைகளிலும் பின்னோக்கிச் செல்கின்றது, பால் வளத் துறையிலும் பரிதாப நிலைக்குத்தான் தள்ளப்பட்டுள்ளது. புரட்சித் தலைவி

அம்மா அவர்களுடைய ஆட்சியில் 17,000 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் செயல்பட்டனர். ஆனால், கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைதான் இன்றைக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) 9,000 சங்கங்களாகக் குறைந்துவிட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஆட்சிக் காலத்தில் இருந்ததைவிட கூட்டுறவுச் சங்கங்கள் இன்றைக்கு அதிகமாக இருக்கின்றன. 8,246 கூட்டுறவுச் சங்கங்களை அமைத்திருக்கிறோம். அவற்றில் 22,29,000 உறுப்பினர்கள் இன்றைக்கு உறுப்பினர்களாக இருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் உரையாற்றுகிறபோது, தகுந்த ஆதாரங்களோடு உரையாற்றினால் நன்றாக இருக்கும். இல்லாவிட்டால், ஏறுக்கு மாறான கருத்துகளைச் சொன்னால், பதில் சொல்வதற்கு சிரமமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. பலராமன்: பவுர்ணமியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இருந்த பால் வளம் இன்றைக்கு இந்த ஆட்சியில் அமாவாசையாக மாறியிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 24 இலட்சமாக இருந்த பால் கொள்முதல் இன்றைக்கு 19 இலட்சத்திற்குக் குறைந்திருக்கிறது. தமிழகத்திற்குத் தேவையான பால் இல்லாத நிலையில், கேரளாவுக்கு ஓசூர் மற்றும் தருமபுரி பகுதிகளிலிருந்து தினந்தோறும் பால் அனுப்பப்படுகிறது.

பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் கோரிக்கைகளை வலியுறுத்தி, வருகின்ற 17 ஆம் தேதி மாநிலம் தழுவிய பால் நிறுத்தும் போராட்டம் செய்யவேண்டிய அவல நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள். பொது மக்களுடன் கால்நடைகளும் வீதிக்கு வந்து போராடுகின்ற துர்பாக்கிய . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்ற உறுப்பினர் அவர்கள், கேரளாவுக்குப் பால் அனுப்பப்படுவதாகச் சொல்கிறார்கள். இந்த

ஆட்சிக் காலத்தில் மாத்திரமல்ல; அ.தி.மு.க.வினுடைய ஆட்சிக் காலத்திலும் கேரளாவுக்குப் பால் அனுப்பிக்கொண்டிருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நட்டத்திலிருந்த ஒன்றியங்கள் அவர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு பால் அனுப்பக்கூடிய நிலை தொடர்ந்து இருக்கிறது. எங்களுடைய ஆட்சிக் காலத்தில் நாங்கள் குறைவாகத்தான் அனுப்பிக்கொண்டிருக்கிறோம்.

அடுத்து, பால் உற்பத்தியாளர்களைப் பொறுத்தவரையில், போராட்டம் நடத்த அறிவிப்புத் தந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகுதான் ஆண்டுக்கு ஒரு முறை என்று மூன்று தடவை பாலினுடைய விலையை உயர்த்தியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, 5 ஆண்டு காலத்தில் எருமைப் பாலுக்கு ஒரு ரூபாய் 56 காசுகளும், பசும்பாலுக்கு 1 ரூபாய் 50 காசுகளும்தான் உயர்த்தியிருந்தார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து மூன்று முறை, ஆண்டுக்கு ஒரு முறை எந்தக் காலத்திலும் ஏற்றியது கிடையாது. 3 முறை ஏற்றியதன் பயனாக, பசும்பாலுக்கு 5 ரூபாய் 50 காசுகளும் எருமைப் பாலுக்கு 10 ரூபாய் 50 காசுகளும் உயர்த்திக் கொடுத்த அரசு தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. பி. பலராமன்: தேவைக்கு அதிகமாக இருந்த பாலைத்தான் எங்களுடைய ஆட்சிக் காலத்தில் எங்களுடைய அம்மா அவர்கள் கேரளாவுக்கு அனுப்பினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பொது மக்களும், கால்நடைகளும் வீதிக்கு வந்து போராடுகின்ற துர்பாக்கிய நிலைதான் இன்றைக்கு இந்த ஆட்சியில் தொடருகிறது. தமிழகம் முழுவதும் கிராமங்களிலுள்ள கால்நடை மருத்துவமனைகளில் பணிபுரியும் கால்நடை மருத்துவர்கள், Livestock Inspector-கள்—கால்நடை ஆய்வாளர்கள் ஆகியோர் பணிபுரியும் நேரத்தில் சிறிது நேரம் மட்டுமே மருத்துவமனைகளில் இருந்துவிட்டு, அங்கிருந்து புறப்பட்டுவிடுகிறார்கள். எனவே, அவர்கள் தங்களது பணி நேரத்தில் பணி நேரம் முடியும் வரை பணியாற்றுவதற்கு உரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கால்நடைகளுக்கு உரிய மருந்துகள் தட்டுப்பாடு இல்லாமல் வழங்கப்பட்டன. ஆனால், தற்போது அரசு கால்நடை மருத்துவமனைகளில் மருந்துகள் போதிய அளவில் இல்லை. எனவே, கால்நடைகளுக்குத் தேவையான மருந்துகள் தட்டுப்பாடின்றிக் கிடைப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய தொகுதியில், பொன்னேரி தொகுதிக்குட்பட்ட என்.டி.பி.சி.எல்., வட சென்னை அனல் மின் நிலையம் ஸ்டேஜ் -2, சி.பி.சி.எல்., கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், எல். & டி. கப்பல் கட்டும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் உள்ளூரில் உள்ளன. உள்ளூரில் உள்ள படித்த இளைஞர்களுக்கு இவற்றில் வேலைவாய்ப்பு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளிவயல் முதல் செங்குன்றம் வரை வருகின்ற திருநீர்மலை, அனுமந்தை வடகரை வழியாகப் பேருந்துகள் விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் மீஞ்சூர் ஒன்றியத்தில் அத்திப்பட்டு ஊராட்சியில் இந்தியன் ஆயில் நிறுவனத்திற்குக் குறைந்த விலையில் இதற்கு முன் விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன. தற்போது துணை முதல்வர் அவர்கள் 10,000 கோடி ரூபாய் நிதியில் புதிய இந்தியன் ஆயில் கழக விரிவாக்கப் பணி நடைபெறும் என்று அறிவித்தார்கள். இந்த நிறுவனத்திற்கு நிலம் வழங்கிய குடும்பத்தாருக்கு வேலை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். பொன்னேரி தொகுதியில், ஆரணி பேரூராட்சியில் பெண்கள் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த உரிய கட்டணம் செலுத்தி நான்கு வருடங்களாகியும், இன்னும் தரம் உயர்த்தப்படவில்லை. மேலும், ஆரணி ஆரம்ப சுகாதார நிலையத்தை சீரமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-50

மீஞ்சூர் ஒன்றியம், அண்ணாமலைச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். திருவொற்றியூர், மணலி, மணலி புதுநகர், நாப்பாளையம், கொண்டக்கரை, மீஞ்சூர், பொன்னேரி சாலையில் கடந்த நான்கு ஆண்டுகளாக மிகவும்

பழுதடைந்த சாலைகள் இருப்பதால், 100-க்கும் மேற்பட்ட உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டு பொது மக்கள் மத்தியில் பெரிய அச்சுறுத்தல் காணப்படுகிறது. இந்தச் சாலையை உடனடியாகச் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். பொன்னேரியில், ஆரணி ஆற்றின் குறுக்கே குமணஞ்சேரி ஏரிமேடு வழியாகப் பொன்னேரிக்கு வருவதற்கு மேம்பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பொன்னேரி தொகுதியில் அடங்கிய காட்டூர் கிராமத்தில் சுனாமி நிவாரணத் தொகைகள் வழங்கப்பட்டன. ஆனால், அம்பேத்கர் மீனவர் சங்கம், கருமாரியம்மன் மீனவர் சங்கம் ஆகியவற்றில் அடங்கிய கடப்பாக்கம், ஆண்டாள் மடம், சிறுபழவூர் ஆகிய கிராம மக்களுக்கு இதுநாள் வரையில் வீடுகள் கட்டப்படவில்லை. பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிரந்தரமாக வீடுகள் கட்டித் தர வேண்டும். இப்பகுதி மீனவர்கள் மீன்களைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு—cold storage ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்ற அடிமைத்தனம் மாறிவிட்டது. ஆனால், தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்த எங்களுக்கு அரசு விழாக்களில் முக்கியத்துவம் கொடுக்கின்ற நிலை மட்டும் வரவில்லை. தி.மு.க. ஆட்சியில், திருவள்ளூர் மாவட்டத்தினுடைய பொன்னேரி தொகுதியில் நடைபெறுகின்ற அரசு விழாக்களில் கல்வெட்டுகள் வைக்கப்படவில்லை. தற்போது தனித் தொகுதியில் M.L.A., M.P., பெயர்களும் போடுவதில்லை. அண்ணல் அம்பேத்கருக்குப் புதிதாய் சிலை வைத்து சிம்மாசனம் தேடிக்கொள்வதைக் காட்டிலும், அண்ணல் எண்ணிய எண்ணங்களை செயலில் கொண்டு வருவது அவர்களுக்கு நாம் செய்யும் சிறப்பாகும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். 'எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு' என்கிற பாரதிதாசன் வரிகளை தற்சமயம் தமிழக மக்கள்; "எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் என்றும் மங்காத எங்கள் தங்கத் தாரகை, எங்கள் அம்மா என்று சங்கே முழங்கு" என்று மக்கள் எண்ணிப் பாடுகிறார்கள் என்பதைக் கூறி, எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். மணி.

திரு. எஸ். மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தையே இதயமாகக் கொண்டிருக்கும் எங்கள் தலைவர், செம்மொழித் தமிழின் தங்க சிம்மாசனம் மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களே, எளிமையே இலக்கணமாய்த் திகழும் எங்கள் இனமானப் பேராசிரியர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களே, உலக நதிகளை அறியும் முன் உள்ளூர் ஓடைகளையும் அறிந்திருக்கும் எங்கள் உள்ளாட்சி நாயகர், அறிவாலயச் சுடர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேச எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களே, எங்கள் மாவட்ட அமைச்சர், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, அனைவருக்கும் என் கனிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கடந்த நான்காண்டுகளில் 17,367 முகாம்கள் நடத்தப்பட்டு, 2 கோடியே 14 இலட்சம் கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு, இத்துறையில் கடந்த நான்காண்டுகளில் 500-க்கும் மேற்பட்ட கால்நடை மருத்துவர்கள், 400-க்கும் மேற்பட்ட கால்நடை ஆய்வாளர்கள், 1,000-க்கும் மேற்பட்ட கால்நடை உதவியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மேலும், 444 கால்நடை மையங்கள் நமது ஆட்சியில் இன்று தரம் உயர்த்தப்பட்டுள்ளன. கால்நடை மற்றும் பால் வள மேம்பாட்டுத் துறைக்கு நடப்பு நிதியாண்டில் ரூபாய் 351 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கோவை ஆவின் நிறுவனம் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் உதவியோடு நவீனமயமாக்கப்படும் என்று அறிவிப்புகள் செய்யப்பட்டுள்ளன. பால் உற்பத்தி செய்யும் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக இன்று தமிழகம் விளங்குகிறது. 22.29 இலட்சம் உறுப்பினர்கள் அடங்கிய 8,246 பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று தமிழகத்திலே செயல்பட்டு வருகின்றன. 1958 ஆம் வருடம் தமிழ்நாட்டில்

இத்துறை தோற்றுவிக்கப்பட்டு, கொஞ்சம் கொஞ்சமாக அது பரிணாமம் பெற்று இன்றுள்ள நிலையை எட்டியுள்ளது. 'ஆவின்' என்று அனைவராலும் அறியப்பட்ட நிறுவனமானது 1-2-1981 அன்றுதான் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின்கீழ் இணைந்து வெண்மைப் புரட்சி செய்ய ஆரம்பித்தது. அந்த வெண்மையிலும் ஒரு சில களங்கங்கள். இடையிலே கடந்த ஆட்சிக் காலத்தில் 226 சங்கங்கள் செயலிழந்து நின்றன. அப்பொழுதுதான் தனியார் பால் பண்ணைகள் எல்லாம் தமிழ்நாட்டில் அதிகமாக முளைக்க ஆரம்பித்தன. ஏனென்றால் விவசாயிகளுக்கு ஒழுங்காகப் பணம் பட்டுவாடா செய்யவில்லை. அப்பொழுதுதான் விவசாயிகள் தனியார் பால் பண்ணையை நாடினார்கள் என்பதை நான் இங்கே தெரியப்படுத்த விரும்புகிறேன்.

முற்பகல் 11-55

தமிழகத்தில் இப்போது 8,246 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் பெண்களால் நடத்தப்படும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் 1,474. கூட்டுறவு அமைப்புகளில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்குப் பால் ஊற்றுவதன்மூலம் பால் கொள்முதல் விலையாக விவசாயிகளுக்கு சராசரியாக நாள் ஒன்றிற்கு ரூ.396.20 இலட்சம் தருகிறார்கள். இதனால், கிராமப்புறப் பொருளாதாரம் மேம்படுகிறது. இதற்குக் காரணம் நமது கழக ஆட்சியே. மேலும், மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்க உத்தரவாதம் தரப்படுகிறது. வேளாண் துறைமூலம் பல புதிய மேம்படுத்தப்பட்ட உயர் தரமான பசும் புற்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. கடந்த கால ஆட்சியைப்போல் அல்லாமல், பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய நேரத்தில் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. இதனால் பால் உற்பத்தியாளர்கள் ஆவின் நிறுவனத்திற்கே தங்கள் பாலை வழங்க விரும்புகிறார்கள். மக்கள் மத்தியில் ஆவின் பாலுக்கு அதிக வரவேற்பு உள்ளதால் மக்களின் தேவை அறிந்து பாலிலிருந்து பால் பவுடர், வெண்ணெய், நெய், ஐஸ்கிரீம், பன்னீர், பாலாடைக்கட்டி, கோவா என பல உப பொருட்களைத் தயாரிப்பதில் ஆவின் நிறுவனம் முன்னணியில் உள்ளது.

உலக அளவில் தரம் வாய்ந்த முர்ரா இனமானது நாள் ஒன்றிற்கு 25 லிட்டர் பால் கறக்கும் தன்மை உடையது. முர்ரா இன எருமைகளைப் பிரபலப்படுத்துவது நமது விவசாயிகளுக்கு அதிக வருமானத்தை உறுதி செய்யும். இந்தத் திட்டத்தின்கீழ் 2,015 முர்ரா கறவையின எருமைக் கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன. விவசாயிகளை மட்டும் ஊக்கப்படுத்தாமல், அவர்களுக்கு உறுதுணையாக உள்ள கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களையும் ஊக்கப்படுத்த தலைவர் கலைஞர் அவர்கள் தவறவில்லை. அதனால், தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் 16,588 பணியாளர்களுக்கு ரூ.200 முதல் ரூ.850 வரை சம்பள உயர்வு வழங்கி, அவர்களுக்கும் வாழ்க்கையில் ஓர் உயர்வைத் தந்திருக்கிறது நமது கழக அரசு. பெரும்பாலான சங்கங்கள் மின்னாளுமைமூலம் இணைக்கப்படுகின்றன. இந்த மின்னாளுமைமூலம் வந்தால் உற்பத்தியாளர்கள் அவர்கள் இடத்தில் இருந்தவாறு அவர்கள் பாலைப் பற்றி அவர்களே பகுப்பாய்வு செய்யலாம், அதையும் நமது கழக அரசு செய்து வருகிறது.

மீன்வளத் துறை என்று எடுத்தோமேயானால், நமது தமிழ்நாடு 1,076 கிலோ மீட்டர் நீளக் கடற்கரையையும், 13 கடலோர மாவட்டங்களையும், 591 மீன்பிடி கிராமங்களையும், 377 மீனவர் மகளிர் கூட்டுறவுச் சங்கங்களையும் உள்ளடக்கிய, 1,377 தொடக்க மீனவர் கூட்டுறவுச் சங்கங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. மீன்வளத்தைப் பெருக்கவும், மீன்வளத்தைப் பாதுகாக்கவும், தமிழக அரசு ஒவ்வோர் ஆண்டும் மீன் இனப்பெருக்க காலமான ஏப்ரல் 15 முதல் மே 29 முடிய கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில், ஜூன் 15 முதல் ஜூலை 29 முடிய மேற்கு கடற்கரைப் பகுதிகளில் 45 நாட்களுக்கு மீன் பிடிப்பதைத் தடை செய்துள்ளது. இதனால் இந்த மீன்பிடி தடை செய்யப்பட்ட காலத்தில் ஏழை மீனவர்கள் மற்றும் தொழிலாளர்களின் துயர் துடைக்க மீன்பிடி தடை செய்யப்பட்ட காலத்திற்கு குடும்பம் ஒன்றிற்கு ரூ.500 வீதம் நிவாரணம் வழங்க அரசு ஆணையிட்டது. அதன்படி, 2009-2010 ஆம் ஆண்டில் 1.43 இலட்சம் மீனவர் குடும்பங்களுக்கு ரூ.719 இலட்சம் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் 2010-2011 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. அரசின் இந்த அறிவிப்பு அந்த மக்களைப் பொறுத்தமட்டில் நல்ல அறிவிப்பு என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள மீனவர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் 2,000 வீடுகள் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு செய்து வருகிறது. மேலும், மீனவர்கள் பெற்றிருந்த கடன்களை இரத்துச் செய்தும், மீனவர் நல வாரியத்தை அமைத்தும், மீன்பிடித் துறைமுகங்களை மேம்படுத்தியும், இறங்குதளங்கள் போன்ற கட்டமைப்பு வசதிகள் அமைத்தும் கழக அரசு மீனவர்களுக்குப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். மணி, சுறா மீன் சரியாகப் போகவில்லை என்கிறார்களே, சுறா மீன் நல்ல வளர்ச்சியடைந்திருக்கிறதா என்று கேளுங்கள்.

நண்பகல் 12-00

திரு. எஸ். மணி: சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு குடியிருக்க வீடுகள், வலைகள், மிதிவண்டிகள், ஒளிவிளக்குகள் மற்றும் உயிர் காக்கும் கவச உடைகளையும் வழங்கி, அவர்களின் கண்ணீரைத் துடைக்க அவர்களுக்கு நமது அரசு காப்பீடு செய்திருக்கிறது.

தொகுதி மக்களின் கோரிக்கையாக தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டினை, விருப்பமுள்ளவர்கள் விருப்பப்பட்ட இடங்களில் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு நடத்த அவர்களிடம் வாங்கக்கூடிய டெபாசிட்டைக் குறைத்து, தற்போது 2 இலட்சம் ரூபாய் என்றுள்ளதை 2 ஆயிரம் ரூபாயாகக் குறைத்து, இந்த வீர விளையாட்டை மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது பொங்கலூர் தொகுதிக்குட்பட்ட சுல்தான்பேட்டையில் ஒரு தாலுகா அலுவலகம் அமைத்துத் தர வேண்டும். திருப்பூரிலிருந்தும், பல்லடத்திலிருந்தும், வால்பாறை, பொள்ளாச்சி போன்ற பகுதிகளுக்கு அதிகப் பேருந்துகள் செல்வதாலும், 30-க்கும் மேற்பட்ட கிராமங்களிலிருந்து பொது மக்கள் தொழில்ரீதியாக வந்து செல்வதாலும், சுல்தான்பேட்டையில் ஒரு பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

மேலும் பொங்கலூர் தொகுதிக்குட்பட்ட குண்டடம் ஒன்றியப் பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க 40 ஆண்டுகளுக்கு

முன்னால் கட்டப்பட்ட உப்பாறு அணையைத் தூர் வாரிப் புதுப்பித்துத் தர வேண்டும். குண்டடம் வழியாக கோவையிலிருந்தும், திருப்பூரிலிருந்தும், பல்லடத்திலிருந்தும். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. எஸ். மணி: அதிகப் பேருந்துகள் தென் மாவட்டங்களுக்குச் செல்வதாலும், அதிகப்படியான பொது மக்கள் வந்து செல்வதாலும், பொது மக்கள் வசதிக்காக ஒரு பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும். பொங்கலூரில் ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் அமைத்துத் தர வேண்டும் மற்றும் ஒரு தாலுகா அலுவலகம் அமைத்துத் தர வேண்டும்.

பொங்கலூர் தேசிய நெடுஞ்சாலை 67-ல் உள்ளதால் அங்கு ஒரு பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும். தேசிய நெடுஞ்சாலை 67-ல், அவினாசிபாளையத்தில் உள்ள, 100 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட காவல் நிலையக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அங்கு ஒரு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். காவலர் குடியிருப்புகள் அனைத்தும் பழுதடைந்துள்ளன. அந்தக் காவலர் குடியிருப்புகளையும் கட்டித் தர வேண்டும். மேலும் ஒரு மகளிர் காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும். தெற்கு அவினாசிபாளையம் பஞ்சாயத்திற்குட்பட்ட கொடுவாய் ஒரு தொழில் நகரமாக விளங்குகிறது. திருப்பூரிலிருந்து தென் மாவட்டங்களுக்குச் செல்லும் பேருந்துகள் அனைத்தும் இந்த வழியாகச் செல்கின்றன. 20-க்கும் மேற்பட்ட சுற்றுப்புறக் கிராமங்களின் மையப் பகுதியாக இந்த இடம் அமைந்துள்ளது. இங்கு ஒரு பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும். தனியாரால் நிலம் வழங்கப்பட்டுள்ளது. பொது மக்களின் வசதிக்காக அங்கே ஒரு பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

தெற்கு அவினாசிபாளையம் பஞ்சாயத்தில் செம்மாண்டகவுன்டன்புதூரில் ஒரு தொடக்கப் பள்ளி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. எஸ். மணி: பொங்கலூர் ஒன்றியத்திற்குட்பட்ட துத்தேரிபாளையம் ஆதி திராவிட காலனியில் 100 ஆண்டுகளாகக் குடியிருக்கும் மக்களுக்கு பட்டா வழங்க வேண்டும். மேலும், பொங்கலூர் தொகுதியில் ஓர் அரசுக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும். திருப்பூர்-தாராபுரம் சாலையை 4 வழிச் சாலையாக மாற்றித் தர வேண்டுமென்றும், பொங்கலூர் தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நிரந்தரத் தீர்வான திருப்பூர்-காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், பல்லடம்-பொள்ளாச்சி சாலையை 4 வழிச் சாலையாக மாற்றித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் தெற்கு உழவர் சந்தையை விரிவுபடுத்தித் தர வேண்டும். உழவர் சந்தைக்கு அதிகப்படியான பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். பொங்கலூர் தொகுதி. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால். (குறுக்கீடு) திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது, சல்லிக்கட்டைப் பற்றிப் பேசினார்கள். தமிழ்நாடு முழுவதும் சல்லிக்கட்டு என்பது மிகவும் பிரச்சினையாக இருக்கின்றது. 2 இலட்சம் ரூபாய் கட்டினால்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி வழங்குகிறார்கள். அதிலே தென் மாவட்டங்கள், என்னுடைய மதுரை மாவட்டம் முழுமையும், எல்லாக் கிராமங்களிலும் தெய்வங்களை வழிபடுகின்றபோது, இந்த சல்லிக்கட்டு நடத்தித்தான் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது ஜல்லிக்கட்டு அய்யா, சல்லிக்கட்டு, சல்லிக்கட்டு என்று சொன்னால் யாருக்கும் புரியாது. (குறுக்கீடு) ஜல்லிக்கட்டு, மாடு பிடிக்கிற விளையாட்டு என்று சொல்லுங்கள்.

திரு. ஆர். சாமி: மஞ்சுவிரட்டு, மாடு பிடிக்கிற விளையாட்டு, மஞ்சுவிரட்டு, இது தெய்வத்திற்கான விழா. 2 இலட்சம் ரூபாய் பணம் கட்டாமல் அதை நடத்துவதற்கு அனுமதி வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அரசாங்கம் உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உடனே நாளைக்கே போய் பிடித்துவிடுவீர்கள் நீங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால். (குறுக்கீடு) திரு. மணி, அவ்வளவுதான், உட்காருங்கள். அடுத்த உறுப்பினரைக் கூப்பிட்டாகிவிட்டது.

திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை, பால் வளம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். ஜெயபால், ஒரு நிமிடம், மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொங்கலூர் மணி அவர்களும், மேலூர் சாமி அவர்களும் முன்மொழிந்த கருத்துகளை நானும் வழிமொழிகிறேன். வீரமும் வேண்டும், விவேகமும் வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொருத்தமான வழிகாட்டுதலை வழங்கியிருக்கிறார்கள். அதே அடிப்படையில் இந்த வீர விளையாட்டாகிய மாடு பிடிக்கும் விளையாட்டையும் அரசு உரிய முறையில் பரிசிலித்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதிலே உங்கள் பங்கு என்ன? (குறுக்கீடு) பெர்சனலாக உங்கள் பங்கு என்ன? (குறுக்கீடு) திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டு என்ற அந்த வீர விளையாட்டினை அனுமதிப்பது குறித்து இன்று தென் மாவட்டங்களிலே மக்கள் மத்தியிலே பெரிய எதிர்பார்ப்பு இருக்கிறது. பல்லாண்டு காலமாக, பல நூறாண்டுகளாக நம்முடைய தமிழர் கலாச்சாரம், மரபு, பண்பாடு, இவற்றை போற்றிப் பாதுகாக்கின்ற வகையிலே இந்த வீர விளையாட்டை சிலர் வேண்டுதலாக நடத்தி வருகிறார்கள். இது குறித்து வெளியிடப்பட்ட அரசாணையிலே 3 ஊர்களை மட்டுமே குறிப்பிட்டு, அந்த ஊர்களில் மட்டுமே இந்த ஜல்லிக்கட்டு அனுமதிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருப்பதைப்போல அந்த உத்தரவு இருக்கின்ற காரணத்தினால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் மற்ற ஊர்களில்

இந்த விளையாட்டை அனுமதிப்பதில்லை. ஆகவே, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரே அதற்கான அனுமதியை வழங்க வேண்டுமென்பதைப் போன்று அரசாணை திருத்தி வெளியிடப்பட வேண்டும்.

பிற்பகல் 12-05

நண்பர் கே.ஆர். இராமசாமி அவர்கள், நண்பர் மூர்த்தி அவர்கள் எல்லோரும் இதற்காகப் பெரும் முயற்சி எடுத்து உச்ச நீதிமன்றம் வரை போய் இதற்கான ஆணைகளையெல்லாம் பெற்று வந்திருக்கிறார்கள். ஆகவே, சட்டப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை நாங்கள் கேட்டுக்கொள்வது, தென் மாவட்ட மக்கள் மத்தியிலே இந்த விளையாட்டைத் தடை செய்திருப்பது என்பது ஒரு மிகப் பெரிய ஆதங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டு, இந்த வீர விளையாட்டை சரியான பாதுகாப்போடு நடத்துவதற்கு, எப்பகுதி மக்கள் விரும்புகிறார்களோ அவர்களுக்கெல்லாம் அந்த நிலைமையை உத்தேசித்து மாவட்ட ஆட்சித் தலைவரே அனுமதி வழங்கலாம் என்று அந்த அரசாணையைத் திருத்தி வெளியிட காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு பி. மூர்த்தி, அரை நிமிடம். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாடு பிடிக்கின்ற வீர விளையாட்டிற்கு உச்ச நீதிமன்றம் வரை சென்று உச்ச நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து, எந்தெந்த ஊரில் அத்தகைய மாடு பிடி வீர விளையாட்டு நடைபெற்றதோ, அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே விண்ணப்பித்து, அவர்கள் Notification செய்தால், அந்த இடத்திலே தொடர்ந்து அந்த விளையாட்டுகளை நடத்தலாம் என்று உச்ச நீதிமன்றம் சொன்னது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே, மாவட்ட ஆட்சித் தலைவர் ஒவ்வொரு மாவட்டத்திலும் கேட்டறிந்து, எங்கெங்கு தொடர்ந்து ஆண்டுதோறும் அத்தகைய விளையாட்டு நடத்தினார்களோ, அதுவெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக ஒரு Notification செய்யப்பட்டிருக்கிறது. அதன்

அடிப்படையில் இன்றைக்குப் பல இடங்களிலே நடத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் சொன்னதைப்போல, தென் மாவட்டத்திலே மட்டுமல்ல, வட மாவட்டங்களிலும் இன்று பல்வேறு ஊர்களிலே இத்தகைய வீர விளையாட்டு, மாடு பிடிக்கின்ற அந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏதோ ஒரு இடத்திலே, இரண்டு இடத்திலே மட்டும் தருகிறார்கள். மீதி இடத்திலெல்லாம் தரவில்லை, ஏமாற்றமடைந்திருக்கிறார்கள் என்று சொல்வது உண்மைக்குப் புறம்பான செய்தி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி. (குறுக்கீடு)

திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழர்களுக்குரிய வீர விளையாட்டு ஜல்லிக்கட்டு என்பது முதன்முதலாக மதுரை மாவட்டத்திலே அலங்காநல்லூர் பாலமேடு ஜல்லிக்கட்டு நடத்துகின்ற வேளையில், உச்ச நீதிமன்றத்திலே தடையிருந்த நேரத்தில், தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் நம்முடைய அரசின் சார்பிலே பொதுச் செயலாளர், நம்முடைய மரியாதைக்குரிய திரு. ஜோதிமணி அவர்களையும், அரசினுடைய அதிகாரி பெருமக்களையெல்லாம் டெல்லிக்கு அனுப்பி, அது மறு ஆய்வு செய்யப்பட்டு, அந்த உத்தரவைப் பெற்றுத் தந்தார்கள். ஆனால் அந்த உத்தரவைப் பெற்றுத் தந்ததற்குப் பின்னால், ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் எங்கெங்கு தொடர்ந்து ஜல்லிக்கட்டு நடக்க வேண்டுமென்பது குறித்து ஓர் ஆய்வறிக்கையை அனுப்ப வேண்டும். அதைக் கூட்டம் கூட்டி எந்தெந்தக் கிராமங்களில் நடத்த வேண்டுமென்று அறிக்கை கேட்ட நேரத்தில், அது புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் 93 இடங்களில் நடத்துவதாக முறையாக கொடுத்திருக்கிறது. மதுரை மாவட்டத்திலே ஏறத்தாழ 100 இடங்கள் இருக்கின்றன. ஆனால் மூன்றே மூன்று இடங்களுக்கு மட்டும்தான் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு அதிலே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே, தமிழனுடைய வீர விளையாட்டை ஊக்குவிக்க, நம்முடைய தலைவருடைய ஆட்சியிலே, என்றைக்கும் நம்முடைய தலைவர் கலைஞருடைய ஆட்சியிலேதான் தமிழர்கள் உணர்வு மதிக்கப்படுகிறது. எனவே, யாரெல்லாம் விரும்புகிறார்களோ, அவர்களுக்கெல்லாம் இந்த விதியைத் தளர்த்தி, அந்த

ரூ.2 இலட்சத்தையும் தளர்த்தி, அவர்கள் கேட்கக்கூடிய கோயில் திருவிழாக்களிலே அந்த வீர விளையாட்டு நடைபெறுவதற்கு நம்முடைய கலைஞர் அரசு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால். *(குறுக்கீடுகள்)* நேரம் கிடையாது. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் எஸ். ஜெயபால், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை, *(குறுக்கீடுகள்)* போகட்டும். அடுத்த முறை பேசலாம். *(குறுக்கீடுகள்)*, நேரம் இல்லை. *(குறுக்கீடுகள்)* திரு. எஸ். ஜெயபால், பேசுங்கள்.

திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)* கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன்வளம் ஆகிய துறைகளின்மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் *(குறுக்கீடுகள்)* . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் பேசி முடிக்கட்டும். *(குறுக்கீடுகள்)* திரு. எஸ். ஜெயபால் பேசி முடிக்கட்டும். *(குறுக்கீடுகள்)* விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியம் தனியாக இருக்கிறது. அதில் பேசிக்கொள்ளலாம். *(குறுக்கீடுகள்)* அவர் பேசி முடிக்கட்டும். *(குறுக்கீடுகள்)*

திரு. எஸ். ஜெயபால்: இந்திய தேசிய காங்கிரஸ் சார்பிலே பங்குபெறுகின்ற வாய்ப்பினைத் தந்த தங்களுக்கும், எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்த விவாதத்திலே பங்குபெற விரும்புகின்றேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் பேசி முடிக்கட்டும். *(குறுக்கீடுகள்)*

திரு. எஸ். ஜெயபால்: என்னுடைய குளச்சல் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்த வரையில், சுமார் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவ மக்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாது, கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மீன்பிடித் தொழில்தான் இரண்டாவது பிரதானமான தொழிலாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே,

இப்படி மீனவர்கள் நிறைந்த அந்த மாவட்டத்தில் மீனவ மக்கள் கடலிலே மீன் பிடிக்கச் செல்கின்றபொழுது, அங்கே இயற்கைச் சீற்றங்களால் விபத்துகள் ஏற்பட்டு, மீன் பிடிக்கச் செல்கின்ற மீனவ மக்கள் காணாமல் போகக்கூடிய சூழ்நிலைகள் அடிக்கடி ஏற்படுகின்றன. அப்படிக் காணாமல் போகின்ற மீனவர்களை உடனடியாகக் கண்டுபிடிப்பதற்கு வசதியாக எந்த நேரத்திலும் தயார் நிலையில் விசைப் படகை அங்கே அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்துகொண்டிருக்கிறது.

அதேபோன்று, காணாமல் போகின்ற மீனவர்களை வான்வெளியிலே சென்று தேடுவதற்கு வசதியாக, ஹெலிகாப்டர் வசதியையும், அதற்கு ஒரு தளத்தையும் கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைத்துத் தர வேண்டும் என்கின்ற கோரிக்கை எங்கள் மாவட்ட மக்களுடைய நீண்ட காலக் கோரிக்கையாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அந்தக் கோரிக்கையை ஏற்று, நம்முடைய அரசு நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

இங்கே பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழகத்தின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு விளையாட்டுக்குப் பெறக்கூடிய அனுமதியை, விதியைத் தளர்த்தி வழங்க வேண்டுமென்று மல்லுக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து நானும் மல்லுக் கட்டுவதற்கு ஆசைப்படுகின்றேன். 2 இலட்சம் ரூபாய் கட்டி அந்த விளையாட்டு விளையாடுவதற்கு அனுமதியைப் பெற வேண்டும். அந்த அனுமதியைப் பெறுவதற்கு 2 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்த விதிமுறையைத் தளர்த்தி, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அதற்கு உரிய ஆணை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மீனவர்கள் நிறைந்த பகுதி என்பதால் முதன் முதலாக மீன்வளத் துறை சம்பந்தமான விஷயத்திற்கு நான் வருகிறேன். தலைவர் கலைஞருடைய தலைமையிலே இந்த அரசு பொறுப்பேற்று, 4 ஆண்டுகளில், மீனவ மக்களுக்கு ஏராளமான நல்ல திட்டங்களைத் தந்திருக்கிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அவர்கள் இழந்து போன உடைமைகளை இந்த அரசு திருப்பித் தந்திருக்கிறது. மத்திய, மாநில அரசுகளுடைய பங்களிப்போடு மீன் பிடிப்பதற்கு வசதியாக

அவர்களுக்குப் படகுகள், பாதுகாப்புக் கவசங்கள், மீன்பிடி வலைகள், இப்படிப் பல்வேறு வகைகளிலே இந்த அரசு நல்ல உதவிகளைச் செய்திருக்கிறது. வீடுகளை இழந்த மீனவப் பெருங்குடி மக்களுக்கு, ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் ஏராளமான வீடுகளை மத்திய, மாநில அரசுகள் வழங்கியிருக்கின்றன. எனவே மத்திய, மாநில அரசுகளை இந்த நேரத்திலே நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், பொதுப் பணித் துறையின்மூலமாக, மீனவ மக்களுடைய தொழில் ஆதாரங்களைக் காப்பாற்றுவதற்கு, வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுவதற்கு கடலரிப்புத் தடுப்புச் சுவர்கள், தூண்டில் வளைவுகள், இவையெல்லாம் பல்வேறு கிராமங்களிலே கட்டப்பட்டிருக்கின்றன. என்றாலும் எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 44 மீனவ கிராமங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த 44 மீனவக் கிராமங்களிலும் பல கிராமங்களில் இன்னும் தூண்டில் வளைவுகள் அமைக்கப்படவில்லை. எனவே, தூண்டில் வளைவுகளை அமைத்தால்தான் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகின்றபொழுது, கடல் சீற்றங்கள் ஏற்படுகின்றபொழுது, அமைதியான முறையிலே, பாதுகாப்பான முறையிலே, அந்த மீனவ மக்கள் மீன்பிடித் தொழிலை நடத்த முடியும். எனவே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த அழிக்கால், கடியப்பட்டினம், சின்னவிளை, பெரியவிளை, கொட்டில்பாடு, மண்டைக்காடுபுதூர் ஆகிய கிராமங்களிலே தூண்டில் வளைவுகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-15

மீன் பிடிப்பதற்குத் தடை செய்யப்படக்கூடிய அந்த 45 தினங்களுக்கு இந்த அரசு 500 ரூபாயை அந்த மீனவ மக்களுக்கு வழங்கிக்கொண்டிருக்கிறது. 500 ரூபாயை வைத்துக்கொண்டு எந்த அளவிற்கு குடும்பத்தைக் காப்பாற்ற முடியும் என்பது நம்முடைய மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, இந்த 500 ரூபாயை, குறைந்தபட்சம் 3 ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், கோடிமுனை என்ற மீனவக் கிராமத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம்

தேதி, சூறாவளிக் காற்றிலே சிக்கி ததேயுஸ், அந்தோணிப்பிள்ளை, சோபின் என்கின்ற அருண்பிரகாஷ் ஆகிய மூன்று மீனவர்கள் காணாமல் போய்விட்டார்கள். இதுவரை அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா அல்லது இறந்துவிட்டார்களா என்ற செய்திகூட வரவில்லை. ஒருவேளை இறந்திருந்தால், இறந்துபோனவர்களுடைய சடலங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், இந்த அரசு அந்த இறந்து போன மூன்று பேர்களுடைய குடும்பங்களுக்கு தின உதவித் திட்டத்தின்கீழ் 50 ரூபாய், வழங்கிக்கொண்டிருக்கிறது. 50 ரூபாயை வைத்துக்கொண்டு ஒரு குடும்பம் எப்படிப் பிழைக்க முடியும் என்று நாம் எண்ணிப் பார்ப்போமேயானால், நிச்சயமாக 50 ரூபாய் போதாது. எனவே, இப்படிக் காணாமல் போன மீனவர்களுடைய குடும்பங்களுக்கு, தின உதவித் திட்டம் என்ற அடிப்படையிலே வழங்குகிற 50 ரூபாயை, குறைந்தபட்சம் ஒரு ஆள் சம்பளம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு 250 ரூபாயாக உயர்த்தினால், கண்டிப்பாக அது பயன்பெறத்தக்கதாக இருக்கும்.

காணாமல் போன மீனவர்கள் கிட்டத்தட்ட 6 மாதங்களாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு 2 தினங்களுக்கு முன்பு சட்டமன்றத்திலேகூட, வால்பாறை தொகுதியிலே சிறுத்தைப் புலியால் தாக்கப்பட்டு இறந்து போன ஒரு சிறுவனுடைய குடும்பத்திற்கு நிதியுதவியை அறிவித்தார்கள். அதேபோன்று, கோடிமுனை கிராமத்திலே இறந்து போனவர்களுடைய அந்த மூன்று குடும்பத்திற்கும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவவேண்டும். குறைந்தபட்சம் தலா 3 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து, 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணைப்படி மத்திய, மாநில அரசுகள் சம பங்களிப்பாகக் கொண்டு வரப்பட்ட மாதிரி மீனவக் கிராம அபிவிருத்தித் திட்டம். அந்தத் திட்டத்தின்கீழ், 2006 ஆம் ஆண்டு பல வீடுகள் 37,000 ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலே கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், 2007-2008 ஆம் ஆண்டிற்குப் பிறகு, இந்தத் திட்டத்தின்கீழ் எந்த மீனவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. 37,000 ரூபாய் நிதி ஒதுக்கீட்டிற்குப் பதிலாக, மத்திய அரசு வழங்குகின்ற இந்திரா கூட்டுக் குடியிருப்புத் திட்டத்தினைப் போன்று குறைந்தபட்சம் 55,000 ரூபாய்

மதிப்பீட்டிலே, அந்த மீனவர்களுக்கு மீனவக் கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வீடு கட்டிக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, இராமநாதபுரம் மாவட்டத்திலே . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிடுவதைப்போல மீனவர்கள் வீடு கட்டும் திட்டத்தில் 37,000 ரூபாய் என்பதை சிங்காரவேலர் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 50,000 ரூபாயாக நம்முடைய முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள் உயர்த்தி அறிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏராளமான மீனவர்கள் கடல் அட்டையைப் பிடிப்பதிலே ஈடுபட்டுக்கொண்டிருப்பதாக நம்முடைய இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஹசன் அலி அவர்கள் மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வனத் துறை கடல் அட்டைகளைப் பிடிப்பதற்குத் தடை விதித்திருப்பதாகச் சொல்கிறார்கள். எனவே, கடல் அட்டைகளைப் பிடிப்பதற்கு வனத் துறையினரால் விதிக்கப்பட்டுள்ள தடையை இரத்துச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவ மக்களுடைய வள்ளங்கள் பதிவு செய்யப்பட்டு, 10 ஆண்டுகள் முதிர்ச்சி பெற்ற மீனவர்களுக்கு, outboard engine மானிய விலையிலே வழங்கப்பட்டு வருகிறது. தற்போது நம்முடைய அரசு ஏராளமான மீனவர்களுக்கு மானியம் வழங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால், இப்படி 10 ஆண்டுகள் நிறைவுபெற்ற மீனவர்கள் ஏராளமான பேர் இருந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, மானிய நிதியை அதிகமாக உயர்த்தி, கேட்கின்ற மீனவர்களுக்கெல்லாம் மானிய விலையிலே outboard engine வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

8 H.P., 9.9 H.P., 10 H.P.-குதிரைத் திறன்கொண்ட வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கு மட்டும்தான் இப்படிப்பட்ட மானியம் வழங்கப்படுகிறது. ஆனால், ஏழை மீனவர்கள் கட்டுமரங்களிலே பொருத்தக்கூடிய 2½ H.P., 3 H.P., 4 H.P., 6 H.P., குதிரைத் திறன் கொண்ட அந்த வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கு மானியம் வழங்கினால் நிச்சயமாக ஏழை மீனவர்களுக்கு அது மிகவும் உதவியாக இருக்கும். எனவே, அப்படிப்பட்ட ஏழை மீனவர்கள் பயன்படுத்தக்கூடிய, கட்டுமரங்களிலே பொருத்தக்கூடிய outboard engine—களுக்கும், குறைந்த குதிரைத் திறன் கொண்ட outboard engine—களுக்கும் மானியம் வழங்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

எங்களுடைய மாவட்டத்தில், குளச்சல் பகுதியில் மீன்பிடித் தொழில் பிரதானமாக நடைபெற்று வருகிறது. நம்முடைய மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மிக நன்றாகத் தெரியும். சில முறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே வந்து சென்றிருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய மீனவர் கூட்டுறவுச் சங்கம் பழமையான கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்தக் கட்டடம் இடிந்து விழக்கூடிய அபாயகரமான சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. அந்த மீனவர் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் வைத்துத்தான் மீனவ மக்களுக்கு ரேஷன் விநியோகம், நகைக் கடன் வசதி மற்றும் நிறுவனங்கள்மூலம் செய்யக்கூடிய பல்வேறு உதவிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அந்தக் கட்டடம் எந்த நேரத்தில் இடிந்துவிழுமோ என்று சொல்லக்கூடிய அபாய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. நான்கூட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வதற்குத் தயாராக இருந்த நேரத்தில், அதற்கு விதிமுறைகள் அனுமதிக்காத காரணத்தால் அது முடியவில்லை. நம்முடைய மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே வந்திருந்தபோதுகூட அதைப் பார்வையிட்டார்கள். அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். எனவே, அந்தக் கட்டடத்தை இடித்துவிட்டு மீண்டும் புதிய கட்டடம் கட்டுவதற்கு நம்முடைய துறைச் செயலாளர் அவர்கள்கூட இங்கே அமர்ந்திருக்கிறார்கள். அவருடைய கவனத்திற்கும் நான் பல முறை கொண்டு

சென்றிருக்கிறேன். எனவே, சிறப்பு நிதியை ஒதுக்கீடு செய்தாவது அந்தக் கட்டடத்தைக் கட்டித் தர வேண்டுமென்று நான் நம்முடைய அரசையும், நம்முடைய மீன்வளத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் பயன்படுத்தக்கூடிய விசைப் படகுகளுக்குப் பயன்படுத்துகின்ற டீசலுக்கு நம்முடைய அரசு மானியம் வழங்குகிறது. மானியம் என்று சொன்னால், அதற்குரிய விற்பனை வரியை விலக்குச் செய்து வழங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால், பல மாநிலங்களிலே அந்த டீசலுக்கு நமது மாநிலத்தைவிட அதிகமாக மானியம் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, மீனவ நண்பனாகச் செயல்படக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு, அந்த மீனவர்கள் பயன்படுத்தக்கூடிய டீசலுக்கு அதிகமான மானியம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை மீனவர்கள் பயன்படுத்தக்கூடிய outboard engine—களுக்கும் மண்ணெண்ணெயைப் பயன்படுத்துகிறார்கள். அந்த மண்ணெண்ணெய்க்கு மானியம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். கேரளா போன்ற மாநிலங்களில் மண்ணெண்ணெய்க்கும் மானியம் வழங்கப்படுகிறது. ஆனால், தமிழகத்தில் அந்த நிலைமை இல்லை. எனவே, ஏழை மீனவர்கள் பயன்படுத்தக்கூடிய அந்த மண்ணெண்ணெய்க்கும் தயவுசெய்து மானியம் வழங்கினால் ஏழை மீனவர்களுடைய வயிற்றிலே பால் வார்த்ததுபோன்று அமையும். அதுமட்டுமல்ல; மண்ணெண்ணெய்கூட அவர்களுக்குக் கிடைப்பதில்லை. பொதுச் சந்தையிலே அவர்களுக்கு மண்ணெண்ணெய் கிடைத்தால்கூட அது பயனுடையதாக இருக்கும். ஆனால், அந்த மீனவர்கள் பயன்படுத்தக்கூடிய engine—களுக்கு மண்ணெண்ணெய் வாங்க வேண்டுமென்று சொன்னால், ரேஷனிலே கிடைக்காததால், கள்ள மார்க்கெட்டிலேதான் அவர்கள் அதிகமான விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. அப்படி வாங்குகின்ற நேரத்திலேகூட காவல் துறையினரால் கைது செய்யப்படக்கூடிய, பறிமுதல் செய்யப்படக்கூடிய சூழ்நிலையிலே அவர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த நிலையை மாற்றுவதற்கு, மீனவர்கள் பயன்படுத்தக்கூடிய அந்த மண்ணெண்ணெய்க்கு மானியம் வழங்கவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர் நல வாரிய அலுவலகத்தில் போதுமான பணியாளர்கள் இல்லை என்று சொல்லக்கூடிய குறைபாடு இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் குறைப்பாட்டை நிவர்த்தி செய்கின்ற வகையிலே பணியாளர்களை உடனடியாக நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்த வரையில், கால்நடைகளைப் பாதுகாப்பதற்குத் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. மனிதனுடைய ஆரோக்கியத்தைக் காப்பதற்காக, நோயிலிருந்து காப்பதற்காக, இந்த அரசு 'கலைஞர் காப்பீட்டுத் திட்டம்', 'வருமுன் காப்போம் திட்டம்' போன்ற திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதேபோன்று, கால்நடைகளைப் பாதுகாப்பதற்கு, பல ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு கால்நடை பாதுகாப்பு முகாம் என்று சொல்லக்கூடிய முகாம்களை பல்வேறு கிராமப் பகுதிகளிலே நடத்தி வருகிறது. அந்தத் திட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன்மூலமாக, கால்நடைகளுக்கு வரக்கூடிய நோய்கள் அகற்றப்பட்டிருக்கின்றன. எல்லோருடைய வரவேற்பையும் பெற்றிருக்கக்கூடிய '108 ஆம்புலன்ஸ் திட்டம்' என்று சொல்லக்கூடிய அந்தத் திட்டத்தைப் போன்று கால்நடைகளைப் பாதுகாப்பதற்கும் '109 ஆம்புலன்ஸ் திட்டம்' என்று சொல்லக்கூடிய நடமாடும் கால்நடை மருந்தகம் என்று சொல்லக்கூடிய ஆம்புலன்ஸ் வசதியை ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஏற்படுத்தினால். . .

பிற்பகல் *12-25*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது நல்ல யோசனை. அருமையான யோசனை.

திரு. எஸ். ஜெயபால்: நம்முடைய அமைச்சர் அவர்கள்தான் இது குறித்துச் சொல்ல வேண்டும். ஒவ்வொரு ஒன்றியத்திலும் அதைக் கொண்டு வந்தால், நிச்சயமாக கால்நடை வளர்ப்பவர்கள் மிகவும் பயன்பெறத்தக்கதாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு கிராமப்புறங்களிலே செயல்படக்கூடிய சுய உதவிக் குழுக்களுக்கு கறவை மாடுகளை மானிய விலையிலே அதிகமாக வழங்கினால்

நிச்சயமாக இன்னும் பால் உற்பத்தியை நாம் அதிகரிக்கச் செய்ய முடியும். அதேபோன்று, தமிழ்நாட்டிலுள்ள கால்நடை உதவி மருத்துவர்களுக்கு, கால்நடை பராமரிப்புத் துறையிலே வேலைபார்த்துக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு கால்நடை உதவி மருத்துவர்களுக்கு . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடித்துவிடுங்கள். 15 நிமிடங்கள் முடிந்துவிட்டன.

திரு. எஸ். ஜெயபால்: இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, கூடுதல் நேரம் தர முடியாது.

திரு. எஸ். ஜெயபால்: நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைக்கு யாருக்கும் கூடுதலாக நேரம் வழங்க முடியாது.

திரு. எஸ். ஜெயபால்: நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படியே நன்றி என்று சொல்லி உரையை முடித்துவிடுங்கள்.

திரு. எஸ். ஜெயபால்: தமிழ்நாட்டில் பணியாற்றும் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு, மத்திய அரசு கால்நடை உதவி மருத்துவர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும். காலவரையறைக்குட்பட்ட பதவி உயர்வு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், திங்கள்சந்தை, திங்கள் நகரில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற கால்நடை மருத்துவமனை 40 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது. அது இடிந்து விழுந்து, அழிந்து போகக்கூடிய சூழ்நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது. எனவே, தயவுசெய்து கால்நடைத் துறையின்மூலமாக அந்த மருத்துவமனைக்குப் புதிய கட்டடமும், சுற்றுச் சுவரும் கட்டித் தர வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்றும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பல்வேறு கோரிக்கைகள் இருந்தாலும், நேரத்தின் அருமை கருதி, ஒன்றிரண்டு கோரிக்கைகளை மட்டும் சொல்லி, நான் என் உரையை நிறைவு செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடியுங்கள்.

திரு. எஸ். ஜெயபால்: பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றிற்கு 14 ரூபாயாக இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு ஒரு லிட்டர் தண்ணீர்கூட 20 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கிறது. பல ஆண்டுகளாக இந்தக் கோரிக்கையை பால் உற்பத்தியாளர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, தயவுகூர்ந்து பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டுமென்று நான் அரசை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆவின் நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். பல்வேறு கால்நடைக் கிளை நிலையங்களும், கால்நடை மருந்தகங்களும் பராமரிக்கப்படாத சூழ்நிலையில், வெள்ளையடிப்பதற்குக்கூட முடியாத சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன. எனவே, இப்படிப்பட்ட கால்நடைக் கிளை நிலையங்களையும், கால்நடை மருந்தகங்களையும் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. மணி அவர்கள் பேசுகின்றபொழுது, சுனாமி என்றார்; சுறா என்றார். அதேபோல், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், சுறா நன்றாக ஓடிக்கொண்டிருக்கிறது என்று கூறினீர்கள். நான் கேட்க விரும்புவது, சுறா மீன் வளர்ப்புத் திட்டம் ஏதாவது அரசினுடைய செயல்பாட்டில் இருக்கின்றதா? அப்படியில்லையென்றால், சுறா மீன்களை நல்ல முறையில் வளர்ப்பதற்குப் புதிதாக ஏதாவது திட்டம் செயல்படுத்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் சுறா மீன்களைப் பற்றி அதிகம் சொல்வார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க, வியக்கத்தகு இந்த

மாமன்றத்தில், 2010-2011 ஆம் ஆண்டிற்கான கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளம் ஆகிய துறைகளுக்கான மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பு வழங்கிய எங்கள் தமிழினத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், மருத்துவர் சின்ன அய்யா அன்புமணி ராமதாஸ் அவர்களுக்கும், கட்சியின் தலைவர் அண்ணன் திரு. கோ.க. மணி அவர்களுக்கும், சட்டமன்றக் கட்சித் துணைத் தலைவர், அண்ணன் திருக்கச்சூர் ஆறுமுகம் அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியின் அஞ்சா நெஞ்சன், கொறடா திரு. தி. வேல்முருகன் அவர்களுக்கும், தங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகத்தில் 7 அதிசயங்களைப் பற்றி மட்டும் பார்த்தும், கேட்டும் இருக்கின்றோம். ஆனால், தமிழ்நாட்டில் எட்டாவது உலக அதிசயத்தைக் கட்டியவரும், கட்டடக் கலை வல்லுநர்களுக்கெல்லாம் முன்மாதிரியாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றவருமான நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேனீயைப் போன்று எப்போதும் சுறுசுறுப்பாகப் பணியாற்றி வரும் நமது உள்ளாட்சித் துறை அமைச்சரும், துணை முதலமைச்சருமான டாக்டர் தளபதியார் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்பதை நன்குணர்ந்த நமது முதல்வர் கலைஞர் அவர்கள், உன்னதத் திட்டங்களில் ஒன்றான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தை உருவாக்கினார்கள். அதேபோன்று, வாயில்லாத ஜீவன்களான கால்நடைகளுக்கும் கலைஞர் காப்பீட்டுத் திட்டம் உருவாக்கப்படுமா? நோய் வருவதை முன்பாகத் தெரிந்துகொள்வதற்கும், அதைத் தடுப்பதற்கும், மனிதர்களுக்கு எப்படி கலைஞரின் “வருமுன் காப்போம்” திட்டம் உள்ளதோ, அதேபோன்று, கால்நடைகளுக்கும் நம்முடைய கால்நடைத் துறையின்மூலமாக “வருமுன் காப்போம்” திட்டம் ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கால்நடை பராமரிப்புத் துறையில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் கலந்தாய்வு மூலமாக, counselling மூலமாகப் பணியிட மாறுதல் வழங்கப்படுமென 2010 ஆம் ஆண்டு அறிவிப்பிலே சொல்லியிருந்தீர்கள். இதுவரை counselling முறை

நடைமுறைப்படுத்தப்படவில்லை. உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடைத் துறையில் களப் பணியாற்றும் சுமார் 1,500 கால்நடை ஆய்வாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. கடந்த ஆண்டின் சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது 400 பேருக்கு கால்நடை ஆய்வாளர் பயிற்சி வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது. ஆனால், இதுவரை 79 பேருக்கு மட்டுமே ஒசூரில் பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது. எனவே, கால்நடைத் துறையில் கால்நடை ஆய்வாளருக்குப் பயிற்சி வழங்க ஆவன செய்யப்படுமா எனக் கேட்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12-30

மேலும், தமிழகத்தில் 11 இடங்களில் இடைத் தேர்தல்கள் நடைபெற்றன. தேர்தல் நடந்த தொகுதிகளில் மட்டும், அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் நாட்டுக் கோழி இனமே அழிந்துவிட்டது. காரணம், நமது அரசியல் கட்சிகளைச் சார்ந்த அனைவருமே, நான் உட்பட, நாட்டுக் கோழியை விரும்பி உண்ட காரணத்தினால், நாட்டுக் கோழி இனம் அழிந்துவிட்டது. எனவே, நாட்டுக் கோழி இனத்தை உற்பத்தி செய்யவும், அனைத்து அரசியல்வாதிகளுக்கும் எப்பொழுதும் நாட்டுக் கோழி இறைச்சி கிடைக்கவும், ஒவ்வொரு வீட்டிற்கும், கலைஞர் அவர்கள் எப்படி இலவச டி.வி. ஒவ்வொரு குடும்பத்திற்கும் தருகின்றார்களோ . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த சண்டைக் கோழி என்ன ஆயிற்று! *(சிரிப்பு)*

திரு. டி. மூர்த்தி: அது நாமக்கல்லில் இருக்கிறது. ஒவ்வொரு வீட்டிற்கும் கலைஞர் அவர்களால் டி.வி. எப்படி கொடுக்கப்படுகிறதோ, அதேபோன்று 400 ஜோடி நாட்டுக் கோழிகளை இலவசமாகத் தமிழக அரசு கொடுக்க வேண்டும். இந்தக் கோரிக்கையை கடந்த ஆதி திராவிடர் நலத்துறை மானியக் கோரிக்கையில்கூட வைத்தேன் என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆடு, மாடுகளுக்கு ஆண்டுதோறும் அனைத்துத் தடுப்பு ஊசிகளும் இலவசமாகப் போடப்படுகின்றன. ஆனால்; நாய் போன்ற நமது செல்லப் பிராணிகளுக்குத் தடுப்பு ஊசிகள் ஆண்டு முழுவதும் இலவசமாகப் போடுவதில்லை. எனவே, ஆண்டுதோறும் நாய் போன்ற நமது செல்லப் பிராணிகளுக்கு வெறிநோய்,

டிஸ்டெம்பர், பார்வோ போன்ற வியாதிகளைத் தடுப்பதற்கான இலவச ஊசிகள் போடப்படவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அவையில் இல்லாவிட்டாலும், வாய் இல்லாத ஜீவன்களின் கோரிக்கையை இந்த அவையில் பதிய வைக்க விரும்புகின்றேன். தனது உணவைத் தானே தேடிச் செல்லும் ஆறறிவு படைத்த அனைத்து மக்களுக்கும் ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கிய தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களே, குழந்தைகள் முதற்கொண்டு முதியோர் வரை, நோயாளிகள், ஏழை, பணக்காரர் என்று அனைத்து மக்களுக்கும், இரத்தத்தையே பாலாக்கி, மனித இரத்தத்தையே வாழ வைக்கும், ஐந்தறிவு படைத்த வாய் இல்லாத ஜீவன்களான கால்நடைகளுக்கு கலப்புத் தீவனத்தை ரூபாய்க்கு ஒரு கிலோ என வழங்க வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த கூட்டத் தொடரில்கூட, எனது கட்சியைச் சார்ந்த பவானி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் இதே கோரிக்கையை வைத்தார்கள். சொன்னதையும், சொல்லாததையும் செய்யும் தாங்கள் இந்தக் கோரிக்கையைக் கனிவுடன் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கால்நடை பராமரிப்புத் துறையில் பணியாற்றும் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு முதல் பதவி உயர்வு, 25 ஆண்டுகள் முதல் 27 ஆண்டுகள் வரை பணி செய்த பிறகு அளிக்கப்படுகிறது. மனிதர்களுக்கு மருத்துவம் செய்யும் மருத்துவர்களுக்கு வழங்கப்படுவதைப்போல இவர்களுக்கும் காலவரையறைக்குட்பட்ட பதவி உயர்வு உடனடியாக வழங்கப்படவேண்டும்.

'ஒரு நாட்டின் பெருமிதம் மற்றும் ஒழுக்கத்தின் முன்னேற்றத்தை, அங்கு விலங்குகளைக் கையாளுவதைக் கொண்டு எடை போடமுடியும்' என்று காந்தியடிகள் கூறியுள்ளதன் அடிப்படையில், கால்நடைகள் கொடூரமான முறையில் நடத்தப்படுவதைத் தடுக்கவும், அவற்றை மனிதாபிமான முறையில் நடத்தவும் தமிழக அரசு பிராணிகள் நல வாரியத்துடன் ஒருங்கிணைந்து கீழ்க்காணும் மூன்று வழிகளில் இப்பிரச்சினைகளைக் களைய செயல்பட்டு வருகின்றது: ஒன்று, சந்தைகள், இரண்டு, ஓரிடத்திலிருந்து மற்றொரு

இடத்திற்குக் கொண்டு செல்லுதல்—பயணங்கள், மூன்று, இறைச்சிக் கூடங்கள். பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம் 1960, பிரிவு 38 மற்றும் பிராணிகள் வதைத் தடுப்பு திருத்திய விதிகள் 2001-இன்படி தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் பிராணிகள் வதைத் தடுப்புச் சங்கம் கீழ்வரும் குறிக்கோள்களுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது: ஒன்று, மாவட்டத்திலுள்ள பாதிக்கப்படும் விலங்குகளை மீட்டல், பாதுகாத்தல் மற்றும் பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றை அமல்படுத்துதல், இரண்டு, விலங்குகளை வதைப்பவர்கள்மீது வழக்குப் பதிவு செய்து தண்டனை பெறும்பொருட்டு, அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துதல் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இதுவரை எந்தவித நடவடிக்கையும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 17-11-2009 அன்று எனது திருப்போரூர் தொகுதி வழியாக ஒரு லாரியில் 25 மாடுகளை ஏற்றிக்கொண்டு திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து கேரளாவிற்குச் சென்று கொண்டிருந்தது. அதைப் பார்த்து நிறுத்தி, அருகிலுள்ள செங்கல்பட்டு காவல் நிலையத்திற்கும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் போன் மூலமாகப் பேசினேன். காவல் துறை உதவி ஆய்வாளர் என்னிடம் வந்து, என்ன case போடுவது என்று எனக்கே தெரியவில்லை என்று சொல்கிறார்கள். தினந்தோறும் 10 லாரிகளுக்கு மேல் சென்று கொண்டுதான் இருக்கின்றன என்றும், எங்களுக்கு சட்டத்தில் case போட இடமில்லை என்றும் சொன்னார்கள். நான் எப்படியாவது case போட வேண்டுமென்றும், அத்துடன் ஒரு லாரியில் 9 மாடுகள்தான் ஏற்றவேண்டும் என்றும் சொன்னதற்கு, இதுவரை யாரும் புகார் தரவில்லை என்று சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இதுபோன்று ஒரு லாரியில் அதிக அளவில் மாடுகளை, ஆடுகளை ஏற்றி வருவோர்மீது யார் நடவடிக்கை எடுக்கவேண்டும்? ஏற்றி வருகின்ற கால்நடைகளுக்குத் தண்ணீர் மற்றும் தீனி தருவதில்லை. கால்நடைகளை லாரியில் பார்த்து வர உதவியாளர் இருக்கவேண்டும். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு ஏற்றிச் செல்ல முன்னனுமதி யாரிடம் பெறவேண்டும் என்பன போன்றவற்றிக்கு சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டும். இந்த அவையிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும்.

2010 மே 4] [திரு. டி. மூர்த்தி]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 10 நாட்களுக்கு முன்பாக கேள்வி நேரத்தில்கூட மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் கேள்வி கேட்டேன். மீனினப் பெருக்கத்திற்காக 45 நாட்களுக்கு மீன் பிடிக்கத் தடை விதித்துள்ளது மத்திய அரசு. இதனால் மீனவக் குடும்பங்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்றும், அவர்களுக்கு மாதம் 3,000 ரூபாய் தரவேண்டும் என்றும் கோரிக்கை வைத்தேன்.

அதற்கு அமைச்சர் அவர்கள், தற்பொழுது மாதம் 500 ரூபாய் தருகின்றோம், மானியக் கோரிக்கையில் அதிக அளவில் நான் அறிவிப்பேன் என்றார்கள். எவ்வளவு உயர்த்தியுள்ளீர்கள் என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

என்னுடைய தொகுதியிலடங்கிய நெம்மேலியில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களால் பிப்ரவரி மாதம் இரண்டாம் தேதி தொடங்கி வைக்கப்பட்டது. அது ஒரு நல்ல திட்டம். நான் அதை வரவேற்கின்றேன். அதே வேளையில், அங்குள்ள மீனவ மக்கள் அத்திட்டத்திற்குத் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். அப்பகுதி மீனவ மக்கள் வைக்கின்ற கோரிக்கையைத் தமிழக அரசு செவிசாய்த்துக் கேட்க வேண்டும், சுற்றுச்சூழல் மாசுபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எனவே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்களே இதற்காக அதிகாரிகள் குழுவொன்றை அமைத்து, மீனவ மக்களின் சந்தேகங்களையும், நெம்மேலி கிராம மக்கள் வைக்கின்ற கோரிக்கையையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் பால் உற்பத்தியாளர் சங்கங்களில் சுமார் 24,000 பணியாளர்கள் உள்ளனர். 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரியும் பால் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு மாதச் சம்பளம் ரூ.1,200 முதல் ரூ.1,500 வரை தான் வழங்கப்படுகிறது. இதனை உயர்த்தி, எவ்வாறு மின்சாரத் துறை மற்றும் கூட்டுறவு பொது விநியோகக் கடைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அதிகமான சம்பளம் வழங்கப்படுகின்றதோ, அதேபோன்று பால் உற்பத்தியாளர் சங்கங்களில் பணிபுரியும் 24,000 பணியாளர்களை நிரந்தரம் செய்து, அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டும்.

அதேபோல, நுகர்வோருக்குக் கட்டுப்படியான விலைக்கு பால் விலையைக் குறைத்துத் தர வேண்டும். பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் பெறப்படும் பாலுக்கு அதிக அளவில் விலை உயர்த்தித் தரப்பட வேண்டும்.

மேட்டூர் அணையிலுள்ள மீன் மிகவும் சுவையாக இருக்கும். எனவே, மேட்டூர் அணையின் மீனை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கு மீன்வளத் துறையின் மூலமாக மீன் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட வேண்டும். அதேபோன்று, மீன் குஞ்சு உற்பத்திக்குப் பயன்படுத்தும் தொட்டிகள் போதுமானதாக இல்லை. எனவே, அதிக அளவில் மீன் குஞ்சு உற்பத்தித் தொட்டிகள் நிறுவப்பட வேண்டும். இங்கு அதிக அளவில் மீன் கிடைக்கின்ற காரணத்தால், மீனைப் பதப்படுத்துவதற்கு அதிக அளவில் ஐஸ் தேவைப்படுகிறது. மேட்டூர் பகுதியில் ஐஸ் பேக்டரி அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

இந்த அவையிலுள்ள பல சட்டமன்ற உறுப்பினர்கள் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். கால்நடைத் துறை மானியக் கோரிக்கையில், நமது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மானிய விலையில் உயர் ரகக் கறவைப் பசு மாடுகள் வழங்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதலில் கோழி கேட்டீர்கள், இப்பொழுது மாடு கேட்கிறீர்கள், மீன் குஞ்சு கேட்கிறீர்கள். இவையெல்லாம் வளர்ப்பதற்கா, சாப்பிடுவதற்கா?

திரு. டி. மூர்த்தி: வளர்த்து சாப்பிடுவதற்காகத்தான். உங்களுக்கும் சேர்த்துத்தான் கேட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எனக்கு வேண்டாம். நான் நிறுத்திவிட்டேன்.

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில், எனது திருப்போரூர் தொகுதியின் வளர்ச்சியின்பால் அதிக அக்கறையோடு பணியாற்றிக் கொண்டிருக்கின்ற காஞ்சிபுரம் தி.மு.க. மாவட்டச் செயலாளரும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சருமான திரு. தா.மோ. அன்பரசன் அவர்களும், எனது தொகுதி மக்களின் சார்பாக நான் வைக்கின்ற கோரிக்கைகள் அனைத்தையும் ஆமோதித்து, உடனடியாக நிறைவேற்றித் தர பரிந்துரைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

என்னுடைய தொகுதியினுடைய முக்கியமான கோரிக்கைகள். நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து வைக்கப்பட்டு வருகிற கோரிக்கை, எனது திருப்போரூர் தொகுதி சென்னைக்கு அருகிலுள்ள முக்கியத் தொகுதி. திருப்போரூர் ஒன்றியத்தில் மட்டும் சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், உழவர் சான்றிதழ் போன்ற சான்றிதழ்கள் பெற வேண்டுமானால், 50 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள செங்கல்பட்டு வட்டாட்சியர் அலுவலகம் செல்ல வேண்டியுள்ளது. இதனால் கால விரயமும், பண விரயமும் ஏற்படுகிறது. எனவே, திருப்போரூர் தொகுதியை மையமாக வைத்து, திருப்போரூரை வட்டமாக்க, தாலுகா ஆக்க தமிழக அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்தில், சோழிங்கநல்லூர், தாம்பரம், ஆலந்தூர் போன்ற பகுதிகளைத் தாலுகாக்களாக மாற்றினீர்கள். எனது தொகுதியை தாலுகாவாக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இது நான் நான்காண்டுகளாகத் தொடர்ந்து வைத்துக்கொண்டிருக்கின்ற கோரிக்கை.

அதுமட்டுமல்ல, அங்கு சினிமா நடிகர்களுக்காக கலைஞர் நகர் உருவாகவிருக்கின்றது. நம்முடைய முதல்வர் அவர்கள் அங்கு 60 ஏக்கர் நிலம் ஒதுக்கியிருக்கின்றார்கள். அந்த மக்களெல்லாம் சாதிச் சான்று, இருப்பிடச் சான்று மற்றும் பிற சான்றுகள் பெற வேண்டுமானால், செங்கல்பட்டுக்குத்தான் செல்ல வேண்டும். அந்த அவல நிலையைப் போக்க வேண்டுமென்றால், உடனடியாக எங்களுடைய திருப்போரூர் பகுதியை மையமாக வைத்து வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க வேண்டும். மூன்றாண்டுகளுக்கு முன்பாக, வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டபோது, இப்பொழுதெல்லாம் தொகுதி சீரமைப்புப் பணி நடந்து கொண்டிருக்கிறது, அது முடிந்தவுடன் கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். இதுவரை நிறைவேற்றப்படவில்லை. எனவே, என்னுடைய திருப்போரூர் தொகுதியைத் தாலுகாவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, என்னுடைய தொகுதியிலுள்ள காரணைபுதுச்சேரி கிராமத்தில், மே தினத்தன்று, அப்பகுதியில் பத்தாம் வகுப்புத்

தேர்வு எழுதிய முத்து என்கின்ற 15 வயது மாணவன் காலரா நோயால் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டான். அந்த மாணவன் அவனது பெற்றோருக்கு ஒரே மகன். காரணைபுதுச்சேரி கிராமத்தில் சுமார் 30 நபர்களுக்குமேல் காலரா நோயால் பாதிக்கப்பட்டு, அருகிலுள்ள கூடுவாஞ்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். எனவே, காலராவால் பாதிக்கப்பட்டு மரணமடைந்த மாணவனின் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் ஐந்து இலட்சம் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன், காரணைபுதுச்சேரி கிராமத்தைச் சுற்றி பெருமாட்டுநல்லூர், அருங்கால், கீரப்பாக்கம், காட்டூர், ஊரப்பாக்கம், கோகுலம் காலனி, பெரியார் நகர், வினாயகபுரம் போன்ற பகுதிகளில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வசிக்கின்ற காரணத்தினாலும், அங்கு போதுமான இட வசதியுள்ள காரணத்தினாலும், காரணைபுதுச்சேரி கிராமத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. டி. மூர்த்தி, நேரமாகிவிட்டது, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்று நிமிடங்கள் கொடுங்கள், பேசி முடித்துவிடுகிறேன். மறைமலை நகரில் 60 ஆயிரம் மக்கள் தொகை உள்ள அந்தப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும். எனது திருப்போரூர் தொகுதியில் சாலை வசதி மிகவும் குறைவாக உள்ளது. குறிப்பாக, நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து இந்தக் கோரிக்கையை வைக்கின்றேன். கூடுவாஞ்சேரி-கொட்டமேடு சாலை, திருப்போரூர்-செங்கல்பட்டு சாலை, பொன்மார்-மாம்பாக்கம்-காயார் சாலை, திருப்போரூர்- ஆம்பூர்-சிறுதாவூர் சாலை, சிங்கப்பெருமாள்கோவில்-திருக்கச்சூர்-வெம்பாக்கம்-ரெட்டிப்பாளையம்-பாலூர் சாலை, சிங்கப்பெருமாள்கோவில்-தென்மேல்பாக்கம்-கொண்டமங்கலம்-அனுமந்தபுரம் சாலை, ஊரப்பாக்கம்-காரணைபுதுச்சேரி-அருங்கால்-கீரப்பாக்கம் சாலை, கீரப்பாக்கம் நான்கு ரோடு, நல்லம்பாக்கம்-கண்டிகை சாலை ஆகியவற்றை சீர் செய்யவேண்டும்.

மேலும், என்னுடைய பகுதியிலே அதிகமான அளவிற்குப் பேருந்துகளை விட்ட நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டுகின்றேன். எங்கள் பகுதியில் மேலும் அதிக அளவில் பேருந்துகளை விடவேண்டும். திருப்போரூர் தொகுதியை மையமாக வைத்து, திருப்போரூருக்கு அதிக அளவில் மாநகரத்திலிருந்து அதிகமான அளவில் பேருந்துகள் வந்துகொண்டிருக்கின்றன. சென்னையிலேயிருந்து என்னுடைய பகுதிக்குத்தான் அதிகமான அளவு மாநகரப் பேருந்துகள் வருகின்றன. ஆகையினால், என்னுடைய திருப்போரூர் தொகுதியை மையமாக வைத்து அங்கே ஒரு பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டும்.

ஜல்லிக்கட்டு குறித்து எல்லாக் கட்சிகளிலிருந்தும் பேசிவிட்டார்கள். பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நானும் அந்தக் கோரிக்கையை வைக்கின்றேன். தமிழகத்தின் வீர விளையாட்டு ஜல்லிக்கட்டு. அது தமிழக மக்கள் எல்லாம் பாராட்டுகின்ற, தைரியத்தையும், வீரத்தையும் காட்டுகின்ற அந்த விளையாட்டிற்கு இரண்டு இலட்சம் ரூபாய் டெபாசிட் எனத் தமிழக அரசு நிர்ணயத்திருக்கிறது. அதனை இரத்துச் செய்ய வேண்டும். இல்லையென்றால், அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பேசியவாறு, குறைந்தபட்சம் அத்தொகையை இரண்டாயிரம் ரூபாய் அளவிற்குத்தான் நிர்ணயிக்க வேண்டும். நம்முடைய வீர விளையாட்டை நம்முடைய மக்கள் எல்லாம் கண்டுகளிக்கின்ற வகையிலே அந்த விளையாட்டிற்குரிய தொகையை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். எனவே, என்னுடைய கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றித் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

காவேரிப்பட்டினம் எம்.எல்.ஏ. அவர்கள் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவருடைய தொகுதியிலே, நெடுங்கால், தனியள்ளி, பண்ணலூர் ஆகிய கிராமங்களுக்கு கால்நடை கிளைக் மருத்துவமனை அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். கிருஷ்ணகிரியில் ஆவின் பால் உற்பத்தியாளர்களுக்கு 10 வாரங்களாகப் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. உடனடியாக அந்த நிலுவைத் தொகையை வழங்க வேண்டுமென்று சொல்லி, என்னுடைய தொகுதியிலுள்ள அனைத்துச் சாலைகளையும் நம்முடைய நெடுஞ்சாலைத் துறை

அமைச்சர் அவர்கள் செப்பனிட்டுத் தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, அதுபோன்று என்னுடைய தொகுதியில் அதிகப் பேருந்துகளையும் விடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ். (குறுக்கீடு)

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் இதுவரையில் ஒரு நிமிடத்தில் பேசியதாக வரலாறே கிடையாது. (குறுக்கீடு) சரி, அரை நிமிடத்தில் சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பாரம்பரியமிக்க வீர விளையாட்டுகளில் மிக முக்கியமானது ஜல்லிக்கட்டு. அந்த வீர விளையாட்டுக் கலைக்குப் பங்கம் ஏற்படுத்துகின்ற வகையில் சில பேர் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல் என்று சொல்லித் தடை விதித்து வருகிறார்கள். எனவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு இதில் சிறப்புக் கவனம் செலுத்தி, அந்த வீர விளையாட்டுக் கலையை மழுங்கடிக்காமல் அந்தக் கலையை மேலும் வளர்க்கின்ற வகையில், அதற்கான கண்டிஷன்ஸ் எல்லாவற்றையும் விலக்க வேண்டும். பல மாவட்டங்களில் அதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். ஆனால், மதுரையில் இதுவரையில் மூன்று இடங்களில் மட்டும் அனுமதித்திருக்கிறார்கள். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குத் தமிழக அரசு உடனடியாக அறிவித்து, கேட்கின்ற இடங்களில் எல்லாம் அந்த விளையாட்டினை அனுமதிப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்மூலமாக அரசின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ் அவர்கள், உங்களுக்கு எட்டு நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. (குறுக்கீடு) மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டுப் பிரச்சினையைப் பற்றி எல்லா உறுப்பினர்களும் கவலையோடு பல்வேறு கருத்துகளைச் சொன்ன காரணத்தினால், ஒரு விளக்கத்தை சபைக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

2006 ஆம் ஆண்டு அலங்காநல்லூரில் நடைபெற்ற ஜல்லிக்கட்டிலே தனது மகன் இறந்துவிட்டதால், அதற்கு நஷ்ட ஈட்டுத் தொகையினை வழங்கிடக் கோரி, ஜல்லிக்கட்டினை முற்றிலுமாகத் தடை செய்ய திரு. நாகராஜன் என்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அந்த வழக்கு நிலுவையிலுள்ள நிலையில், இராமநாதபுரத்தில் மாட்டு வண்டிப் பந்தயங்கள் நடத்த வேண்டி திரு. முனுசாமித் தேவர் என்பவர் சென்னை, உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் வழக்குத் தொடர்ந்தார். 1960 ஆம் ஆண்டு விலங்கினப் பாதுகாப்புச் சட்டம், பிரிவு 11-இன்படி காளைகள் பந்தயம் மற்றும் காளைகள் சண்டை ஆகியவற்றிற்குத் தடை விதித்து உயர் நீதிமன்றம் தனி நபர் ஆணை பிறப்பித்தது. இதனை எதிர்த்து, திரு. முனுசாமித் தேவர் என்பவர் தொடுத்த மேல்முறையீட்டுடன் இதற்கு ஆதரவாக, ஜல்லிக்கட்டு மீதான தடையினை நீக்க வேண்டி பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்த நபர்கள் சென்னை உயர் நீதிமன்றக் கிளையில் வழக்குத் தொடுத்தனர். அனைத்து நீதிமன்றப் பேராணைகளையும் ஒன்று சேர்த்து, சென்னை உயர் நீதிமன்றக் கிளை 9-3-2007 அன்று தீர்ப்பு வழங்கியது. இவ்வாணையில், ஜல்லிக்கட்டு மற்றும் அது தொடர்பான அனைத்து நிகழ்ச்சிகளும் பாதுகாப்பாக நடத்தப்பட உத்தரவிடப்பட்டது. 9-3-2007 தேதியிட்ட சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் ஆணையை எதிர்த்து, இந்தியப் பிராணிகள் நல வாரியம், Blue Cross உயர் நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி செய்து, 14-8-2008 அன்று, உயர் நீதிமன்றம் வழங்கிய ஆணைக்கு இடைக்காலத் தடை உத்தரவைப் பெற்றது. மேற்கண்ட தடையாணையை அகற்றுவதற்கு உச்ச நீதிமன்றத்தில் எதிர் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதையடுத்து, உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடையாணையை அகற்ற மறுத்தது. இம்மாநிலத்திலுள்ள அலங்காநல்லூர், பாலமேடு போன்ற பகுதிகளில் உச்ச நீதிமன்றத் தடையாணையை எதிர்த்து பொது மக்கள் உண்ணாவிரதம் மற்றும் இரயில் மறியல்களில் ஈடுபட்டதைத் தொடர்ந்து, மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்கேட்டினைத் தடுக்கும்பொருட்டு, மாநில அரசு உச்ச

நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. இதனையடுத்து, தனது முந்தைய ஆணையில் சில மாற்றங்களைச் செய்து, உச்ச நீதிமன்றம் சில நிபந்தனைகளுடன் ஜல்லிக்கட்டினை நடத்திட 15-1-2008-ல் ஆணை பிறப்பித்தது. உச்ச நீதிமன்ற அரசு வழக்கறிஞர்களின் ஆலோசனைக்கிணங்க, Solicitor General அவர்களின் ஆலோசனைக்கிணங்க, ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளை முறைப்படுத்துவது குறித்து ஆய்வு செய்ய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இப்பொருள் குறித்து ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின், உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி தமிழகத்தில் . . . (குறுக்கீடு).

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர், பதில் மிகவும் பெரியதாக இருக்கிறதா? (குறுக்கீடு) ஒன்றுமில்லை, விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு என்று தனியாக Demand இருக்கிறது. (குறுக்கீடு) Please, எல்லோரும் அமைதியாக இருங்கள், நான் பேசிக் கொண்டிருக்கிறேன். விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு என்று தனியாக Demand இருக்கிற காரணத்தினால் அதில் பேசிக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: இன்னும் கொஞ்சம்தான் இருக்கிறது, இரண்டே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இப்பொருள் குறித்து ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகு உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி, தமிழகத்தில் ஜல்லிக்கட்டு விளையாட்டினை முறைப்படுத்துவதற்கு சட்டம் ஒன்றினைக் கொண்டு வருவதற்குத் தமிழக அரசு முடிவு செய்து, அச்சட்டமுன்வடிவு என்னால் 21-7-2009 அன்று சட்டப் பேரவையில் முன்மொழியப்பெற்று நிறைவேற்றப்பட்டது. சட்டம் இயற்றப்பட்டபின், ஜல்லிக்கட்டு விளையாட்டினை முறைப்படுத்துவதற்கான விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டு, அதற்கான சட்டமும் 26-8-2009 அன்று நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. உச்ச நீதிமன்ற ஆணையில் பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அதிலே ஒன்று, ரூ.2 இலட்சம் கட்ட வேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. அடுத்து, அந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் தொடர்ந்து 5 ஆண்டுகள் எந்த ஊரில் நடந்ததோ, அந்த ஊரிலேதான் ஜல்லிக்கட்டு நடத்த வேண்டுமென்று பல்வேறு நிபந்தனைகளை விதித்திருந்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஊர்களிலிருந்து பல்வேறு

கோரிக்கைகளைப் பெற்று, தமிழக அரசுக்கு அனுப்பும்போது, சில ஊர்களை விடுத்து அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அந்த ஊர்களிலே இப்போது ஜல்லிக்கட்டினை நடத்த முடியாமல் இருக்கிறது. உச்ச நீதிமன்ற வழக்கு இப்போது நிலுவையிலுள்ளது. உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை ஏற்று, புதிய ஊர்களில் ஜல்லிக்கட்டினை நடத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கு சட்ட நிபுணர்களுடன் தமிழக அரசு ஆலோசனை செய்து, உச்ச நீதிமன்றத்திற்கு மனுத் தாக்கல் செய்து, எதிர்காலத்திலே நடத்திட ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா ரோஸ். (குறுக்கிடு) சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டு விளையாட்டிற்கு உச்ச நீதிமன்றம் சில நிபந்தனைகளை விதித்து, பல்வேறு பிரச்சினைகளோடு இன்றைக்கு ஜல்லிக்கட்டு சில கிராமங்களில் மட்டும் நடந்து கொண்டிருக்கிறது. பல்வேறு கிராமங்களில் ஜல்லிக்கட்டைப் பற்றி ஒரு அதிருப்தி நிலவுகிறது. அதை இந்த அரசு உணர வேண்டும். மக்களுடைய அதிருப்தியை நாம் போக்க வேண்டும். ரூ.2 இலட்சம் கட்டித்தான் ஜல்லிக்கட்டினை நடத்த வேண்டுமென்று சொன்னால், ஏழையெளிய மக்கள், சாதாரண கிராம மக்கள் ரூ.2 இலட்சத்திற்கு எங்கே போவார்கள்? அதனாலே, கொஞ்சம் கஷ்டம். எனவே, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு சட்டத் திருத்தத்தை உடனடியாகக் கொண்டு வந்து, தேவைப்படுகின்ற கிராமங்களில் எல்லாம் ஜல்லிக்கட்டினை இலவசமாக நடத்திக்கொள்ள ஆணையைப் பிறப்பிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை வருகிற அன்றைக்கு அமைச்சர் அவர்கள் சரியாக பதில் சொல்வார்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரூ.25 இலட்சம் deposit கட்ட வேண்டுமென்றும், இந்த விளையாட்டில் யாராவது இறந்துவிட்டால், அவர்களுக்கு நஷ்டயீடு கொடுப்பதற்கு இந்தத் தொகையைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் உச்ச

நீதிமன்ற நீதிபதிகள் நிபந்தனையில் சொல்லியிருக்கிறார்கள். அரசின் சார்பில் நம்முடைய வழக்கறிஞர்கள் பல முறை வேண்டிக் கேட்டுக்கொண்டதற்கிணங்க ரூ.2 இலட்சமாக அது குறைக்கப்பட்டுள்ளது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், வேகமாகப் பேசுங்கள்.

***திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். மீன்வளம், பால் வளம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துகளை முன்வைக்கிறேன்.

இந்திய நாட்டினுடைய முக்கியத் தொழிலான விவசாயத்திற்கு அடுத்தபடியாக மீன் தொழில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசு கொண்டு வந்த கடலோர ஒழுங்குமுறைச் சட்டம், 2009 முழுமையாகக் கைவிடப்பட்டதா என்று தெரியவில்லை. இந்நிலையில், கடலோர மண்டல ஒழுங்காற்று விதிமுறை, 2010 என்ற ஒன்றை இணையதளத்தில் வெளியிட்டு, மே மாதம் 30 ஆம் தேதிக்குள் மக்களின் கருத்துகள் கேட்கப்பட்டுள்ளது. இது எந்த வகையிலும் மீனவ மக்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதிக்காத வண்ணம் தமிழக அரசு பார்த்துக்கொள்ளவேண்டும்.

பிற்பகல் 12-50

தமிழ்நாட்டில் 10 இலட்சம் மீனவர்கள் கடலையும், கடற்கரையையும் நம்பி வாழ்கின்றனர். கடல் நீரோட்டம், புயல், படகு இயந்திரக் கோளாறு காரணமாக, சில மீன் படகுகள் திசை மாறிச் செல்லுகின்றன. அப்படியே எல்லையைக் கடந்து சென்றுவிட்டாலும், அவர்களைத் திருப்பி அனுப்புவதுதான் மனிதாபிமான முறை.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிந்த பிறகும், தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால்... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரை முடியட்டும், நான் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) நான் கொடுக்கிறேன்.

திருமதி ரா. லீமா றோஸ்: சிறை பிடித்துச் செல்லப்படுவதும், தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நாகை, குமரி, புதுக்கோட்டை, இராமேஸ்வரம் போன்ற பகுதிகளில் மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே, இந்த மீனவர்களைப் பாதுகாக்கத் தமிழக அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

அடிக்கடி கடலில் இயற்கைச் சீற்றத்தால் ஏற்படும் உயிர்ச் சேதத்திற்கு மட்டும் நிவாரண நிதி வழங்கப்படுகிறது. ஆனால், படகு, கருவி, நீரில் மூழ்கினாலும் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவேண்டும்.

கடலில் காணாமல் போனவர்களைக் 'காணாமல் போனவர்' என அறிவிக்க 7 ஆண்டுகள் என்பதை 1 வருடமாகக் குறைக்கவேண்டும்.

நவம்பர் மாதம் ஏற்பட்ட பியான் புயலில் சிக்கி குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட 8 மீனவர்கள் இறந்தவுடன், ரூ.32 கோடி அளவிற்கு இழப்பு ஏற்பட்டதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார். இறந்தவர்களின் குடும்பத்திற்குத் தலா ஒரு இலட்சம் ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது. இதர இழப்பீடுகள் வழங்கப்படவேண்டும்.

நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் வட்டம், அக்கரைப்பேட்டை மீனவக் கிராமத்திலிருந்து 2008 ஆம் ஆண்டு கடலில் மீன் பிடிக்கச் சென்ற இருவர் இலங்கை கடற்படையினரால் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி காயமடைந்து, அறுவை சிகிச்சை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட அவ்விரு குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உதவி கேட்டு அந்த மாவட்ட நிருவாகத்திடமிருந்து வந்த கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. நிறைவேற்றப்பட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்ந்து தமிழகத்தினுடைய மீனவர்கள் தங்களுடைய மீன்பிடித் தொழிலின்மூலம் காணாமல் போவதும், தாக்கப்படுவதும், கொலை செய்யப்படுவதும் போன்ற சம்பவங்களைத் தடுத்து நிறுத்துகின்ற வகையில், விஞ்ஞானத் தொழில்நுட்பம் மிக மிக வேகமாக வளர்ந்து வரும் சூழலில்,

கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோருக்கு Global Positioning System ஏற்படுத்தி, விபத்துக்குள்ளாகும் படகுகளில் இருப்போரை உடனுக்குடன் காப்பாற்றத் திட்டம் வகுக்கவேண்டும்.

மீனவர்களுக்கு வழங்கும் பஞ்ச கால நிவாரண நிதி உயர்த்தப்படவேண்டும். பெண்கள் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்தவேண்டும்.

மீனவர் நல வாரியங்களில் தொழிற்சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படாததால் உறுப்பினர் பதிவில் முன்னேற்றம் இல்லாததுடன், வாரியத்தின் நோக்கமும் நிறைவேறாமல் உள்ளது. இக்குறை சரிசெய்யப்படவேண்டும்.

வெளிப்பொருத்தும் இன்ஜின் தேவைக்கேற்ற எண்ணிக்கையில் மீன்வளத் துறைமூலம் விநியோகிக்கப்படாததால், மீன்பிடித் தொழிலாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். உதாரணமாக, குமரி மாவட்டத்திற்குத் தேவையானவை 2,000. கிடைத்திருப்பதோ 325 மட்டும். எனவே, கணிசமாக உயர்த்தப்படவேண்டும். படகுக்கு நிறுத்தப்பட்ட டீசல் மானியம் மீண்டும் வழங்கப்படவேண்டும்.

சிங்காரவேலர் மீனவர்கள் வீடு கட்டும் திட்டத்தில் ஆண்டுதோறும் சுமார் 4 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டு வந்தன. 4 ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்ட இத்திட்டத்தை மீண்டும் அமலாக்குவதுடன், வீட்டின் பரப்பளவையும், தொகையையும் அதிகப்படுத்தவேண்டும்.

கடற்கரையிலிருந்து 1 கிலோ மீட்டர் வரையுள்ள குடிசை வீடுகள் மற்றும் அரசு கட்டிக் கொடுத்த பழைய வீடுகளுக்குப் பதிலாக, சுனாமி நிதியிலிருந்து புதிய வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட கொல்லங்கோடு பேரூராட்சி மற்றும் தூத்தூர் ஊராட்சியில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதற்கான நிதியை ஒதுக்கி, பணியைத் துரிதப்படுத்தவேண்டும்.

நீரோடி முதல் இரையுமன்துறை வரையுள்ள விடுபட்ட பகுதிகளில் கடலரிப்புத் தடுப்புச் சுவர்களைக் கட்டவேண்டும்.

கன்னியாகுமரி மாவட்ட குளச்சல் மீன்பிடித் துறைமுகத்தில் இடையிடையே ஏதேதோ காரணங்களால் வேலை நிறுத்தப்படுகிறது. விரைந்து அந்தத் துறைமுகப் பணியை

முடிக்கவேண்டும். மேலும், குளச்சல் வர்த்தகத் துறைமுகத்தை நிறைவேற்றித் தர தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்தவேண்டும்.

குமரி மாவட்டத்தில் மீனவக் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடை ஊழியர்களுக்கு அரசாணை எண் 289, நாள் 28-9-2007-ன்படி ஊதியம் வழங்கிடவேண்டும்.

மீனவளத் துறையில் இருக்கக்கூடிய காலிப் பணியிடங்கள் நிரப்பப்படவேண்டும். உணவுத் துறையைப் போன்று பால் வளத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்து அரசு மானியம் வழங்கவேண்டும்.

பால் கொள்முதல் விலையை உயர்த்தி விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும். அதோடு, கடுமையான விலைவாசி உயர்வினைச் சந்தித்து வரும் மக்களுக்கு பாதகம் ஏற்படாதவாறு பாலுக்கு மானியம் வழங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும். நலிவுற்ற பால் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிரூட்டவேண்டும்.

பால் உற்பத்தியாளர்கள் பிரதிநிதிகளை அரசு அழைத்துப் பேசி, கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டும். தமிழ்நாட்டில் கிராமப்புறங்கள் உள்ளிட்ட பால் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் 24,000 பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படவேண்டும்.

இணையம் மற்றும் ஒன்றியங்களில் பணிபுரியும் பணியாளர்களின் வேறுபாடுகளை அகற்றி பணி மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு, காப்பீடு, ஓய்வூதியம் போன்ற அரசு ஊழியர்களுக்கான சலுகைகள் வழங்கப்படவேண்டும்.

பிற்பகல் 12-55

பால் உற்பத்தியை அதிகரிக்க Integrated Dairy Farm திட்டத்தின்கீழ் சுய உதவிக் குழுக்களில் அதிகப் பெண்களுக்குக் கறவை மாடுகள் கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

திருப்பூரில் மக்கள் அடர்த்தி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், ஆவின் பாலக விற்பனை நிலையம் மற்றும் குளிரூட்டு நிலையங்களை விரிவுபடுத்த வேண்டும்.

குடியாத்தம், முக்குன்றம் பகுதியில் ஆவின் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டும்.

குமரி, ஆவின் பாலகத்தில் 10 ஆண்டுகளாக முதுநிலைப் பணியாளர் நிலையில் இருக்கும் 3 பணியாளர்களுக்கு வாகன ஓட்டுநர்களாகப் பதவி உயர்வு வழங்க வேண்டும். கருணை அடிப்படையில் வேலைக்குக் காத்திருப்பவர்களைப் பணி நியமனம் செய்ய வேண்டும்.

10 ஆயிரம் கால்நடைகள் இருந்தால் ஒரு கால்நடை மருந்தகம் என்ற நிபந்தனையைத் தளர்வு செய்து, கிராமப்புறங்களில் கால்நடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப துணை கால்நடை மருந்தகம் மற்றும் மலையோரப் பகுதிகளில் நடமாடும் கால்நடை மருந்தகங்கள் அமைக்கப்பட வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் A.D. அலுவலகத்தின்கீழ் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க நானும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஜாண் ஜோசப், திரு. ரெஜினால்டு, திரு. ஜாண் ஜேக்கப் ஆகியோரும் சேர்ந்து தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வாகனம் வாங்கிக் கொடுத்தோம். இத்துறைக்கு முன்பு பொறுப்பு வகித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வாக்குறுதி அடிப்படையில் வாகனம் வாங்கப்பட்டது. வாகனம் வாங்கி 3 ஆண்டுகள் ஆன பிறகும், அதற்கான மருத்துவர், ஓட்டுநர் நியமிக்கப்படவில்லை. மருந்து, எதுவும் தரப்படவில்லை. தொடர்ச்சியாக சட்டசபையில் பல முறை வலியுறுத்தியும் இதுவரை அரசாணையும் பிறப்பிக்கவில்லை. இந்த ஆண்டிலாவது மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள் விடிவு காலம் பிறக்க நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

ஏராளமான மலையோரக் கிராமங்களை உள்ளடக்கிய குமரி மாவட்டத்தில் ஆண்டுதோறும். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடித்துவிடுங்கள்.

திருமதி ரா. லீமா றோஸ்: சுமார் ஒரு இலட்சம் உறை விந்துக் குச்சிகள் தேவைப்படுகின்றன. ஈச்சங்கோட்டை, ஓசூர், ஊட்டி போன்ற இடங்களுக்குச் சென்று எடுத்து வர ஆண்டுக்கு 10

முறையாவது செல்ல வேண்டியுள்ளது. மாவட்டத்தின் D.D. அலுவலகத்திற்கே வாகனம் இல்லாத நிலையில், அவ்வப்போது உறை விந்துக் குச்சிகளை எடுத்து வருவது பெரும் தலைவலியாக உள்ளது. மேலும், கால்நடைத் துறையின் J.D. அலுவலகம் திருநெல்வேலியில் செயல்படுவதால், தேவையான உத்தரவுகளை உடனுக்குடன் பெற இயலவில்லை. இத்தகைய காரணங்களால் விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டு, கால்நடை வளர்ப்பதைக் கைவிடும் நிலை ஏற்படுகிறது. எனவே, D.D. அலுவலகத்திற்கு வாகனம் வழங்குவதுடன், குமரி மாவட்டத்தில் J.D. அலுவலகமும் தொடங்கப்பட வேண்டும்.

கால்நடைகளுக்கு ஏற்படும் காச நோய், வாய் நோய் தடுப்புத் திட்டத்தில் தடுப்பூசி போடத் தடுப்பூசியாளர்களை நியமிக்க வேண்டும்.

களியக்காவிளை கால்நடை முதலுதவி சிகிச்சை மையம் மற்றும் பூவன்கோடு கிளை நிலையம் ஆகியவற்றை மருந்தகமாகத் தரம் உயர்த்த வேண்டும். மலைவாழ் மக்கள் அதிகம் இருக்கும் பேச்சிப்பாறையில் கால்நடை மருந்தகம் அமைக்கவும், மதுரை மாவட்டம், கப்பலூர், வேலூர்-ஆம்பூர், சென்னை-மாதவரம் ஆகிய பகுதிகளில் மூடப்பட்ட கால்நடைத் தீவன உற்பத்தி மையங்களை உடனடியாகத் திறந்து செயல்பட வைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகளுக்கான தீவனங்கள் அனைத்தையும் மானிய விலையில் அரசே வழங்க வேண்டும். தொகுதிப் பிரச்சினை, ஒரே ஒரு பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியினுடைய முக்கியமான ஒரு பிரச்சினையை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மலையோரக் கிராமமாகிய பேச்சிப்பாறையில் பழங்குடியின மக்கள் மற்றும் விவசாயிகளுடைய நலனுக்காக செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் மைய விரிவாக்கத்திற்கு மத்திய வேளாண் அறிவியல் ஆராய்ச்சிக் கழகத்திலிருந்து வழங்கப்பட்ட ரூபாய் 2 கோடி நிதியை, வனப் பகுதி என்ற காரணத்தினால் மாற்றுப் பகுதிக்குக் கொண்டு செல்லும் முயற்சியை அரசு முற்றிலுமாகக்

கைவிட்டு, பேச்சிப்பாறையிலேயே வேளாண் அறிவியல் மையம் தொடர்ந்து செயல்பட ஆவன செய்யுமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். கோழிப் பண்ணைகளில் கோழி வளர்த்துத் தரக்கூடிய விவசாயிகளுக்கு, பண்ணை உரிமையாளர்கள் 1 கிலோவிற்குத் தற்போது 2 ரூபாய் 50 காசு வழங்கி வருகின்றனர். இதனை, கிலோ ரூ.10 ஆக நிர்ணயம் செய்து தமிழக அரசு வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுது ஒரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். ஜல்லிக்கட்டு விஷயத்தில் உங்களுடைய உணர்வுகளை மதித்து மாண்புமிகு அமைச்சர் நீண்ட ஒரு பதிலைச் சொல்லிவிட்டார், ஒன்று. இரண்டு, இது Sports Minister பதில் சொல்லவேண்டியது. அவருக்கு Sports Demand இருக்கிறது. அப்பொழுது 2 இலட்சம் ரூபாய் கட்டுவதா, குறைத்துக் கட்டுவதா என்று சொல்லலாம். நமது அமரமூர்த்தி சொல்கிறார், ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு தொகை கேட்கிறார்கள், அதை uniform-ஆகச் செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நான் நேரத்தைக் கருதி, நமது Sports Minister அவருடைய Demand அன்றைக்கு மாண்புமிகு முதல்வரோடு கலந்து பேசி, அனைவருக்கும் (குறுக்கீடு) இல்லை, இல்லை, எனக்கு நேரம் இல்லை. அதனால்தான் நானே சொல்லவேண்டியதாக இருக்கிறது. நான் உங்களுடைய கருத்துகளையெல்லாம் அரசாங்கத்திற்குத் தெரிவித்து நீங்கள் கேட்பதுபோல நானும் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தது, திரு. இராமச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இது விளையாட்டுத் துறையிலே வருகிறது. நான்தான் எல்லாம் சொல்லிவிட்டேனே! (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொன்னதைப்போல, . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் பேசும்போது I cannot disturb him.

2010 மே 4]

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலை இங்கே எடுத்து விளக்கியிருக்கின்றார்கள். அதற்குப் பின்னால், மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களைப் பேசச் சொன்னீர்கள். பேசச் சொல்லி அழைத்து, அவர் பேசத் தொடங்கிவிட்டால், இடையிலே யாரும் "Point of order" என்றோ, எதையும் விளக்கம் கேட்பதற்கு உரிமையில்லை. விதியின்படி அப்படித்தான் இருக்கின்றது. இப்பொழுது அவர் பேசி முடித்துவிட்ட பிறகும்கூட, அதற்கு ஒரு விளக்கம், மாண்புமிகு அமைச்சர் சொன்னதற்கு விளக்கம் பெற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே எழுப்புவது நம்முடைய பேரவையின் விதிமுறைகளுக்கு மாறானது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, எனக்கு நேரம் முக்கியம். (குறுக்கீடு) I cannot allow. "Point of order" பற்றி எனக்குத் தெரியும். Don't try to teach me. I was a member of Rajya Sabha and was also a good Parliamentarian. I will not yield. I cannot permit you. திரு. டி. இராமச்சந்திரன், நீங்கள் பேசுவதற்கு 7 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

***திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்பு, மீன்வளம், பால் வளம் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்க வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புற மக்களுக்கு விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிக வருவாய் ஈட்டக்கூடிய தொழிலாக கால்நடை வளர்ப்புத் தொழில் இருந்து வருகிறது. கால்நடைகள் வளர்ப்பதற்காக அரசால் ஒதுக்கப்பட்ட மேய்க்கால் புறம்போக்கு நிலங்களில் இப்போது ஆக்கிரமிப்புகள், வீட்டுமனைகள் மற்றும் அரசு வகை மாற்றம் செய்து கட்டடங்கள் கட்டப்பட்டிருப்பதால் மேய்க்கால் நிலங்கள் எல்லாம் சுருங்கிவிட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூன்று அமைச்சர்கள் இன்னும் பேச வேண்டும்.

திரு. டி. இராமச்சந்திரன்: ஆகவே, மேய்க்கால் நிலங்களை வேறு வகைப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்தாதவாறு இந்தச் சட்டமன்றத்திலே சட்டம் கொண்டு வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நியாய விலைக் கடைகளில் மக்களுக்குப் பொருட்கள் வழங்குவதைப்போல, மானிய விலையில் கால்நடைத் தீவனங்களை அரசு வழங்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடைகளுக்கு இலவசமாகத் தடுப்பூசி போடுவதுபோல, செல்லப் பிராணிகளுக்கும், pet animals—நாய், பூனைகளுக்கும் தடுப்பூசி அரசின் சார்பாக இலவசமாகப் போடப்பட வேண்டும்.

கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் வனப் பகுதியில் ஆடு, மாடு போன்ற கால்நடைகளை மேய்க்க வனத் துறையினர் தடை விதித்துள்ளனர். அந்தத் தடையினைத் தளர்த்தி, ஆடு, மாடுகளை வனப் பகுதியில் மேய்க்க அரசு அனுமதி வழங்க வேண்டும். 3,000 கால்நடைகளுக்கு ஒரு கிளை நிலையம், 5,000 கால்நடைகளுக்கு ஒரு மருந்தகம், 10,000 கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருத்துவமனை என்ற norms, விதிமுறையைத் தளர்த்தி, தேவைக்கேற்ப கால்நடை மருத்துவமனையை ஏற்படுத்த அரசு முன்வர வேண்டும். கிராமப்புறக் கால்நடைகளைப் பாதுகாக்க நடமாடும் கால்நடை மருத்தகங்களை அரசு தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரிலே, ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய கால்நடைப் பண்ணையான ஓசூர் கால்நடைப் பண்ணை 1,641 ஏக்கரில் உள்ளது. திப்பு சுல்தான் காலத்திலே போருக்காகக் குதிரைகள் இங்கே வளர்க்கப்பட்ட வரலாற்றுச் சிறப்பும் இந்தப் பண்ணைக்கு உள்ளது. இங்கு கடந்த சில ஆண்டுகளாக நிதி ஒதுக்கீடு செய்யாமல், அந்தப் பண்ணை பராமரிக்கப்படாமல் உள்ளது. ஆகவே, நிதி ஒதுக்கீடு செய்து, பண்ணையைப் பராமரித்து, அந்தப் பண்ணையிலே பணிபுரிகின்ற ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அங்கு ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியும் அமைக்கப்பட வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். கறவை மாடுகளுக்கு பால் அதிகமாகக் கறக்க வேண்டுமென்பதற்காக, ஆக்ஸிடோசின் என்ற ஒரு ஊசி போடப்படுகிறது. இந்தப் பாலைக் குடிக்கின்ற குழந்தைகள்,

குறிப்பாகப் பெண் குழந்தைகளுக்கு உடல் பருவ மாற்றங்கள் ஏற்படுகின்றன. கர்ப்பப் பைக் கோளாறு, மலட்டுத் தன்மை போன்ற பல்வேறு நோய்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இந்தத் தடுப்பூசி மற்ற நாடுகளில் எல்லாம் தடை செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசும் இதைத் தடை செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஜல்லிக்கட்டு என்பது இந்தச் சபையையே ஈர்த்துள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட ஒரு தெளிவான விளக்கத்தை அளித்திருக்கிறார்கள். இருந்தாலும், உச்ச நீதிமன்றத்தை நாடி, அந்தத் தடைகளையெல்லாம் தளர்த்தி, அனைத்து இடங்களிலும் ஆண்டு முழுவதும் ஜல்லிக்கட்டை நடத்துவதற்கு, அந்த இரண்டு இலட்சம் ரூபாய் deposit தொகையையும் இரத்துச் செய்ய அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை ஆய்வாளர் பணியிடங்கள், சுமார் 1,600 இடங்கள் இன்றைக்கு காலியாகவுள்ளன. அவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டும். கடந்த 2008 ஆம் ஆண்டு 400 பேருக்குக் கால்நடை ஆய்வாளர் பயிற்சி வழங்கப்படுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார். ஆனால் இந்த ஆண்டில் வெறும் 79 பேருக்கு மட்டும் ஓசூரில் பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கால்நடை ஆய்வாளர்களுக்கு அறிவித்தவாறு அந்தப் பயிற்சி வழங்கப்பட வேண்டும். அதைப்போல, இளநிலை கால்நடை உதவி மருத்துவர்களுக்கு மத்திய அரசில் பணியிடங்களை வழங்குவதற்கு கால்நடை ஆய்வாளர் பதவி உயர்வுப் பணியிடங்கள் 444, கடந்த ஆண்டு இளநிலை கால்நடை உதவி மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டது. இதனால் கால்நடை ஆய்வாளர் பணியிடங்கள் குறைந்துவிட்டன. ஆகவே அரசாணை 64-ஐ இரத்துச் செய்ய வேண்டும். கால்நடை ஆய்வாளர்களுக்கு மற்ற பிரிவினர்களுக்கு வழங்குவதுபோல ஊதிய உயர்வு வழங்க வேண்டும். கால்நடை ஆய்வாளர்களுக்கு risk allowance வழங்க வேண்டும். கால்நடை ஆய்வாளர்களுக்குப் புதிய ஊதிய விகிதம் நிர்ணயம் செய்ய வேண்டும். கால்நடைத் துறையிலே அனைத்து மட்டங்களிலும், ஏற்கெனவே அறிவித்தவாறு மாறுதலுக்கான counselling முறையை அரசு அமல்படுத்த வேண்டும்.

பிற்பகல் 1-05

கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்மூலம் பட்ட, பட்டய வகுப்புகள் அஞ்சல் வழிக் கல்விமுலம் நடத்தப்பட வேண்டும்.

தமிழ்நாடு கால்நடை உதவி மருத்துவர்களுக்கு மத்திய அரசின் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு இணையான ஊதியமும், அதேபோல காலவரைக்குள் பதவி உயர்வும் வழங்க வேண்டும்.

கிராமப்புறக் கால்நடை மருந்தகங்களில் ஒரு உதவியாளர் மட்டுமே உள்ளார். ஆகவே, ஏற்கெனவே நடைமுறையில் இருந்தவாறு இரண்டு உதவியாளர்களை அரசு நியமனம் செய்ய வேண்டும்.

2004 ஆம் ஆண்டு இரத்துச் செய்யப்பட்ட கால்நடை மருத்துவ விரிவாக்க அலுவலர்களை மீண்டும் நியமனம் செய்ய வேண்டும்.

மீன் பிடிப்பு தடை செய்யப்பட்ட 45 நாட்களுக்கு அரசு உதவித் தொகையாக 500 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது, அது போதுமானதாக இல்லை. நாளொன்றுக்கு ரூ.100/-வீதம் ரூ.4,500 வழங்கப்பட வேண்டும். அனைத்து மீனவர்களுக்கும் போதுமான அளவு டீசல், மண்ணெண்ணெய் மானியம் வழங்கப்பட வேண்டும்.

உழவர் சந்தைகள்போல் மீனவர் சந்தைகளை அரசு அமைக்க வேண்டும். கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் மீனவக் குடும்பங்களுக்கு வீடு வழங்க வேண்டும். ஏற்கெனவே இருந்தவாறு, எவ்விதத் திருத்தமுமின்றி கடலோர ஒழுங்குமுறை அறிவிக்கை, 1991-ஐ உடனே அமல்படுத்த அரசு முன்வர வேண்டும். முராரி கமிட்டியின் பரிந்துரைகளை உடனே காலம் தாழ்த்தாமல் அரசு அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர் நல வாரியம் அமைத்தாலும் இன்றைக்கு நலத் திட்டங்கள் பெறுவதிலே சிக்கல்கள் உள்ளன. ஆகவே, இந்த மீனவர் நல வாரியத்திற்குத் தனி அலுவலர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் மற்றும் பாசி எடுக்கும் மீனவப் பெண்களுக்கு எதிராக வனத் துறை, கடலோரப் பாதுகாப்புப் படை, கடற்படைகளின் அத்துமீறல்கள் அதிகரித்துள்ளன. ஆகவே,

அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேசிய கடல் பூங்காவைச் சுற்றி மிதவை வேலிகள் போடப்பட்டுள்ளன, அதை நிறுத்த வேண்டும்.

மன்னார் வளைகுடாப் பகுதியில் 21 தீவுகளை உள்ளடக்கிய 560 சதுர கிலோ மீட்டர் பகுதி தேசிய கடல் பூங்காவாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியிலே 150 மீனவக் கிராமங்கள் மீன்பிடித் தொழிலைச் செய்து கொண்டிருக்கின்றன. 2,000 மீனவப் பெண்கள் கடல் பாசி எடுத்து வருகிறார்கள். மிதவைகள் போடுதல் காரணமாக நாட்டுப் படகு மீனவர்கள், கடல் பாசி எடுக்கும், சிப்பி சேகரிக்கும், மீன் வியாபாரம் செய்யும் பெண்கள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான மீனவக் குடும்பங்களின் வாழ்வுரிமை இழக்கப்பட்டுள்ளது. இதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முத்துப்பேட்டையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படுமென மத்திய, மாநில அமைச்சர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் அறிவித்தவாறு இதுவரை தொடங்கப்படவில்லை. அது எப்போது தொடங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குத் தண்ணீர் ஒரு லிட்டர் 14 ரூபாய். அதைவிட குறைத்து பாலுக்கு விலை கொடுக்கப்படுகிறது. ஆகவே, பசும் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 5 ரூபாய் உயர்த்தியும். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இராமச்சந்திரன், உரையை முடித்துவிடுங்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: ஒரு நிமிடம் கொடுங்கள், இரண்டு நிமிடங்கள்கூட நான் பேசவில்லை. எருமைப் பால் லிட்டர் ஒன்றுக்கு 10 ரூபாய் உயர்த்தித் தர வேண்டும். இன்றைக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் என்பது ஆவின் ஊழியர்களுக்கு இல்லை, அவர்களையும் சேர்க்க வேண்டும். ஆவின் நிறுவனத்திலே பணியாற்றியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். கருணை அடிப்படையிலே ஆவின் பணியாளர்களுக்குப் பணி நியமனம் வழங்கப்பட வேண்டும்.

பால் வளத் துறையில் காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி ஆகிய

இரண்டு மாவட்டங்களில் உள்ள 600-க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாவட்ட ஆவின் நிர்வாகம் கொடுக்க வேண்டிய 10 வார பால் பணப் பட்டுவாடா தொகை ரூ.18 கோடி என்பது நிலுவையில் உள்ளது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களில் உள்ள பிரதம சங்கங்களிடமிருந்து புனரமைப்புத் திட்டத்தின்படி பிடித்தம் செய்யப்பட்ட லிட்டர் ஒன்றுக்கு 50 பைசா வீதம் 17 கோடி ரூபாயை தமிழக அரசு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடித்துவிடுங்கள், 8 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. டி. இராமச்சந்திரன்: லிட்டர் ஒன்றுக்கு 50 பைசா வீதம் 17 கோடி ரூபாயை தமிழக அரசு பிரதம சங்கங்களுக்கு உடனடியாக வழங்க வேண்டும்.

அடுத்து, என்னுடைய தளி தொகுதியில் உரிகம், நாட்ராம்பாளையம், தொட்டமஞ்சி, மஞ்சுகொண்டப்பள்ளி, பேவநத்தம் ஆகிய மலைக் கிராமங்களில் கால்நடை மருந்தகங்களை அமைத்துத் தர வேண்டும்.

கக்கதாசம் கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். தளி மற்றும் கெலமங்கலத்தில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயம் சண்முகம்.

திரு. உதயம் சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வங்கக் கடல் அலைகள் வந்து உறவாடும், சங்கத் தமிழ் மணக்கும் தங்கத் தமிழகத்தின் தலைமகனே! எங்கள் குல விளக்கே, ஐயா தமிழக முதல்வரே, உங்கள் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சிறந்த நிதிநிலை அறிக்கையைத் தந்த ஐயா பேராசிரியர் அவர்களுக்கும் நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரே ஒரு சூரியன்தான் பகலுக்கெல்லாம், ஒரே ஒரு சந்திரன்தான் இரவுக்கெல்லாம், ஒரே ஒரு தளபதிதான் தமிழகத்துக்கெல்லாம்! என் உள்ளமெல்லாம் ஆட்சி செய்யும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களே, எங்கள் வருங்காலத் தமிழகமே! *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினராக்கி, வரலாற்றுச் சிறப்பு மிக்க செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலும், தங்கள் உழைப்பால், அறிவால், புதிதாகத் தொடங்கப்பெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க இம்மாமன்றத்தில், கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறைகளின் மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும், எங்கள் தளபதி அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி சொல்லி, கால்நடைத் துறையில் என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

பிற்பகல் 1-10

கால்நடை ஆய்வாளர் பயிற்சி தொடர்ந்து நடைபெற வேண்டும். புதிய கால்நடை மருத்துவக் கிளை நிலையங்கள் (Sub-centres) உருவாக்கப்பட வேண்டும். பார்வைக் கிளை நிலையங்கள் (Visiting Sub-centres) கால்நடை மருத்துவக் கிளை நிலையங்களாகத் தரம் உயர்த்தப்பட வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கால்நடைத் துறைக்குச் சொந்தமான 980 ஏக்கர் நிலம் உள்ளது. புதுக்கோட்டை பகுதியில் மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு சார்ந்த பல தொழில்நுட்ப நிறுவனங்களைத் தொடங்குவதற்கு வசதியாக 200 ஏக்கர் நிலத்தைப் பிரித்துத் தந்தால் புதுக்கோட்டை மாவட்டத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். எனவே, தலைவர் அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அனைத்து ஒன்றியத் தலைமையிடங்களிலும் நடமாடும் கால்நடை மருந்தகங்களை உருவாக்கி, அத்திட்டத்திற்கு கலைஞரின் 109 திட்டம் என்று பெயர் சூட்டப்பட்டால், அது கலைஞர் அரசுக்கு மேலும் ஒரு மணிமகுடமாக அமையும்.

தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டை நடத்துவதற்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரே அனுமதி

வழங்க வேண்டும். மேலும் ரூ.2 இலட்சம் கட்டணம் செலுத்த வேண்டும் என்பதைத் தளர்த்தி அரசு ஆணையிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

நான்கு ஆண்டுகளில் நம் தமிழக அரசு மீனவர்களுக்காகப் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து வழங்கிக் கொண்டிருக்கின்றது. மேலும், எனது தொகுதிக்குட்பட்ட 35 கிலோ மீட்டர் வரை மீனவர் வாழ்கின்ற பகுதிகளில் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும், அருகில் குடிசைப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கும் 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 4 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், அப்பகுதிக்கு சாலை வசதிகள், குடிநீர் வசதி, மின் விளக்கு வசதிகள் ஆகிய திட்டங்களுக்கு ரூ.200 கோடியில் பணிகள் நடைபெற்று முடிந்தும், முடியும் தருவாயிலும் உள்ளன. அதற்காகத், தலைவர் அரசுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் எங்கள் பகுதியில் வாழும் மீனவர்களின் கோரிக்கையை அரசு நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

மீன் பிடிக்கத் தடை செய்யப்பட்ட காலத்தில் மீனவக் குடும்பங்களுக்குத் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் நிவாரணத் தொகை ரூ.500 போதுமானதாக இல்லை. எனவே, இத்தொகையை ரூ.1,000 ஆக உயர்த்தித் தர தலைவர் அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

கடலில் மீன்வளம் குன்றிய நிலையில், நாட்டுப் படகுகள் வெகுதூரம் சென்று மீன் பிடித்துத் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தற்பொழுது மானிய விலையில் அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் டீசல் 250 லிட்டர் போதுமானதாக இல்லை. அதனை 500 லிட்டராக உயர்த்தி வழங்கிடத் தலைவர் அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட முகத்துவாரங்கள் மேடாகி, மீனவர்கள் தங்களது படகுகளைப் பத்திரமாக அவ்விடத்தில் நிறுத்தி வைக்க இயலாத நிலை உள்ளது. எனவே, தலைவர் அரசு மணல்மேடுகளைத் தொடர்ந்து ஆழப்படுத்தி, படகுகள் பத்திரமாக நங்கூரமிட ஆவன செய்ய வேண்டுகிறேன்.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 4] [திரு. உதயம் சண்முகம்]

எனது தொகுதிக்குட்பட்ட ஆர். புதுப்பட்டினத்தில் நாட்டுப் படகுகள் அதிகமாக உள்ளதால், அங்கு ஒரு மீன் இறங்குதளம் அமைத்துக் கொடுக்க வேண்டுகிறேன்.

கோட்டைப்பட்டினம், ஜெகதாப்பட்டினம் பகுதிகளில் அதிக அளவில் மீன்பிடி விசைப் படகுகள் தொழில் புரிந்து வருவதால், பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகள் கொண்ட மீன்பிடித் துறைமுகம் புதிதாக அமைத்துக் கொடுத்திட வேண்டுகிறேன். ஏறத்தாழ 35 ஆண்டுகளாக மிகவும் பின்தங்கியிருந்த அறந்தாங்கி தொகுதியில் மாண்புமிகு தலைவர் அவர்கள் 5-வது முறையாக ஆட்சியில் அமர்ந்த பின்னர், மாண்புமிகு தளபதி அவர்கள் எங்கள் தொகுதிக்கு சமத்துவபுரம் திறப்பு விழாவிற்கு வருகை தந்த நேரத்தில், எங்கள் தொகுதியில் எந்தவித அடிப்படை வசதியுமில்லாத நிலை உள்ளது என்று எடுத்துக் கூறினேன். கடந்த நான்காண்டு காலங்களில் எங்கள் தொகுதிக்கு, தேவையான அடிப்படை வசதிகள் ஏறத்தாழ 80 விழுக்காட்டிற்கும் மேல் செய்து தரப்பட்டுள்ளன.

மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் திருக்காட்டுப்பள்ளியில் இருந்து காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் எங்கள் தொகுதிக்கு குடிநீர் வழங்க ரூ.50 கோடி நிதி ஒதுக்கி அனைத்து வேலைகளும் முடிந்துவிட்டன.

விவசாயிகள் முழுமையாக விவசாயத்திற்கு மழை நீரையே நம்பி இருக்கின்ற தொகுதி. தலைவர் ஆட்சியில் எங்கள் தொகுதியில் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏரிகள் ரூ.50 கோடி செலவிடப்பட்டு மராமத்து வேலைகள் முடியும் தருவாயில் உள்ளன.

போக்குவரத்து வசதியின்றி இருந்த நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகள் அனைத்தும் இன்றைக்கு தலைவர் ஆட்சியில் ஏறத்தாழ 70 சதவிகித சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

அறந்தாங்கியில் போக்குவரத்து வட்டார யூனிட் அலுவலகம் ஒன்று புதிதாக அமைத்துக் கொடுத்தும், மணமேல்குடியில் போக்குவரத்துப் பணிமனை அமைத்துக் கொடுத்தும், தொகுதி

முழுவதும் தேவைப்படுகிற பேருந்து மற்றும் புதிய வழித்தடங்களைத் தொடங்கி வைத்தும், தொகுதியின் போக்குவரத்து வசதியினை சிறப்பாகச் செய்து கொடுத்த மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனைகளான அறந்தாங்கி, மணமேல்குடி, ஆவுடையார்கோயில், சுப்பிரமணியபுரம் ஆகிய 4 மருத்துவமனைகளுக்கும் சுமார் 6 கோடி செலவில் புதிதாகக் கட்டடங்கள் கட்டித் தந்தும், பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று திருப்புனவாசலில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தும் கொடுத்த மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் தொகுதியில் உள்ள பல்வேறு தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகள,ாகவும் தரம் உயர்த்தியும், பள்ளிக் கட்டடங்களுக்குத் தேவையான வசதிகளை முழுமையாகச் செய்து கொடுத்தும், எனது அனைத்துக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தந்த மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *1-15*

உயர் கல்வித் துறையில் பின்தங்கிய நிலையில் இருந்த எங்கள் தொகுதியில் எனது தொகுதி மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான அரசுக் கலைக் கல்லூரியினை அமைத்துத் தந்து, தொகுதி மாணவர்களுக்கு உயர் கல்விப் பயனைத் தந்த மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 35 ஆண்டு காலத்திற்குப் பிறகு எங்கள் அறந்தாங்கி தொகுதியானது மாண்புமிகு தலைவர் அவர்களின், மாண்புமிகு தளபதி அவர்களின் மற்றும் தங்கள் ஆட்சியின் சாதனைகளால் கழகக் கோட்டையாக மாறிவிட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

6. அறிவிப்பு

முக்கியப் பிரமுகர்கள் இருக்கையிலிருந்து பேரவை நடவடிக்கைகளைக் கண்ணுறும் மணிப்பூர் சட்டப் பேரவைத் தலைவருக்கு வரவேற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மணிப்பூர் சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் சபம் புதிசந்திர சிங் அவர்கள், மணிப்பூர் பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. கே. ரஞ்சித் சிங் அவர்கள், மணிப்பூர் சட்டப் பேரவை உறுப்பினர்கள் டாக்டர் கே.எச். லோகென் சிங், திரு. ஈ. த்விஜமணி சிங் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் முக்கியப் பிரமுகர்களுக்கான இருக்கைகளில் அமர்ந்து பேரவை நடவடிக்கைகளைப் பார்வையிட வந்துள்ளார்கள். உறுப்பினர்கள் சார்பில் அவர்கள் அனைவரையும் வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

On behalf of the Members of our Assembly, I welcome Dr. Sapam Budhichandra Singh, Hon. Speaker of Manipur Legislative Assembly, Dr. K. Ranjit Singh, Hon. Minister for Public Works, Dr. K.H. Loken Singh, MLA, Thiru E. Dwijamani Singh, MLA and officials, who are now witnessing the proceedings of the House.

5. மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)
(ஆ) கோரிக்கை எண் 7–மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)
(இ) கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)
—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உதயம் சண்முகம், தொடர்ந்து பேசுங்கள்

திரு. உதயம் சண்முகம்: என் தொகுதிக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கோரிக்கைகள்.

ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்பு அறந்தாங்கி, மீமிசல் மற்றும் மணமேல்குடியில் கட்டப்பட்ட காவல் துறைக் கட்டடங்கள் பழமையாக இருக்கின்றன. அவற்றைப் புதிதாகக் கட்டித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கருவூலம். ஏறத்தாழ 50 கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு கருவூலம் தேவைப்படுகிறது. ஆகவே, மணமேல்குடியில் ஒரு கருவூலம் அமைத்துத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியில் சுமார் 15 ஆண்டுகளுக்கு மேல் அறந்தாங்கி நகரம், ஒன்றியப் பகுதிகளில் வாழ்ந்து வரும் ஏழையெளிய மக்களுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். அதாவது, தமிழகத்திலுள்ள எங்கள் பகுதி விவசாயத்தை நம்பி வாழ்கிற பகுதி. பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏரிகள் அனைத்தும் மராமத்து செய்யப்பட்டுவிட்டன. 100 ஏக்கருக்குக் குறைவாக இருக்கிற ஏரிகளை மராமத்து செய்வதற்கு வழி இல்லாமல் இருக்கிறது. அந்த 100 ஏக்கருக்குக் கீழ்ப்பட்ட ஏரிகளை மராமத்து செய்து தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்துதல். மீமிசல், கோட்டைப்பட்டினம் ஆகிய பகுதிகளிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கை வசதி கொண்டவையாகத் தரம் உயர்த்தித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். கரூர், பெருநாவலூர் மற்றும் கிருஷ்ணாஜிப்பட்டினம் ஆகிய பகுதிகளில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்துத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையின்மூலம் ஆவுடையார்கோவில்-ஒக்கூர் சாலை, ஒக்கூர்-தீயத்தூர் சாலை, காஜுர்-திருப்புனவாசல் சாலை, ஆவுடையார்கோவில்-கோட்டைப்பட்டினம் சாலை, காலகம்-ஆவுடையார்கோவில் சாலை ஆகிய சாலைகளை அகலப்படுத்தித் தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பாலங்கள். வெள்ளாற்றின் குறுக்கே அக்னி பஜார், நிலையூர்-ஏரிப்புறக்கரை, அமரடக்கி-ஒக்கூர் சாலையில் பாலங்கள் கட்டித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அறந்தாங்கி பேருந்து நிலையத்தைப் புதிய பேருந்து நிலையமாக அமைத்துத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். அறந்தாங்கியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். ஆவுடையார்கோவிலில் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உதயம் சண்முகம், போதும், நிறையப் பேசிவிட்டீர்கள். உரையை முடியுங்கள்.

திரு. உதயம் சண்முகம்: ஆவுடையார்கோவில் மற்றும் திருப்புனவாசல் பகுதிகளை சுற்றுலாத் துறையின்மூலம் மேம்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனக்குப் பேச வாய்ப்பளித்த தமிழக முதல்வர் அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எனது சார்பாகவும், எனது அறந்தாங்கி தொகுதி மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே, கால்நடை பராமரிப்புத் துறை, மீன்வளம், பால் வளம் ஆகிய துறைகளின் சார்பிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், இந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சட்டப் பேரவையில் பேச வாய்ப்பளித்த, தியாகத்தின் திருவுருவமாம் எங்கள் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், இளம் தலைவர், எதிர்கால இந்தியாவின் நம்பிக்கை, அன்புத் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களுக்கும், அண்ணன் தன்மானத் தலைவர் திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்கும், பேரவை காங்கிரஸ் தலைவர் மரியாதைக்குரிய திரு. சுதர்சனம் அய்யா அவர்களுக்கும், துணைத் தலைவர் அக்கா திருமதி யசோதா அவர்களுக்கும், கொறடா திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும், மரியாதைக்குரிய துணை கொறடா திரு. ஞானசேகரன் அவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைச் சொல்லி, இந்த மாபெரும் சட்டப் பேரவை வளாகத்தை இந்த நூற்றாண்டின் சாதனையாகக் கட்டி முடித்து, தியாகத் தலைவி அன்னை சோனியா காந்தியையும், அருமைத் தலைவர் பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களையும் அழைத்துத் திறக்கச் செய்த முத்தமிழ் அறிஞர், பொது வாழ்வில் பவள விழா நாயகர் முதல்வர் கலைஞர் அவர்களையும் வணங்கி, அவருக்கு உறுதுணையாக, சுறுசுறுப்பின் மறுவுருவமாக, இளைஞர்களின் எழுச்சி நாயகனாக இருக்கிற துணை முதல்வர் தளபதி அவர்களையும் வணங்கி, இந்த உரையைத் தொடங்குகிறேன்.

பிற்பகல் 1-20

இந்தியாவின் வெண்மைப் புரட்சி என்பது அன்னை இந்திரா காந்தி அவர்களால் தொடங்கப்பட்டு, இன்று நாடு பால் உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளது என்று சொன்னால், இன்றைய தேவைக்கேற்ப நமது பால் உற்பத்தி என்பது சிறப்பாக இருக்கிறதா என்பதை நாம் சிந்தித்து பார்க்க வேண்டிய தருணம் இது. காரணம், இன்றைய மக்கள் தொகை உயர்வுக்கேற்ப பால் உற்பத்தி இருக்கிறதா, எந்த அளவுக்கு குறைவு இருக்கிறது என்பதை நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய கட்டாயத்திலே இருக்கிறோம். நம்முடைய நாட்டிலே இருக்கிற கோழி வளர்ப்பிலே முட்டை உற்பத்தி என்பது, இந்தியாவினுடைய முட்டை உற்பத்தியிலே 16.5 சதவிகிதம் என்கின்ற நிலையில் மிகுந்த பெருமை அடைகிறோம். பால் உற்பத்தி என்பதும் அந்த நிலையை எட்ட வேண்டுமென்பதுதான் நம்முடைய இலட்சியமாக இருக்க வேண்டும். அதற்கான பால் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக கலப்பினப் பசுக்கள், கலப்பின எருமைகளைக் கொண்டு வந்து சேர்க்கின்ற திட்டத்தை நாம் உடனடியாக ஏற்படுத்தியாக வேண்டும்.

இன்றைக்கு இந்த மாமன்றத்தில் ஒரு முக்கியப் பிரச்சினையாக நான் சொல்ல வேண்டியது, தமிழக பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் சார்பிலே வருகிற 17 ஆம் தேதி மிகப் பெரிய ஒரு போராட்டத்தை நடத்துவதாக அறிவித்திருக்கிறார்கள். நான் அரசையும், அமைச்சரையும், மரியாதைக்குரிய முதல்வர் அவர்களையும் பணிவோடு கேட்டுக்கொள்கிற ஒரு விஷயம் என்னவென்று சொன்னால்—தமிழகத்திலே கடந்த 4 ஆண்டுகளிலே 3 முறை பால் விலையை உயர்த்தியது டாக்டர் கலைஞர் ஆட்சி ஒன்றுதான் என்கின்ற நிலையைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நல்ல காரியத்தைச் செய்தது மட்டுமல்ல; ஏழை விவசாயிகளினுடைய, மாடு வளர்ப்போர் மத்தியிலே, அவர்களின் வாழ்க்கைத் தரத்திலே, நல்ல ஒரு எண்ணத்தை, ஊக்கத்தை ஏற்படுத்தி, ஒரு நல்ல உணர்வை ஏற்படுத்தியிருக்கிற, அவர்களுக்காக நான் கேட்கிற ஒரே ஒரு வேண்டுகோள்; அது என்னவென்று சொன்னால்—அவர்கள் கேட்கிற அந்தக் கோரிக்கை என்பது, நிச்சயமாக அது தேவையான விஷயம். காரணம், 100 ரூபாயாக இருந்த வைக்கோல் இன்றைக்கு 200 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. சோளத்தட்டு ரூ.150/-லிருந்து ரூ.270/-

ஆகியிருக்கிறது. தவிடு விலை கிலோ ரூ.5½-லிருந்து ரூ.8½. பிண்ணாக்கு ரூ.24/-லிருந்து ரூ.32/- கலப்புத் தீவனம் ரூ.10-லிருந்து ரூ.12½. இப்படி விலைவாசிகள் உயர்ந்திருக்கிற நேரத்திலே (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் இருங்கள். அரிசிக்கு முத்தமிழ் அறிஞர் முதல்வர் 1 ரூபாய்க்கு அரிசி கொடுத்திருப்பதைப் போல், பால் விலையும் உயர்த்தித் தர வேண்டும். ஏன் இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னால், கனிவோடு பார்க்கிற பார்வை இருக்கின்ற காரணத்தினாலே கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. நிச்சயமாக எருமைப் பாலுக்கும், மாட்டுப் பாலுக்கும் 5 ரூபாய் சேர்த்துத் தாருங்கள். அதேபோல, வறட்சிக் காலத்திலே 2 ரூபாய் ஊக்கத் தொகையாகத் தாருங்கள் என்கின்ற கோரிக்கையை நான் இந்த மாமன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் இதையெல்லாம் சொல்கிறேன் என்று சொன்னால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சிக் காலத்தில் எருமைப் பாலுக்கு 1 ரூபாய் 56 காசும், பசும் பாலுக்கு 1 ரூபாய் 50 காசும் 5 ஆண்டு காலத்தில் உயர்த்திக் கொடுத்தார்கள். 2006-லே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, பசும்பாலுக்கு 5 ரூபாய் 50 காசும், எருமைப் பாலுக்கு 10 ரூபாய் 50 காசும் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். இதைவிட ஆண்டுக்கு ஒருமுறை உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி அறிவித்த பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாத்திரம்தான் உண்டு. போராட்டம் நடத்தக் கூடியவர்கள், கோரிக்கைகள் வைக்கிறபோது அவர்களை அழைத்துப் பேசி வந்திருக்கிறோம். ஆனால், போராட்டம் அறிவிக்கிறபோது, பாலை எடுத்துத் தரையிலே ஊற்றுகிறார்கள். இன்னும் சொல்லப் போனால், சாக்கடையில் ஊற்றுகிறார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் பிறந்திருக்கிற திருக்குவளை மண்ணுக்குப் பக்கத்தில் இருக்கிற எட்டுக்குடி கோயிலுக்கு எங்கள் பகுதியில் உள்ளவர்கள் செல்கிற நேரத்தில், பால் காவடி, பன்னீர்க் காவடி, புஷ்பக் காவடி என்று, பாலை அருந்துவதற்காக மாத்திரம் அல்ல, அபிஷேகத்திற்கும் பயன்படுத்தக்கூடிய ஒரு பொருளை சாக்கடையில் ஊற்றிப்

போராட்டம் நடத்துகிறார்கள் என்று சொன்னால், ஒன்று, அவர்கள் ஊற்றக்கூடியது பாலாக இருக்காது. இல்லாவிட்டால், உண்மையிலே அவர்கள் பால் உற்பத்தியாளர்களாக இருக்கமாட்டார்கள் என்ற கருத்தினை மாத்திரம் பதிவு செய்து முடித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாம் கடைசியில் clarification—ல் கேட்டுக்கொள்ளலாம், உட்காருங்கள். முதலில் அவர் பேசி முடிக்கட்டும். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) Point of order எல்லாம் கடைசியில் பார்த்துக்கொள்ளலாம். உட்காருங்கள்.

திரு. ஆர்.எம். பழனிசாமி: இல்லை, இல்லை, அமைச்சர் அவர்கள் சொன்னதில் எனக்கு எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உங்கள் பேச்சை சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஆர்.எம். பழனிசாமி: முடித்துவிடுகிறேன். இப்போதுதான் என் பேச்சை ஆரம்பித்திருக்கிறேன். அவர்களுக்குத் தேவையென்கின்ற அடிப்படையில் நான் இந்தக் கோரிக்கையை வைக்கிறேனேயொழிய, அவர்கள் தவறாக நடக்கிறார்கள் என்று சொன்னால், நிச்சயமாக அதிலே மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், இந்த ஆட்சியிலேதான் உயர்த்தியிருக்கிறீர்கள் என்பதை மக்கள் ஒத்துக்கொள்கிறார்கள். யார் ஒத்துக்கொள்கிறார்களோ, இல்லையோ, ஜனங்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் இன்றைக்கும் கோரிக்கையை உங்கள் மத்தியில் வைக்கிறார்கள் என்பதை நான் எடுத்துச் சொல்கின்றேன்.

சென்னையில் ஆவின் பால் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுக்கிறேன். சில பகுதிகளில் பால் வருவதில்லை என்கின்ற குறைபாடு இருக்கிறது. அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, சென்னை மாநகரத்தைப் போன்ற மாநகரங்களிலே, நகரங்களிலே தேவையான அளவு ஆவின் பால் கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்கிற கோரிக்கையை வைக்கிறேன்.

பிற்பகல் 1-25

பால் உற்பத்தியாளர்களுக்குத் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே பால் கறக்கும் கருவிகளுக்கு ஆகின்ற

மின்சாரச் செலவு, தீவனங்கள் நறுக்கும் இயந்திரங்களுக்கு ஆகின்ற மின்சாரச் செலவு, கால்நடைகள் வளர்க்கப்படுகிற ஷெட்டிலே ஏற்படுத்தப்படுகிற மின்சாரச் செலவு, அத்தனையையும் இலவசமாக வழங்க வேண்டுமென்கின்ற கோரிக்கையினை நான் இந்த மாமன்றத்திலே வைக்க ஆசைப்படுகிறேன்.

இன்றைக்குத் தீவனத் தொழிற்சாலை ஈரோட்டிலே ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. அந்தத் தீவனம் கன்று வளர்ப்புத் திட்டத்திற்கு மட்டுமே உற்பத்தி செய்யப்படுவதாக அறிகிறோம். ஆனால், தயவுகூர்ந்து அனைத்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தமிழகத்திலே இந்தத் தீவன உற்பத்தி ஆலையிலேயிருந்து தீவனம் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன். அப்படியில்லை என்று சொன்னால், நம்முடைய பால் வளத் துறை சார்பிலே இந்தத் தீவனங்களை மானிய விலையிலே விவசாயிகளுக்கு, பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்க வேண்டுமென்கின்ற கோரிக்கையை வைக்க ஆசைப்படுகிறேன்.

செயற்கைமுறைக் கருவூட்டலுக்கான அந்த LN² என்கின்ற liquid nitrogen எங்கள் மாவட்டத்தில் இல்லை என்கின்ற தகவலை நேற்று மாண்புமிகு அமைச்சரிடத்திலே சொன்னேன். உடனடியாக அதைத் தருவித்துக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படித் தட்டுப்பாடு இருக்கிற காரணத்தினாலே, செயற்கை முறைக் கருவூட்டலிலே அந்தக் கருவூட்டல் கருவி இயங்காமல் போனால், காளைக்கு விடுகிறபோது அந்த மாட்டிலே, அந்தக் காளையிலே இருக்கிற நோய்த் தொற்று ஏற்பட்டு, பிறக்கிற கன்று ஆரோக்கியமற்றதாகப் பிறக்கிற சூழ்நிலை உருவாகும். அதைத் தவிர்க்க வேண்டுமென்கின்ற கோரிக்கையையும் இந்த நேரத்திலே வைக்கிறேன்.

தனியார் பால் உற்பத்தியாளர்களுக்கும், நம்முடைய ஆவின் பால் உற்பத்தியாளர்களுக்கும் உள்ள ஒரு வித்தியாசத்தை நான் இங்கே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். தமிழகத்திலே இருக்கிற, பாக்கெட்டிலே அடைத்து விற்கப்படுகிற பால்களிலேயே ஆவின் பால் ஒன்றுதான் தரம் மிக்கதாக, உறுதியான, நியாயமான விலையிலே கிடைப்பதாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதைக் கொள்முதல் செய்கிற சொசைட்டியிலே நடக்கின்ற விஷயத்தை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்கிறேன். 3 per cent fat; அதேபோல 7.7 per cent snf-க்கு 12 ரூபாய் 18 காசு.

அதற்கும் கம்மியாக snf வந்தால் நம்முடைய சொசைட்டியிலே penalty போட்டு அதை எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால், பிரைவேட் சங்கங்களிலே தனியார், மிகப் பெரிய விளம்பரங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய தனியார் நிறுவனங்கள் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொழுப்பு 3 percent உள்ள, 7.7 per cent snf உள்ள அந்தப் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்குக் கடந்த ஆட்சிக் காலத்தில் ஒரு ரூபாய் 74 காசுதான் கொடுத்தார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த இந்த 4 ஆண்டுகளில் லிட்டர் ஒன்றுக்கு 12 ரூபாய் 68 காசு வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்தச் சபையின்முன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி. நான் அதிலே குறையே காணவில்லை. தனியார் வாங்குகிற பாலுக்கு 3 per cent fat, 7.7 per cent snf-க்கு தனியார் 13 ரூபாயிலிருந்து 16 ரூபாய் விலை கொடுக்கிறார்கள். எப்படி அவர்கள் இவ்வளவு விளம்பரங்களைச் செய்து இத்தனை வேலைகளைச் செய்கிறார்கள்? இந்தப் பால் தூய பால்தானா என்பதை நாம் கண்டுபிடித்தாக வேண்டும். ஏனென்றால், ஆவின் பாலிலே இருக்கிற சுத்தம், பரிசுத்தம், வேறு எதிலேயுமே இல்லை. மக்கள் ஆவின் பாலை அதிகமாக விரும்பி வாங்குகிறார்கள். வெளி மார்க்கெட்டிலே இருக்கிற தனியார் பாலை நீங்கள் நிச்சயமாகப் பரிசோதிக்க வேண்டும். இன்னொரு விஷயத்தையும் கேள்விப்படுகிறேன். அதிலே தாவரக் கொழுப்பும், மிருகக் கொழுப்பும் inject செய்யப்படுவதாகக் கேள்விப்படுகிறேன். இதுவும் ஒரு மோசமான முன்னுதாரணம். ஒரு காலத்திலே பால் இன்ஸ்பெக்டர்கள் என்று சொல்லிக்கொண்டு, சைக்கிளிலே போகிறவர்களைப் பிடித்து, நாமெல்லாம் இன்ஸ்பெக்ட் பண்ணியிருக்கிறோம். இன்றைக்கு பிரைவேட்டிலே வந்திருக்கிற இவர்களை நாம் கண்டிப்பாக, நிச்சயமாக எற்றுக்கொள்ளக் கூடாது என்கிற இந்த நிலையை நான் உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்து, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களினுடைய உதவியாளர்கள், பரிசோதகர்களை ஒன்றியத்திலே சேர்த்துக்கொள்ளுங்கள். ஏனென்றால், சங்கத்திலேயிருந்து கொடுப்பதாலே அவர்களுக்கு 500 ரூபாயிலிருந்து 3,000 ரூபாய் வரைதான் சம்பளம் கிடைக்கிறது. கிட்டத்தட்ட 1,700 லிட்டர் சங்கத்திற்கு வந்தது என்றால்கூட அந்த நபர் 3,000 ரூபாய் வாங்கி ஒன்றும் செய்ய முடியாது. அவன் காலையிலேயிருந்து வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஒன்று, ஒன்றியத்தினுடைய பணியாளர்களாக அவர்களை ஏற்றுக்கொள்ளுங்கள்; இல்லை என்று சொன்னால், சங்கத்திற்கு விளிம்புத் தொகையாகக் கொடுக்கிற 40 பைசாவை ஒரு ரூபாயாகக் கொடுங்கள் என்கின்ற கோரிக்கையை நான் இந்த அரசின் முன்பாக வைக்க ஆசைப்படுகிறேன்.

அடுத்து, கால்நடைத் துறையின் சார்பிலே இரண்டு, மூன்று விஷயங்களைக் கூறுகிறேன். காங்கேயம் இனப் பசுக்களைக் காப்பாற்ற வேண்டும். அதில் மிகப் பெரிய, முக்கியமான ஒரு விஷயம் என்னவென்றால் காங்கேயம் இனத்திலேயிருந்து கிடைக்கிற பால் என்பது சத்தான பால். புல்லை மேய்வதால் கிடைக்கும் சத்தான பால் அந்த மாடு எடுத்துக்கொள்கிற உணவு என்பது குறைவு. அது இடுகிற சாணம் அதிகம். அது இயற்கையான உரம். அது கொடுக்கிற சிறுநீர் என்பது மருத்துவ குணத்தோடுகூடிய மிகப் பெரிய அற்புதமான இயற்கை உரமும்கூட. அதே நேரத்திலே, காங்கேயம் பசு என்பது மனிதனுடைய உணவை எடுத்துக்கொள்வதில்லை. காங்கேயம் பசு புல்லையும், கொழுக்கட்டை புல்லையும் மேய்ந்து, இயற்கையாக வளர்கிற அத்தனையையும் ஏற்றுக்கொள்கிற அந்தப் பசு இனம் இன்றைக்கு அழிந்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.

திரு. ஆர்.எம். பழனிசாமி: முக்கியமானதை சொல்ல வேண்டியுள்ளது. இரண்டு நிமிடத்திலே முடித்துவிடுகிறேன். Please. மக்காச் சோளமாக இருந்தால் எடுத்துக்கொள்வதில்லை. பூமி வெப்பமடைவதையும், தட்ப வெப்ப நிலையையும் இது மாற்றுகிறது.

பிரேசில் நாட்டில் காங்கேயம் Breeders Society என்ற பெயரில் சுமார் 1½ இலட்சம் மாடுகள் இருக்கின்றன. அதை சத்தான பாலுக்கும், அற்புதமான மாமிசத்திற்கும் பயன்படுத்துகிறார்கள். அங்கே இருக்கிற இந்த நிலையை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் காரணம், அடிமாட்டுக்கு இங்கிருந்து கேரளாவுக்குக் கொண்டு போவதைத் தடுப்பதற்கு ஒரு சட்டம் இயற்ற வேண்டும். இங்கே இருக்கிற கால்நடைகள் பாதுகாக்கப்பட்டாக வேண்டும். அதற்குமேல் காங்கேயம் இன மாடுகளினுடைய சிறப்புகளை ஆராய்வதற்காக சேனாதிபதி காங்கேயம் கால்நடை ஆராய்ச்சி மையமானது, தற்போது நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன் அவர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, உட்காருங்கள். அடுத்து, திரு. வே. செந்தில் பாலாஜி. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள். (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது. இப்போதே மணி 1-31 ஆகிவிட்டது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி. (குறுக்கீடுகள்) பத்து நிமிடங்கள்தான், பேசுங்கள்.

***திரு. வே. செந்தில் பாலாஜி:** ஆறரைக் கோடித் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரம், இளைஞர், இளம் பெண்கள் பாசறையைத் தந்த எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 2005 ஆம் ஆண்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுடைய எண்ணிக்கை என்பது 9,012. ஆனால், இன்று 8,246 ஆகும். 2005 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களினுடைய உறுப்பினர்கள் 22 இலட்சத்து 60 ஆயிரம். ஆனால், இன்று 2010-2011 ஆம் ஆண்டு 22 இலட்சத்து 29 ஆயிரம். 31 ஆயிரம் உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் குறைந்திருப்பதுதான் நான்காண்டு கால தி.மு.க. ஆட்சியினுடைய சாதனையாகும் என்பதை எடுத்துச் சொல்லி, தானியங்கி பால் விநியோக நிலையங்களின் எண்ணிக்கை என்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே 2005 ஆம் ஆண்டு 218 இயங்கி வந்த நிலையில், இன்று தி.மு.க.

ஆட்சியில் 2010 ஆம் ஆண்டு 157 தானியங்கி பால் விநியோக நிலையங்களாக அவை குறைந்திருக்கின்றன.

2000-2001 ஆம் ஆண்டு பால் ஒன்றியங்களிலே கொள்முதல் 16 இலட்சத்து 94 ஆயிரம் லிட்டர். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே 2005-2006 ஆம் ஆண்டிலே 21 இலட்சத்து 59 ஆயிரம் லிட்டர் அளவிற்கு ஒன்றியங்களிலே பால் கொள்முதல் செய்யப்பட்டது. 16 இலட்சத்து 94 ஆயிரம் லிட்டர் என்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே 21 இலட்சத்து 59 ஆயிரம் லிட்டர் என்ற அளவுக்கு உயர்ந்தது. 4 இலட்சத்து 65 ஆயிரம் லிட்டர் கூடுதலாக ஒன்றியங்களிலே பால் கொள்முதல் செய்யப்பட்ட ஆட்சி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒன்றியங்களிலே பால் கொள்முதலை அதிகப்படுத்துவதற்கு இன்றைய தி.மு.க. அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை எடுத்துச் சொல்லி, தனியார் பால் விற்பனையை ஊக்குவிக்கும்விதமாக அரசினுடைய நிலைப்பாடுகள் உள்ளன.

"கவின்கேர்" என்ற பால் நிறுவனம் அரசிடம் முறையான அனுமதியைப் பெற்றுள்ளதா? எந்த அடிப்படையில் அவர்களுக்கு முறையான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அரசு ஆய்வு செய்ய வேண்டுமென்று எடுத்துக் கூறி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30-11-2001 அன்று உற்பத்தியாளர்களின் வேண்டுகோளை ஏற்று 1-12-2001 அன்று 1 ரூபாய் 50 பைசாவாகவும், 1-6-2004 அன்று 1 ரூபாய் 50 பைசாவாகவும் பால் கொள்முதல் விலையை உயர்த்தினார்கள். ஆனால், அன்றைய ஆவின் பாலை 1 லிட்டர் 9 ரூபாய்க்குக் கொள்முதல் செய்தபோது விற்பனை விலை 12 ரூபாய் 50 பைசா. உற்பத்தியாளர்களுக்கு விலையை உயர்த்தினாலும், நுகர்வோர்களுக்கு விலையை உயர்த்தாத அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்கிறேன். 1 லிட்டர் ஆவின் பால் தற்போது 22 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்பது இன்றைய நிலை. ஆனால், உற்பத்தியாளர்களுக்கு பசும்பாலுக்கு 14 ரூபாய் 50 பைசா மட்டுமே வழங்கப்படுகிறது. இன்றைய தி.மு.க. ஆட்சியில் பால் விற்பனை விலை என்பது உயர்த்தப்பட்டு, பொது மக்கள்மீது திணிக்கப்படுகிறது. ஆனால், உற்பத்தியாளர்களுக்குக் கொள்முதல் விலை உயர்த்தப்படவில்லை.

இப்போது 1 லிட்டர் தண்ணீர் விற்கப்படும் விலையும், பால் கொள்முதல் விலையும் ஒரே நிலையில்தான் இருக்கின்றன.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே 200 மில்லி லிட்டர் பாக்கெட் தயிர் 4 ரூபாய். இன்று தி.மு.க. ஆட்சியிலே 8 ரூபாய். அம்மாவுடைய ஆட்சியில் வெண்ணெய் விலை 1 கிலோ 130 ரூபாய், இன்று 200 ரூபாய். மாண்புமிகு அம்மாவுடைய ஆட்சியிலே 5 ரூபாய்க்கு விற்ற லஸ்ஸி இன்று 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவுடைய ஆட்சியிலே பால்கோவா 1 கிலோ 150 ரூபாய், இன்று 250 ரூபாய். இப்படி ஆவின் மூலம் விற்கப்படுகின்ற அனைத்துப் பொருள்களின் விலையும் இன்றைய தி.மு.க. ஆட்சியிலே உயர்த்தியிருப்பதை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பால் கொள்முதல் விலை, பசும் பாலுக்கு 14 ரூபாய் 50 பைசா, எருமைப் பாலுக்கு 19 ரூபாய். தனியார் பால் கொள்முதல் பசும்பாலுக்கு 17 ரூபாய், எருமைப் பாலுக்கு 23 ரூபாய். இதனால் பால் உற்பத்தியாளர்கள் பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்று பல போராட்டங்களை நடத்தி வரும் நிலையில், அரசின் கவனத்தை ஈர்க்க, பாலை ரோட்டில் கொட்டி நூதன முறையில் தங்கள் அவல நிலையை எடுத்துரைத்த போராட்டத்தை முதலமைச்சர், இரத்தத்தைக் கண்டு பயப்படாத நாங்கள் பாலைக் கண்டா அஞ்சப் போகிறோம் என்று கூறிய பதில் பால் உற்பத்தியாளர்கள் நலனில் இந்த அரசு எந்த அளவு அக்கறை கொண்டுள்ளது என்பதனைக் காட்டுகிறது. பல்வேறு உதாரணங்களுக்கு வேறு மாநிலங்களை சுட்டிக்காட்டுகின்றீர்கள் நீங்கள்; கர்நாடகாவில் பாலுக்கு அரசு லிட்டருக்கு 2 ரூபாய் மானியமாக வழங்குகிறது என்பதைப் பேரவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 1-35

ஆவின் ஒன்றியப் பணியாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு இணையான பென்சன் வழங்கப்பட வேண்டும் என்று எடுத்துச் சொல்லி, தமிழ்நாட்டிலே 2004 ஆம் ஆண்டு சுனாமி ஏற்பட்டபோது கால்நடை வளர்ப்போருக்கு அதிகப் பொருளாதார இழப்பை ஏற்படுத்தி, 11,550 கால்நடைகள், 3,608 கோழியினங்கள்

உயிரிழப்பு ஏற்பட்டது. 58 முகாம்களில் 59 கால்நடை மீட்புக் குழுக்களும் அமைக்கப்பட்டு, அன்றைய நிலையில் பாதிக்கப்பட்ட கால்நடை வளர்ப்போருக்கு 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கிய தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே கால்நடைத் துறைக்குப் பொற்காலம், ஆனால் இன்றைய தி.மு.க. ஆட்சியிலே கால்நடைத் துறைக்குக் கற்காலம், இருண்ட காலம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

2001 ஆம் ஆண்டு மூன்று பன்முக மருத்துவமனை என்பதனை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஐந்தாண்டு கால ஆட்சியிலே ஆறு பன்முக மருத்துவமனைகளாக உயர்ந்தன. 2001 ஆம் ஆண்டு 839 கால்நடை மருந்தகங்கள் என்ற நிலையில் இருந்ததை, 2005 ஆம் ஆண்டு 1,157 கால்நடை மருந்தகங்களாக உயர்த்திய ஆட்சி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சி என்பதை எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில் செயல்பட்டு வந்த கால்நடைக் கிளை நிலையங்களில் 444-ஐத் தேர்வு செய்து, தரமுயர்த்தப்பட்டு, கால்நடைக் கிளை நிலையங்கள் என்ற அடிப்படையில் 444 மருத்துவர்களை நியமனம் செய்துள்ளார்கள். ஆனால், தரமுயர்த்தப்பட்ட 444 கால்நடைக் கிளை நிலையங்களுக்கு இன்று வரை மருந்துகள் வழங்கப்படவில்லை. மருந்துகள் வழங்கப்படாமல் எப்படி அந்தக் கால்நடைக் கிளை நிலையங்கள் செயல்படும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டம்தான் நடமாடும் கால்நடை மருந்தகம் என்பதை எடுத்துச் சொல்கிறேன்.

தீவனத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே கால்நடைகளுக்குப் பயன்படுத்தப்படும் தீவனம் என்பது ஒரு மூட்டைக்கு 350 ரூபாய், ஆனால் இன்றைக்கு இந்த தி.மு.க. ஆட்சியிலே 650 ரூபாய். கால்நடைகள் பயன்படுத்தக்கூடிய தவிடு ஒரு மூட்டை 150 ரூபாய், இன்று 250 ரூபாய். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே கம்பு ஒரு மூட்டை 600 ரூபாய், இன்று 1,500 ரூபாய்க்கு ஒரு மூட்டை கம்பினுடைய விலை விற்கப்படுகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே

சோளம் 800 ரூபாய், கால்நடைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய அந்தச் சோளம் இன்றைய ஆட்சியிலே 2,300 ரூபாய். குருணை என்பது கால்நடைகளுக்குப் பயன்படுத்தக்கூடியது. ஒரு மூட்டை குருணை 280 ரூபாய், இன்றைய ஆட்சியிலே 600 ரூபாய். இப்படி கால்நடைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய தீவனங்களுடைய, அனைத்துப் பொருட்களுடைய விலைகளும் உயர்ந்திருக்கின்ற நிலையிலே, பாலினுடைய கொள்முதல் விலையை உயர்த்தித் தரவேண்டும் என்கின்ற பால் உற்பத்தியாளர்களுடைய வேண்டுகோளிற்கும் இந்த அரசு செவிசாய்த்து, உடனடியாக பால் உற்பத்தியாளர்களுக்கு விலையை உயர்த்த வேண்டும் என்பதை எடுத்துச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களுடைய ஆட்சி கால்நடையினுடைய பொற்காலம், இது கற்காலம் என்று சொன்னார்கள். கால்நடைத் துறையில் உள்ள அலுவலர்களின் மொத்த எண்ணிக்கையே 8,000 பேர்கள். அதிலே 3,500 காலிப் பணியிடங்களை அம்மாவினுடைய ஆட்சி விட்டுச் சென்றிருக்கிறது. இப்பொழுது கலைஞருடைய ஆட்சி 2,500-க்கும் மேற்பட்ட காலியிடங்களை நிரப்பி, பொற்காலமாக (மேசையைத் தட்டும் ஒலி) உருவாக்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26-12-2004 அன்று சுனாமியால் கடல் சீற்றம் ஏற்பட்டபொழுது, சில மணி நேரங்களில், சில மணித்துளிகளில் உடனடியாக அப்பகுதிகளுக்குச் சென்று, விரைந்து நடவடிக்கை எடுத்த ஒரே தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்தப் பேரவைக்கு சுட்டிக்காட்டி, சுனாமி நிவாரணங்களை, புனரமைப்புகளை உலக நாடுகள், அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்டன் உள்ளிட்டோர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டினார்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட அந்தக் கட்டுமரங்கள், வள்ளங்கள், மீன்பிடி விசைப் படகுகள், வலைகள் போன்ற அனைத்திற்கும் பழுது பார்க்கவும், மாற்றி அமைக்கவும் உடனடியாக நிவாரணம் வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 8,000

வீடுகளை சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கிய தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆக, இன்றைய ஆட்சியிலே சுனாமியால் பாதிக்கப்பட்ட . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆட்சியிலே சுனாமியிலே பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 8,000 வீடுகள் கட்டித் தந்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்குத் தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய ஆட்சியிலே மீனவர்களுக்கு ஒரு வீடுகூட கட்டித் தரவில்லை என்பது உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் அனைத்தும் தொண்டு நிறுவனங்கள்மூலமாகக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2004-லே சுனாமி ஏற்பட்டாலும், 2006-லே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி 5-வது முறையாக, நம்முடைய தமிழகத்தின் வரலாற்று முதல்வர் ஐயா கலைஞருடைய தலைமையிலே அமைந்த பிறகுதான் சுனாமி வீடுகள் அரசின் சார்பாகக் கட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) மீனவ மக்களை வாழ்வித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனை அவைக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று ஆண்டுகளாக அறிவிக்கப்பட்டதுபோல ஒரு வீட்டைக்கூட அந்த மீனவ மக்களுக்கு இதுவரை இந்த அரசு கட்டித் தரவில்லை என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லிலே. . .

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் அவைக்குத் தவறான தகவலையே எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் தந்துகொண்டிருக்கின்றார்கள். கடற்கரையில் இருக்கக்கூடிய கன்னியாகுமரி முதல் திருவள்ளூர் மாவட்டம் வரை இருக்கக்கூடிய 13 கடற்கரை மாவட்டங்களில் ஏறத்தாழ 40,000 வீடுகளை நம்முடைய வரலாற்று முதல்வர் கலைஞருடைய ஆட்சி கட்டிக் கொடுத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் கட்டித் தந்துகொண்டிருக்கின்றது என்பதனை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-40

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, மீன்வளத் துறை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே 2004-2005 ஆம் ஆண்டிலே 2,068 கோடி ரூபாய் அளவிற்குக் கடல் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால் இன்றைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 2007-2008 ஆம் ஆண்டிலே கடல் பொருட்கள் ஏற்றுமதி இந்திய அளவில் 7,620 கோடி ரூபாய் மதிப்பு என்பதில், தமிழகத்தின் ஏற்றுமதி மதிப்பு 1,813 கோடி ரூபாயாகக் குறைந்திருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில் ஏற்றுமதி செய்யப்பட்ட அந்த மதிப்பைவிட 258 கோடி ஏற்றுமதி மதிப்பு குறைந்திருக்கிறது என்பதை இப்பேரவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கரூர் மாவட்டத்தில் காவிரி ஆற்றிலிருந்து மணல் நாளொன்றுக்கு 5,000-க்கும் மேற்பட்ட லோடுகள் எடுத்துச் செல்லப்படுகின்றன. இதில் அரசுக்கு 1,000 முதல் 1,500 லாரிகளுக்கு மட்டுமே அரசு அனுமதிச் சீட்டு வழங்கப்படுகின்றது. மீதமிருக்கின்ற 3,500, 4,000 லாரிகள் சுந்தரேசன் என்கிற பெயரிலே, second sales permit என்கிற முறையிலே வழங்கப்படுகின்றன. இந்த second sales permit என்பது, ஆற்றிலிருந்து மாட்டு வண்டிகள்மூலம் மணலை எடுத்து வந்து, ஒரு குறிப்பிட்ட தொலைவில் கொட்டி விற்கப்பட வேண்டும். ஆனால் மாறாக, பொக்லைன் இயந்திரங்களைக் கொண்டு, ஆற்றுக்குள்ளேயே, குடிநீர்க் கிணறுகளுக்கு அருகிலேயே இந்த second sales permit-ஐப் பயன்படுத்தி மணல் எடுக்கப்படுகிறது. இதனால் அரசுக்குப் பல கோடி ரூபாய் வருமானம் இழப்பு ஏற்படுகிறது. நாளொன்றுக்கு ஒரு கோடி ரூபாய் வரை தனி நபருக்குச் செல்வதை அரசு அதிகாரிகளும், இந்த அரசும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது.. மணல் கடத்துவோர்மீது குண்டர் சட்டம் பாயும் என்ற அறிவிப்பு என்ன ஆயிற்று? கரூர் மாவட்டத்தில் மணல் கடத்தும் எத்தனை பேர் மீது பாய்ந்திருக்கிறது? 626 ரூபாய் வசூலிக்க வேண்டிய அந்த பெர்மிட் என்பது ரூபாய் 2,550 வரை அரசு குவாரிகளிலே வசூலிக்கப்படுகிறதே! இந்தப் பணம் எங்கே போகிறது? சிவன் சொத்து குல நாசம் என்பதுபோல, இயற்கை வளங்களைச் சுரண்டுவதும், கொள்ளை அடிப்பதும், கடத்துவதும் . . .

2010 மே 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) தொகுதிப் பிரச்சினை இருந்தால் சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. வே. செந்தில் பாலாஜி: குல நாசம் என்பது மட்டுமல்ல, பரம்பரையே நாசமாகிவிடும் என்பதை இந்தப் பேரவைக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கரூர் மாவட்டத்தில் நிலவி வருகின்ற மின் தட்டுப்பாட்டினால் ஜவுளித் தொழில், கொசு வலை, bus body தொழில் செய்வோர், விவசாயிகள் என பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 1,500 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதியிலே இழப்பு ஏற்பட்டிருக்கிறது. பஞ்சினுடைய விலைக்கு உடனடியாக ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டு வர வேண்டும். மாதம் ஒருமுறை நிர்ணயிக்கக்கூடிய அளவிற்குக் கட்டுப்பாடு வர வேண்டும். ஏனென்றால், ஷேர் மார்க்கெட்டைப்போல, பங்கு வணிகத்தைப்போல ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரத்திற்கும் அந்தப் பஞ்சினுடைய விலை, நூலினுடைய விலை உயர்ந்துகொண்டு போவதைச் சுட்டிக்காட்டுவதோடு, மாதத்திற்கு ஒரு முறை நூலினுடைய விலையைக் கட்டுப்படுத்துகின்ற அளவிற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக்கொள்கிறேன்.

இனாம் கரூர் நகராட்சியிலே 15 தினங்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. புதிய குடிநீர்த் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். அதேபோல, T.N.P.L. ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டுமென்பதை இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு இலட்சம் மக்கள் வருகின்ற கரூர் நகராட்சிப் பகுதிக்கு புதிய காவிரிக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்பதை இந்தப் பேரவைக்கு சுட்டிக்காட்டி, கரூர் மாவட்ட மக்களுடைய குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு, அமராவதி ஆற்றில் கடைமடைப் பகுதி வரை தண்ணீர் சென்றடையும் வகையில் தண்ணீரைத் திறந்துவிட வேண்டுமென்பதை வலியுறுத்துகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைந்திருக்கிற தாந்தோணி நகராட்சிப் பகுதியில் புதிய காவிரிக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கி, குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க வேண்டும்.

இனாம் கரூர் நகராட்சிப் பகுதியில் அரசு மருத்துவமனை, தீயணைப்பு நிலையம் உருவாக்கவும், வெங்கமேடு காவல்

நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தாந்தோணி ஒன்றியம், ஆண்டான்கோயில் கீழ்பாகம் ஊராட்சிக்கு புதிய காவிரிக் குடிநீர்த் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

கரூர், பசுபதிபாளையம் வடக்குத் தெரு செல்லும் இரயில்வே குகை வழிப் பாதைத் திட்டத்தை விரைந்து முடிக்க வலியுறுத்துகிறேன். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பாதாளச் சாக்கடைத் திட்டத்தால் பழுதடைந்த கரூர் நகராட்சி, இனாம் கரூர் நகராட்சி சாலைகளைப் புதுப்பிக்க நிதியொதுக்கி, பணிகளை மேற்கொள்ள வேண்டும். கரூர் பகுதியில் அரசு மருத்துவக் கல்லூரி, அரசு பொறியியல் கல்லூரி அமைக்கப்பட வேண்டும். தாந்தோணி ஒன்றியம், ஆண்டான்கோயில் மேல்பாகம் ஊராட்சியில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க புதிய காவிரிக் குடிநீர்த் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

கரூர் நகராட்சி, கொளந்தா கவுண்டனூர் அடுக்கு மாடிக் குடியிருப்பு, நீலிமேடுப் பகுதியில் அமைந்துள்ள துப்புரவுப் பணியாளர்கள் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. அந்தக் குடியிருப்பு வீடுகளைப் புதிதாகக் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கரூர் ஊராட்சி ஒன்றியம், மண்மங்கலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், மண்மங்கலம் ஊராட்சிப் பகுதிக்கு மட்டும் விடுவிக்கப்பட்டு, ஆத்தூர் பூலாம்பாளையம் ஊராட்சிக்குத் தனியாகவும் புஞ்சை கடம்பங்குறிச்சி ஊராட்சிக்குப் புதிய காவிரிக் குடிநீர்த் திட்டம், ஆத்தூர் பகுதிகளுக்கு புதிய காவிரிக் குடிநீர்த் திட்டங்களையும் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், நிறையப் பேசிவிட்டீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

திரு. வே. செந்தில் பாலாஜி: அதேபோல, கரூர்-திருச்சி தேசிய நெடுஞ்சாலை என்பது மிகவும் பழுதடைந்து, போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லாமல், அந்தப் பணிகள் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதில் உடனடியாக விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கரூர்-நெரூர் மாநில நெடுஞ்சாலை, அதேபோல, வங்கல்-நெரூர் மாநில நெடுஞ்சாலை, விரைந்து

நடவடிக்கை எடுத்து அந்தத் தார்ச் சாலைகளைப் புதுப்பித்துத் தர வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். கரூர், வெங்கமேடு மின் வாரிய அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டும்.

கரூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் அம்மா ஆட்சியில் வழங்கப்பட்டது, இன்று மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. புதிய சி.டி. ஸ்கேன் வழங்கப்பட வேண்டும். அதேபோல, கரூர் மாவட்ட அரசு மருத்துவமனையில் நரம்பு மருத்துவர், தோல் நோய் மருத்துவர் இல்லாத நிலை இருக்கிறது. அந்த மருத்துவர்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெரூர் தென்பாகம், வடபாகம், சோமூர் ஊராட்சிகளுக்கு புதிய காவிரிக் குடிநீர்த் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். புலியூர், மேலப்பாளையம் பகுதியில் இருக்கின்ற, புலியூர் பேரூராட்சி, கோயப்பள்ளி பகுதியில் இருக்கின்ற அந்தப் பகுதி மக்களுக்குக் குடிநீர்ப் பற்றாக்குறை என்பது மிகவும் அதிகமாக இருக்கிறது. அந்தப் பகுதியில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். இன்று எடுத்துக்கொள்ளப்பட்ட மானியக் கோரிக்கைகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் நாளை பதிலுரை அளிப்பார்கள்.

பிற்பகல் 1-45

7. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை *(5-5-2010)* வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ 5-5-2010, புதன்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

6. அறிவிப்பு

முக்கியப் பிரமுகர்கள் இருக்கையிலிருந்து பேரவை நடவடிக்கைகளைக் கண்ணுறும் மணிப்பூர் சட்டப் பேரவைத் தலைவருக்கு வரவேற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மணிப்பூர் சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் சபம் புதிசந்திர சிங் அவர்கள், மணிப்பூர் பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. கே. ரஞ்சித் சிங் அவர்கள், மணிப்பூர் சட்டப் பேரவை உறுப்பினர்கள் டாக்டர் கே.எச். லோகென் சிங், திரு. ஈ. த்விஜமணி சிங் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் முக்கியப் பிரமுகர்களுக்கான இருக்கைகளில் அமர்ந்து பேரவை நடவடிக்கைகளைப் பார்வையிட வந்துள்ளார்கள். உறுப்பினர்கள் சார்பில் அவர்கள் அனைவரையும் வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

On behalf of the Members of our Assembly, I welcome Dr. Sapam Budhichandra Singh, Hon. Speaker of Manipur Legislative Assembly, Dr. K. Ranjit Singh, Hon. Minister for Public Works, Dr. K.H. Loken Singh, MLA, Thiru E. Dwijamani Singh, MLA and officials, who are now witnessing the proceedings of the House.

5. மானியக் கோரிக்கைகள், 2010—2011, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)
(ஆ) கோரிக்கை எண் 7—மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)
(இ) கோரிக்கை எண் 8—பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)
—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உதயம் சண்முகம், தொடர்ந்து பேசுங்கள்

திரு. உதயம் சண்முகம்: என் தொகுதிக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கோரிக்கைகள்.

ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்பு அறந்தாங்கி, மீமிசல் மற்றும் மணமேல்குடியில் கட்டப்பட்ட காவல் துறைக் கட்டடங்கள் பழமையாக இருக்கின்றன. அவற்றைப் புதிதாகக் கட்டித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

நடவடிக்கை எடுத்து அந்தத் தார்ச் சாலைகளைப் புதுப்பித்துத் தர வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். கரூர், வெங்கமேடு மின் வாரிய அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டும்.

கரூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் அம்மா ஆட்சியில் வழங்கப்பட்டது, இன்று மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. புதிய சி.டி. ஸ்கேன் வழங்கப்பட வேண்டும். அதேபோல, கரூர் மாவட்ட அரசு மருத்துவமனையில் நரம்பு மருத்துவர், தோல் நோய் மருத்துவர் இல்லாத நிலை இருக்கிறது. அந்த மருத்துவர்களை வழங்க வேண்டுமென்று தேட்டுக்கொள்கிறேன்.

நெரூர் தென்பாகம், வடபாகம், சோமூர் ஊராட்சிகளுக்கு புதிய காவிரிக் குடிநீர்த் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். புலியூர், மேலப்பாளையம் பகுதியில் இருக்கின்ற, புலியூர் பேரூராட்சி, கோயப்பள்ளி பகுதியில் இருக்கின்ற அந்தப் பகுதி மக்களுக்குக் குடிநீர்ப் பற்றாக்குறை என்பது மிகவும் அதிகமாக இருக்கிறது. அந்தப் பகுதியில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். இன்று எடுத்துக்கொள்ளப்பட்ட மானியக் கோரிக்கைகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் நாளை பதிலுரை அளிப்பார்கள்.

பிற்பகல் 1-45

7. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை *(5-5-2010)* வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ 5-5-2010, புதன்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 5-5-2010, புதன்கிழமை வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5-5-2010) புதன்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-45 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

76. யாதொரு வணிகர், கோயம்புத்தூரிலுள்ள திருவாளர்கள் ஈஷா பவுண்டேஷனுக்கு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருள்களை அதில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு விற்பனை செய்ததன்பேரில் செலுத்தத்தக்க வரியினை விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 2-2-2010 ஆம் நாளிட்ட 12 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

77. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள் (திரைப்படம்) துறையின் 20-5-2009 ஆம் நாளிட்ட 405 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 5-5-2010, புதன்கிழமை வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5-5-2010) புதன்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-45 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

76. யாதொரு வணிகர், கோயம்புத்தூரிலுள்ள திருவாளர்கள் ஈஷா பவுண்டேஷனுக்கு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருள்களை அதில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு விற்பனை செய்ததன்பேரில் செலுத்தத்தக்க வரியினை விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 2-2-2010 ஆம் நாளிட்ட 12 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

77. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள் (திரைப்படம்) துறையின் 20-5-2009 ஆம் நாளிட்ட 405 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/ 1955) 10(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2010 மே 4]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

125. மானியக் கோரிக்கை எண் 6-கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

126. கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

127. கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய "மக்கள் சாசனம்", 2010. (தமிழ்)

128. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் பற்றிய "மக்கள் சாசனம்", 2010. (தமிழ்)

129. மானியக் கோரிக்கை எண் 7-மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

130. மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

131. மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய "மக்கள் சாசனம்", 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

132. மானியக் கோரிக்கை எண் 8-பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

133. கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) மானியக் கோரிக்கை குறித்த விவாதத்தின்போது மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2010-2011. (தமிழ்)

134. வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) மானியக் கோரிக்கை குறித்த விவாதத்தின்போது மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2010-2011. (தமிழ்)

135. தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கை குறித்த விவாதத்தின்போது மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2010-2011.* (தமிழ், ஆங்கிலம்)

136. தொழில் துறை மானியக் கோரிக்கை குறித்த விவாதத்தின்போது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2010-2011.* (தமிழ்)

137. 2006-2007, 2007-2008, 2008-2009 மற்றும் *2009-2010* ஆகிய ஆண்டுகளில் சட்டப் பேரவையில் வெளியிடப்பட்ட தொழில் துறை தொடர்பான அறிவிப்புகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம். (தமிழ்)

138. 2006-2007 முதல் *2009-2010* வரையிலான ஆண்டுகளில் தொழில் துறையின் வியத்தகு சாதனைகள் குறித்த நூல். (தமிழ்)

139. தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் குறித்த நூல். (தமிழ்)

140. தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பவியல் துறையால் நிறைவேற்றப்பட்டு வரும் மின் ஆளுமைத் திட்டங்கள் குறித்த நூல். (தமிழ்)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

(135ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 6 — கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011

1. முன்னுரை

வளர்ந்துவரும் நாடுகளிலுள்ள, கிராமப்புற மற்றும் குறைவான வருமானமுள்ள சமூகப் பிரிவினரின் வாழ்வாதாரமானது, வேளாண்மை/கால்நடைகள்/கோழிகள் ஆகியவற்றினை அதிகப்படியான அடிப்படையாகக் கொண்டுள்ளது. கால்நடை பராமரிப்பு, கிராமப்புறங்களில் உள்ள நிலமற்ற, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, துணை வேலைவாய்ப்பினை அளித்து அதன் வாயிலாக வீட்டிற்குத் தேவையான துணை வருவாயினை அளித்து வருகிறது. நாட்டில், பெரும்பாலான கால்நடைகள் கிராமப்புறங்களிலேயே பராமரிக்கப்பட்டு வருகின்றன. கால்நடை பராமரிப்பு, மக்கள் கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு குடி பெயர்வதைக் குறைத்தல், மகளிர்க்கு அதிகாரம் கிடைத்தல் மற்றும் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்தல் ஆகிய பல சமுதாய மாற்றங்களில் பங்களிக்கிறது.

கால்நடை வளர்ப்பு, பொருளாதார நிச்சயத்தன்மையை பெரும்பாலான ஏழை மக்களுக்கு அளித்து வருகிறது. கால்நடைகள், சிறிய இருப்புகளில் பணம் தாங்கியிருப்பாகவும், பெரிய இருப்புகளில் முதலீடு கையிருப்பாகவும் உள்ளன. கால்நடைகள், பால், முட்டை, இறைச்சி மற்றும் ஊட்டமிக்க பொருட்கள் ஆகிய வடிவில் தரமான புரதச் சத்தினை மக்களுக்கு அளிக்கின்றன. கால்நடைகள் சார்ந்த உற்பத்திப் பொருட்கள், ஏழை எளியவர்களுக்கு, பல தலைமுறைகளாக வருவாயினை அளிப்பதில் சிறந்த வழியாகக் கருதப்பட்டு வந்துள்ளன. பெருகிவரும் மக்கட் தொகை, துரிதமான நகரமயமாக்கல், அதிகரித்து வரும் தனிநபர் வருமானம் மற்றும் மாறி வரும் வாழ்க்கைமுறை போன்றவற்றின் காரணமாக கால்நடை சார்ந்த பொருட்களின் தேவை அதிகரித்து வருகிறது. கால்நடைகள், வேளாண்மைக்கு இழுவைத் திறனையும்,

[2010 மே 4

இயற்கை உரத்தையும் அளிப்பதுடன், பல்வேறு தொழிற்சாலைகளுக்கு தோல், இரத்தம், எலும்பு, கால் குளம்பு, கொம்பு போன்ற மூலப் பொருட்களை அளித்து வருகின்றது.

மாநிலத்தில், ஒட்டுமொத்த கால்நடை மருத்துவப்பணிகள் மற்றும் நலன் பேணுதல் போன்ற உதவிகள் 1,374 கால்நடை நிலையங்கள், 444 தரம் உயர்த்தப்பட்ட கால்நடை கிளை நிலையங்கள் மற்றும் 1,385 கால்நடை கிளை நிலையங்கள் இணைப்பின் மூலம் அனைத்து கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது. கால்நடை மருத்துவ வசதிகள் சென்றடையாத தொலைவில் உள்ள கிராமங்களில் பராமரிக்கப்பட்டு வரும் கால்நடைகளுக்கு 55 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் மூலமாக மருத்துவ சேவைகள் கிடைக்கின்றன. கால்நடைகளுக்கு ஏற்படும் நோயினை ஆய்வு செய்யும் பணிகளை மேற்கொள்ள 20 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மாவட்டங்களிலும், ஒரு மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் மாநிலத்திலும் மற்றும் கோழிகள் அதிகமாக வளர்க்கப்படும் மாவட்டங்களில் கோழி நோய்களைக் கண்டறியும் 2 ஆய்வுக்கூடங்களும் செயல்பட்டு வருகின்றன.

மாநிலத்தில், நாட்டின மாடுகள் மற்றும் எருமையினங்களின் தரத்தினை, உயர்ரக மற்றும் கலப்பின காளைகளின் விந்தினைக் கொண்டு தரம் உயர்த்த 3,258 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களில் கருவூட்டல் மேற்கொள்ளப்படுகிறது. இச்சேவையை திறமையுடன் நிறைவேற்றியதன் பலனாக, 1997 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, 21.41 இலட்சமாக இருந்த கலப்பின கால்நடைகளில், குறிப்பிடத்தக்க வளர்ச்சியாக, 2004 ஆம் ஆண்டிற்கான கால்நடை கணக்கெடுப்பில் 50.99 இலட்சமாக கலப்பின கால்நடைகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாகக் கண்டறியப்பட்டது.

கால்நடை மருத்துவப் பணிகளின் தரத்தினை வலுப்படுத்தும் நோக்கோடு காலியாக உள்ள பணியிடங்கள் அனைத்தையும் நிரப்ப, தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 2009-10 ஆம் ஆண்டில், 412 இளநிலை கால்நடை உதவி மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டு, மேலும் 57 கால்நடை உதவி மருத்துவர்கள் பணியமர்த்தப்படவும் உள்ளனர். இதன் மூலம், பணியில் உள்ள

2010 மே 4]

கால்நடை உதவி மருத்துவர்களைக் கொண்டு, சிறப்பான மருத்துவ சேவையை கால்நடைகளுக்கும், விவசாயிகளுக்கும் அளிக்க முடியும்.

கால்நடை பராமரிப்புத் துறை மேற்கொண்ட ஒருங்கிணைந்த முயற்சியின் காரணமாக, பால் உற்பத்தியின் அளவானது, 2006-07-ல் 55.60 இலட்சம் டன்னாக இருந்தது, 2008-09-ல் 56.73 இலட்சம் டன்னாக 2 சதவிகிதம் உயர்ந்துள்ளது. இதே கால கட்டத்தில், முட்டை உற்பத்தியின் அளவானது, 8041.521 மில்லியன் எண்ணிக்கையிலிருந்து 8809.774 மில்லியன் எண்ணிக்கையாக 10 சதவிகிதம் உயர்ந்துள்ளது. பதிவு செய்யப்பட்ட இறைச்சிக் கூடங்களில் வெட்டப்பட்ட இறைச்சி உற்பத்தியானது, 2006-07ல் 220 மில்லியன் கிலோவிலிருந்து 2008-09ல் 419 மில்லியன் கிலோவாக 90 சதவிகிதம் உயர்ந்துள்ளது. 2008-09 ஆம் ஆண்டில், தனி நபருக்கு ஒரு நாளைக்கு கிடைக்கக்கூடிய பாலின் அளவானது 235 கிராமாகவும், முட்டை ஒரு ஆண்டிற்கு 133 எண்ணிக்கையாகவும் உள்ளது.

வளர்ந்து வரும் நாடுகளின் வேளாண்மை வளர்ச்சிக்கு, கால்நடை மற்றும் கோழியினங்களின் முன்னேற்றம் முக்கியத்துவமானதாகும். வேளாண்மைத் துறையின் பங்கு மொத்த உற்பத்தி மதிப்பில் குறைந்திருந்த போதிலும், கால்நடை பராமரிப்பு மற்றும் கோழிகளின் உற்பத்திப் பங்கானது அதிகரித்து வருகிறது. 2008-09 ஆம் ஆண்டில் கால்நடைத் துறை மூலம் உற்பத்தி மதிப்பு ரூ.14,489.98 கோடி ஆகும். கால்நடை பராமரிப்புத் துறையின் பங்கு 2.88 சதவிகிதமாக, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பிலும் மற்றும் 26.89 சதவிகிதம் வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறையிலும் உள்ளது. தமிழ்நாட்டிலிருந்து தோல் மற்றும் தோல் பொருட்களின் ஏற்றுமதியின் மொத்த மதிப்பு ரூ.5,827.51 கோடி ஆகும். தமிழ்நாடு, நாட்டின் மொத்த பால் உற்பத்தியில் 5.23 சதவிகிதத்தையும், மொத்த முட்டை உற்பத்தியில் 15.83 சதவிகிதத்தையும், பால் உற்பத்தியில் 9-வது இடத்தையும் மற்றும் முட்டை உற்பத்தியில் 2-வது இடத்தையும் கொண்டுள்ளது.

இத்துறை மேற்கொண்ட பெரு முயற்சியின் விளைவாக, மாநிலத்தில் பால், இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தி அதிகரித்ததால் கிராமப்புற விவசாயிகள் கூடுதல் வருவாய் பெற்று கிராமப்புற பொருளாதார வளர்ச்சி முன்னேற்றம் அடைந்துள்ளது.

[2010 மே 4

இத்துறையின் குறிக்கோள்கள்

- கால்நடை மற்றும் கோழியினங்களின் உற்பத்தி ஆற்றலைப் பெருக்கி அதன்மூலம் பால், முட்டை மற்றும் இறைச்சி ஆகியவைகளின் உற்பத்தியைப் பெருக்குதல்.
- நவீனகால மருத்துவ உதவிகள் மற்றும் உடல்நலம் பேணுதலை தேவையான காலத்தில் கால்நடைகளுக்கும், கோழியினங்களுக்கும் அளித்தல்.
- கிராமப்புற ஏழைகளின் வாழ்வாதாரங்களை உயர்த்தும் நோக்குடன், மைய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுதல்.
- தற்கால நடைமுறையில் உள்ள தகவல்கள் மற்றும் பயிற்சியினை அடிப்படை மற்றும் சமீபத்திய கால்நடைப் பராமரிப்பு முறைகளை அளித்தல்.
- கால்நடைகளின் மூலமாக பரவும் நோய்களிலிருந்து மனித இனத்தை பாதுகாத்தல்.

பொது நிர்வாகம்:

விவசாயிகளுக்கு கால்நடை மருத்துவ உதவி அளிக்கும் நோக்குடன் இத்துறை 1892-ல் பொது மக்களின் கால்நடைத் துறையாக தொடங்கப்பட்டது. தொடர்ந்து கால்நடை நோய்களுக்கான சிகிச்சை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முக்கிய நோக்குடன் இத்துறை 1948-ல் கால்நடை பராமரிப்புத் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதிலிருந்து, இத்துறை, பல்வேறு நடவடிக்கைகளில் அதன் செயல்பாடுகளை விரிவுபடுத்தியுள்ளது.

கால்நடை பராமரிப்புத் துறையானது, கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. ஆணையரகத்தில் 3 கூடுதல் இயக்குநர்கள், ஒரு இணை இயக்குநர் மற்றும் 5 உதவி இயக்குநர்கள், மாவட்டங்களில் 26 மண்டல இணை இயக்குநர்கள் ஆகியோர் ஆணையர் அவர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றனர். மாநிலம், 26 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒரு மண்டல இணை இயக்குநரின் தலைமையிலும்

2010 மே 4]

மற்றும் 65 நிர்வாகக் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு உதவி இயக்குநரின் தலைமையின் கீழும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

கூடுதல் இயக்குநரின் தகுதியில் உள்ள ஒரு இயக்குநரின் தலைமையின்கீழ் இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், கால்நடை மற்றும் கோழியினங்களுக்கு பலவகை தடுப்பு மருந்துகள் மற்றும் நோய் கண்டறியும் சாதனங்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. சென்னையில் செயல்பட்டு வரும் ஒரு மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம், நோய் பற்றி ஆய்வு செய்யவும், அதனை உறுதிப்படுத்துவதுடன், கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் மேலும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நோய் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைப் பணிகளில் ஈடுபட்டுள்ள உதவி இயக்குநர் தலைமையின்கீழ் இயங்கி வரும் 20 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளின் பணிகளை ஒருங்கிணைத்தும் வருகிறது. மேலும், இத்துறை, 8 கால்நடைப் பண்ணைகள், 3 ஆட்டுப் பண்ணைகள், ஒரு கோழிப்பண்ணை, ஒரு தீவனப் பண்ணை, 20 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்திப் பிரிவுகள் மற்றும் கோழி நோய் கண்டறியும் 2 ஆய்வுக் கூடங்களையும் நிர்வகித்து வருகின்றது.

2009-10ஆம் ஆண்டில், கீழ்க்கண்டுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு துறையின் நிர்வாகத் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது:

1. கால்நடை பராமரிப்புத் துறையின் நடைமுறைகளை வலுப்படுத்த தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 57 கால்நடை உதவி மருத்துவர்கள் விரைவில் பணியமர்த்தப்படுவார்கள். 444 நிலை 1 கால்நடை கிளை நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருத்துவ கிளை நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக தேர்வு செய்யப்பட்ட 412 இளநிலை கால்நடை உதவி மருத்துவர்கள் தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருத்துவக் கிளை நிலையங்களில் புதிதாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 4

2. அரசு, 200 நபர்களை கால்நடை ஆய்வாளர் பயிற்சிக்கு தேர்வு செய்து ஓசூரில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் பயிற்சி அளிக்க அனுமதியளித்துள்ளது. 221 கால்நடை ஆய்வாளர் நிலை-2 பணியாளர்கள், கால்நடை ஆய்வாளர் நிலை-1க்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

3. 111 தினக்கூலி பணியாளர்கள் முறையாக கால்நடை பராமரிப்பு உதவியாளர்களாக பணி அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

4. 5 கூடுதல் இயக்குநர்கள், 12 இணை இயக்குநர்கள், 29 துணை இயக்குநர்கள், 1 துணை இயக்குநர் (பணியாளர்), 4 நிர்வாக அலுவலர்கள், 1 முதுநிலை ஆராய்ச்சி அலுவலர் மற்றும் 1 ஆராய்ச்சி அலுவலர் ஆக மொத்தம் 53 அலுவலர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. இவையன்றி, 59 அமைச்சுப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டது.

5. சிறப்பான நிர்வாகத்திற்காக, திருப்பூர் மாவட்டத்திற்கென ஒரு மண்டல இணை இயக்குநர் அலுவலகம் 14-09-2009 அன்று துவக்கப்பட்டது.

6. மொத்தம் 138 அலுவலர்களுக்கு ஆற்றலை மேம்படுத்த பலவகைப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி பலதரப்பட்ட நிறுவனங்களில் அளிக்கப்பட்டது.

7. விவசாயிகளிடையே பசுந்தீவன வளர்ப்பில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த, மாதிரி தீவனப்பண்ணைகள், கால்நடை நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

கால்நடை மருத்துவப் பணிகள்

அதிகபட்ச உற்பத்தியை அடைவதற்குத் தேவையான ஆரோக்கியமான கால்நடைகளை பராமரிப்பதற்கு, கால்நடைகளுக்குத் தேவையான மருத்துவ உதவி மற்றும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் போன்றவை மிகவும் இன்றியமையாதவை ஆகும். கால்நடை பராமரிப்புத் துறையின் நோய்த் தடுப்பு மற்றும்

2010 மே 4]

சுகாதார அபிவிருத்தி போன்றவை கால்நடை பன்முக மருத்துவமனைகள், கால்நடை மருத்துவமனைகள், கால்நடை மருந்தகங்கள், நடமாடும் கால்நடை நிலையங்கள், தரமுயர்த்தப்பட்ட கிளை நிலையங்கள், கிளை நிலையங்கள் போன்றவற்றின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அ) கால்நடை நிலையங்கள்

1959-60 ஆம் ஆண்டில் 120 கால்நடை நிலையங்கள் என்ற மிக சிறிய அளவில் தொடங்கி இன்று 2009-10ல் 1,374 கால்நடை நிலையங்களாக கால்நடை நிலையங்கள் விரிவடைந்துள்ளன. தற்போது, கால்நடை நிலையங்கள், உதவி இயக்குநர்களைக் கொண்டு செயல்படும் 6 பன்முக மருத்துவமனைகள், பிரதம மருத்துவர்களை (உதவி இயக்குநர் நிலையில்) கொண்டு செயல்படும் 22 பிரதம மருத்துவமனைகள், கால்நடை மருத்துவர்களை (உதவி இயக்குநர் நிலையில்) கொண்டு செயல்படும் 139 கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை உதவி மருத்துவர்களைக் கொண்டு செயல்படும் 1,207 கால்நடை மருந்தகங்கள் வாயிலாக பரவலான பன்முக கால்நடைப் பணிகளை செய்து வருகின்றன.

சென்னை (சைதாப்பேட்டை), மதுரை (தல்லாகுளம்), கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 6 மாநகராட்சிகளிலும் 6 பன்முக மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த பன்முக மருத்துவமனைகளில் ஈனியல் சிறப்பு மருத்துவ சிகிச்சைகள், அறுவை சிகிச்சை, மருத்துவம், நுண் கதிர் பிரிவு மற்றும் உள்நோயாளி பிரிவு போன்ற வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. இந்த 6 நிலையங்களுடன் மேலும் பொள்ளாச்சி, வேலூர், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய நிலையங்களிலும் நுண்கதிர் வசதி உள்ளது. இந்நிலையங்களில், வழக்கமான மருத்துவ சிகிச்சையல்லாமல் உள்ளூரிலுள்ள பசுவினம் மற்றும் எருமையினம் போன்றவற்றை மேம்படுத்த செயற்கைமுறை கருவூட்டல் பணிகளுடன், பொதுவான மருத்துவ உதவி, தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்கப் பணிகளும் செய்யப்பட்டு வருகின்றன. மலட்டுத்தன்மை உள்ள கால்நடைகளுக்கான மருத்துவம் இந்நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2010 மே 4

கால்நடை மருத்துவப் பணியை விரிவாக்கம் செய்யும் நோக்கத்தில் 2009-10ஆம் ஆண்டில், 444 கால்நடை நிலையங்கள், இளநிலை கால்நடை உதவி மருத்துவர்களைக் கொண்டு செயல்படும் தரம் உயர்த்தப்பட்ட கால்நடை கிளை நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

ஆ. நடமாடும் கால்நடை நிலையங்கள்

மாநிலம் முழுவதும் குக்கிராமங்களில் வசிக்கும் வேளாண் குடிமக்களால் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு தடுப்பூசி, குடற்புழு நீக்கம், இனவிருத்திக்காக செயற்கைமுறை கருவூட்டல் போன்ற மருத்துவ வசதிகள் பெற கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடியாததால், கால்நடை மருத்துவப் பணிகளை வழங்க கால்நடை உதவி மருத்துவர்களைக் கொண்ட 55 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் நிலையான கால அட்டவணைப்படி சென்று செயல்பட்டு வருகின்றன. வேளாண்குடி மக்களின் இருப்பிடத்திலேயே மருத்துவ சேவை கிடைப்பதால் இப்பிரிவுகளின் சேவைகள் பொது மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. 2009-10ஆம் ஆண்டில், மேற்கண்ட பிரிவுகளின் மூலம் 3.79 இலட்சம் கால்நடைகளுக்கு மருத்துவம் செய்யப்பட்டுள்ளது.

இ. கிளை நிலையங்கள்

இந்நிலையங்களில், கால்நடை ஆய்வாளர்களைக் கொண்டு நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு முதலுதவி, பசு மற்றும் எருமையினங்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல் செய்தல் போன்ற பணிகள் செய்யப்படுகின்றன. இக்கிளை நிலையங்கள் உள்ள பகுதிகளில் சினை பரிசோதனை, வருடாந்திர கால்நடை மற்றும் கோழியின கணக்கெடுப்பு போன்ற பணிகளையும் இவர்கள் மேற்கொள்கின்றனர். கால்நடை உதவி மருத்துவர்களின் தொழில் நுட்ப அறிவுரையோடு, தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்கம் போன்ற பணிகளுக்கும் இவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். தற்போது மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் மொத்தம் 1,385 கிளை நிலையங்களும், 444 தரம் உயர்த்தப்பட்ட கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

2010 மே 4]

2009-10 ஆம் ஆண்டில் மேற்கண்ட நிலையங்களில் நடந்த பணிகள் (கால்நடை இன வாரியாக) பின்வருமாறு:

(இலட்சங்களில்)

இனம்	சிகிச்சை அளிக்கப் பட்டவை	ஆண்மை நீக்கம் செய்யப் பட்டவை	தடுப்பூசி போடப் பட்டவை	குடற்புழு நீக்கம் செய்யப் பட்டவை	செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட் டவை
பசுவினம் மற்றும் எருமையினம்	101.02	2.24	127.64	39.08	38.05
செம்மறியாடு மற்றும் வெள்ளாடு	81.27	6.00	37.35	202.91	–
நாய்	6.29	0.11	1.60	2.56	–
கோழி	11.03	–	303.21	4.49	–
மற்றவை	2.91	0.07	–	2.02	–
மொத்தம்	202.52	7.62	469.80	251.06	38.05

தீவனம் மற்றும் பசுந்தீவனம்:

தினசரி ஆரோக்கியமான வாழ்க்கைக்கு ஊட்டச்சத்து முக்கிய பங்காற்றி வருகிறது. இது கால்நடைகளுக்கும் பொருந்தும். கால்நடைகளின் இனவிருத்தி மற்றும் பால் உற்பத்தி ஆகியவற்றின் திறன், ஊட்டச்சத்து மிக்க தீவனத்துடன் நேரடியாக தொடர்புடைய ஒன்றாக இருப்பதால், ஊட்டச்சத்து மிக்க தீவனம் மிக இன்றியமையாத ஒன்றாகும்.

பண்ணை கால்நடைகளின் உற்பத்தியை அதிகரிப்பதில் பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. பண்ணை கால்நடை பராமரிப்பு பொருளாதாரத்தில் இலாபகரமாக நடத்துவது என்பது உலர் மற்றும் பசுந்தீவனம் கிடைப்பதைப் பொறுத்தே உள்ளது, கால்நடைப் பண்ணை பராமரிப்பு செலவில், 65-70 சதவிகித செலவு தீவனத்திற்கு ஆவதால், கால்நடைப் பண்ணை பராமரிப்பை பொருளாதார வகையில் இலாபகரமாக நடத்துவதில் தீவனம் மற்றும் தீவனப் பயிர் செலவு ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன. சரிவிகித

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 4

உணவை கால்நடைகளுக்கு அளிப்பதன் மூலம் மட்டுமே, பால் உற்பத்தியை 30 சதவிகிதம் அதிகரிக்கலாம். கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவனங்கள், முக்கியமாக மேய்ச்சல் நிலங்கள், புல்தரைகள், தீவனப்புல்கள் மற்றும் அறுவடை செய்யப்பட்ட நிலங்கள், களைகள், வரப்பிலுள்ள புற்கள், மரஇலைகள் மற்றும் கலப்பு தீவனப் பயிர்கள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கின்றன. ஊட்டச் சத்து மிகவும் குறைவாக உள்ள அறுவடை கழிவுகளான வைக்கோல் மற்றும் சோளத்தட்டை போன்றவை கால்நடைகளுக்கு பெரும்பான்மையான உணவாக அமைகின்றன. மாநிலத்தில் மொத்தம் 1.10 இலட்சம் ஹெக்டேர் நிலங்கள் மேய்ச்சல் நிலங்களாக உள்ளன.

பசுந்தீவனம், குறிப்பிட்ட பருவ காலங்களில் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே கிடைக்கின்றது. மேலும், வேகமான நகரமயமாக்கலினாலும், மேய்ச்சல் நிலங்கள் வெகுவாக குறைந்துவிட்டன. உணவு தானியங்கள், பயறுவகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் போன்றவற்றை அதிக உற்பத்தி செய்வதற்கான நிலங்களின் தேவை அதிகரிப்பதால், பசுந்தீவன தேவைக்கும் உற்பத்திக்குமான இடைவெளி மிகவும் அதிகரித்து விட்டது. தீவன அபிவிருத்தியை உயர்த்தும் நோக்குடன் அரசு மேய்ச்சல் நிலத்தை வேறு எந்த வகையான பயன்பாட்டிற்கும் மாற்றக் கூடாது என்றும் அவ்வாறு மாற்ற வேண்டுமெனில் அதே மாவட்டத்தில் மாற்றப்படும் மேய்ச்சல் நிலத்திற்கு சமமான பரப்பளவுள்ள வேறு நிலத்தை மேய்ச்சல் நிலமாக மேம்படுத்தி ஒதுக்கப்பட்டாலன்றி மாற்றக்கூடாது என்றும் ஆணை பிறப்பித்துள்ளது. பதினோராவது ஐந்தாண்டு திட்டக் காலத்திற்கு நமது மாநிலத்திற்கு தீவன அபிவிருத்திக்காக ரூ.1014.575 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின் அடிப்படையில், 2009-10-க்கான பசுந்தீவனத் தேவை 20.10 சதவிகிதம் பற்றாக்குறையில் உள்ளது. உலர் தீவனத்தைப் பொறுத்தவரை, மாநிலம் தன்னிறைவு பெற்றுள்ளது. மாநிலத்தில், 2008-09 ஆம் ஆண்டிற்கு மொத்த உலர் தீவனத்தின் தேவை 166.80 இலட்சம் டன் ஆக உள்ள நிலையில், 175.609 இலட்சம் டன் உலர் தீவனம் கிடைக்கிறது. பசுந்தீவனத்தைப் பொறுத்தவரை, 399.900 இலட்சம் டன்

2010 மே 4]

உற்பத்தியும், 100.620 இலட்சம் டன் பற்றாக்குறையும் உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, கால்நடை பராமரிப்புத் துறை பல்வேறு திட்டங்களின் மூலம் பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்கி வருகிறது.

❖ நிலமற்ற ஏழை விவசாயிகள் கால்நடை பராமரிப்பில் ஈடுபடுவதற்கு உதவும் வகையில், சுய உதவிக் குழுக்களின் உதவியோடு சமுதாய தீவனம் மற்றும் பசுந்தீவன வங்கிகளை நிறுவுவதற்கு ஊக்குவிக்கப்படுகிறது.

❖ பசுந்தீவன விதைப்பைகள் இலவசமாக வினியோகிக்கப்படுகின்றன. 2009-10ஆம் ஆண்டு, காரிப் மற்றும் ராபி பருவக்காலங்களில் முறையே 21,494 மற்றும் 6,125 விதைப்பைகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

❖ பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் இத்துறை தீவன புல் விதை, புல்கரணை மற்றும் மரக்கன்று போன்றவற்றை உற்பத்தி செய்ய படப்பையிலும் மற்றும் ஓசூர், செட்டிநாடு, அபிசேகப்பட்டி, ஈச்சங்கோட்டை, சின்னசேலம் மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களிலும் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் விதைப் பண்ணைகளை ஏற்படுத்தியுள்ளது.

❖ நீண்டகால பசுந்தீவன வகையைச் சார்ந்ததும், அதிக மகசூல் அளிக்கக்கூடியதுமான நேப்பியர், உயர்ரக கோ3, கோ4, பாராபுல், கொளுக்கட்டை புல், காங்கோ சிக்னல் புல் மற்றும் கினியா புல் வகை ஆகியவற்றைப் பயிரிடவும் மற்றும் காராமணி, ஸ்டைலோ சாந்தஸ், கோ3 புல் வகைகளை, தென்னை மற்றும் மாந்தோப்புகளிடையே ஊடுபயிராக விளைவிக்கவும் ஊக்குவிக்கப்படுகிறது.

❖ மாநிலத்தில் உள்ள கால்நடை நிலையங்களில் பயிரிடுவதற்காக பசுந்தீவன விதைப்பைகள் இலவசமாக வினியோகிக்கப்படுகின்றன, தீவனப் புல் மற்றும் மரக்கன்றுகள் பயிரிடுதலும் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ❖ ஆர்வமுள்ள பண்ணையாளர்களுக்கு துறையிலுள்ள பண்ணைகள் மூலம் புல் கரணைகள் வழங்கப்பட்டு பசுந்தீவன உற்பத்தி பெருக்கப்படுகிறது. 2009-10ஆம் ஆண்டில், 190.960 இலட்சம் புல்கரணைகளும், 32.50 கிலோ தீவன விதைகளும், 0.083 இலட்சம் மரக்கன்றுகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

நீர்வள நிலவளத் திட்டம்:

2007-08 மற்றும் 2008-09 ஆண்டுகளில் பசுந்தீவனப் பற்றாக்குறையைப் போக்கும் நோக்கோடு 2,668 ஹெக்டேர் நிலப்பரப்பில் தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டத்தின் வாயிலாக பசுந்தீவன புல் பயிரிடப்பட்டு தீவன அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. 2009-10ஆம் ஆண்டில், 2,538 ஹெக்டேர் தனியார் நிலங்கள் புல்கரணைக்காக மேம்படுத்தப்பட்டன.

தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்:

பசுந்தீவன அபிவிருத்திப் பணிகளுக்காக, 6 மாவட்ட கால்நடைப் பண்ணைகளில், பசுந்தீவனம் நீர்பாசன வசதி உள்ள இடங்களில் 1,091 ஏக்கரிலும், தீவன விதைகள் மற்றும் தீவன மரக்கன்றுகள் 252 ஏக்கரிலும் மற்றும் பசும்புல் மேய்ச்சல் நில மேம்பாடு 1,366 ஏக்கரிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மொத்தம் 59,030 மெ.டன் பசுந்தீவனம் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவையன்றி, விவசாயிகள் தங்கள் சொந்த நிலத்தில் பசுந்தீவனம் பயிரிடுவதற்கு 2,470 இலட்சம் புல்கரணைகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், விவசாயிகளின் 1,540 ஏக்கர் நிலப்பரப்பில் பசுந்தீவனம் பயிரிடப்பட்டுள்ளது. இந்த 1,540 ஏக்கர் மூலம் 1,84,800 மெ.டன் பசுந்தீவனப் புல் உற்பத்தி செய்யப்படும். செயல்விளக்கத்தின் மூலமாகவும் ஊக்குவித்தல் மூலமாகவும், பசுந்தீவன உற்பத்தியில் இத்திட்டத்தின் வாயிலாக நல்ல பலன் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பசுந்தீவனம் வீணாவதைத் தடுக்க புல்வெட்டும் கருவிகள் அளித்தல்:

- ➢ விலைமதிப்புமிக்க பசுந்தீவனங்களை கால்நடைகளுக்கு வழங்கும்போது கால்நடைகள் அவற்றை வீணாக்குவது வழக்கம். மேலும், பசுந்தீவனங்களை சிறிய துண்டுகளாக

2010 மே 4]

நறுக்கி கால்நடைகளுக்கு வழங்கும்போது (பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனங்களில்) பயன்பாடு அதிகரிக்கப்படுவதுடன், கால்நடைகளுக்கு தீவனத்தை உற்பத்திப் பொருட்களாக மாற்றும் திறனும் அதிகரிக்கிறது.

➢ துறையின் 6 பண்ணைகளில் புல்வெட்டும் கருவிகள் வழங்கப்பட்டு பசுந்தீவனம் வீணாவது குறைக்கப்படுகிறது.

கரும்புத் தோகைகளுக்கான சைலோ:

❖ கரும்பு அறுவடைக்குப் பின்பு கரும்புத் தோகைகள் வயல்வெளிகளிலேயே எரிக்கப்பட்டுவிடுவதால் ஏராளமான கரும்புத் தோகைகள் வீணாக்கப்படுகின்றன.

❖ இந்த பசுமைப் பொருளை (Bio Mass) கால்நடைகளுக்கு தீவனமாக வழங்கலாம். கோடைக்காலங்களில் அறுவடைக்கு பின் கிடைக்கும் கரும்புத் தோகைகளை தீவனங்களுடன் சேர்த்து வழங்குவதில் கரும்பு விவசாயிகள் ஊக்கப்படுத்தப்படுவார்கள். 7 x 7 x 4 கன அடி அளவுள்ள சைலோ தொட்டிகளில் கரும்புத் தோகைகளை சிறு துண்டுகளாக நறுக்கிப் போட்டு அதனுடன் யூரியா மற்றும் மொலாசஸ் போன்றவற்றை சேர்த்து ஊறவைப்பதன் மூலம் ஊட்டச்சத்து அதிகரிக்கப்பட்ட மற்றும் எளிதில் செரிக்கக்கூடிய நல்ல தீவனத்தைப் பெறலாம்.

❖ கரும்பு அதிகம் பயிரிடக்கூடிய கோயம்புத்தூர், கடலூர், தர்மபுரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், சேலம், தஞ்சாவூர், திருவண்ணாமலை, திருவாரூர் மற்றும் வேலூர் ஆகிய 12 மாவட்டங்களில் மொத்தம் 221 சைலோ குழிகளை நிறுவும் பணியில் இத்துறை ஈடுபட்டுள்ளது.


கால்நடைப் பண்ணைகள்:

துறையிலுள்ள 11 கால்நடைப் பண்ணைகளில் 3 பண்ணைகள் ஆட்டுப் பண்ணைகள் ஆகும். இவையன்றி, தீவனப் புல் பண்ணை ஒன்றும், கோழிகளின் இனப்பெருக்கத்திற்காக என்றும் ஒரு பண்ணை செயல்பட்டு வருகிறது. குறிப்பிட்ட இனக் கால்நடைகளை தேர்ந்தெடுக்கப்பட்ட விஞ்ஞான முறைப்படி அபிவிருத்தி செய்வதற்கும், பராமரிப்பதற்கும் ஆன மாதிரிப் பண்ணையாக அரசுப் பண்ணைகள் செயல்படுவதுடன், அவை

[2010 மே 4

விவசாயிகளுக்கான பயிற்சி மையமாகவும் செயல்படுகின்றன. மேலும், அவை தரமான கால்நடைகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான மையமாகவும் உள்ளன.

கால்நடைப் பண்ணைகளில் பராமரிக்கப்படும் இனங்கள்



புதிய பண்ணைக் கொள்கை:

கால்நடை பராமரிப்புத் துறையிலுள்ள 11 மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் கால்நடை இனங்களை பராமரிப்பதற்காகவும், 11 பண்ணைகளின் பரந்த நிலப்பரப்பில் நில அபிவிருத்தி மற்றும் தீவன அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்காகவும், தமிழ்நாடு

2010 மே 4]

அரசு புதிய கால்நடைக் கொள்கையை உருவாக்கியுள்ளது. இதற்காக, கால்நடை இனங்களை அவற்றின் இருப்பிடங்களிலேயே பெருக்குவதற்காக அதன் அமைவிடத்திற்கேற்றவாறு மரபு கலப்பைத் தவிர்க்கவும், மரபணு தூய்மையைப் பராமரிக்கவும் ஒன்று அல்லது அதிகபட்சமாக இரண்டு இனங்கள் மட்டுமே பராமரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்காக, உள்ளூர் மற்றும் பெருகிவரும் கால்நடை சந்தைகளின் தேவையினை கருத்தில்கொண்டு, மாநில கால்நடைப் பண்ணைகள் மூலமாக விவசாயிகளுக்கு இனவிருத்திக்காக காளைகளை இயன்ற அளவுக்கு உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். இதுதவிர, எல்லா பண்ணைகளிலும் காலியாக உள்ள இடத்தைப் பயன்படுத்தி நில அபிவிருத்தி செய்து தொழில்நுட்ப செயல்விளக்கத்திற்காகவும், விவசாயிகள் அதிக லாபம் ஈட்டுவதற்காக தங்களது நிலங்களில் மாற்றுப் பயிர் செய்ய அறிவுறுத்தவும், மாநிலத்தில் விநியோகிக்கப்படும் தீவனத்தின் தரத்தையும் அளவையும் அதிகரிக்கும் பொருட்டு, தேவையான புல்கரணைகள் மற்றும் விதைகளை விநியோகம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய பண்ணைக் கொள்கையின் அடிப்படையில், துறையின் பண்ணைகளில் பராமரிக்கப்படும் கால்நடை இனங்களின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	பண்ணையின் பெயர்	பராமரிக்க திட்டமிடப்பட்டுள்ள இனங்கள்
1	அயலின கால்நடை பெருக்குப்பண்ணை, ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)	மாட்டினம் – ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், உம்பளாச்சேரி மற்றும் முர்ரா காளை.
2	மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்)	மாட்டினம் – ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம், சிகப்பு சிந்தி, காங்கேயம். செம்மறியாடு – மேச்சேரி, திருச்சி, கருப்பு வெள்ளாடு – கொடியாடு, தெள்ளச்சேரி பன்றியினம் – லார்ஜ் ஒயிட் யார்க்ஷயர் கோழியினம் – கிரிராஜா, அசில், வெள்ளை லெக்கார்ன், வான்கோழி குதிரையினம் – கத்தியவார், தூய இனம்

[2010 மே 4

வ. எண்	பண்ணையின் பெயர்	பராமரிக்க திட்டமிடப்பட்டுள்ள இனங்கள்
3	மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிஷேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)	மாட்டினம் – ஜெர்சி கலப்பினம், சாகிவால் செம்மறியாடு – கீழக்கரிசல் பன்றியினம் – லார்ஜ் ஒய்ட் யார்க்ஷயர், லேண்ட்ரேஸ், லேண்ட்ரேஸ் கலப்பினம் கோழியினம் – நந்தனம் கலர் பிராய்லர்
4	மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்)	மாட்டினம் – ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம்
5	மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்)	மாட்டினம் – ஜெர்சி கலப்பினம் செம்மறியாடு– இராமநாதபுரம் வெள்ளை வெள்ளாடு – ஜமுனாபாரி பன்றியினம் – லேண்ட்ரேஸ்
6	மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு (தஞ்சாவூர் மாவட்டம்)	எருமையினம் – முர்ரா பன்றியினம் – லார்ஜ் ஒய்ட் யார்க்ஷயர்
7	மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்)	மாட்டினம் – ஜெர்சி கலப்பினம், தர்பார்க்கர் செம்மறியாடு – இராமநாதபுரம் வெள்ளை வெள்ளாடு – ஜமுனாபாரி பன்றியினம் – லார்ஜ் ஒய்ட் யார்க்ஷயர்
8	கால்நடைப் பண்ணை, கொருக்கை (திருவாரூர் மாவட்டம்)	மாட்டினம் – உம்பளாச்சேரி
9	ஆட்டுப்பண்ணை, சின்னசேலம் (விழுப்புரம் மாவட்டம்)	செம்மறியாடு – மேச்சேரி, சென்னை சிகப்பு வெள்ளாடு – தலைச்சேரி, சேலம் கருப்பு
10	ஆட்டுப் பண்ணை, முகுந்தராயபுரம் (வேலூர் மாவட்டம்)	செம்மறியாடு – சென்னை சிகப்பு
11	ஆட்டுப் பண்ணை, சாத்தூர் (விருதுநகர் மாவட்டம்)	செம்மறியாடு – வேம்பூர் வெள்ளாடு – கன்னி
12	கோழிப் பண்ணை, காட்டுப்பாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்)	கோழியினம் – நந்தனம் கலர் கோழி / காரி நிர்பீக், நந்தனம் வான்கோழி–1

2010 மே 4]

புதிய இனப்பெருக்கக் கொள்கை

கால்நடைகளின் பால் உற்பத்தியை அதிகரிக்கவும், பால் உற்பத்திப் பிரிவில் சீரான வளர்ச்சியை அடையவும், துறை புதிய இனப்பெருக்கக் கொள்கையை வகுத்துள்ளது.

❖ தேர்ந்தெடுத்த முறையில் இனப்பெருக்கம் செய்யும் வகையில், காங்கேயம் இன மாடுகளை ஈரோடு, கோயம்புத்தூர், கரூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலும், உம்பளாச்சேரி இன மாடுகளை நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களிலும் மற்றும் புலிக்குளம், பர்கூர், ஆலம்பாடி மற்றும் மலைமாடுகளை அவற்றின் இனப்பெருக்கத் தடங்களிலேயே தேர்ந்தெடுத்த முறையில் இனப்பெருக்கம் செய்தல்.

❖ ஜெர்சி மற்றும் ஹோல்ஸ்டீன் பிரிசியன் போன்ற அயலின பொலிகாளைகளைக் கொண்டு, குறைவான உற்பத்தியைக் கொண்ட நாட்டினப்பசுக்களில், வேளாண் தட்பவெப்ப நிலைக்கேற்ப கலப்பினப் பெருக்கம் செய்தல். மேலும், தூய மரபுடைய ஜெர்சி இனம் தவிர, உயர் பண்புடைய இந்திய பால் மாடுகளான சிகப்பு சிந்தி மற்றும் தர்பார்க்கர் இன மாடுகளையும் உபயோகப்படுத்தலாம். இதேபோல், ஹோல்ஸ்டீன் பிரிசியன் இனத்திற்கு பதிலாக சாஹிவால் இனத்தை உபயோகப்படுத்தலாம்.

❖ கலப்பின ஜெர்சி இன மாடுகள், 50 சதவிகிதம் ஜெர்சி இனப் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டும், கலப்பின ஹோல்ஸ்டீன் பிரிசியன் மாடுகள் 50 சதவிகித ஹோல்ஸ்டீன் பிரிசியன் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டும் இனப் பெருக்கம் செய்யப்படும்.

❖ முர்ரா இனத்தினைக் கொண்டு நாட்டினம் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட எருமைகளை தரம் உயர்த்துதல்.

❖ நீலகிரி மலைப்பகுதியில் உள்ள தோடா இன எருமைகளை தூய இனப்பெருக்கம் செய்தல்

[2010 மே 4

பசுவின மற்றும் எருமையின அபிவிருத்தி

மாநிலத்தில் உள்ள மொத்த பசுவினத்தின் எண்ணிக்கை 91.41 இலட்சமாகும். இது, மாநிலத்தில் உள்ள மொத்த கால்நடைகளின் எண்ணிக்கையில் 36.65 சதவிகிதம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மாநிலத்தில் பராமரிக்கப்படும் மொத்த மாட்டினங்களில், 84.64 சதவிகிதம் பசுவினமாகும். இதில், அயலினம், கலப்பினம், நாட்டினம் மற்றும் உள்நாட்டு தூய்மை மரபினம் ஆகியவை முறையே 0.44 சதவிகிதம், 55.79 சதவிகிதம், 6.01 சதவிகிதம் மற்றும் 37.76 சதவிகிதமாகும். எருமையினம், மாநிலத்தில் மொத்தமுள்ள மாட்டினங்களில் 15.36 சதவிகிதமும் மொத்த கால்நடைகளில் 7 சதவிகிதமாகவும் உள்ளது.

நாட்டினங்கள் குறைந்த உற்பத்தியைக் கொண்டதாகவும், அதிக அளவிலான நோய் எதிர்ப்பு சக்தி கொண்டதாகவும், கடுமையான தட்ப வெப்ப நிலையினை தாங்கக்கூடியதாகவும் உள்ளன. ஆனால், உயரினங்கள் அதிக பால் உற்பத்தித் திறன் கொண்டவையாகவும், குறைந்த நோய் எதிர்ப்புத் திறன் கொண்டவையாகவும் உள்ளன. ஆதலால், சரியான இரத்த அளவு உள்ள கலப்பு செய்யப்படுகிறது. இதற்காக கலப்பு இனப்பெருக்கம் செய்யப்பட்டு வருகிறது.

உறை விந்து உற்பத்தி:

செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களின் தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் 3 இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தரமான விந்து உற்பத்தி செய்யும் நோக்குடன் மத்திய அரசு வழிகாட்டுதலில் கூறியுள்ள குறைந்தபட்ச தர நிர்ணயம் இந்த உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் கடுமையாக கடைபிடிக்கப்படுகிறது. சர்வதேச தரக் கட்டுப்பாட்டுக்கு இணையாக இம்மூன்று நிலையங்களையும் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பண்ணைகளில் ஜெர்ஸி, ஹோல்ஸ்டீன் ப்ரிசியன், சிந்தி, கலப்பினம், காங்கேயம், உம்பளாச்சேரி மற்றும் முர்ரா இனங்களை சேர்ந்த 238 பொலிகாளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சிறிய உறைவிந்து குச்சிகள் அனைத்து உறைவிந்து உற்பத்தி நிலையங்களிலும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. 2009-10ஆம் ஆண்டில், 11 பொலிகாளைகள் வாங்கப்பட்டன. மேலும், மேற்கண்ட பண்ணைகளில் உற்பத்தியாகும் உறைவிந்து குச்சிகளின்

2010 மே 4]

தரத்தினை அதிகரிக்கும் நோக்குடன் குறைந்தபட்ச தர அளவினை எட்டாத 78 பொலிகாளைகள் கழிவு செய்யப்பட்டன.

பொலிகாளைகள் விவரம்

வ. எண்	பணி விபரம்	ஜெர்சி	ஹோல்ஸ்டீன் பிரிசியன்	ஜெர்சி கலப்பினம்	ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம்	சிகப்பு சிந்தி	உம்பளாச்சேரி	காங்கேயம்	முர்ரா	மொத்தம்
1	அயலின கால்நடைபெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை	31	-	50	-	-	1	-	47	129
2	மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர்	-	-	26	4	18	-	14	-	62
3	மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம்	19	7	19	2	-	-	-	-	47
	மொத்தம்	50	7	95	6	18	1	14	47	238

உறைவிந்து உற்பத்தி நிலையங்களின் வாயிலாக, 2009-10ஆம் ஆண்டில், 31.78 இலட்சம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

உறைவிந்து உற்பத்தி

(இலட்சங்களில்)

வ. எண்	உறைவிந்து உற்பத்தி நிலையங்கள்	உற்பத்தி 2009–10	இலக்கு 2010–11
1	அயலின கால்நடைபெருக்கப்பண்ணை, ஈச்சங்கோட்டை	10.99	11.55
2	மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர்	11.69	10.00
3	மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம்	9.10	9.10
	மொத்தம்	31.78	30.65

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரவ நைட்ரஜன் உற்பத்தி மற்றும் விநியோகம்:

உறைவிந்துக் குச்சிகளை உறைய வைக்கவும், வீரியம் குறையாமல் பாதுகாக்கவும், திரவ நைட்ரஜனை உற்பத்தி செய்யவும், திரவ நைட்ரஜன் உற்பத்தி ஆலைகள் ஈச்சங்கோட்டையில் 2 எண்ணிக்கையிலும், ஓசூர், உதகமண்டலம் மற்றும் சைதாப்பேட்டை (சென்னை) ஆகிய இடங்களில் தலா ஒன்றும், ஆக மொத்தம் 5 உள்ளன. கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கடலூர், வேலூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் திரவ நைட்ரஜனையும், உறைவிந்துக் குச்சிகளையும் அவற்றை செயற்கை முறை கருவூட்டல் நடைபெறும் கால்நடை நிலையங்களுக்கு சேமிக்கவும், விநியோகம் செய்யவும் ஏற்ற வகையில் 12 உறை விந்து சேமிப்பு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன.

2009-10 ஆம் ஆண்டில், மேற்கண்ட நிலையங்களில், 1.42 இலட்சம் லிட்டர் திரவ நைட்ரஜன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

திரவ நைட்ரஜன் உற்பத்தி

(லிட்டர் இலட்சத்தில்)

வ. எண்	திரவ நைட்ரஜன் ஆலை	ஆலைகளின் எண்ணிக்கை	உற்பத்தி 2009-10	இலக்கு 2010-11
1	அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை	2	0.61	0.85
2	மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூர்	1	0.62	0.75
3	மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம்	1	0.06	0.30
4	சைதாப்பேட்டை	1	0.13	0.15
	மொத்தம்	5	1.42	2.05

செயற்கை முறை கருவூட்டல்

1948 ஆம் ஆண்டு முதல் அயலினம் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட இனங்களின் திரவ விந்துகளின்மூலம் செயற்கை முறை

2010 மே 4]

கருவூட்டல் இத்துறையினால் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், 1975 ஆம் ஆண்டு முதல் உறை விந்து தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி திரவ விந்து பயன்பாட்டிலிருந்து உறைவிந்துவின் பயன்பாட்டிற்கு படிப்படியாக மாற்றம் செய்து 1993 ஆம் ஆண்டு முதல் உறை விந்து பயன்பாடு முழுமையாக கொண்டு வரப்பட்டது. மாநிலத்தில் மொத்தம் 3,258 நிலையங்களில் செயற்கை முறை கருவூட்டல் பணி நடைபெற்று வருகிறது.


கால்நடை பராமரிப்புத் துறை, மாநிலத்தில் அதிக அளவிலான பால் உற்பத்தித்திறன் கொண்ட கால்நடைகளை, மரபு வழி அபிவிருத்தி செய்வதற்காக, தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் மூலமாக அதிக பால் உற்பத்தித் திறன் கொண்ட இனவிருத்திக்கு உகந்த கால்நடைகளின் உறைவிந்து குச்சிகளை கொள்முதல் செய்கிறது. மாநிலத்தில் உள்ள 3,258 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்கள் அல்லாமல், கால்நடை பாதுகாப்புத் திட்டம்மூலம் குக்கிராமங்களில் நடத்தப்படும் முகாம்களிலும், நடமாடும் கால்நடை மருந்தகங்கள் மூலமாகவும், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைமூலமாக பயிற்சி அளிக்கப்பட்ட தனிநபர்கள் மூலமாகவும் மற்றும் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டுவரும் நீர்வள நிலவளத் திட்டத்தில் வேலையில்லா கால்நடை பட்டதாரிகள் மூலமாகவும், செயற்கை முறை கருவூட்டல் பணி நடைபெற்று வருகிறது.

2009-10 ஆம் ஆண்டில், 38.05 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல் நடைபெற்றுள்ளது. 2010-11 ஆம் ஆண்டிற்கு 39.00 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வருடவாரியாக, செயற்கை முறை கருவூட்டல் நடைபெற்ற விவரம் பின்வருமாறு:

வ. எண்	பணிவிபரம்	இனம்	(இலட்சங்களில்)			
			2007-08	2008-09	2009-10	2010-11 (நிர்ணயிக் கப்பட்ட இலக்கு)
1	செயற்கை முறை கருவூட்டல்	பசுவினம்	32.19	33.35	35.52	36.30
		எருமையினம்	2.60	2.45	2.53	2.70
		மொத்தம்	**34.79**	**35.80**	**38.05**	**39.00**

[2010 மே 4



உள்நாட்டினங்களை பாதுகாத்தல்:

மொத்த கால்நடை எண்ணிக்கையில் உள்நாட்டு தூய்மை மரபுடைய இனம் 6.01 சதவிகிதமாகவும், நாட்டினம் 37.76 சதவிகிதமாகவும் உள்ளன. நாட்டின கால்நடைகள், கடுமையான தட்பவெப்ப நிலையை தாங்குவதிலும், நோய் எதிர்ப்பு சக்தியிலும், பராமரிப்பு சிக்கனத்திலும் தனித்தன்மை உடையவையாக உள்ளன. அவை, குறைந்த தீவனம் எடுத்துக்கொண்டாலும் சராசரியான அளவு உற்பத்தியைக் கொடுக்கின்றன. மேலும், அவை கடுமையான தட்பவெப்ப நிலையை தாங்குதல் மற்றும் தரக்குறைவான தீவனத்தை உட்கொண்டபோதும் அவற்றை உயர்ந்த சத்துள்ளதாக மாற்றும் திறன் உள்ள மரபணுக்களை உடையதாக உள்ளன.

தமிழ்நாடு, உம்பளாச்சேரி, காங்கேயம், பர்கூர், புலிக்குளம், ஆலம்பாடி போன்ற மாட்டினங்களுக்கும், தோடா போன்ற எருமையினங்களுக்கும் பெயர் பெற்றதாகும். இத்துறை, தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையுடன் இணைந்து மேலே கூறப்பட்ட மாட்டினங்களை எண்ணிக்கை குறையாமல் பாதுகாப்பதோடு அவற்றின் முன்னேற்றம் மற்றும் பாதுகாப்பை உறுதிபடுத்துகிறது. இத்துறை, உறைவிந்து குச்சி தயாரிப்புக்காக 1 உம்பளாச்சேரி மற்றும் 14 காங்கேயம் பொலிக்காளைகளை பராமரித்து வருகிறது.

2010 மே 4]

2009-10 ஆம் ஆண்டில், உம்பளாச்சேரி மற்றும் காங்கேயம் இன உறைவிந்துகளின்மூலம் 1.89 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டுள்ளது. 2010-11ஆம் ஆண்டில், நாட்டின கால்நடைகளின் உறைவிந்துகளைப் பயன்படுத்தி 2.00 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளின் அபிவிருத்தி:

செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு கால்நடை பராமரிப்பின் முக்கியமான உபதொழிலாக இம்மாநிலத்தில் உள்ளது. பெரும்பாலான நிலமற்ற, வேளாண் தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகளின் வருவாயை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது. மனிதர்களுக்கு தேவையான பால் மற்றும் இறைச்சி வழங்குவதுடன், மனிதர்கள்/ தொழிற்சாலைகளுக்கு தேவையான கம்பளி மற்றும் இதர பொருட்களையும் வழங்குகிறது. மேலும், தோல் பொருட்கள் ஏற்றுமதியின்மூலம் நாட்டின் முக்கியத் தேவையான அந்நியச் செலாவணியையும் ஈட்டித் தருகிறது. மேலும், மண் வளத்தை பெருக்குவதில் செம்மறியாடு மற்றும் வெள்ளாட்டின் எரு முக்கிய பங்காற்றி வருகிறது. 17-வது கால்நடை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 55.93 இலட்சம் செம்மறியாடுகளும், 81.77 இலட்சம் வெள்ளாடுகளும் உள்ளன.

உள்ளூரிலுள்ள செம்மறியாடு மற்றும் வெள்ளாடு ஆகியவற்றின் தரத்தை அதிகரிப்பதற்காகவும், இனவிருத்திக்காகவும், தரமான ஆண் மற்றும் பெண் ஆடுகளும், ஆண் மற்றும் பெண் குட்டிகளும், துறையின் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. 31-3-2010 நிலவரப்படி, 99 செம்மறிக்கிடாக்களும், 1,477 செம்மறிப் பெட்டைகளும், 525 செம்மறியாட்டுக் குட்டிகளும், 41 வெள்ளாட்டுக் கிடாக்களும், 287 வெள்ளாட்டு பெட்டைகளும், 90 வெள்ளாட்டுக் குட்டிகளும், துறையின் பண்ணைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2009-10ஆம் ஆண்டில் 563 செம்மறியாடுகளும், 218 வெள்ளாடுகளும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

ஆட்டின தீவிர மருத்துவ சேவைத் திட்டம்:

செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகள் பெரும்பாலும் மேய்ச்சலை நம்பியே வளர்க்கப்படுவதால், அவை

[2010 மே 4

ஒட்டுண்ணிகளால் மிகவும் மோசமாக பாதிக்கப்படுகின்றன. ஒட்டுண்ணிகளின் தாக்கத்தால், கால்நடைகள் எடை குறைதல், வளர்ச்சியின்மை, காலம் கடந்து பருவமடைதல், அதிக இறப்பு சதவிகிதம் மற்றும் குறைந்த சினை பிடிப்பு போன்ற பாதிப்புகள் உண்டாவதோடு வேறு தொற்று நோய் பாதிப்பும் எளிதாக ஏற்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, இத்துறை, 1982-83 முதல் தீவிர உடல் நல பாதுகாப்பு திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளால் வளர்க்கப்படும் செம்மறியாடுகளுக்கு ஒட்டுண்ணியால் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக காலமுறைப்படி குடற்புழு நீக்கம் செய்யப்படுகிறது. 2009-10-ல் செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்வதற்கு ரூ.40.00 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் பயன்படுத்தப்பட்டன.

வெண்பன்றி அபிவிருத்தி:

நலிவுற்ற சமுதாய பிரிவினருக்கு சுய வேலைவாய்ப்பு, மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து மற்றும் கூடுதல் வருவாய் அளிக்க பன்றி வளர்ப்பு நல்ல எதிர்பார்ப்பினை அளிக்கின்றது. பெரிய வெள்ளை யார்க்ஷையர் பன்றிகள், ஒரத்தநாடு, ஓசூர், அபிசேகப்பட்டி, செட்டிநாடு மற்றும் புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் வளர்க்கப்பட்டு வருகின்றன. 31-3-2010 நிலவரப்படி, 22 ஆண் வெண்பன்றிகள், 155 பெண் வெண்பன்றிகள் மற்றும் 336 குட்டிகள் மேற்கண்ட பண்ணைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2009-10ஆம் ஆண்டில், 1,910 பன்றிகள் பண்ணைகளிலிருந்து விற்கப்பட்டுள்ளன.

குதிரை வளர்ப்பு

குதிரைகளின் இனப்பெருக்கத்தை புனரூட்டவும் மற்றும் அவற்றை பாதுகாக்கவும், குதிரை வளர்ப்புப் பிரிவு ஒன்று ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் இயங்கி வருகிறது. கத்தியவார் மற்றும் தூய இனக் குதிரைகள் இப்பிரிவில் பராமரிக்கப்படுகின்றன. கத்தியவார் மற்றும் தூய இன ஆண் குதிரைகள் இயற்கைமுறை கருவூட்டலுக்கு அனுமதிக்கப்படுகின்றன. தற்போது, இப்பிரிவில், 6 ஆண் குதிரைகள், 7 பெண் குதிரைகள் மற்றும் 5 குட்டிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2010 மே 4]

நாய் வளர்ப்பு

நமது மாநிலத்தில் தலைசிறந்த நாய் இனங்களான இராஜபாளையம், கோம்பை மற்றும் சிப்பிப்பாறை ஆகியவை உள்ளன. இந்த உள்ளூர் இன நாய்களை பாதுகாத்து வளர்ப்பதற்காக 1980-81 ஆம் ஆண்டு சென்னை சைதாப்பேட்டையில் நாய் வளர்ப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. மற்ற இனத்தைச் சேர்ந்த நாய்களுக்கும் நல்ல தேவை இருந்ததால், லாப்ரடார் மற்றும் டாபர்மேன் இனங்கள், இப்பிரிவில் 1997-98 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டன. இந்நாய்க் குட்டிகள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

தற்போது கீழ்க்குறிப்பிட்டுள்ள இனங்கள் இப்பிரிவில் பராமரிக்கப்படுகின்றன:

வ. எண்	இனங்கள்	பெரியவை		குட்டிகள்	
		ஆண்	பெண்	ஆண்	பெண்
1	இராஜபாளையம்	3	5	-	9
2	சிப்பிப்பாறை	1	1	-	-
3	டாபர்மேன்	2	3	-	-
4	லேபரடார்	2	1	-	-
5	டால்மேஷன்	-	-	1	1
6	ராட்வீலர்	-	-	1	2


கோழியின அபிவிருத்தி

புழக்கடை கோழி வளர்ப்பாக மட்டுமே இருந்த கோழி வளர்ப்பு, தற்போது வர்த்தக ரீதியான தொழில் சக்தியாக மாற்றம் கண்டுள்ளது. 1960-ல் ஆழ்கூழ்முறை அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து தொழில்முறை மாற்றம் ஏற்பட்டு முன்னேற்றம் அடைந்துள்ளது. நவீன அறிவியல் தொழில்நுட்பங்கள், புதிய ரக கோழியினங்கள் மற்றும் கலிபோர்னியா கூண்டுமுறை கோழி வளர்ப்பு போன்றவை இத்தொழிலில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளன.

[2010 மே 4

கோழி விரிவாக்க நிலையங்கள், செயல்விளக்க பண்ணைகளாகவும் மற்றும் விரிவாக்க நிலையங்களாகவும் செயல்பட்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதுடன், விவசாயிகளை கோழி வளர்ப்பில் ஈடுபடவைத்து, அதன் வாயிலாக இத்தொழில் வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது. வெள்ளைக்கழிச்சல் நோயிலிருந்து காத்திட மேற்கொள்ளப்பட்ட பரவலான தடுப்பூசி போடுதல், தரமான தீவனம் எளிதில் கிடைக்கச் செய்தல் போன்றவை கோழி வளர்ப்பை பெரிய தொழிலாக்க உதவியுள்ளன. இதுகாறும் குடிசைத் தொழிலாக இருந்த கோழி வளர்ப்பு, தற்போது நாமக்கல், சேலம், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் பல இடங்களில் பெரிய அளவிலான தொழிலாக வளர்ச்சியடைந்துள்ளது. முட்டை உற்பத்திப் பொருட்கள் மற்றும் உறைய வைத்த கோழி இறைச்சி ஆகியவற்றை நமது மாநிலத்திலிருந்து வளைகுடா நாடுகள், ரஷ்யா போன்ற அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற சிறந்த சூழ்நிலை நிலவுகிறது. நாட்டின் கோழிப் பொருட்கள் ஏற்றுமதியில், 16.5 சதவிகிதம் தமிழ்நாட்டின் பங்களிப்பாக உள்ளது.

ESTIMATED EGG PRODUCTION & PER CAPITA AVAILABILITY OVER 3 DECADES



புழக்கடை கோழியின அபிவிருத்தி

கோழிப்பண்ணை வளர்ப்பு பெரிய தொழிலாக இருந்த போதிலும், இயற்கையோடு இணைந்த புழக்கடை கோழி வளர்ப்பானது பண்டை காலந்தொட்டே பாரம்பரிய இலாபகரமான தொழிலாக இருந்து வருகிறது. இது கிராமப்புற

2010 மே 4]

விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கான தொழிலாக இருந்து வருவதுடன், மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் நான்கு சதவிகித பங்களிப்பையும் தருகிறது. புழக்கடை கோழி வளர்ப்பு என்பது, குறைந்த முதலீட்டில் ஒரு வீட்டிற்கு 5 முதல் 10 கோழிகளை வளர்ப்பதாகும். வீட்டிற்குத் தேவையான முட்டை மற்றும் இறைச்சி ஆகியவை இக்கோழிகள் மூலம் கிடைக்கின்றன. இக்கோழிகள், புழக்கடையில் உள்ள வெள்ளை எறும்பு, பூச்சிகள், புழுக்கள், வீணான தானியங்கள், சமையல் அறை மற்றும் பண்ணைக் கழிவுகள் முதலியவற்றை உண்டு, முட்டைகளாகவும், கோழி இறைச்சிகளாகவும் வழங்குகின்றன. இந்தக் கோழிகள், மிகவும் மோசமான உயிர்கொல்லி நோயான கோழிக்கழிச்சல் நோய் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. இந்நோயிலிருந்து கோழிகளை காப்பாற்றுவதற்காக கால்நடை மருந்தகம் மற்றும் கிளை நிலையங்களில் வாரத்தில் குறிப்பிட்ட நாட்களிலும், கால்நடை பாதுகாப்புத் திட்டம் மூலம் நடைபெறும் முகாம்களிலும் தடுப்பூசி போடப்படுகிறது. இவை தவிர, ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதத்தில் கோழிக்கழிச்சல் நோய்க்கெதிராக மாநிலம் முழுவதும் இருவார தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இச்சிறப்பு தடுப்பூசி முகாம்கள் மூலமாக தடுப்பூசி போடப்பட்ட கோழிகளின் எண்ணிக்கை 2008-09ஆம் ஆண்டில் 37.95 இலட்சமும், 2009-10ஆம் ஆண்டில் 38.05 இலட்சமுமாகும். முட்டை உற்பத்தி, 2006-07ஆம் ஆண்டில் 8,044 இலட்சமாக இருந்தது, 2007-08ஆம் ஆண்டில் 8,394 இலட்சமாகவும், மேலும், 2008-09ஆம் ஆண்டில் 8,810 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. உற்பத்தி அதிகரிப்பு சதவீதம் 2007-08ஆம் ஆண்டு 4.35 சதவிகிதத்திலிருந்து 2008-09ஆம் ஆண்டில் 4.96 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. ஒரு மனிதனுக்கு ஓர் ஆண்டுக்குக் கிடைக்கும் முட்டையின் அளவு 2006-07ஆம் ஆண்டு 123 ஆக இருந்தது, 2007-08ஆம் ஆண்டு 128 ஆக உயர்ந்துள்ளது. இது 2008-09ஆம் ஆண்டில் மேலும் உயர்ந்து, ஒரு மனிதனுக்கு ஓர் ஆண்டிற்கு தேவை அளவான 180-க்கு எதிராக 133 ஆக உயர்ந்துள்ளது.

வான்கோழி வளர்ப்பு

17-வது கால்நடை கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் 0.51 இலட்சம் வான்கோழிகள் உள்ளன. இவற்றில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களிடம் முறையே 10.45 சதவிகிதமாகவும் 0.57 சதவிகிதமாகவும் உள்ளது. வான்கோழி வளர்ப்பினை பிரபலப்படுத்தவும், புழக்கடை வான்கோழி வளர்ப்பு ஒரு

[2010 மே 4

இலாபகரமான சுய வேலைவாய்ப்பு தொழில் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், இத்துறை காட்டுப்பாக்கத்தில் வான்கோழிப் பண்ணையை பராமரித்து வருகிறது. அரசு, வான்கோழி அபிவிருத்திக்காக, ரூ.68.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தற்போது 191 வான்கோழிகள் காட்டுப்பாக்கம் பண்ணையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பறவைக் காய்ச்சல்

பறவைக் காய்ச்சல் மனித இனத்தை பயமுறுத்திவரும் விலங்குகளிலிருந்து மனிதனுக்கு பரவும் நோயாகும். மாநிலத்தில் இந்த நோய் தொற்று இல்லாதபோதும், வட மாநிலங்களில் நோய் கிளர்ச்சி ஏற்பட்டவுடன், கீழ்க்கண்ட நோய்த் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

- அரசு கால்நடை உதவி மருத்துவர்கள் நேரில் பார்வையிட்டு, கோழிகளின் நோய் நிலை அல்லது இறப்பு ஏற்படுகிறதா என கடுங்கண்காணிப்புடன் செயல்பட்டு அறிக்கையை அனுப்புகின்றனர்.

- அனைத்து பறவைகள் சரணாலயங்களும் வனத்துறை அலுவலர்கள் மற்றும் கால்நடை நோய் புலனாய்வு பிரிவிலுள்ள கால்நடை மருத்துவர்களால் இடம்பெயரும் பறவைகள் தொடர்ந்து கண்காணிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றன.

- ஊநீர் மாதிரிகள் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்டு, தென்மண்டல நோய் ஆய்வுக்கூடம், பெங்களூரு மற்றும் மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம், சென்னை ஆகிய இடங்களுக்கு அனுப்பப்பட்டு, நோய் ஆய்வு செய்யப்படுகிறது. இதுவரை, 12,547 மாதிரிகளில் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- அசாதாரண சூழ்நிலைகளினால் கோழிகள் இறக்க நேரிட்டால், ஆய்வுக்கான மாதிரிகள் சேகரிக்கப்பட்டு போபாலிலுள்ள உயர் பாதுகாப்பு கால்நடை நோய் புலனாய்வு ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு நோயின் தன்மை உறுதி செய்யப்படுகிறது.

2010 மே 4]

➢ நாமக்கல் மாவட்டம், ஆண்டகலூர்கேட் மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் கோழி நோயைக் கண்டறியும் இரண்டு ஆய்வுக்கூடங்களை மாநிலத்தில் கோழிகளின் மாதிரிகளை ஆய்வு மேற்கொள்ள BSL II தரத்திற்கு உயர்த்த ஒவ்வொன்றிற்கும் தலா ரூ.22.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

➢ இந்திய அரசு, தமிழ்நாட்டில், சென்னைக்கு அருகே படப்பை என்னும் இடத்தில் BSL IV ஆய்வகம் ஒன்றை நிறுவுவதற்காக ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து தமிழக அரசு மைய அரசுக்கு 30 ஏக்கர் நிலம் வழங்கி உள்ளது. நாட்டின் மற்ற பகுதிகளில் பறவைக்காய்ச்சல் நோய் கிளர்ச்சி ஏற்பட்டாலும் தமிழ்நாடு பறவைக்காய்ச்சல் நோய் இல்லாத பகுதி என்று சான்றளிப்பதற்கு இத்தகைய புகழ் மிக்க திட்டம்மூலம் நிறுவப்படும் ஆய்வுக்கூடம் மிகவும் பயனுள்ளதாக இருப்பதால், கோழி மற்றும் முட்டை போன்ற பொருட்கள் ஏற்றுமதி தடையின்றி நடைபெறும்.

➢ தமிழக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையின் கீழ், மாநில அளவிலான உயர்மட்டக் குழு, பறவைக் காய்ச்சல் நோயினை தடுப்பதற்காக இம்மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் கடுங்கண்காணிப்பு மற்றும் முன்னேற்பாடுப் பணிகளை கண்காணித்து வருகிறது.

➢ மாநிலத்தில், 300 துரித செயல்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, பறவைக்காய்ச்சல் நோய்க்கிளர்ச்சி ஏதேனும் ஏற்பட்டால் அதனை எதிர்கொள்ளவும், நோய் பரவாமல் தடுக்க பறவைகளை அழிக்கவும், கிருமி நாசினி அளிப்பது குறித்தும் தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

➢ நோய் பரவாமல் தடுப்பதற்காக பறவைகளை அவசர அவசியத்தின்பேரில் அழிக்க வேண்டியிருப்பின், உடனடி நிவாரணமாக கோழிவளர்ப்போருக்கு வழங்குவதற்காக ரூ.50.00 இலட்சம் வங்கியில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

➢ பறவைக்காய்ச்சல் நோயினை கட்டுப்படுத்தவும், முன்னேற்பாடான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மற்றும் தடுத்தல் போன்றவற்றிற்கு பயிற்சி அளிக்கவும்

[2010 மே 4

ரூ.85.33 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை, 1,880 கால்நடை உதவி மருத்துவர்கள், 1,075 சார்பு பணியாளர்கள், 3,000 கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் மற்றும் துறை பணியாளர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கிராம பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக, ரூ.7.67 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 1,601 கிராம பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

திட்டங்கள்:

பெருகிவரும் மக்கட் தொகை, அதிகரித்துவரும் நகரமயமாக்கல், குறைந்து வரும் சாகுபடி நிலங்கள், நிலையற்ற பருவ நிலை, குறைந்து வரும் நீர் ஆதாரங்கள் மற்றும் உறுதியற்ற வேளாண் வருவாய் ஆகியவை, விவசாயிகள் தங்கள் வாழ்க்கையை நடத்திட ஏதாவதொரு கால்நடை வளர்ப்பிற்கு மாறச் செய்துவிட்டன. எனவே, இப்பிரிவினருக்கு வேலைவாய்ப்பை அளித்திடவும், கால்நடை வளர்ப்பில் அதிகளவில் பங்கேற்கவும் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகவும் இத்துறை பல்வேறு பயனாளிகளைச் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

மாநில அரசு செயல்படுத்தும் திட்டங்கள்:

கால்நடை பாதுகாப்புத் திட்டம்:

"கால்நடை பாதுகாப்புத் திட்டம்" மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் 18-1-2000 அன்று தொடங்கி வைக்கப்பட்ட ஒரு முன்னோடி திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ், முழு உடல் நலம் பேணுதல், தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் நோய் நீக்கப்பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ள விவசாயிகள் வளர்க்கும் கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு கால்நடை மருத்துவ வசதி பற்றாகுறையாக உள்ள குக்கிராமங்களில் சிறப்பு முகாம்கள் அங்கேயே நடத்தப்படுகின்றன. முகாம் நடத்துவதற்கு முன்தினம், முகாம் நடைபெறவிருக்கும் கிராமத்திலும் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களிலும் முகாம் நடைபெறுவது குறித்து விரிவான பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. அப்போது முகாமில் நடைபெறவுள்ள செயல்பாடுகள் குறித்து துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2010 மே 4]

இச்சிறப்பு முகாம்கள், 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் முகாம் ஒன்றுக்கு ரூ.4,200/-மொத்த செலவில் மாதத்திற்கு ஒன்று வீதம் நடத்தப்படுகின்றன. இம்முகாம்களில் பல்வேறு நடவடிக்கைகளான உடல் நலம் பேணுதல், நோய்த்தடுப்பு, குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், செயற்கைமுறை கருவூட்டல், சினை பரிசோதனை மற்றும் மலடு நீக்க சிகிச்சை போன்ற பணிகள் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன. கன்றுகள் பேரணி நடத்தப்பட்டு ரூ.400/- வீதம் சிறந்த கன்றுகளுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேற்கண்ட முகாம்கள் கோட்ட உதவி இயக்குநர் அவர்களின் நேரடி கண்காணிப்பிலும், தொடர்புடைய மண்டல இணை இயக்குநரின் மேற்பார்வையிலும் நடத்தப்படுகின்றன. முகாம் நடத்துவதற்கு ஊராட்சி ஒன்றியம் மற்றும் அருகில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் சார்புப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக உதவிகள் தேவைப்படும் நேரங்களில் கோரப்படுகின்றன

மேலும், கால்நடைகளுக்கு ஏற்படும் பலவிதமான நோய்கள் பற்றிய விளக்கங்கள், நோய்த் தடுப்பு முறைகள் மற்றும் தீவன உற்பத்தி முறைகள் போன்றவை செயல் விளக்கத்துடன் கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டு கிராம மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. 2009-10ஆம் ஆண்டில், 5,500 முகாம்கள் நடத்தப்பட்டு 67.60 இலட்சம் கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு பலதரப்பட்ட கால்நடை நோய்களிலிருந்து, உடல்நலம் பேணப்பட்டு 9.30 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். 2010-11 ஆம் ஆண்டில் 5,500 முகாம்கள் நடத்தவும், ஒரு முகாமிற்கு ரூ.4,200/- செலவிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த முகாம்களினால் பயன்பெறும் பயனாளிகள், முகாம் நடத்தப்படும் கிராமங்கள் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள கால்நடை வளர்க்கும் விவசாயிகளாவர். அனைத்து சேவைகளும் விவசாயிகளின் இருப்பிடத்திலேயே இலவசமாக கிடைப்பதால், இத்திட்டம் கிராமப்புற விவசாயிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

[2010 மே 4

கால்நடை பாதுகாப்புத் திட்டம் (2008–09 முதல் 2009–10)

வ. எண்	விபரம்	2008-09	2009-10	2010-11 (நிர்ணயிக் கப்பட்ட குறியீடு)
அ	நடத்தப்பட்ட முகாம்கள்	5,500	5,500	*5,500*
ஆ	பயனடைந்த கால்நடைகள்			
	பசுவினம்	18,46,487	18,63,285	20,00,000
	எருமையினம்	2,62,205	2,39,462	2,90,000
	செம்மறியாட்டினம்	16,73,564	18,30,389	18,50,000
	வெள்ளாட்டினம்	16,69,387	17,14,339	17,50,000
	இதரவை	42,857	52,251	60,000
	கோழியினம்	9,08,631	10,60,095	11,00,000
	மொத்தம்	**64,03,131**	**67,59,821**	**70,50,000**
இ	பயனடைந்த விவசாயிகள்	6,38,400	9,30,142	10,00,000
ஈ	செலவிடப்பட்ட தொகை (இலட்சத்தில்)	231.00	231.00	231.00
உ	முகாமில் கலந்து கொண்ட கால்நடைகளின் சராசரி எண்ணிக்கை	1,164	1,229	-
ஊ	கன்றுகள் பேரணி (முகாமில் கலந்து கொண்ட கன்றுகள் எண்ணிக்கை)	1,42,698	2,17,283	-

தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) உதவியுடன் கால்நடை நிலையங்களின் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

உள்கட்டமைப்பு வசதிகள்மூலம், கால்நடை சேவையை மேம்படுத்தி, அதன்மூலம் உற்பத்தித் திறன் மற்றும் கிராமப்புற அபிவிருத்தியில் வளர்ச்சி அடைய முடிகிறது.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் பத்தாவது ஊரக உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியின்

2010 மே 4]

கீழ் ரூ.5,978.92 இலட்சங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ரூ.4,380.38 இலட்சம் செலவிடப்பட்டு 71 கால்நடை மருந்தகங்களும், 10 கால்நடை மருத்துவமனைகளும், 9 உறைவிந்து வங்கிகளும், 23 களப்பணி கண்காணிப்பு பிரிவுகளும், 9 நோய் கண்டறியும் பிரிவுகளும், 82 சிகிச்சைக் கூடங்களும், 146 உள்நோயாளி பிரிவுகள் மற்றும் 17 ஊடு கதிர் பிரிவுகளுக்கான கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ரூ.1,374.54 இலட்சம் செலவில் சாதனங்கள் வாங்கப்பட்டு தேவையான உபகரணங்கள் அனைத்து கால்நடை நிலையங்களுக்கும் மற்றும் நோய் கண்டறியும் பிரிவுகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இவையன்றி, புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட 111 கால்நடை நிலையங்கள் மற்றும் நோய் கண்டறியும் பிரிவுகளுக்கும் ரூ.224.00 இலட்சம் செலவில் அறையணிகள் வழங்கப்பட்டுள்ளன.

தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி உதவியுடன் கூடிய 11-வது ஊரக உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ், ஓசூர், உதகமண்டலம் மற்றும் ஈச்சங்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள கால்நடைப் பண்ணைகளில் பொலிகாளைக் கொட்டகைகள் கட்டுவதற்கும், ஓசூர் மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள கால்நடைப் பண்ணைகளில் தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக் கூடங்களுக்கும் ரூ.332.50 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அயலின கால்நடைப் பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டையில் உள்ள பொலிகாளைக் கொட்டகையும் மற்றும் மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூர் மற்றும் உதகமண்டலத்தில் உள்ள தரக் கட்டுப்பாட்டு ஆய்வுக் கூடங்கள் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளும் முடிந்துள்ளன.

உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய திட்டங்கள்:

1. உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்

உலக வங்கி உதவியுடன் கூடிய தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தை செயல்படுத்தும் தொடர்புத் துறைகளில் கால்நடை பராமரிப்புத் துறையும் ஒன்றாகும். இத்திட்டம், மாநிலத்தில் 2007-2013 வரை 6 ஆண்டு கால அளவில் நிறைவேற்றப்படும். வேளாண்மை மற்றும் சார்பு தொழில்களில், ஒவ்வொரு அலகு நீரின் பயன்பாட்டையும் மேம்படுத்தி, இறுதியில் பண்ணை வருவாயை அதிகரிப்பதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். கால்நடை பராமரிப்புத் துறையின் திட்டங்களை, 63 உப வடிநிலப்

[2010 மே 4

பகுதிகளில், மேற்கண்ட காலக்கெடுவிற்குள் நிறைவேற்றுவதற்காக உலக வங்கி ரூ.39.30 கோடி நிதி வழங்கியுள்ளது.

இத்திட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் நோக்கங்கள் பின்வருமாறு:

- உப வடிநிலங்களில் உள்ள கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பது.
- விவசாயிகளின் இருப்பிடங்களில் அல்லது மிக அருகில் கால்நடை மருத்துவ சேவை மற்றும் இனப்பெருக்க உதவியை அளிப்பது.
- நோய்த் தடுப்பு மற்றும் குணப்படுத்துதல்மூலம் முழுமையான கால்நடைப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது.
- மாட்டினங்களின் சினை பிடிப்பு மற்றும் கன்று பிறப்பு சதவிகிதத்தினை அதிகரிப்பது.
- பசுந்தீவன தேவை மற்றும் கிடைக்கும் அளவிற்கான இடைவெளியை குறைப்பது.
- சிறந்த கால்நடைப் பராமரிப்பு முறைகள் / தொழில் நுட்பம் பற்றிய விவசாயிகளின் அறிவாற்றலை மேம்படுத்துவது.

உப வடிநிலங்களில், துறை மேற்கொள்ள உள்ள செயல்பாடுகள் பின்வருமாறு:

❖ உப வடிநில கால்நடை மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தி வேலையில்லா கால்நடை மருத்துவப் பட்டதாரிகளின் சேவைகளைப் பயன்படுத்தி, சேவை கிடைக்காத பகுதிகளில் விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு மருத்துவ சேவை மற்றும் இனப்பெருக்க உதவி வழங்குதல்.

❖ கால்நடை நிலையங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தி, தரமான கால்நடை மருத்துவ சேவை மற்றும் நோய் ஆய்வை வழங்குதல்.

❖ கூடுதல் பகுதிகளை பசுந்தீவன சாகுபடிக்குக் கொண்டு வந்து, பசுந்தீவன உற்பத்தியை அதிகரித்தல்.

2010 மே 4]

❖ மலடு நீக்கம் மற்றும் முழுமையான கால்நடை மருத்துவ சேவை முகாம்கள் மற்றும் தாதுக் கலவை வழங்குவதின் வாயிலாக முழுமையான கால்நடை மருத்துவ சேவையை உறுதிப்படுத்துவது மற்றும் சினைப்பிடிப்பு சதவிகிதத்தினை அதிகரித்தல்.

❖ பல்வேறு வகையிலான மக்கள் தொடர்பு, தகவல் தொடர்பு பிரச்சாரங்கள் மற்றும் பயிற்சிகள் வாயிலாக விவசாயிகளுக்கு சிறந்த கால்நடை பராமரிப்பு முறைகள் / தொழில் நுட்பம் பற்றிய அறிவாற்றலை மேம்படுத்துதல்.

இத்திட்டம், 2007-08 ஆம் ஆண்டில் 9 உப வடிநிலங்களில் ரூ.2.39 கோடி செலவிலே, 2008-2009 ஆம் ஆண்டில், 9 உபவடி நிலங்களுடன், மேலும் 15 உபவடி நிலப்பகுதிகளில் 3.53 கோடி செலவிலும் செயல்படுத்தப்பட்டன.

கீழ்க்கண்ட பணிகள், 2007-2008 மற்றும் 2008-2009 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன.

- கால்நடை இனப்பெருக்கம் மற்றும் கால்நடை நலப் பணிகள் அளிக்கவும் விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே அவைகளை செயல்படுத்தவும், வேலையில்லா கால்நடை மருத்துவ பட்டதாரிகளின் சேவைகளை பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்புடன் பயன்படுத்திக் கொள்ளவும் 65 தொகுப்பு உப வடிநில கால்நடை நிலையங்கள் தொடங்கப்பட்டன.

- பசுந்தீவன உள்ளீடுகளான கோ-3 கரணைகள், மக்காச்சோளம் மற்றும் கொழுக்கட்டை புல் விதைகளை விவசாயிகளுக்கு இலவசமாக அளித்து 2,668 ஹெக்டேர் தனியார் நிலங்கள் பசுந்தீவன சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டன.

- அசோலா சாகுபடி செய்வது குறித்த 60 செயல் விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும், அசோலா சாகுபடியில் ஆர்வமுள்ள 600 விவசாயிகளுக்கு, அசோலா உள்ளீட்டுப் பொருட்கள் இலவசமாக அளிக்கப்பட்டன.

- 1,380 மலட்டு நீக்கம் மற்றும் உடல்நல சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டன.

[2010 மே 4

- விவசாயிகளுக்கான 1,490 கலந்துரையாடல் கூட்டங்கள் நடத்தப்பட்டன.
- 7.73 இலட்சம் செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கு காலமுறைப்படி இலவசமாக குடற்புழு நீக்கம் செய்யப்பட்டன.
- 9,825 விவசாயிகளுக்கு சிறந்த கால்நடை பராமரிப்பு வழிமுறைகளை பற்றி பயிற்சி அளிக்கப்பட்டன.

2009-10 ஆம் ஆண்டில், முதல் கட்ட 9 உபவடி நிலங்கள். இரண்டாம் கட்ட 15 உபவடி நிலங்கள் மற்றும் மூன்றாம் கட்ட 20 உபவடி நிலங்கள் ஆகியவற்றில் ரூ.4.34 கோடி செலவினத்தில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

❖ கால்நடை இனப்பெருக்கம் மற்றும் கால்நடை நலப் பணிகள் அளிக்கும்வகையில் விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே செயல்படுத்த 57 தொகுப்பு உப வடிநில பிரிவுகள் தொடங்கப்பட்டன.

❖ 2.20 இலட்சம் கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் பணி மேற்கொள்ளப்பட்டது.

❖ இலவசமாக பசுந்தீவன உள்ளீடுகளான கோ-3, 427 ஹெக்டேரிலும், சோளம் 1223 ஹெக்டேரிலும், மக்காசோளம் 733 ஹெக்டேரிலும் மற்றும் கொழுக்கட்டை புல் /ஸ்டைலோ 155 ஹெக்டேரிலும் உள்ளடக்கி மொத்தம் 2,538 ஹெக்டேர் தனியார் நிலங்கள் பசுந்தீவன சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டன.

❖ 40 அசோலா வளர்ப்பு செயல் முறை விளக்கங்கள் நடத்தப்பட்டு, 400 விவசாயிகளுக்கு அசோலா உள்ளீடுகள் இலவசமாக வழங்கப்பட்டன.

❖ 780 மலட்டு நீக்கம் மற்றும் உடல்நல சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டன.

❖ 515 விவசாயிகள் கலந்துரையாடல் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

❖ 9.11 இலட்சம் ஆடுகளுக்கு காலமுறைப்படி குடற்புழு நீக்கப் பணிகள் இலவசமாக மேற்கொள்ளப்பட்டன.

2010 மே 4]

- ❖ *6,225 விவசாயிகள் பயனடையும் வகையில், சிறந்த கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றி பயிற்சிகள் நடத்தப்பட்டன.*

அவசர சுனாமி மறு சீரமைப்புத் திட்டம்:

சுனாமி ஆழி அலை, தமிழ்நாட்டின் 13 கடலோர மாவட்டங்களை தாக்கி பேரழிவினை ஏற்படுத்தியது. உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, பசுந்தீவன பாதுகாப்பினை உறுதிப்படுத்தி மற்றும் சுனாமியில் நலிவடைந்தோருக்கு கால்நடை வளர்ப்பில் நல்ல வழிமுறைகளை விளக்கி பயிற்சி அளித்து, அவர்களுக்கு, மாற்று வேலை மற்றும் வருவாயினை ஈட்டுவதற்குத் தேவையான வழிவகைகளை வகுத்துத் தருவதற்காக உலக வங்கி நிதியுதவியுடன் அரசு ரூ.866.702 இலட்சம் ஒதுக்கீடு செய்து செயல்படுத்தி வருகிறது.

திட்டப்பகுதியில், 9 கால்நடை மருந்தகங்கள், 3 கால்நடை மருத்துவமனைகள், 13 மாவட்ட கால்நடை விரிவாக்க நிலையங்கள், 2 தீவன வங்கிகள், 12 சமூகம் சார்ந்த கால்நடை பணியாளர் நிலையங்கள் மற்றும் 62 கிளை நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்நிலையங்கள் முழுமையாக செயல்படத் தேவையான அனைத்து உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இத்துடன், மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்திட கால்நடை வளர்ப்பில் ஆர்வமுள்ள 82 இளைஞர்களுக்கு முதலுதவி, குடற்புழு நீக்கம், தடுப்பூசி மற்றும் இனப்பெருக்க உதவி பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவை தவிர, 10,000 ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2. மத்திய நிதி உதவி பெறும் திட்டங்கள்

1. தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் (NADP)

2007–08 ஆம் ஆண்டு

கால்நடைகளின் இருப்பிடங்களை கண்டறிவதற்காகவும், நோய்க் கிளர்ச்சிகள் பரவுவது குறித்து தெரிந்துகொள்வதற்கும், 9 இலட்சம் இனவிருத்திக்கு உகந்த மாடுகள் கண்டறியப்பட்டு, ஒவ்வொரு மாட்டிற்கும் காது வில்லை (Tag) மற்றும் அடையாள அட்டை அளிக்க ரூ.157.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY ... ALONE TRIUMPHS

[2010 மே 4

கீழ்க் குறிப்பிட்டுள்ள செயல்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

2008–09 ஆம் ஆண்டு

- ✓ ஆடுகள் பராமரிப்பை வாழ்வாதாரத்திற்கு ஒரு மாற்று வழியாக விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி, 20 பெட்டை மற்றும் 1 கிடா என்ற அலகினை அளித்து அவற்றுக்கு தேவையான அடர் தீவனம் 250 கிராம் ஒரு நாளைக்கு ஒரு ஆட்டிற்கு என்ற விகிதத்தில் 6 மாதங்களுக்கு ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு, ஒரு சுய உதவிக் குழு என்கின்ற அடிப்படையில், 362 ஊராட்சி ஒன்றியத்திற்கு மொத்தம் ரூ.85.43 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ✓ விவசாயிகளிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தி, கரும்பு சாகுபடி செய்யும் 12 மாவட்டங்களில் கரும்புத் தோகைகளை செறிவூட்டப்பட்ட ஊட்டச்சத்து மிக்க தீவனங்களாக மாற்றி அவற்றை கால்நடைகளுக்கு தீவனமாக அளிக்க ரூ.56.405 இலட்சம் செலவில் 221 சைலோ குழிகள் ஏற்படுத்துதல்.
- ✓ குக்கிராமங்களில் உள்ள கால்நடைகளின் இருப்பிடங்களிலேயே நோய் ஆய்வுப் பணியினை மேற்கொள்ளவும் மற்றும் நோயினை அறவே ஒழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவும் மொத்தம் ரூ.96.00 இலட்சம் செலவில் 8 நடமாடும் நோய் ஆய்வுக் கூடங்கள் வாங்குதல்.
- ✓ ரூ.217.69 இலட்சம் செலவில் கால்நடைகளின் இருப்பிடங்கள் கண்டறியப்பட்டு 13.73 இலட்சம் இனவிருத்திக்கு உகந்த கால்நடைகளுக்கு காது வில்லை (Tag) மற்றும் அடையாள அட்டை வழங்குதல்.
- ✓ 6 மாவட்ட கால்நடைப் பண்ணைகளுக்கு ரூ.8.286 இலட்சம் செலவில் 10 குதிரை சக்தி மின் மோட்டார் இயக்க புல்வெட்டும் கருவியால் பசுந்தீவனப் பொருட்களை சிறு துண்டுகளாக வெட்டி தீவனங்களின் பயனை அதிகரித்தல்.
- ✓ ரூ.76.365 இலட்சத்தில் கால்நடைகளுக்கு பசுந்தீவனங்களை அளிப்பதின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்குடன் ஒரு ஊராட்சி ஒன்றியத்துக்கு 4 ஏக்கர் என்ற அளவில் 50 சதவிகித மானியத்துடன் தீவனப் பயிர் வழங்குதல்.

2010 மே 4]

- ✓ பசுந்தீவனம் அபிவிருத்தி செய்து, அதன் வாயிலாக பசுந்தீவன குறைவினை சமாளிக்கும் வகையில், 6 மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் 2,709 ஏக்கரில் ரூ.449.88 இலட்சம் செலவில் பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

2009–10ஆம் ஆண்டு:

- ✓ 7 மாவட்ட கால்நடை பண்ணைகளின் மூலமாக கால்நடைகளுக்கு ரூ.385.03 இலட்சம் செலவில் மரபியல் தரம் உயர்த்துதல்.
- ✓ குக்கிராமங்களில் உள்ள கால்நடைகளின் இருப்பிடங்களிலேயே நோய் ஆய்வுப் பணியினை மேற்கொள்ளவும், மற்றும் நோயினை அறவே ஒழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவும் மொத்தம் ரூ.96.00 இலட்சம் செலவில் 8 நடமாடும் நோய் ஆய்வுக் கூடங்கள் வாங்குதல்.
- ✓ 4 மாவட்டங்களில் 55 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சிறு பிராணிகளின் முன்னேற்றத்திற்கு 50 சதவிகித மானியத்துடன் தீவன செலவு மற்றும் காப்பீட்டு செலவிற்காக ரூ.247.50 இலட்சம் செலவிடுதல்.
- ✓ தடுப்பூசி மருந்தை தொடர் குளிர் நிலையில் வைத்துக் கொள்ள 8 குளிரூட்டப்பட்ட வசதி கொண்ட அறைகள் ஏற்படுத்த ரூ.152.00 இலட்சம் செலவிடுதல்.

2. கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக மாநிலங்களுக்கு உதவித் திட்டம் (அஸ்காட்)

பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த கால்நடைகளைத் தாக்கும் நோய்களைக் கட்டுப்படுத்த, மத்திய அரசு உதவியுடன் "கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக மாநிலங்களுக்கு உதவி" என்ற திட்டம், 75 சதவிகிதம் மத்திய அரசு உதவியுடனும், பயிற்சி மற்றும் கருத்தரங்கம் தவிர்த்த செலவினங்களுக்கு 25 சதவிகிதம் மாநில ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படுகிறது. இதில், "பயிற்சி/ கருத்தரங்குகள்" மட்டும் 100 சதவிகிதம் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன.

[2010 மே 4

வருடவாரியான தடுப்பூசி பணி விவரம் (2007–08 முதல் 2009–10)

(டோஸ்கள் – இலட்சத்தில்)

வ. எண்	தடுப்பூசி	2007–08		2008–09		2009–10	
		குறியீடு	சாதனை	குறியீடு	சாதனை	குறியீடு	சாதனை
1	அடைப்பான்	30.00	31.51	31.95	35.15	25.00	27.42
2	சப்பை நோய்	20.00	20.00	20.90	21.11	6.00	6.37
3	தொண்டை அடைப்பான்	20.00	20.00	16.23	20.46	4.00	4.00
4	கோமாரி நோய்	83.50	82.06	183.00	169.14	192.00	110.00
5	ஆட்டுக்கொல்லி	60.00	43.44	81.82	55.77	15.00	15.00

அஸ்காட் – நிதி ஒதுக்கீடு

வ. எண்	வருடம்	திட்டச் செலவு (ரூ. இலட்சத்தில்)
1	2007-08	824.77
2	2008-09	1,869.85
3	2009-10	2,121.25

இத்துறையில், நோய்க்கு எதிரான தடுப்பூசிப் பணிகள், மாநிலத்தில் உள்ள மொத்த கால்நடைகளில் 97 சதவிகிதம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அக்கால்நடைகள் பயனடையும் வகையில் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, நோய் கிளர்ச்சி வெகுவாக குறைந்து காணப்பட்டது. 2007-08 ஆம் ஆண்டில் நோய் கிளர்ச்சி 316 எண்ணிக்கையிலிருந்து 2008-09 ஆம் ஆண்டில் 19 ஆக குறைந்துள்ளது. இது, மேலும், 15 ஆக 2009-10 ஆம் ஆண்டில் குறைந்துள்ளது. பொருளாதார சீர்குலைவை ஏற்படுத்துவதுடன் கால்நடை வளர்ப்போருக்கு மிகுந்த இழப்பையும் ஏற்படுத்தும் கோமாரி நோயினை தடுக்கும் நடவடிக்கையாக வருடத்தில் இரண்டு முறை 2008-09ஆம் ஆண்டு தடுப்பூசிப் பணிகள் போடும் பணி மேற்கொள்ளப்பட்டதால், 2009-10 ஆம் ஆண்டு நோய் கிளர்ச்சி

2010 மே 4]

ஏதுமில்லை. அஸ்காட் திட்டத்தினை 2004-05 ஆம் ஆண்டு முதற் கொண்டு இந்த ஆண்டு வரை செயல்படுத்தியதிலிருந்து மாநிலத்தில் கால்நடைகளை தாக்கும் நோய்களின் பாதிப்புக்கள் வெகுவாக குறைந்துள்ளன என்பது புலனாகின்றது.

3. கோமாரி நோய் தடுப்புத் திட்டம்:

கோமாரி நோய் நச்சுயிரிக் கிருமிகளினால் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு தொற்று நோய் ஆகும். இந் நோயினால், பால் உற்பத்தி குறைவு, வேலைத்திறன் குறைதல், மலட்டுத்தன்மை, தோல் மற்றும் தோல் பொருட்களின் மதிப்பு குறைதல் ஆகியன ஏற்பட்டு நாட்டில் பொருளாதார சீர்குலைவை ஏற்படுத்துகிறது.

கோமாரி நோயின் தாக்கத்தினை படிப்படியாக குறைக்க, 100 சதவிகித மத்திய நிதி உதவித்திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் 2003-04 முதல் 81 வருவாய் கிராமங்களையும், 9 ஊராட்சி ஒன்றியங்களையும் உள்ளடக்கிய 23 கால்நடை மருந்தகங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கோமாரி நோய் தடுப்புத் திட்டம் – நிதி ஒதுக்கீடு

வ. எண்	வருடம்	திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)
1	2005-06	40.61
2	2006-07	12.88
3	2007-08	10.00
4	2008-09	5.00
5	2009-10	5.00

4. மாநில கோழிப் பண்ணைகளுக்கு உதவி

கிராமப்புற மக்களிடம் புழக்கடை கோழி வளர்ப்பினை ஊக்கப்படுத்தி அவர்களின் பொருளாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், குறு விவசாயிகள், நிலமற்ற தொழிலாளர்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவினருக்குக் கூடுதல் தொழில்களை உருவாக்கவும், வேலைவாய்ப்பு மற்றும் துணை வருவாயை ஈட்டவும், இத்துறை

[2010 மே 4

மத்திய மாநில பங்களிப்புத் திட்டத்தின் *(80:20)* கீழ் காட்டுப்பாக்கத்தில், கோழிப் பண்ணை செயல்படுத்தி வருகிறது, இப்பண்ணையின் அபிவிருத்திக்காக ரூ.*68.00* இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதல் தவணையாக ரூ.*34.00* இலட்சம் *2008-09*-ல் விடுவிக்கப்பட்டது. மேலும், அபிசேகப்பட்டியில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், பறவைகளை வழங்கவும் ரூ.*34.00* இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

5. ஒருங்கிணைந்த மாதிரி வரைவுத் திட்டம்:

இத்திட்டம், *1977*ஆம் ஆண்டு முதற்கொண்டு மத்திய மாநில பங்களிப்புத் திட்டத்தின் கீழ் *50:50* என்ற விகிதத்தில் நிதியுதவி அளிக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முக்கிய கால்நடைப் பொருட்களான பால், இறைச்சி மற்றும் முட்டை ஆகியவற்றை மதிப்பிடவும், கால்நடை பராமரிப்பு தொடர்பான அன்றாட பணிகள் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளவும், ஒருங்கிணைந்த மாதிரி வரைவு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கால்நடைப் பொருட்கள் எதிர்கால திட்டங்களில் மிகுந்த முக்கியத்துவத்தை அடைந்துள்ளபடியாலும், இந்த ஆய்வு பெரும் பொருளாதார குறியீடுகளில் ஒன்றாக உள்ளதாலும், மேற்கண்ட ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.

2009-10 ஆம் ஆண்டு பருவங்கள் வாரியான பால், முட்டை, இறைச்சி ஆகிவற்றின் உற்பத்தி மதிப்பீடு கீழ்வருமாறு:

விபரம்	கோடைக் காலம்	மழைக் காலம்	குளிர் காலம்	மொத்தம்
பால் (ஆயிரம் டன்களில்)	1835.842	2040.977	1901.293	5778.112
முட்டை (இலட்சம் எண்களில்)	31499.346	37775.445	39201.074	108475.865
இறைச்சி (ஆயிரம் டன்களில்)	149.311	161.801	149.674	460.786

2010 மே 4]

6. கால்நடை கணக்கெடுப்பு

கால்நடைகள் குறைந்த ஆண்டுகளே உயிர்வாழ்வதை கருத்திற்கொண்டு, கால்நடைகள், கோழிகள், வேளாண் உபகரணங்கள், மீன்வளம் ஆகியவைகளின் மீதான கணக்கெடுப்பு 1951ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை எடுக்கப்படுகிறது.

கால்நடை பராமரிப்புச் புள்ளிவிவரங்கள் ஓர் அடிப்படை விவரங்களாகவும் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் குறித்து களப்பணிகளில் திட்டமிடுவதற்கும், வளர்ச்சித் திட்டங்களை கண்காணிப்பதற்கும் முக்கிய அடித்தளமாகவும் உள்ளது. 2007ஆம் ஆண்டில், 18-வது கால்நடை மற்றும் கோழிகளின் கணக்கெடுப்புப் பணி 15-10-2007 அன்றைய நாளினை பார்வை நாளாகக் கொண்டு எடுக்கப்பட்டது.

17-வது கால்நடை கணக்கெடுப்புப் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

இனங்கள்	17-வது கால்நடை கணக்கெடுப்பு 2004 (இலட்சத்தில்)
பசுவினம்	91.41
எருமையினம்	16.58
செம்மறியாட்டினம்	55.94
வெள்ளாட்டினம்	81.77
குதிரைகள் மற்றும் மட்டக்குதிரைகள்	0.25
பன்றியினங்கள்	3.21
மொத்த கால்நடைகள்	**249.42**
வீட்டு நாய்கள்	27.16
முயல்கள்	0.67
மொத்த கோழியினங்கள்	**865.91**

[2010 மே 4

7. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம், 1975 ஆம் ஆண்டு முதல் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் கால்நடை பராமரிப்புத் துறைக்கு 2008-09 ஆம் ஆண்டில் மத்திய அரசின் திட்டக்குழு ரூ.39.50 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. உதகமண்டலத்திலுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையில் 4 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு இத்திட்டத்தின்மூலம் மின் வேலி அமைக்கப்பட்டுள்ளது. உதகமண்டலம் கால்நடை மருத்துவமனையில் விவசாயிகள் பயிற்சி மையம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தும்மநட்டி கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. கடந்த 4 ஆண்டுகளாக உதகமண்டலம் கால்நடை நோயில்லாப் பகுதியாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

8. கூட்டுறவுச் சங்கங்கள்

1964 ஆம் ஆண்டு முதல் ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் இத்துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் செயல்முறைப் பதிவாளராக கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையர் உள்ளார். நலிவுற்ற பிரிவினரை சங்கத்தின் உறுப்பினர்களாக்கி அவர்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதே இச்சங்கங்களின் நோக்கமாகும். 31-03-2010 அன்று உள்ளபடி இத்துறையில் மொத்தம் 268 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு. 81 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

நோய்த் தடுப்பு, கண்டறிதல், கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழித்தல்

"நலமான கால்நடைகள் நலமான நாட்டை உருவாக்கும்". பல்வேறு கால்நடை நோய்கள் உற்பத்தி குறைவு மற்றும் இறப்பை ஏற்படுத்துவதால், தீவன பாதுகாப்பு மற்றும் கிராமிய பொருளாதாரத்தை நேரிடையாக பாதிக்கின்றன. நுண்ணுயிர் மற்றும் நச்சுயிரி நோய்கள், பெரும் நோய் இறப்பு மற்றும் பாதிப்பையும், ஒரணு மற்றும் குடல்-இரைப்பை ஒட்டுண்ணி நோய்கள் உற்பத்தி இழப்பையும் ஏற்படுத்துகின்றன. கால்நடை நோய்களைத் தடுப்பது மற்றும் அறவே ஒழிப்பது இலாபகரமான கால்நடை உற்பத்திக்கு மட்டுமின்றி நமது கால்நடைகள் மற்றும் கால்நடை பொருட்கள் உலக சந்தையில் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும் அத்தியாவசியமாகும். முறையான

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 4]

நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டு இறுதியாக அறவே ஒழிக்கப்படும். மாநிலத்தில் கால்நடை நோய்களை எதிர்த்து போராட கால்நடைகளில் நிலவிவரும் நோய்த்தாக்கம் மற்றும் பரவியல் நிலவரம் பற்றிய தகவல் அவசியமானதாகும். இத்தகவல், நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்துதல் நடவடிக்கைகளை திட்டமிடவும், நிதி, கால்நடை மருத்துவ ஆதாரங்கள் மற்றும் மனித சக்தியை முழுமையான அளவில் பயன்படுத்திடவும் அடித்தளமாக அமையும்.

அ) நோய்த் தடுப்பு

கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை

இத்துறையில், கால்நடை மற்றும் கோழியினங்களில் நோய்த் தடுப்பு பணிக்கு அதிகபட்ச முக்கியத்துவம் தரப்பட்டு வருகிறது. கால்நடை மற்றும் கோழியினங்களை காக்க தடுப்பூசி மற்றும் உயிர்காக்கும் மருந்துகள் வேலூர் மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையத்தில், தற்போது 5 வகையான நுண்ணுயிர் தடுப்பு மருந்துகள், 5 வகையான நச்சுயிர் தடுப்பு மருந்துகள், 5 வகையான ஆய்வுக் கலவைகள், 4 வகையான மருந்துகள் மற்றும் ஒரு கரைப்பான் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன. இத்துடன், இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழக உதவியுடன், அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம், கோமாரி நோய்க் கிளர்ச்சியை ஆய்வு செய்தல், நச்சுயிரியை வகைப்படுத்துதல் ஆகியவற்றையும் இந்நிலையம் மேற்கொண்டுவருகிறது.

இந்நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் தடுப்பூசிகள் மற்றும் நோய் ஆய்வுக் கலவைகள்

வ. எண்	விவரம்	2007–08	2008–09	2009–10	
				இலக்கு	சாதனை
1.	சப்பை நோய் தடுப்பூசி (டோஸ் – இலட்சத்தில்)	28.46	23.72	10.00	10.08
2.	தொண்டை அடைப்பான் தடுப்பூசி (ஆலம்) (டோஸ் – இலட்சத்தில்)	30.24	18.98	10.00	7.12
3.	துள்ளுமாரி தடுப்பூசி (டோஸ் – இலட்சத்தில்)	2.37	1.19	2.00	1.78

[2010 மே 4

வ. எண்	விவரம்	2007–08	2008–09	2009–10	
				இலக்கு	சாதனை
4.	அடைப்பான் தடுப்பூசி (டோஸ் – இலட்சத்தில்)	43.16	35.56	30.00	23.62
5.	புருசெல்லா அபார்டஸ் தடுப்பூசி (டோஸ் – இலட்சத்தில்)	0.08	0	தேவைக்கேற்ப	0
6.	கோழிக்கழிச்சல் 'கே' தடுப்பூசி (டோஸ் – இலட்சத்தில்)	678.04	516.33	500.00	549.35
7.	கோழிக்கழிச்சல் 'எப்' தடுப்பூசி (டோஸ் – இலட்சத்தில்)	0	10.90	தேவைக்கேற்ப	0
8.	வாத்து கழிச்சல் தடுப்பூசி (டோஸ் – இலட்சத்தில்)	111.94	110.00	80.00	165.37
9.	இராணிக்கெட் லசோட்டா தடுப்பூசி (டோஸ் – இலட்சத்தில்)	105.20	144.00	தேவைக்கேற்ப	0
10.	ஆட்டம்மை தடுப்பூசி (டோஸ் – இலட்சத்தில்)	3.53	3.09	தேவைக்கேற்ப	0
11.	புருசெல்லா அபார்டஸ் பிளேட் எதிர்ப்பான் (மிலி)	1,000	1270	1500	1520
12	புருசெல்லா அபார்டஸ் சாதாரண எதிர்ப்பான் (மிலி)	10,500	4000	5000	5000
13.	புருசெல்லா அபார்டஸ் மில்க்ரிங் சோதனை எதிர்ப்பான் (மிலி)	1,000	300	1000	810
14.	சால்மோனல்லா புல்லோரம் கலர் எதிர்ப்பான் (மிலி)	0	1310	1000	2890
15.	கலிபோர்னியா மடிவீக்க நோய் கண்டறியும் வேதிப்பொருள் (மிலி)	2,300	2000	2000	5000

2009-10 ஆம் ஆண்டில், இந்நிலையத்தால் தயாரிக்கப்பட்ட தடுப்பூசி மற்றும் நோய் ஆய்வுக் கலவைப் பொருட்கள் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

இனங்கள்	உற்பத்தி 2009–2010
நுண்ணுயிர் தடுப்பு மருந்துகள்	118.30
நச்சுயிர் தடுப்பு மருந்துகள்	89.07
நோய் ஆய்வு கலவைகள்	0.49
கரைப்பான்	1.51
மருந்து பொருட்கள்	0.76
மொத்தம்	210.13

2010 மே 4]

தடுப்பூசி உற்பத்தியில் சர்வதேச தரத்தினை எய்திட, தடுப்பூசி உற்பத்தி செய்யும் ஆய்வுக்கூடங்களை நல்ல தயாரிப்பு வழிமுறைகள் தரத்திற்கு மேம்படுத்த வேண்டும். இதன் முதற்கட்டமாக, அஸ்காட் திட்டத்தின்கீழ் கோழி தடுப்பூசி உற்பத்தி ஆய்வுக்கூடம் நல்ல தயாரிப்பு வழிமுறைகள் (GMP) தரத்திற்கு மேம்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையத்தில் செயல்பட்டு வரும் மீதமுள்ள தடுப்பூசி தயாரிக்கும் ஆய்வுக்கூடம் மற்றும் தரக்கட்டுப்பாடு பிரிவு ஆகியவை நல்ல தயாரிப்பு வழிமுறைகள் தரத்திற்கு உயர்த்தப்பட உள்ளன.

ஆ) நோய் கண்டறிதல்

"கால்நடைகளின் நலம் தேசிய வளம்" என்ற கருத்திற்கேற்ப, கால்நடைகளின் நோய் கண்டறிதல் தொடர்பான முறைகளில் இத்துறை மிகுந்த கவனத்தை செலுத்தி வருகிறது. நோய்க் கிளர்ச்சி ஏற்பட்டு அதனால் வேளாண் குடிமக்களின் கால்நடைகளின் உற்பத்தி குறைவும், கால்நடைகள் இழப்பும், அதனால் பெரும் பொருளாதார இழப்பும் ஏற்படுகிறது. நோய் கிளர்ச்சிகள் பற்றிய முன்னெச்சரிக்கை அறிகுறிகளை அளிக்க ஓர் நோய் கடுங்கண்காணிப்பு முறை அவசியமாகின்றது. இம்முறை, நோய்த்தொற்று அறிவியல் முறையாக நோய்கள் பகிர்வு மற்றும் உடல் நலக் கேட்டிற்கான பிரச்சினைகள் எவற்றால் உண்டாகின்றன என்பதனை உறுதி செய்திட உதவுகிறது. இதன் பொருட்டு, இத்துறையில் நோயின் அறிகுறிகள் மற்றும் நோய் தாக்கம் குறித்து அறிந்துகொள்ள மாநிலத்தில் 20 கால்நடை நோய் புலனாய்வு பிரிவுடன் இணைக்கப்பட்ட நான்கு நடமாடும் ஆய்வுக்கூடங்கள் மதுரை, வேலூர், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் ஆண்டகலூர்கேட்டிலும் மற்றும் ஈரோட்டிலும் கோழி நோய் கண்டறியும் இரண்டு ஆய்வுக்கூடங்கள் மத்திய தொடர்பு ஆய்வுக்கூடத்தின் தொழில்நுட்ப ஆலோசனையுடன் இயங்கி வருகின்றன.

i) கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள்

மாநிலத்தில் கீழ்க்கண்ட 20 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் செயல்படுகின்றன.

[2010 மே 4

வ. எண்	கால்நடை நோய் புலனாய்வு பிரிவு	உள்ளடங்கிய மாவட்டங்கள்
1	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர், திருப்பூர்
2	கடலூர்	கடலூர்
3	திண்டுக்கல்	திண்டுக்கல்
4	ஈரோடு	ஈரோடு
5	காஞ்சிபுரம்	சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர்
6	கரூர்	கரூர்
7	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி
8	மதுரை	மதுரை, தேனி
9	நாகப்பட்டினம்	நாகப்பட்டினம், திருவாரூர்
10	சேலம்	சேலம், நாமக்கல்
11	சிவகங்கை	சிவகங்கை, இராமநாதபுரம்
12	தஞ்சாவூர்	தஞ்சாவூர், புதுக்கோட்டை
13	தூத்துக்குடி	தூத்துக்குடி
14	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர்
15	திருநெல்வேலி	திருநெல்வேலி, கன்னியாகுமரி
16	உதகமண்டலம்	உதகமண்டலம்
17	வேலூர்	வேலூர், திருவண்ணாமலை
18	விழுப்புரம்	விழுப்புரம்
19	விருதுநகர்	விருதுநகர்
20	தருமபுரி	தருமபுரி

கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளின் முக்கிய பணிகளாவன:

- *நோய் கண்டறியும் பணிகளில் களப் பணியாளர்களுக்கு உதவிடல்.*
- *நோய் கிளர்ச்சிகளை கண்காணித்தல் மற்றும் நோய் கிளர்ச்சி ஏற்படும் காலங்களில் நோயினை கட்டுப்படுத்துவதில் களப்பணியாளர்களுக்கு உதவிடல்.*
- *கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு பகுதிகளில் உள்ள கால்நடைகளின் உடல் நலன்களை கண்காணித்தல்.*

TRUTH ALONE TRIUMPHS

2010 மே 4]

- ❖ ஊநீரில் கடுங்கண்காணிப்பு.
- ❖ பறவைக் காய்ச்சல் நோயினை கடுங்கண்காணிப்பு செய்தல்.

இவையன்றி கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள், பறவைகள் சரணாலயம் மற்றும் நீர் நிலைகளை சுற்றி இடம் பெயரும் பறவைகளின் நடமாட்டத்தை கூர்ந்து கவனிப்பதுடன் பறவைக் காய்ச்சல் நோயினால் பெருமளவில் பறவைகள் இறந்து காணப்படுகின்றனவா என்பதையும் கண்காணிக்கின்றன. 2009-10ஆம் ஆண்டில், 3,64,239 மாதிரிகள் இப்பிரிவுகளில் பரிசோதிக்கப்பட்டன.

ii) கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள்:

கோழிகள் அதிகமாக வளர்க்கப்படும் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு 2 கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள், ஒன்று நாமக்கல் மாவட்டத்தில் ஆண்டகலூர்கேட்டிலும் மற்றொன்று ஈரோட்டிலும் செயல்பட்டு வருகின்றன. இவை, பிரேத பரிசோதனை செய்வது, மலம், இரத்தம் மற்றும் இதர மாதிரிகளை பரிசோதனை செய்து நோய்களை துல்லியமாக கண்டறிவதில் ஈடுபட்டுள்ளன. இத்துடன் நோய்த் தடுப்பு, நோய் கண்டறிவது மற்றும் பல்வேறு தொற்று நோய்கள் மற்றும் ஒட்டுண்ணி நோய்களை கட்டுப்படுத்துவது பற்றி விவசாயிகள் அறிய தொழில் நுட்ப உதவிகளை அளித்து வருகின்றன. 2009-10 ஆம் ஆண்டில் 1,285 கோழிப் பண்ணைகளும், 1,023 கிராமங்களும் பார்வையிடப்பட்டு, 7,581 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டன.

கோழியினங்கள் வழக்கமில்லாத வகையில் இறப்பின், மாதிரிகளை சேகரித்து அவற்றை ஆய்வு செய்து கண்காணிக்க தற்போது மைய அரசு ஒவ்வொரு மாநிலத்திலும் BSL II வசதியுடைய ஆய்வுக்கூடங்களை நிறுவ முடிவு செய்துள்ளது. மாநிலத்திலுள்ள கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடங்களான ஆண்டகலூர் கேட் மற்றும் ஈரோடு ஆகிய 2 இடங்களில் உள்ள ஆய்வுக் கூடங்களை BSL II தரத்திற்கு உயர்த்தப்படவுள்ளன. BSL II தரத்திற்கு ஆய்வுக் கூடத்தை நிறுவ ஒவ்வொரு கோழி நோய் கண்டறியும் ஆய்வுகூடத்திற்கும் ரூ.22.00 இலட்சம் கீழ்கண்ட இனங்களில் செலவு செய்யப்படவுள்ளது.

[2010 மே 4

(ரூபாய் இலட்சத்தில்)

1. ஆய்வுக்கூடத்தின் தரத்தினை மாற்றி அமைக்க (BSL II)		ரூ.8.00
2. ஆய்வுக்கூட உபகரணங்கள்	...	ரூ.12.50
3. ஆய்வுக்கூடத்திற்கு தேவையான உபபொருட்களின் தொடர் செலவினங்கள்		ரூ.1.50

தரம் உயர்த்தப்பட்ட ஆய்வுக்கூடம் ஊநீர் மாதிரிகளை முன்னதாக ஆய்வு செய்து பறவைக் காய்ச்சல் தொற்று உள்ளதா என்பதை உறுதி செய்து, அவ்வாறு இருப்பின் மத்திய தொடர்பு ஆய்வுக் கூடத்திற்கு மேலும் உறுதி செய்ய அனுப்பி வைக்கப்படும்.

iii) மத்தியத் தொடர்பு ஆய்வுக்கூடம்

தலைமை ஆய்வகமான சைதாப்பேட்டையிலுள்ள மத்தியத் தொடர்பு ஆய்வுக்கூடம், கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் கோழிநோய் ஆய்வுக் கூடங்களின் பணிகளை ஒருங்கிணைக்கவும், களப்பணியாளர்களுக்கு நோய் ஆய்வுத் தொடர்பான பணிகளில் உதவுவதிலும் ஈடுபட்டு வருகிறது. மத்தியத் தொடர்பு ஆய்வுக்கூடம் ஒன்று சென்னை, சைதாப்பேட்டையிலுள்ள பன்முக மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. காலத்தே நோய் கண்டறிதல் மற்றும் உறுதி செய்வதன் மூலம் குறித்த கால சிகிச்சை மற்றும் தடுப்பூசி ஆகியவற்றை வழங்கி நோய்களை கட்டுப்படுத்துவதும் கால்நடைகளை பாதுகாப்பதும் எளிதாகிறது. 2009-10 ஆம் ஆண்டில், 2,155 மாதிரிகள் களத்திலிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு, முடிவுகள் அனுப்பப்பட்டன. ஆட்டுக் கொல்லி, கன்று வீச்சுநோய் மற்றும் ஜோன்ஸ் நோய் போன்றவைகளுக்கான எலிசா சோதனைகளையும், பண்ணை கால்நடைகளில் காசநோய், ஜோன்ஸ் நோய் மற்றும் பாலின தொற்று நோய்களை அறியும் சோதனைகளையும், கன்று வீச்சு நோய், மாட்டின மூளை நோய் கடுங்கண்காணிப்பு பணிகளையும் ஆய்வுக்கூடம் மேற்கொண்டு வருகிறது.

இவ்வாய்வுக்கூடம், கால்நடை ஏற்றுமதி பொருட்களை பரிசோதித்து நலச்சான்றிதழ் வழங்குகிறது. பறவைக் காய்ச்சல் நோய் குறித்து கோழிப் பண்ணையாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், கால்நடை மருத்துவர்கள், சார்பு தொழில் நுட்பப்

2010 மே 4]

பணியாளர்கள் மற்றும் துரித செயல்பாட்டுக் குழுக்கள் ஆகியோருக்கு பறவைக் காய்ச்சல் நோய் ஏற்படும் அவசர காலங்களில் எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்து விழிப்புணர்வு மற்றும் பயிற்சியையும் இவ்வாய்வுக் கூடம் அளிக்கிறது. மத்திய அரசின் அறிவுரையின்படி, 2009-10 ஆம் ஆண்டில் பெங்களூரிலுள்ள தெற்கு மண்டல நோய் ஆய்வுக் கூடத்திற்கு 12,547 மாதிரிகள் பறவைக்காய்ச்சல் இல்லை என உறுதி செய்ய அனுப்பப்பட்டுள்ளன.

இ) நோய் கட்டுப்படுத்துதல் மற்றும் அறவே ஒழித்தல்:

விவசாயிகளுக்கு பெரும் பொருளாதார இழப்பினை ஏற்படுத்தும் பல்வேறு கால்நடை நோய்களிலிருந்து கால்நடைகளை காத்திட முறையான மற்றும் காலமுறைப்படி தடுப்பூசிப் பணி மேற்கொள்வது அவசியமாகின்றது. இப்பணிக்கு துறை அதிக முக்கியத்துவம் கொடுத்து பாதிக்கப்படும் எனக் கருதப்படும் கால்நடைகள் மற்றும் கோழி இனங்களுக்கு இத்திட்டத்தின்கீழ். தடுப்பூசிப் பணி மேற்கொண்டு வருகிறது. அனைத்து கால்நடை மருத்துவ வசதிகளும் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள், மக்கள் தொடர்பு முகாம்கள் மற்றும் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்துவதற்காக மாநிலங்களுக்கு உதவி திட்டம் (ASCAD) ஆகியவற்றின் மூலம் வழங்கப்படுகின்றன.

கால்நடை நோய்களைத் தடுப்பது மற்றும் அறவே ஒழிப்பது இலாபகரமான கால்நடை உற்பத்திக்கு மட்டுமின்றி, நமது கால்நடைகள் மற்றும் கால்நடை பொருட்கள் உலக சந்தையில் ஏற்றுக்கொள்ளவும் அத்தியாவசியமாகும். தொற்று நோய்களால் பன்னாட்டு ஏற்றுமதி சந்தையை நமது நாடு முழுமையாக பயன்படுத்திக்கொள்ள இயலவில்லை. ஏனெனில், இந்தியக் கால்நடைகள் மற்றும் கால்நடைப் பொருட்கள் ஏற்றுமதியைப் பெருக்க பன்னாட்டு விலங்கின நோய் பாதுகாப்பு அமைப்பு (OIE) என்ற பன்னாட்டு நிறுவனம் நிர்ணயித்துள்ள விலங்கியல் சுகாதார குறிப்பீடு மற்றும் தரத்தினை உறுதி செய்வதன் மூலம்தான் அவை உலக சந்தையில் நுழைந்து போட்டியிட இயலும்.

2009-10 ஆம் ஆண்டில் 469.80 இலட்சம் தடுப்பூசிகள் போடப்பட்டன. 2010-11 ஆம் ஆண்டில் 500.00 இலட்சம் தடுப்பூசிகள் போடும் பணி கால்நடை நிலையங்கள் மற்றும் இதரத் திட்டங்களின் வாயிலாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

[2010 மே 4

தடுப்பூசிகள்

வ. எண்	தடுப்பூசிகள்	இலக்கு 2009–10 (இலட்சத்தில்)	சாதனை (2009–10) (இலட்சத்தில்)
1	தொண்டை அடைப்பான்	4.00	5.81
2	சப்பை நோய்	6.00	8.79
3	அடைப்பான்	25.00	29.04
4	கோமாரி நோய்	192.00	99.96
5	ஆட்டுக் கொல்லி	15.00	16.90
6	துள்ளுமாரி	2.40	2.25
7	ஆட்டம்மை	1.80	2.19
8	கோழிக்கழிச்சல்	273.54	301.45
9	இதரவை	1.75	3.41
	மொத்தம்	**521.49**	**469.80**

நோய் அதிகம் தாக்கக் கூடிய பகுதிகளிலுள்ள பாதிப்புக்குள்ளாகக் கூடிய கால்நடைகளுக்கு தடுப்பு நடவடிக்கையாக தடுப்பூசிப் பணி காலமுறைப்படி மேற்கொள்ளப்படுவதால் மாநிலத்தில் நோய்க்கிளர்ச்சி குறைந்துள்ளது. வெக்கை நோய் அறவே ஒழிப்பு, நுண்ணுயிர் மற்றும் நச்சுயிர் நோய்கள் கட்டுப்படுத்தல் மற்றும் பல்வேறு இதர நடவடிக்கைகளால் நமது மாநிலம் பெரும்பாலான கால்நடை நோய்களில் இருந்து விடுதலை பெற்று முன்னேறிக் கொண்டுள்ளது.

கால்நடை பொது சுகாதாரம்:

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திலும், மனிதர்களின் பயன்பாட்டிற்கான பொருட்களை உற்பத்தி செய்வதிலும் கால்நடை மற்றும் கோழியினங்களுக்கான மருத்துவ சேவை முக்கிய பங்காற்றுகிறது. செல்லப் பிராணிகள், பறவைகள் மற்றும் வன விலங்குகள் மனித இனத்திற்கு உற்ற துணையாகவும், பொழுதுபோக்கிற்காகவும் உள்ளதால் அவற்றின் சுகாதாரம் மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. விலங்குகளுக்கும் விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கும் ஏற்படும் தொற்று மூலம்

2010 மே 4]

பரவும் நோய்கள் மிருக மனித தொற்று எனப்படுகின்றன. இதுவுமல்லாமல், மனித இனத்துடன் பழக்கத்திலுள்ள அனைத்து விலங்குகள் மற்றும் பறவைகள் ஆகியவற்றின் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் மிருக மனித தொற்று நோய்கள் மனித இனத்திற்கு பரவுவதைத் தடுப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. இது குறித்த சில பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அ) வெறிநாய்க்கடி தடுப்புத் திட்டம்

வெறிநாய்க்கடி, மனித மற்றும் விலங்குகளிடையே பரவும் நோய்களில் மிகவும் முக்கியமான நுண்ணுயிரி நோயாகும். இந்நோய், பெரும்பாலும் தெருநாய்க் கடியினால் மட்டுமே பரவுகிறது. மேலும், வெறிநாய்கள் கடிப்பதால் மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் மற்றும் வளர்ப்பு நாய்களுக்கும் இந்நோய் தொற்றுகிறது. நாளுக்கு நாள் வெறிநாய்களின் எண்ணிக்கை அதிகமாவதால், இந்நோய் மாநகரங்கள், நகர்ப்புறங்கள் மற்றும் கிராமப்புறங்களில் அதிகமாக காணப்படுகிறது. பாதிக்கப்பட்ட மிருகங்களின் உமிழ்நீரில் இந்த நுண்ணுயிரி அதிகமாக உள்ளன. எனவே, ஆழமாகக் கடித்தால் மட்டுமே நோய் பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. இவ்வாறாக வெறிநாய்களை அழிப்பதின் மூலமே மனிதர்கள் மற்றும் இதர கால்நடைகளுக்கு இந்நோய் தொற்றுவதை முழுமையாகத் தடுக்க இயலும். இக்குறிக்கோளுடன் வெறிநாய்க்கடி நோய்த் தடுப்புப் பிரிவுகள் மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

இத்திட்டப் பிரிவுகளின் முக்கியப் பணிகள்

- முறையான மற்றும் காலமுறைப்படி வீடுவீடாகச் சென்று வளர்ப்பு நாய்களுக்கு மருந்துக்கு உரிய கட்டணம் வசூலிப்பதன் பேரில் வெறிநாய்த் தடுப்பூசி போடுதல்.
- நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் நாய்களுக்கு இலவசமாக தடுப்பூசி போடுதல்.
- பொதுமக்களிடையே இந்நோய் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள், விளக்கக் குறிப்புகள் விநியோகித்தல் மற்றும் நாய் கண்காட்சி நடத்துதல் மூலமாக தகுந்த விளம்பரம் மற்றும் பிரச்சாரம் செய்தல்.

[2010 மே 4

2009-10 ஆம் ஆண்டில், மேற்கண்ட மையங்களில் மொத்தம் 6,438 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

ஆ) பெருமளவில் தடுப்பூசி போடுதல் மற்றும் குடற்புழு நீக்கம்

தமிழகத்தில் பராமரிக்கப்படும் கோழிகள் மற்றும் கால்நடைகளுக்கு முறையாக தடுப்பூசி போடுதல் மற்றும் குடற்புழு நீக்கம் ஆகிய பணிகளை இத்துறை இலவசமாக செய்து வருகிறது. எனவே, மனிதர்களிலிருந்து விலங்கிற்கும் மிருக மனித தொற்று நோய்களான அடைப்பான், கன்று வீச்சு, நாடாப்புழு, ஸ்டிராங்கைலாசிஸ் (Strongylosis), ஆம்பிஸ்டோமியாசிஸ் (Amphistomiasis) போன்ற அபாயகரமான நோய்கள் மேலும் பரவாமல் தடுக்கப்படுகிறது. மேலும் மனிதனால் நிலையான அல்லது இடையூட்டுயிராகப் பரப்பப்படும் ஒட்டுண்ணிகளின் வாழ்க்கை சுழற்சி தடைபடுத்தப்படுகிறது.

2009-10 ஆம் ஆண்டில், 164.99 இலட்சம் கால்நடைகள் மற்றும் 303.21 இலட்சம் கோழிகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இவையன்றி, 34.15 இலட்சம் பசுவினங்கள், 4.93 இலட்சம் எருமைகள், 107.55 இலட்சம் செம்மறியாடுகள், 95.36 இலட்சம் வெள்ளாடுகள், 2.56 இலட்சம் நாய்கள் மற்றும் 4.49 இலட்சம் கோழிகள் போன்றவைகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

இ) இறைச்சி தரம் ஆய்வு

தமிழகம் முழுவதும் உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் 107 பதிவு செய்யப்பட்ட இறைச்சிக்கூடங்களில் முறையான இறைச்சி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் இறைச்சியை உண்ணும் பொதுமக்கள், நாடாப்புழு மற்றும் தசை பகுதிக்குள் வளரும் ஹைடாடிடோசிஸ், டிரைகினோசிஸ் மற்றும் டினியாசிஸ் போன்ற ஒட்டுண்ணி நோய்களிலிருந்து காக்கப்படுகிறார்கள்.

2008-09 ஆம் ஆண்டில், 1.914 இலட்சம் மாட்டினம், 34.948 இலட்சம் ஆட்டினம் மற்றும் 0.140 இலட்சம் பன்றிகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளன. மேலும், 20,541 டன் மாட்டிறைச்சி, 41,821 டன் ஆட்டிறைச்சி மற்றும் 670 டன் பன்றியிறைச்சி ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

2010 மே 4]

விரிவாக்கப் பணிகள்

விரிவாக்கப் பணியும், பிரச்சாரப் பணியும் கால்நடை பராமரிப்பு முறைகளில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்கள் குறித்து அறிந்துகொள்வதற்கும், நோய்குறித்த ஆய்வுக்கும் முக்கியமான ஒன்றாக உள்ளதோடு, விவசாயிகள் நாளுக்கு நாள் சந்திக்கும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நோய்களைத் தடுப்பதற்கும் பல்வேறு களப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் முக்கிய பங்காற்றுகிறது. மேலும், இத்துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து மக்களுக்கு வெளிப்படையான தகவல்கள் இதன் மூலம் கிடைக்கும்.

இத்துறை, உள்ளூரில் நடைபெறும் திருவிழாக்கள், கண்காட்சிகள் மற்றும் இதர முக்கிய நிகழ்வுகளில் வெவ்வேறு இடங்களில் பொருட்காட்சிகளை நடத்தி பொதுமக்களுக்கு கால்நடை பராமரிப்பில் ஏற்பட்டுள்ள நவீன தொழில்நுட்பங்களையும், கால்நடை சுகாதாரத்தைக் குறித்தும் விளக்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும், சென்னையில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சி மற்றும் கூட்டுறவு வார விழாக்கள் போன்றவற்றில் இத்துறை பங்கேற்கிறது. அகில இந்திய வானொலி, பத்திரிக்கைகள் மற்றும் தொலைக்காட்சி போன்ற மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் கால்நடை பராமரிப்பின் நவீன தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டு வருகின்றன. இவையன்றி, நவீன கால்நடை பராமரிப்பு நடவடிக்கைகள் குறித்தும் புதிய நோய்கள் குறித்தும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள், பொருட்காட்சிகள், திருவிழாக்கள் மற்றும் சந்தைகள் போன்ற இடங்களில் விவசாயிகளுக்கு துண்டு பிரசுரங்கள், கையேடுகள், செய்திக் கதிர்கள் மற்றும் தொழில் நுட்ப வெளியீடுகள் ஆகியவற்றை விநியோகித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. அகில இந்திய வானொலி மூலம் வாரந்தோறும் கால்நடை பராமரிப்பு குறித்து விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

2009-10 ஆம் ஆண்டில், பொருட்காட்சிகளில் கலந்து கொள்வதற்காக அரசு கால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூ.3.13 இலட்சம் ஒதுக்கீடு செய்ததை அடுத்து, இத்துறை, கீழ்க்கண்ட பொருட்காட்சிகளில் கலந்துகொண்டுள்ளது.

[2010 மே 4

- ✓ திண்டுக்கல்-கொடைக்கானல் - கோடை விழா
- ✓ ஏற்காடு - கோடை விழா
- ✓ கிருஷ்ணகிரி - மாங்கனி விழா
- ✓ விழுப்புரம்-கல்வராயன் மலை - கோடை விழா
- ✓ கடலூர் - வெள்ளி கடற்கரை விழா
- ✓ வேலூர்- ஏலகிரி - கோடை விழா
- ✓ திருவண்ணாமலை - தீபத் திருவிழா
- ✓ சென்னை-தீவுத் திடல் - அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி
- ✓ மதுரை - அரசு - சித்திரை பொருட்காட்சி
- ✓ திருநெல்வேலி - அரசு பொருட்காட்சி

சென்னையில் நடைபெற்ற குடியரசு தினவிழா அணிவகுப்பு அலங்கார ஊர்திக்காக இத்துறைக்கு ரூ.79,860/-ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து, இத்துறையின் சாதனைகளை விளக்கும் வகையிலான ஊர்தி அணிவகுப்பில் பங்கேற்றது.

பிராணி நலத் திட்டங்கள்

“ஒரு நாட்டின் பெருமிதம் மற்றும் ஒழுக்கத்தின் முன்னேற்றம், அங்கு விலங்குகளைக் கையாளுவதைக்கொண்டு எடைபோட முடியும்” என்று காந்தியடிகள் கூறியுள்ளதன் அடிப்படையில், கால்நடைகள் கொடூரமான முறையில் நடத்தப்படுவதைத் தடுக்கவும், அவற்றை மனிதாபிமான முறையில் நடத்தவும் தமிழக அரசு பிராணிகள் நல வாரியத்துடன் ஒருங்கிணைந்து கீழ்க்காணும் மூன்று வழிகளில் இப்பிரச்சினைகளைக் களைய செயல்பட்டு வருகிறது.

- ○ சந்தைகள்
- ○ ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டுசெல்லுதல் (பயணங்கள்)
- ○ இறைச்சிக் கூடங்கள்

பிராணிகள் வதைத் தடுப்பு சட்டம், 1960 பிரிவு 38 மற்றும் பிராணிகள் வதைத் தடுப்பு திருத்திய விதிகள் 2001-ன்படி,

2010 மே 4]

தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் பிராணிகள் வதைத் தடுப்பு சங்கம் கீழ்வரும் குறிக்கோள்களுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- மாவட்டத்திலுள்ள பாதிக்கப்படும் விலங்குகளை மீட்டல், பாதுகாத்தல் மற்றும் பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம், 1960 ஆகியவற்றை அமல்படுத்துதல்.
- விலங்குகளை வதைப்பவர்கள்மீது வழக்கு பதிவு செய்து தண்டனை பெறும் பொருட்டு அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துதல்.

தமிழ்நாட்டில் இந்திய பிராணிகள் நல வாரிய அங்கீகாரத்துடன் 92 பிராணிகள் நல அமைப்புகள் பல்வேறு பிராணிகள் நல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. கால்நடைகள் கொடூரமான முறையில் நடத்தப்படுவதைத் தடுக்க அரசு, மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்களை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு ஜல்லிக்கட்டு முறைப்படுத்துவதற்கான சட்டம், 2009

கடந்த 400 ஆண்டுகளுக்கு மேலாக, தமிழகத்தின் தென் மாவட்டங்களில், ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் மற்றும் அறுவடை காலங்களில் நடைபெறும் திருவிழாக் கொண்டாட்டங்களில் ஒரு பகுதியாக ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. மாவட்ட நிர்வாகத்தின் கண்காணிப்பில் இவை நடத்தப்பட்டு வருகின்றன.

கால்நடைகள், ஜல்லிக்கட்டில் பங்கேற்பவர்கள் மற்றும் பார்வையாளர்கள் ஆகியோரின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், ஜல்லிக்கட்டை முறைப்படுத்துவதற்காக 21.07.2009 அன்று தமிழக சட்டமன்றத்தில் ஒரு சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டு, சட்டம் இயற்றப்பட்ட பின்பு அது தமிழ்நாடு ஜல்லிக்கட்டு முறைப்படுத்துவதற்கான சட்டம் என்று 07.08.2009-ல் வெளியிடப்பட்டது. அதன்படி, அரியலூர், திண்டுக்கல், கரூர், மதுரை, நாமக்கல், புதுக்கோட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருச்சிராப்பள்ளி மற்றும் விருதுநகர் ஆகிய 12 மாவட்டங்களில் ஜனவரி முதல் மே மாதம் வரை ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்படும். அரசு, மேற்கண்ட சட்டத்தை, ஆகஸ்ட் 26, 2009 முதல் நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளது.

[2010 மே 4

2009–10-ல் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்:

1. 2006 ஆம் ஆண்டு முதல் வட மாநிலங்களில் ஏற்பட்ட பறவைக் காய்ச்சல் நோய் கிளர்ச்சியின் காரணமாக நம் நாட்டில் கோழி மற்றும் கோழி உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி குறைந்துவிட்டது. தமிழ்நாட்டில் கோழி வளர்ப்புத் தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இருந்தபோதிலும், மாநிலம் நோய் கிளர்ச்சி இல்லாமல் இருந்தது. எனவே, மாநிலத்தில் கோழி உற்பத்தியில் நோயில்லா பகுதியாக்கல் என்ற முறை திட்டமிடப்பட்டது. பன்னாட்டு விலங்கின நோய் பாதுகாப்பு அமைப்பு (OIE) என்ற நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி தயாரிக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில், மதிப்பீட்டுக் குழுவினால் கோழிப்பண்ணை அதிகமுள்ள மாவட்டங்களிலுள்ள 141 முட்டையிடும் கோழிப்பண்ணைகளில் மதிப்பீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2. கால்நடை பராமரிப்புத் துறையின் அலுவலகங்களை பிரதான கணினி மற்றும் துணை கணினி மூலம் இணைப்பதற்காக எல்காட் நிறுவனத்தின் மூலம் ரூ.44.00 இலட்சம் செலவில் 100 கணினிகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் கரூர், விருதுநகர், கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளுக்கு 5 எண்ணிக்கை பகுதி தானியங்கி பகுப்பாய்வு கருவி (Semi Auto Analyser) ரூ.12.50 இலட்சம் செலவில் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4. திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, வேலூர் ஆகிய இடங்களிலுள்ள கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவிற்கும், சென்னை சைதாப்பேட்டையிலுள்ள மத்திய ஆய்வுக்கூடத்திற்கும் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் ஒவ்வொன்றிற்கும் ஒன்று வீதம் இரண்டு இரத்த பகுப்பான்கள் (Haeme Analysers) மொத்தம் ரூ.35.00 இலட்சத்தில் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2010 மே 4]

5. திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, வேலூர் ஆகிய இடங்களிலுள்ள கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளுக்கும் மற்றும் சென்னை சைதாப்பேட்டையிலுள்ள மத்திய தொடர்பு ஆய்வு கூடத்துக்கும் தேவையான சிறுநீர் பகுப்பான்கள் (Uriscan) மொத்தம் ரூ.3.50 இலட்சத்தில் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

6. தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலம் சைதாப்பேட்டையிலுள்ள மத்திய ஆய்வுக்கூடத்திற்கு ரூ.3.00 இலட்சம் செலவில் ஒரு தட்டு தராசு (Monopan Balance) இரண்டு வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

7. சைதாப்பேட்டையிலுள்ள மத்திய ஆய்வுக்கூடத்திற்கு தமிழ்நாடு மருத்துவச் சேவை கழகம் மூலம் ரூ.5.00 இலட்சம் செலவில் ஒரு கள இருள் நுண்நோக்கி கருவி (Dark Field Microscope) வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

8. தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலம் சைதாப்பேட்டையிலுள்ள மத்திய ஆய்வுக் கூடத்திற்கு ரூ.1.00 இலட்சம் செலவில் 2 ஆழ் குளிரூட்டும் கருவி வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

9. மாநிலத்தின் தலைமை இடத்திற்கும் மாவட்டங்களிலுள்ள கால்நடை புலனாய்வுப் பிரிவுகளுக்கும் இடையில் நோய்க் கிளர்ச்சி, கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்வு குறித்த விவரங்களை உடனுக்குடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கும் வகையில் ஒவ்வொரு கால்நடை புலனாய்வுப் பிரிவிற்கும் மொத்தம் ரூ.2.00 இலட்சம் செலவில் ஒளி அச்சு (FAX) இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

10. செயற்கைமுறை கருவூட்டல் கட்டணத்தை ரூ.15/-லிருந்து ரூ.10/- ஆகக் குறைத்து அரசு வெளியிட்டுள்ளது. இது பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள ஏழை கால்நடை வளர்ப்பவர்களுக்கு பேருதவியாக இருக்கும்.

2010—11-க்கான புதிய திட்டங்கள்:

2010-11 ஆம் ஆண்டில், 100 சதவிகித மத்திய நிதி உதவித் திட்டத்தின்கீழ், துறையின் மாவட்ட கால்நடைப் பண்ணைகள்

[2010 மே 4

மற்றும் தனியார் நிலங்களில் மொத்தம் 975 ஏக்கர் நிலப்பரப்பில் பசுந்தீவன அபிவிருத்திக்காக ரூ.127.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பகுதி-2 திட்டங்கள்:

கால்நடை பராமரிப்புத் துறை, நோய் ஆய்வு மற்றும் கடுங்கண்காணிப்பு வசதிகளை வலுப்படுத்தவும், 'e' Governance வாயிலாக தொலை தொடர்பு வசதிகளை நிறுவவும் மற்றும் தேவைப்படும் கால்நடை இளைநிலையங்களுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மொத்தம் ரூ.100.15 இலட்சம் செலவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

1. தானியங்கி இரத்த பகுப்பாய்வு உபகரணப் பெட்டியுடன் (Haeme Analyser) திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தருமபுரி, காஞ்சிபுரம், விருதுநகர் மற்றும் கடலூர் ஆகிய இடங்களிலுள்ள கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளுக்கு ரூ.30.00 இலட்சம் செலவில் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2. தானியங்கி சிறுநீர் பகுப்பாய்வு உபகரணப் பெட்டியுடன் (Uriscan) திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தருமபுரி, காஞ்சிபுரம், விருதுநகர் மற்றும் கடலூர் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளுக்கு ரூ.3.00 இலட்சம் செலவில் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

3. கால்நடை பராமரிப்புத் துறை அலுவலகத்தின் கணினியுடன் தொடர்புகொள்ளும் வகையில், 87 கணினிகள் கால்நடை நிலையங்கள், பிரதம மருத்துவமனை மற்றும் கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை ஆகிய இடங்களுக்கு ரூ.39.15 இலட்சம் செலவில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

4. 144 தரம் உயர்த்தப்பட்ட கால்நடை கிளை நிலையங்கள் மற்றும் 56 கால்நடை கிளை நிலையங்கள் ஆகியவற்றிற்கு ரூ.28.00 இலட்சம் செலவில் அறையணிகள் வழங்கப்பட உள்ளன.

2010 மே 4]

2010–11 ஆம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்பட்ட தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் (NADP)

வ. எண்	திட்டங்களின் விவரம்	மொத்த செலவினம் (ரூபாய் இலட்சத்தில்)
1.	**பசுந்தீவன அபிவிருத்தி:** துறை பண்ணைகளின் மூலமாக பசுந்தீவன வளர்ச்சி புல் விதைப் பண்ணை, புடப்பை	16.35
2.	**கால்நடைகளின் உடல்நல வளர்ச்சி:** தாதுப்பொருள்கள் அளிப்பதன் மூலம் கால்நடைகளின் வளர்ச்சி	14.40
3.	**கால்நடைகளின் மரபுவழி தரம் உயர்த்துதல்** சிறு பிராணிகளின் அபிவிருத்தி	297.00
	மொத்த செலவினம்	**327.75**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 4

தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–11

முன்னுரை

தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை, தன்னாட்சி செயல்பாடு கொண்ட நிறுவனமாக தேசிய பசு மற்றும் எருமையின இனவிருத்தித் திட்டத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்த, ஏற்படுத்தப்பட்டு 09-01-2003 முதல் செயல்பட்டு வருகிறது.

பால் உற்பத்தி மற்றும் மாடுகளின் தனிப்பட்ட உற்பத்தித் திறனை மேம்படுத்துவதே இம்முகமையின் பிரதான குறிக்கோளாகும்.

செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் இயற்கைமுறை மூலம் அனைத்து இனப்பெருக்க வயதிலுள்ள பசு மற்றும் எருமைகளை இனப்பெருக்கத் திட்டத்தின்கீழ் கொண்டு வருவதும் இம்முகமையின் குறிக்கோளாகும்.

இக்குறிக்கோள்களை கீழ்க்கண்ட செயல்பாடுகளின் மூலம் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

1. விந்து உற்பத்திக்கு உயர்ந்த மரபியல் தன்மை கொண்ட தரமான காளைகளை அறிமுகப்படுத்துதல்.
2. இனவிருத்திப் பொருட்கள் மற்றும் பணிகளில் தரக்கட்டுப்பாடு.
3. தரமான மரபியல் தன்மை கொண்ட இடுபொருட்களை வழங்குதல்.
4. வம்சாவழி சோதனைத் திட்டத்தினை தீவிரமாக செயல்படுத்துதல்.
5. கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறனை பதிவு செய்து சிறந்த பசுக்களை தேர்வு செய்தல்.
6. இனப்பெருக்க வசதிகளை கீழ்க்கண்ட வழிகளில் அதிகரித்தல்:
 - ❖ கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி மற்றும் தேவையான உபகரணங்களை வழங்கி புதிய நடமாடும் செயற்கைமுறை கருவூட்டல் மையங்களைத் துவக்குதல்.
 - ❖ வீடுகளுக்கு சென்று கால்நடைகளுக்கு இனப்பெருக்கப் பணி மேற்கொள்வதை ஊக்குவித்தல்.

2010 மே 4]

❖ நிலையான செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களை நிலையான மற்றும் நடமாடும் நிலையங்களாக மாற்றி அமைக்க வசதி செய்தல்.

7. உறைவிந்து மற்றும் செயற்கைமுறை கருவூட்டலுக்கான உபகரணங்க்ளை கொள்முதல் செய்து வழங்குதல்.

8. திரவ நைட்ரஜன் சேமிப்பு மற்றும் விநியோக முறையை சீர்படுத்துதல்.

9. பாரம்பரிய உள்நாட்டு கால்நடை இனங்களைப் பாதுகாத்தல்.

10. முறையான பயிற்சிகளின் மூலம் மனிதவளத்தை மேம்படுத்துதல்.

தர உறுதி

உறைவிந்து உற்பத்தி நிலையங்களுக்கான இந்திய அரசின் குறைந்தபட்ச தர செயல்முறைகள் செயல்படுத்தப்படுகின்றன. மாநிலத்திலுள்ள உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் இந்திய அரசின் மத்திய கண்காணிப்பு குழுவினரால் காலமுறையில் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

மரபியல் மேம்பாட்டிற்கு தரமான இடுபொருட்கள் கொள்முதல்

2009-10 ஆம், ஆண்டில், சிறந்த மரபியல் தன்மை கொண்ட பொலிகாளைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட 7.99 இலட்சம் உறைவிந்து குச்சிகள் கால்நடை பராமரிப்பு துறைக்கு கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளன.

2009–10 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணிகள்

1. உறைவிந்து உற்பத்தி நிலையங்களை பலப்படுத்துதல்

அ) உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் திரவ நைட்ரஜன் சேமிப்பை பலப்படுத்த ஓசூர், மாவட்ட கால்நடைப் பண்ணை மற்றும் ஈச்சங்கோட்டை, அயலின கால்நடை பெருக்குப் பண்ணை ஆகியவற்றில், அதிக கொள்ளளவு கொண்ட இரண்டு திரவ நைட்ரஜன் சேமிப்பு கொள்கலன்கள் நிறுவப்பட்டன.

ஆ) உதகை மாவட்ட கால்நடைப் பண்ணையில் காளை கொட்டகை மற்றும் உறைவிந்து ஆய்வகத்தில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[2010 மே 4

இ) தஞ்சாவூர் மற்றும் ஈச்சங்கோட்டை அயலின கால்நடை பெருக்குப் பண்ணையில் காளை கொட்டகை சீரமைப்பு மற்றும் நோய் தொற்று பாதுகாப்பிற்கென கால்நடைகளை பிரித்து கண்காணிக்கும் (Quarantaine) வசதிகள் அமைக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஈ) உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணைக்கு 3 ஹோல்ஸ்டெய்ன் பிரிசீயன் காளைக்கன்றுகள் மற்றும் 6 கலப்பின ஜெர்சி காளைக்கன்றுகளும், ஈச்சங்கோட்டை, அயலின கால்நடை பெருக்குப் பண்ணைக்கு 2 கலப்பின ஜெர்சி காளை கன்றுகளும் கொள்முதல் செய்யப்பட்டன.

2. புதிய நடமாடும் செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களை ஏற்படுத்தி மாநிலத்தில் செயற்கைமுறை கருவூட்டல் பணி அமைப்பினை பலப்படுத்துதல்

அ) வீடுகளுக்கே சென்று செயற்கைமுறை கருவூட்டல் பணி மேற்கொள்ள 22 படித்த கிராமப்புற இளைஞர்களுக்கு, 2009-10 ஆம் ஆண்டில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இவர்களின் மூலம் புதிய நடமாடும் செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்கள் துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆ) வீடுகளுக்கே சென்று கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் பணியினை மேற்கொள்ள 13 ஓய்வு பெற்ற கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை ஆய்வாளர்களுக்குத் தேவையான இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இ) 4 கால்நடை மருத்துவ பட்டதாரிகள் மற்றும் 72 பயிற்சி அளிக்கப்பட்ட படித்த கிராமப்புற இளைஞர்களுக்கு, வீடுகளுக்கே சென்று கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் பணியினை மேற்கொள்ள தேவையான இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

3. திரவ நைட்ரஜன் விநியோக முறையினை சீர்படுத்தி பலப்படுத்துதல்

உறைவிந்து வங்கிகளில் திரவ நைட்ரஜன் சேமிப்பை பலப்படுத்த சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு பால்

2010 மே 4]

உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில், அதிக கொள்ளளவு கொண்ட இரண்டு நைட்ரஜன் சேமிப்பு கொள்கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

4. உறைவிந்து வங்கிகளை பலப்படுத்துதல்

கால்நடை பராமரிப்புத் துறையில், கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, திருவண்ணாமலை, வேலூர் மற்றும் சிட்லபாக்கம் (காஞ்சிபுரம்) ஆகிய இடங்களில் உள்ள கால்நடைப் பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி நிலையங்களில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5. இயற்கை முறை கருவூட்டலுக்காக பொலிகாளைகள்

இயற்கை முறை கருவூட்டலுக்காக, 19 பொலிகாளைகள் வாங்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

6. பயிற்சித் திட்டங்கள்:

தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை, 2009-10 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பயிற்சிகளை அளிக்க வழிவகை செய்துள்ளது:

அ) உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் பணியாற்றும் கால்நடை பராமரிப்புத் துறையின் 5 கால்நடை மருத்துவர்களுக்கும், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தைச் சார்ந்த 2 கால்நடை மருத்துவர்களுக்கும், பெங்களூர் அசர்கட்டா மத்திய உறைவிந்து உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையத்தில், 'தூய விந்து உற்பத்தி முறைகள்' பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஆ) பிடாஜ், குஜராத், சபர்மதி ஆசரம் கௌசாலாவில் கால்நடை பராமரிப்புத் துறையின் 2 கால்நடை உதவி மருத்துவர்களுக்கு மாட்டின விந்து உற்பத்தியில் தரக்கட்டுப்பாடு பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இ) பெய்ப் (BAIF) பூனேவில், கால்நடை பராமரிப்புத் துறையின் 3 கால்நடை உதவி மருத்துவர்களுக்கும், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் 1 கால்நடை மருத்துவருக்கும் பொலிகாளை மேலாண்மை, உறைவிந்து தொழில்நுட்பம் மற்றும் செயற்கைமுறை கருவூட்டல் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

[2010 மே 4

ஈ) கால்நடை பராமரிப்புத் துறையின் 48 கால்நடை மருத்துவர்களுக்கு, கால்நடைகளின் மலட்டுத் தன்மை மேலாண்மையில் தற்போதைய முறைகள் பற்றி சென்னை, கால்நடை மருத்துவ கல்லூரியில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

உ) வேலூர், சேலம், விழுப்புரம் மற்றும் மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பயிற்சி நிலையங்களில், 56 கிராம நிலைப் பணியாளர்களுக்கு கால்நடை இனப்பெருக்க மறு பயிற்சி அளிக்கப்பட்டது.

ஊ) 22 கிராமப்புற இளைஞர்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்ள பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

7. வம்சாவழி சோதனைத் திட்டம்:

நான்காவது அணியில், 13 ஜெர்சி கலப்பினக் காளைகளில் வம்சாவழி சோதனை முடிக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது அணியில், 23 ஜெர்சி கலப்பினக் காளைகளும் மற்றும் ஆறாவது அணியில், 20 ஜெர்சி கலப்பினக் காளைகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் மூலம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

8. சிறந்த கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறனை பதிவு செய்யும் திட்டம்:

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் மூலம் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2008-09 ஆண்டின் இரண்டாவது அணியில், 13 வருவாய் மாவட்டங்களில் உள்ள 7 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின்கீழ் செயல்பட்டு வரும் 150-க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில், 1,336 சிறந்த கலப்பின ஜெர்சி பசுக்கள் இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளன. திறன் உறுதி செய்யப்பட்ட பொலிகாளைகளிலிருந்து பெறப்பட்ட உறைவிந்து மூலம் இப்பசுக்கள் கருவூட்டல் செய்யப்பட்டு, இதன் மூலம், அதிக பால் கறவை கொண்ட பசுக்களுக்குப் பிறக்கும் கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு, உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் உறைவிந்து உற்பத்திக்காக வளர்க்கப்படுகின்றன. இத்திட்டத்தின்

2010 மே 4]

மூலம் 2009-10 ஆம் ஆண்டில், முதல் அணியில் பிறந்த 2 காளைக்கன்றுகளும், இரண்டாவது அணியில் பிறந்த 6 காளைக்கன்றுகளும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

9. பிரச்சாரம் மற்றும் விளம்பரம்:

தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதியுதவியுடன், சென்னை பிரசார் பாரதி வானொலி மூலமாக, 'கால்நடைச் செல்வம்' என்ற தலைப்பில் ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 7.30 மணிக்கு 30 நிமிட நேர நிகழ்ச்சியாக தொழில்நுட்ப வல்லுநர்களின் உரை, கால்நடை பராமரிப்பு பற்றிய கலந்துரையாடல், கால்நடை பராமரிப்பு வல்லுநர் மற்றும் கால்நடை பண்ணையாளர்களுடன் நேர்முக கலந்துரையாடல் ஆகியவை ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

10. தனியார் செயற்கைமுறை கருவூட்டல் பணியாளர்களுக்கு உதவி

முதலாண்டு பணியின்போது, உதவித் தொகையாக, ஆண்டுக்கு ரூ.6,000/- வீதம் 22 கிராமப்புற இளைஞர்களுக்கு வழங்கப்பட்டது.

11. மலடு நீக்க முகாம்கள்

தமிழகத்தில் கால்நடை பராமரிப்பு மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மூலமாக 658 கால்நடை மலடு நீக்க முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில், 84,413 விவசாயிகளின் 1,60,650 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

கால்நடை காப்பீட்டுத் திட்டம்

தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை, மத்திய அரசின் கால்நடை காப்பீட்டுத் திட்டத்தை, தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருகிறது. மூன்றாவது கட்டமாக, 2009-10 ஆம் ஆண்டில், கோயம்புத்தூர் ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சி, திண்டுக்கல், மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் ஆகிய 15 மாவட்டங்களில், ஜனவரி 2010 முதல் 2 இலட்சம் இலக்குடன் அதிக பால் கறவை திறன் கொண்ட பசுக்கள் மற்றும் எருமைகள் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இக்காப்பீடு செய்யத் தேவையான தொகையில், 50 விழுக்காடு அரசு மானியமாகவும், மீதம் உள்ள 50 விழுக்காடு தொகை கால்நடை வளர்ப்போர்களிடமிருந்தும் பெறப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 4

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–2011

முன்னுரை

1989இல் கால்நடை மருத்துவ கல்விக்கென இந்நாட்டில் உருவாக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகமான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் தொலைநோக்கு சிந்தனையில் உருவானதாகும். இப்பல்கலைக்கழகத்தின் நோக்கங்களாவன:-

- இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டம் பெறுவோருக்கு கால்நடை மருத்துவம், விலங்கினம், மீன்வள அறிவியல் மற்றும் உணவு பதனிடும் தொழில்நுட்பத்தில் தரமான கல்வியை அளித்தல்

- கால்நடை, கோழி மற்றும் மீன் உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் அவற்றிலிருந்து பெறப்படும் பொருட்கள் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் மற்றும்

- கால்நடை, கோழியினம் மற்றும் மீன் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் உரிய தொழில்நுட்ப அறிவை, கால்நடை பராமரிப்புத் துறையைச் சார்ந்தவர்களுக்கும், பண்ணையாளர்களுக்கும் கல்வி மூலம் பரப்புதல்

பல்கலைக்கழகத்தின் அங்கங்கள்

இப்பல்கலைக்கழகத்தின் அங்கங்கள் பற்றிய விவரம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள்

இப்பல்கலைக்கழகத்தின் கல்வி, ஆராய்ச்சி, மருத்துவம் மற்றும் விரிவாக்க கல்வி இவைகளின் செயல்பாடுகளின் விவரம் பின்வருமாறு.

2010 மே 4]

கல்வி

★ இப்பல்கலைக்கழகத்தில் 2009-2010 ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவர் சேர்க்கைப் பட்டியல் பின்வருமாறு:

பாடப்பிரிவு	சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை	கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்	மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி	உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்ப நிலையம், கொடுவள்ளி	மொத்தம்
பி.வி.எஸ்சி. & ஏ.எச்.	145 *	85	–	–	230
பி.எஃப்.எஸ்சி.,	–	–	36 **	–	36
பி.டெக். (உணவு பதனிடுதல்)	–	–	–	19	19
எம்.வி.எஸ்சி.	63	10	–	–	73
எம்.எஃப்.எஸ்சி	–	–	19	–	19
பி.எச்டி (கால்நடை)	12	8	–	–	20
செல்ல பிராணிகள் பராமரிப்பு குறித்த முதுகலைப் பட்டய படிப்பு	1	–	–	–	1
கால்நடை மருத்துவ ஆய்வக நோயறிதல் குறித்த முதுகலைப் பட்டய படிப்பு	1	–	–	–	1
உயிர்த்தொழில் நுட்பவியலில் எம்.ஃபில் படிப்பு	8	–	–	–	8
மொத்தம்	230	103	55	19	407

* 4 அயல்நாடு வாழ் இந்திய மாணவர்கள் மற்றும் ஒரு அயல்நாட்டு மாணவர் உட்பட

** ஒரு அயல்நாடு வாழ் இந்திய மாணவர் உட்பட

✠ தேசிய வேளாண் தொழில்நுட்பத் திட்டத்தின்கீழ் தமிழகத்தின் பல்வேறு பகுதிக்கேற்றவாறு உருவாக்கப்பட்ட தானுவாஸ்-ஸ்மார்ட் தாது உப்புக் கலவை வெளியிடப்பட்டது.

[2010 மே 4

- கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான கண்காணிப்புக்கு தேசிய ஆய்வுக் கூடம் ரூபாய் மூன்று கோடி நிதியுதவியுடன் தொடங்கப்பட்டது.

- பல்கலைக்கழகத்தின் 13-வது பட்டமளிப்பு விழா, 20-11-2009 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. இருநூற்று முப்பத்தி நான்கு பட்டதாரிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

- இந்திய கால்நடை உற்பத்திக் கல்வி ஆராய்ச்சியாளர்களின் சங்கத்தின் 25-வது ஆண்டுக் கூட்டம் மற்றும் "பண்ணை விலங்கினம் மற்றும் செல்லப் பிராணிகளில் இனப்பெருக்கத்திறனை மேம்படுத்த நவீன இனபெருக்கத் தொழில்நுட்பங்கள்" குறித்த சர்வதேச கருத்தரங்குடன் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் வெள்ளி விழாவும் இணைந்து கொண்டாடப்பட்டது. இவ்விழாவில், 6 அயல்நாட்டினர் உட்பட 410 விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர்.

- கோழியினங்களின் உற்பத்தி, ஆரோக்கியம் மற்றும் பராமரிப்பில் நவீன உத்திகள் என்ற தலைப்பில் பன்னாட்டுக் கோழியினக் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்பட்டது. இக்கண்காட்சியில், கோழி சார் தொழிலில் முன்னிலை வகிக்கின்ற 53 நிறுவனங்களின் 64 அரங்குகள் இடம் பெற்றிருந்தன. மொத்தம் 5,200 பார்வையாளர்கள் இக்கண்காட்சியையும் அரங்குகளையும் பார்வையிட்டு பயனடைந்தனர்.

- இப்பல்கலைகழகத்தின் மூன்று ஆசிரியர்கள் இளம் விஞ்ஞானி ஆய்வு விருது பெற்றுள்ளனர்.

ஆராய்ச்சி

புரவலர் ஆராய்ச்சித் திட்டங்கள்

2009-2010 ஆம் ஆண்டில், 36 புரவலர் ஆராய்ச்சித் திட்டங்கள் ரூபாய் 1,485.26 இலட்ச மதிப்பீட்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

2010 மே 4]

திட்டங்கள்

பல்கலைக்கழகத் திட்டத்தின்கீழ் வளாக வசதியை வலுப்படுத்தவும், உயர் கல்வி அளிக்கவும், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கவும், ஆராய்ச்சிகளை மேம்படுத்துதல் மற்றும் கண்டுபிடிப்புகளைப் பகிர்ந்தளித்தல் போன்றவற்றை மேற்கொள்ள 83 திட்டங்கள் ரூ.3,358.37 இலட்ச மதிப்பீட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

பகுதி–2 திட்டம்

2009-10-க்கான பகுதி-2 திட்டத்தில், கீழ்கண்ட இரண்டு திட்டங்கள் இப்பல்கலைக்கழகத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

1. ரூ.32.00 இலட்சம் செலவில் பன்றிகளைத் தாக்கும் காய்ச்சல் நோய்க்குத் தடுப்பூசி தயாரித்தல்.

2. ரூ.18.00 இலட்சம் செலவில் சுழற்சி முறை வெள்ளாடு மற்றும் நாட்டுக்கோழி வளர்ப்பின் மூலம் கிராம மகளிர் முன்னேற்றம்.

கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்

- ❖ இப்பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்படும் தடுப்பூசிகளை அகில உலக அளவில் உபயோகப்படுத்த வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்யும் பொருட்டு இங்கிலாந்தில் உள்ள கால்வ்மெட் நிறுவனத்துடன் இப்பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

- ❖ கோழிகளை தாக்கும் இராணிக்கெட் என்ற கழிச்சல் நோய்க்கான வாய்வழி தடுப்பூசியை வர்த்தகரீதியில் உற்பத்தி செய்யும் பொருட்டு ஐதராபாத்தில் உள்ள குளோபயான் தனியார் நிறுவனத்துடன் இப்பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. அதன்படி, இத்தடுப்பூசி தயாரிக்கும் தொழிற்நுட்பம் மற்றும் அதன் பரிமாற்றத்திற்கென ரூ.10 இலட்சம் இப்பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

- ❖ பாரம்பரிய கால்நடை மருத்துவ கூட்டு ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி மற்றும் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, பெங்களூரில் உள்ள பாரம்பரிய மருத்துவ

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS

புத்தாக்க அறக்கட்டளையுடன் இப்பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

❖ இரத்தக்கழிச்சல் நோய் குறித்த ஆய்வினை மேற்கொள்ளும் பொருட்டு கிராம்டனில் உள்ள கால்நடை நல மருத்துவ நிறுவனத்துடன் இப்பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது.

கால்நடை நலம்

மீசன்கைமல் குறுத்தணுக்களைக் கொண்டு எலியின் தோல் மற்றும் தீக்காயத்திற்கு சிகிச்சையளித்தல்

மீசன்கைமல் குறுத்தணுக்கள் பலவகை திசுக்களாக மாறும் தன்மை அணு வெளிப்புற புரதங்களை வைத்து எதிர் புரத வேதியல் மற்றும் எதிர் அணு ஒளிவேதியியல் முறைகளால் கண்டறியப்பட்டு இம்முறை தொழில்நுட்பம் முறைப்படுத்தப்பட்டது. எலி மாதிரிகளில் (CL57BL/6J) பண்பறியப்பட்ட குறுத்தணுக்கள் pEFGP கடத்தியால் உறுதி செய்யப்பட்டு பின் காயம் ஏற்பட்ட இடங்களில் மாற்றம் செய்யப்பட்டன. எலியின் தோல் காயங்களில் மேம்படுத்தப்பட்ட குணப்படுத்தலில் மீசன்கைமல் குறுத்தணுக்களின் பங்கு பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. உயிர்பொருளோடு மீசன்கைமல் குறுத்தணுக்களில் ஒத்துப்போகும் தன்மையானது நிலைப்படுத்தப்பட்டது.

வெறிநோய் வைரசுக்கு எதிரான ஒரு முகப்பண்பு கொண்ட நோய் எதிர்காரணியை தயாரித்து பகுப்பாராய்தல்.

ஏம்.என்.ஏ. செல்களில் வைரஸ்களின் தனிமைப்படுத்துதலை ஊக்குவிப்பதற்காக அரைத்து கரைக்கப்பட்ட மூளை மாதிரிகள் எலிகளினுள் உட்புகுத்தப்பட்டன. நாய், ஆடு மற்றும் கன்றுகளின் நேர்மறை மாதிரிகள் தனித்தனியே ஒன்றினைக்கப்பட்டு எலிகளில் உட்செலுத்தப்பட்டு இரண்டு ஊடக மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றினோடு வெறிநோய் வைரஸின் N மற்றும் G மரபணுக்களின் வெளிப்பாட்டுத்திறனை புரோகேரியோட் மற்றும் பூச்சிகளின் செல் அமைப்பில் அறிய pTriEx மரபணுக்கடத்தியில் மரபிழைசீர் மாற்றம் செய்யப்பட்டது. தயாரிக்கப்பட்ட ஏறுமுகப்பண்பு கொண்ட நோய் எதிர்காரணிகள் எதிர்காலத்தில் நோய்தடுப்பை மேம்படுத்த உதவும்.

2010 மே 4]

ஆட்டுக்கொள்ளை நோய்க்கான வீரோ செல்களில் தகவமைக்கப்பட்ட வீரியம் குறைக்கப்பட்ட நச்சுயிரி தடுப்பூசி தயாரித்தல் மற்றும் களநிலை ஆய்வு

வீரோ செல்களில் 50,000 ஆடுகளுக்கான ஆட்டுக்கொள்ளை நோய் தடுப்பூசி தயாரிக்கப்பட்டுள்ளது. ஆட்டுக்கொள்ளை நோய் தடுப்பூசி நச்சுயிரியின் ஹெ மரபணுவின் பகுதி பெருக்கப்பட்டது. களநிலையில் பெறப்பட்ட ஆட்டுக்கொள்ளை நோய் நச்சுயிரியின் ஹெச் மரபணுவின் இருபகுதிகள் பெருக்கப்பட்டு மூலக்கூறு வரிசை அறியப்பட்டது. என் மரபணுவிற்கான நான்கு பிரைமர்கள் வடிவமைக்கப்பட்டு பிபிஆர்வி கண்டறியும் திறன் ஆர்டிபிசிஆர் மூலம் பரிசோதிக்கப்பட்டது. என் 4 என்ற பிரைமர் மிகவும் துல்லியமாகக் கண்டறியும் என்பது அறியப்பட்டது. இதன் மூலம் 1:1000 நீர்க்கப்பட்ட மாதிரியிலும் நச்சுயிரி கண்டறியப்பட்டது.

உள்ளூர் காரணிகளைக் கொண்டு கோழிக்கழிச்சல் நோய்க்கு தடுப்பு மருந்து தயாரித்தல்

தென்னிந்தியாவிலுள்ள கோயம்புத்தூர், நாமக்கல், தஞ்சாவூர், பாக்கம், வேலூர், நெல்லூர், சித்தூர், திருச்சிற்றம்பலம், பெங்களூர் மற்றும் நாக்பூர் போன்ற பல இடங்களிலிருந்து பெறப்பட்ட எய்மீரியா டெனல்லா கருமுட்டைகளை கோழிகளில் செலுத்தி பத்து வீரியம் குறைப்பு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், வீரியக் குறைப்பு சோதனைக்கு உட்படுத்தப்பட்ட எய்மிரியா வகை ஓரணு ஒட்டுண்ணிகளின் மூலக்கூறு மாற்றத்தினை மரபணு பலபடியாக்கல் முறை மூலம் கண்டறியப்பட்டது.

கால்நடை உற்பத்தி

குறைந்த கலோரி உடைய உறைநிலை பிஃபிடோ யோகர்ட் தயாரித்தல்

இந்த உறைநிலை யோகர்ட் மனிதர்களுக்கு வயிற்றுப்போக்கு, குடலில் தொடர் எரிச்சல் போன்ற பாதிப்பு வராமலும், இரத்தத்தில் கொழுப்புச் சத்து அதிகமாகாமலும் வைத்து பாதுகாப்பு தருகிறது. இவ்வாறு நிலை மாற்றப்பட்ட பாலிலிருந்து தயாரிக்கப்பட்ட பால் பவுடரில் புரோபயாடிக் பாக்டீரியாக்கள்

[2010 மே 4

அதிக அளவு உயிர் வாழ்கின்றன. உறைநிலை யோகர்ட், ஐஸ்கிரீம் போன்றது. ஆனால், கொழுப்புச்சத்து குறைந்த பால் பொருளாகும். இவ்வாறு ஐஸ்கிரீம் மற்றும் யோகர்ட்டின் குணாதிசயங்களை ஒருங்கிணைப்பதால் நுகர்வோருக்கு உகந்ததாக உள்ளது. அதே சமயம், செயற்கை இனிப்புகளை இந்த யோகர்ட்டில் சேர்ப்பதன் மூலம் குறைந்த கலோரிகளை சேர்த்து நுகர்வோருக்கு நன்மை அளிப்பதாகவும் உள்ளது.

சர்க்கரை சேர்க்கப்படாத செயற்கை இனிப்புப் பொருள் கொண்டு ஐஸ்கிரீம் தயாரித்தல்

சர்க்கரைக்கு மாற்றாக 100 சதவீதம் வரை சுக்ரலோஸ் சேர்த்து தயாரிக்கப்பட்ட ஐஸ்கிரீம் ஏற்றுக் கொள்ளத்தக்கவாறு உள்ளது எனக் கண்டறியப்பட்டது. இதே போல், அதிகபட்சமாக 50 சதவீதம் அசிசல்பேம் பொட்டாசியம் மற்றும் 75 சதவீதம் வரை நியோடேம் சேர்த்து தயாரிக்கப்பட்ட ஐஸ்கிரீம்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக உள்ளன என சோதனையின் முடிவில் கண்டறியப்பட்டது.

சின்பயாடிக் ஐஸ்கிரீம் உருவாக்குதல்

தன்னார்வ சோதனையாளர்களுக்கு ஐஸ்கிரீம் மாதிரிகள் கொடுக்கப்பட்டு 7, 15வது நாட்களில் மலத்தின் அமில காரக் குறியீடு, லாக்டோபேசில்லஸ் அசிடோபிலஸ் எண்ணிக்கை. கோலை நுண்ணுயிரிகளின் எண்ணிக்கை சோதிக்கப்பட்டது. சோதனை முடிவுகளில் 7, 15வது நாள்களில் சின்பயாடிக் குழுக்களின் மலத்திலுள்ள லாக்டேபேசில்லஸ் அசிடோபிலஸ் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. மேலும், கோலை நுண்ணுயிரிகளின் எண்ணிக்கை 7, 15வது நாட்களில் சின்பயாடிக் கொடுக்கப்பட்ட குழுக்களில் குறிப்பிடத்தக்க அளவு குறைந்திருந்தது. சின்பயாடிக் மற்றும் புரோபயாடிக் அளிக்கப்பட்ட குழுக்களின் அமில காரக் குறியீடு மற்ற குழுக்களைவிட குறிப்பிடத்தக்க அளவு குறைவாகக் காணப்பட்டது. மேலும், வெவ்வேறு குழுக்களிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படவில்லை. இந்த

2010 மே 4]

ஆராய்ச்சியின்மூலம் ஐஸ்கிரீமில், தேன், இனுலின் போன்ற பொருள்களை சேர்த்து அதன் மருத்துவ குணத்தை அதிகரிக்க முடியும் எனக் கண்டறியப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள கறவை மாடுகளுக்கு பகுதிவாரியாக தாது உப்புக் கலவை தயாரித்தல்

தாது உப்புகள், வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டு, நான்கு பகுதிவாரியான தாது உப்புக் கலவைகள் தயாரிக்கப்பட்டன.

(1) கோயம்புத்தூர், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, மதுரை, நாகப்பட்டினம், சிவகங்கை, திருவள்ளூர், தூத்துக்குடி, திருச்சி, திருவாரூர், திருவண்ணாமலை மற்றும் விருதுநகர் போன்ற மாவட்டங்களுக்கு சுண்ணாம்பு, பாஸ்பரஸ், கோபால்ட், தாமிரம், துத்தநாகம் மற்றும் மெக்னீசியம் கலந்த தாது உப்புக் கலவை.

(2) திண்டுக்கல், தருமபுரி, ஈரோடு, நாமக்கல், சேலம், திருநெல்வேலி, விழுப்புரம் மற்றும் வேலூர் போன்ற மாவட்டங்களுக்கு சுண்ணாம்பு, பாஸ்பரஸ், கோபால்ட், தாமிரம் மற்றும் துத்தநாகம் கலந்த தாது உப்புக் கலவை.

(3) கடலூர், நீலகிரி, கரூர், கிருஷ்ணகிரி, பெரம்பலூர் மற்றும் தேனி போன்ற மாவட்டங்களுக்கு சுண்ணாம்பு, பாஸ்பரஸ், கோபால்ட் மற்றும் தாமிரம் கலந்த தாது உப்புக் கலவை.

(4) புதுக்கோட்டை, ராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களுக்கு சுண்ணாம்பு, பாஸ்பரஸ், கோபால்ட், தாமிரம் மற்றும் மெக்னீசியம் கலந்த தாது உப்புக் கலவை.

சிகிச்சையியல்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், கால்நடை மற்றும் செல்லப்பிராணிகளின் சிகிச்சைக்காக 24 மணி நேரமும் பணியாற்றி வருகிறது.

[2010 மே 4

2009–2010 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட சிகிச்சை விவரம்:

இனம்	மருத்துவமனைகள்		
	சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை	கால்நடை மருத்துவக் கல்லூரியின் புறநகர் மருத்துவமனை, மாதவரம்	கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
நாய்கள்	50485	9810	5268
கறவை மற்றும் எருமையினம்	13450	2323	3356
பூனைகள்	1728	176	146
குதிரை	1851	127	52
செம்மறியாடு மற்றும் வெள்ளாடு	4422	813	2518
கோழியினம்	1440	589	1617
மற்றவை	483	191	127
மொத்தம்	73859	14029	13084

உள்நோயாளிகள் பிரிவு வசதிகள்

- *சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் மருத்துவமனையில், 209 பெரிய விலங்குகள் மற்றும் 211 சிறிய விலங்குகள் உள்நோய்ப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.*
- *நாமக்கல் மருத்துவமனையிலுள்ள உள்நோய்ப் பிரிவில், 2,318 பெரிய விலங்குகள் அனுமதிக்கப்பட்டு பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.*
- *வெறிநோயால் பாதிக்கப்பட்ட விலங்குகளை வைத்துக் கண்காணிக்க, ஒரு தனிக் கண்காணிப்புப் பிரிவு இரு கல்லூரிகளிலும் இயங்கி வருகின்றது.*

வளாக வசதிகள் மற்றும் மருத்துவ சாதனங்கள் விவரம்:

1. *பையூடுருவி நோக்கி விளக்கும் மற்றும் பதிவு செய்யும் பிரிவு*
2. *நாய்களுக்கான பையூடுருவி நோக்கிக் கருவி*

2010 மே 4]

3. கால்நடை மருத்துவம்சார் நுண் ஒலி அலைவரைபட அச்சுக் கருவி
4. பாகோ இமல்சிஃபயர் கொண்ட கண் மருத்துவ இயல் பிரிவு
5. பிராண வாயு உற்பத்திக் கருவி
6. வண்ண டாப்லர் நுண் ஒலி அலைக் கருவி
7. ரியல் டைம் ஹார்மோனிக் ஒலி கொண்ட ஆழ் ஆய்வு சாதனம்
8. டிஜிட்டல் நுண்ஒளிப் படத்துடன்கூடிய மூவண்ண நுண்ணொலி பெருக்கி
9. ஆண் நாய்களுக்கான நுரையீரல் மற்றும் சிறுநீர்க் குழாயில் சோதனை செய்யவும் உகந்த இலகுவான ஃபைப்பிராஸ்கோப் கருவி

ஆய்வகப் பணிகள்

★ **கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான மருந்துக் கண்காணிப்பிற்கான தேசிய வசதி, மாதவரம்**

கால்நடைத் தீவனம் மற்றும் கால்நடைப் பொருட்களில் பூஞ்சைக் காளான் நச்சு, பூச்சிக் கொல்லி நச்சுப் படிவங்கள் உள்ளனவா என்ற பகுப்பாய்வுப் பணியினை இந்த ஆய்வகம் மேற்கொண்டுள்ளது. இந்த அறிக்கை ஆண்டில், 3,052 மாதிரிகளில் காளான் மற்றும் பூச்சிக் கொல்லி நச்சுப் படிவங்கள் உள்ளனவா என்ற ஆய்விற்குட்படுத்தப்பட்டன. 1,124 மாதிரிகளில் அப்ளாடாக்சின் நச்சு சோதனை மேற்கொள்ளப்பட்டதில், 191 (17%) மாதிரிகளில் அப்ளாடாக்சின் நச்சுள்ளது எனக் கண்டறியப்பட்டது. 807 மாதிரிகளில் மல்டிடாக்சின் சிட்ரினின் நச்சு சோதனை மேற்கொள்ளப்பட்டதில், 672 (83%) மாதிரிகளில் மல்டிடாக்சின் நச்சும், 31 (4%) மாதிரிகளில் அக்ராடாக்சின் ஏ நச்சும் உள்ளது கண்டறியப்பட்டது. 126 மாதிரிகளில், நோய் எதிருயிரி நுண்மப் படிவம் (ஃபூராசோலிடன் - ஃபூரால்டாடன்) நச்சு சோதனை மேற்கொள்ளப்பட்டதில், 3 (2%) மாதிரிகளில் எதிருயிரி நுண்மப் படிவம் கண்டறியப்பட்டது. 12 மாதிரிகளில் நைட்ரேட் சோதனை மேற்கொள்ளப்பட்டதில், 10 மாதிரிகளிலும் நைட்ரேட் உள்ளது கண்டறியப்பட்டது. 4 மாதிரிகளில் நைட்ரைட் சோதனை மேற்கொள்ளப்பட்டதில், 4 மாதிரிகளிலும் நைட்ரைட் உள்ளது

[2010 மே 4

கண்டறியப்பட்டது. நச்சுப் படிவமற்ற கால்நடை மற்றும் கோழித் தீவன உற்பத்தியை மேற்கொள்ளும் பொருட்டு ஆய்வு முடிவுகள் தொழில்முனைவோர் மற்றும் கால்நடைப் பண்ணையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டன.

★ **கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு மற்றும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக் கூடம், நாமக்கல்**

தமிழகம் மற்றும் பிற மாநிலங்களைச் சார்ந்த 2,256 கோழி மற்றும் கால்நடைப் பண்ணையாளர்களுக்கு தீவனப் பகுப்பாய்வு மற்றும் தீவனமளிக்கும் முறைகள் பற்றிய ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இக்குறிப்பாண்டில், 13,730 மாதிரிகளும் 33,118 பகுப்பாய்வு சோதனைகளும் நடத்தப்பட்டன.

★ **லெப்டோஸ்பைரோசிஸ் (எலிக் காய்ச்சல்) ஆராய்ச்சி ஆய்வகம், மாதவரம்**

நோய் அறிகுறி தென்பட்ட கால்நடைகள் மற்றும் மனிதர்களிடமிருந்து முறையே 433 மற்றும் 10,316 ஊநீர் மாதிரிகள் மேட் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு லெப்டோஸ்பைரோ நோய் எதிர்ப்புரதம் உள்ளனவா எனக் கண்டறியப்பட்டது. ஆய்வு செய்யப்பட்ட 10,316 மனித மாதிரிகளில், 8,494 (82.34%) மாதிரிகளில் நோய் எதிர்ப்புரதம் உள்ளது கண்டறியப்பட்டது. நோய் எதிர்ப்புரதம் உள்ள மாதிரிகளில் அஸ்ட்ரடாலிஸ் இனமும், அதனைத் தொடர்ந்து அடாமனாலிஸ் மற்றும் ஜாவானிகா இனங்களும் உள்ளன என கண்டறியப்பட்டுள்ளது. ஆய்வு செய்யப்பட்ட 433 கால்நடை மாதிரிகளில், 304 (70.21%) மாதிரிகளில் நோய் எதிர்ப்புரதம் உள்ளது கண்டறியப்பட்டது. நோய் எதிர்ப்புரதம் உள்ள மாதிரிகளில், அடாமனாலிஸ் இனமே முக்கியமாக உள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

கால்நடை அறிவியலில் விரிவாக்கப் பணிகள்

இப்பல்கலைக்கழகம், விரிவாக்கக் கல்வி இயக்ககம்வாயிலாக கால்நடைப் பராமரிப்புத் துறை, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை போன்ற அரசு சார்ந்த துறைகளுடனும் இணைந்து ஆக்கப்பூர்வமான அனைத்து விரிவாக்கத் திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறது. விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் செயல்பாடுகள் பின்வருமாறு.

2010 மே 4]

பயிற்சிகள் அளித்த விவரம் (2008–2009)

பயிற்சிகளின் தலைப்பு	பயிற்சிகளின் எண்ணிக்கை		பயனடைந்தோர் விவரம்				
			தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர்		மற்றவர்கள்		மொத்தம்
	உள்ளிருப்பு பயிற்சிகள்	வெளிப்புற பயிற்சிகள்	ஆண்கள்	பெண்கள்	ஆண்கள்	பெண்கள்	
கறவை வளர்ப்பு	103	178	862	2556	3333	3953	10704
வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு	91	70	617	737	2110	852	4316
கோழி வளர்ப்பு	66	34	364	542	1626	639	3171
வான்கோழி வளர்ப்பு	32	5	110	41	423	163	737
ஜப்பானியக் காடை வளர்ப்பு	17	8	92	44	291	122	549
பன்றி வளர்ப்பு	24	7	166	69	649	100	984
முயல் வளர்ப்பு	19	7	71	148	239	113	571
பால் மற்றும் பால் பொருட்கள்	7	22	136	208	341	565	1250
மனையியல்	20	29	40	86	247	695	1068
தோட்டப்பயிர்	44	36	257	425	1309	1101	3092
ஒருங்கிணைந்த கால்நடை வளர்ப்பு	36	53	568	1615	897	1487	4567
மீன் வளர்ப்பு/அலங்கார மீன் வளர்ப்பு	35	26	98	100	645	949	1792
பயிர் அறிவியல்	2				42	34	76
வேளாண் இயந்திரவியல்	31	65	337	381	1298	979	2995
தீவனம் மற்றும் தீவனப் பயிர் வளர்ப்பு	19	9	75	76	387	169	707
விலங்கறிவியல்	31	12	174	194	719	344	1431
கன்று வளர்ப்பு	2	5	15	14	32	20	81
நோயறிதல் மற்றும் மேலாண்மை	4	18	188	162	354	183	887
இறைச்சிப் பொருட்கள்	3	1	5	2	35	28	70
கலப்பினங்களில் தோன்றும் இனப்பெருக்க இடர்பாடுகள் மற்றும் மேலாண்மை முறைகள்	6	12	128	118	289	221	756
கால்நடை மற்றும் மீன் பராமரிப்பு முறைகள்	1	4	17	177	33	121	348
தாதுக் கலவை	0	1	6	0	8	43	57
தீவன ஊறுகாய் தயாரித்தல்	0	1	0	24	0	0	24
மொத்தம்	593	603	4326	7719	15307	12881	40233

[2010 மே 4

பிற விரிவாக்கப் பணிகள்

பண்ணையாளர்களின் வினாக்கள் தொடர்பாக	
அஞ்சல் வழியாக	7,305
நேரடியாக	18,162
களப்பணி ஆய்வு	6,606
தொலைபேசி வழியாக	8,152
மின்னனு மூலமாக	487
தொடுதிரை கணினி மூலமாக	2,666
வானொலி நிகழ்ச்சிகள்	71
தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்	85
கண்காட்சிகள்	152
மொத்தம்	43,686

தொழில்நுட்ப வெளியீடு

பொருட்கள்

1. ஆடுகளுக்கான ஊட்டச்சத்துக் கட்டி

ஆடுகளுக்கான ஊட்டச்சத்துக் கட்டி தயாரிக்கும் தொழில்நுட்பத்தினை நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் பயிற்சி நிலையத்தின் கால்நடை ஊட்டச்சத்தியல் துறையினர் மேம்படுத்தியுள்ளனர். இக்கட்டி தயாரிப்பிற்கான உற்பத்திச் செலவு கிலோவிற்கு ரூ.7.00 ஆகும். ஆடுகள் உட்கொள்ளும் அளவு : செம்மறியாடு : நாள் ஒன்றுக்கு 19 கிராம் ; வெள்ளாடு : நாள் ஒன்றுக்கு 24 கிராம். சிறு அசையூண் பிராணிகளுக்கு இக்கட்டி கூடுதல் ஊட்டச்சத்துத் தீவனமாக அமைந்து நல்ல உடல் வளர்ச்சியைத் தருகிறது.

2. தீவனப் பொருள் அமுக்கி வடிவமைத்து உருவாக்கும் சிறிய அளவிலான ஆய்வக மாதிரி சாதனம்

தீவனப் பொருளை அமுக்கி வடிவமைத்து உருவாக்கும் சிறிய அளவிலான ஆய்வக மாதிரி சாதனத்தை ரூ.1.82 இலட்ச செலவில் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் பயிற்சி நிலையத்தின் கால்நடை ஊட்டச்சத்தியல் துறையினர் வடிவமைத்துள்ளனர். இச்சாதனம், ஒரு மணி நேரத்தில் 20 கிலோ அளவிற்கு பிழியும் திறனுடையது. இச்சாதனத்தைக் கொண்டு

2010 மே 4]

தானியங்கள், முழு சோயா, செல்லப் பிராணிகள் தீவனம் ஆகியவற்றைப் பிழிய இயலும்.

3. முட்டையிட்டு ஓய்ந்த கோழி இறைச்சியைப் பயன்படுத்தி கோழி இறைச்சி ஊறுகாய்

முட்டையிட்டு ஓய்ந்த கோழி இறைச்சியைப் பயன்படுத்தி கோழி இறைச்சி ஊறுகாய் தயாரிக்கும் தொழில்நுட்பத்தினை நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் பயிற்சி நிலையத்தின் இறைச்சி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையினர் மேம்படுத்தி உள்ளனர். இதனால், முட்டையிட்டு ஓய்ந்த கோழி இறைச்சியைப் பயன்படுத்தி கோழி இறைச்சி ஊறுகாய் எனும் மதிப்பூட்டப்பட்ட பொருட்களாக மாற்ற இயலும்.

4. முட்டையிட்டு ஓய்ந்த கோழித் தூளிலிருந்து செல்லப் பிராணிகளுக்கான உணவு

முட்டையிட்டு ஓய்ந்த கோழித் தூளிலிருந்து செல்லப் பிராணிகளுக்கான உணவு தயாரிக்கும் தொழில்நுட்பத்தினை நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் பயிற்சி நிலையத்தின் இறைச்சி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையினர் மேம்படுத்தியுள்ளனர். இதனால் முட்டையிட்டு ஓய்ந்த கோழிகளை செல்லப் பிராணிக்கான உணவு எனும் மதிப்பூட்டப்பட்ட பொருட்களாக மாற்ற இயலும்.

தடுப்பூசிகள்

5. நீலநாக்கு நோய் நச்சுயிரி (பல்வகை) தடுப்பூசி

நச்சுயிரி தடுப்பூசி ஆராய்ச்சி மையத்தினரால் நீலநாக்கு நோய் நச்சுயிரி 1, 2, 15, 18 மற்றும் 23 வகைகளுக்கான தடுப்பூசி உருவாக்கப்பட்டது. தடுப்பூசி தரப்பட்ட ஆடுகளில் நோயின் தாக்குதல் மற்றும் எதிர்மறையான விளைவுகள் ஏதும் காணப்படவில்லை.

6. கோழிகளைத் தாக்கும் திசு சிதைவு குடல் அழற்சி நோய்க்கான நுண்ணுயிரி செயலிழக்கப்பட்ட தடுப்பூசி

கோழிகளைத் தாக்கும் திசு சிதைவு குடல் அழற்சி நோய்க்கான நுண்ணுயிரி செயலிழக்கப்பட்ட தடுப்பூசிகள் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் பயிற்சி நிலையத்தின் கால்நடை

[2010 மே 4

நுண்ணுயிரியல் துறையினரால் மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்தடுப்பூசி, இந்நோயினைத் தடுக்கவல்லது. கறிக்கோழிகளில் இத்தடுப்பூசியுடன் நுண்ம உயிர்கலவையை வழங்கும் பொழுது, கோழிகள் அதிக உடல் எடை பெறுகின்றன என்பதும் கண்டறியப்பட்டது.

நோயறி சாதனங்கள்

7. இறால்களில் மோனோடான் பாகுலோ வைரஸ் நோயை சோதிப்பதற்கென பாலிமரேஸ் நொதிம வினை சோதனைப் பெட்டி

இறால்களில் மோனோடான் பாகுலோ வைரஸ் நோயை சோதிப்பதற்கென பாலிமரேஸ் நொதிம வினை சோதனைப் பெட்டி நச்சுயிரி தடுப்பூசி ஆராய்ச்சி மையத்தினரால் உருவாக்கப்பட்டது.

மற்றவை

8. நுண்ஒலி, மின் மற்றும் மின்காந்தத் தூண்டி

நாய்களின் தொடை எலும்பு முறிவினைக் குணப்படுத்த, நுண்ணொலி, மின் மற்றும் மின்காந்தத் தூண்டியினை மதுரையிலுள்ள கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தினர் வடிவமைத்துள்ளனர். இதன்மூலம் எவ்வித பக்க விளைவுமின்றி நாய்களுக்கு சிகிச்சை அளிக்க ஏதுவாகிறது.

9. பெரிய பிராணிகளின் அறுவை சிகிச்சைக்கு மூச்சுக் குழல் வழி மயக்க மருந்து செலுத்தும் முறை

பெரிய பிராணிகளின் அறுவை சிகிச்சைக்கு மூச்சுக் குழல் வழி மயக்க மருந்து செலுத்தும் முறையை நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் பயிற்சி நிலையத்தின் கால்நடை சிகிச்சையியல் துறையினர் மேம்படுத்தியுள்ளனர். இதன்மூலம் கறவை மாடுகள், எருமை மாடுகள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் போன்ற பண்ணை விலங்குகளில் கடினமான அறுவை சிகிச்சைகளைக்கூட எளிதாக செய்ய உதவுவதால் கால்நடைப் பண்ணையாளர்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 4]

மீன்வள அறிவியலில் முக்கிய ஆராய்ச்சி சாதனைகள்

தூத்துக்குடியிலுள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உறை விந்து வங்கி அமைத்தல்

உறைபதனப்படுத்த விந்தணுக்களைப் பயன்படுத்தி மீன்களை உற்பத்தி செய்வதன்மூலம் உள்ளினப்பெருக்கம் தடை செய்யப்படுகிறது. இதனால், தரம் வாய்ந்த மரபியல் முறையில் மேம்படுத்தப்பட்ட தாய் மீன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதன்மூலம், தமிழ்நாட்டில் உள்ள மீன்குஞ்சு பொரிப்பகங்களில் மரபியல் முறையில் மேம்படுத்தப்பட்ட மீன்குஞ்சுகளை மீன் வளர்ப்புக்கென்று பெற இயலும்.

தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் மகளிரின் சுய வேலைவாய்ப்புக்கான சிங்கி இறாலை கொழுக்க வைத்தல்

2009-2010 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களான தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் ஆகியவற்றைச் சேர்ந்த பதினொன்று மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 213 உறுப்பினர்கள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு ஏழு பயிற்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

மன்னார் வளைகுடாவில் நடைபெறும் மீன்பிடித்தல் பற்றிய ஆய்வு

மன்னார் வளைகுடாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மீன்பிடி முறைகள் மற்றும் உபயோகிக்கப்படும் வலைகள் பற்றிய ஆய்வு நடைபெற்றது. இதில், இழுவலைகளினால் பல்லுயிர் பெருக்கத்திற்கும் மற்றும் கடலில் அடிமட்ட சூழ்நிலைகளுக்கும் ஏற்படும் பாதிப்புகள் அளவிடப்பட்டன. சாரிடா, உப்பினஸ், லியோக்னத்தஸ், ஒடோனஸ், தெரப்பான், கைரோசென்ரஸ், ஜோனியஸ் ஆகிய மீன்கள் இழுவலையில் பிடிபட்ட உபரி மீன்களில் அதிகம் காணப்பட்டன. மேலும், 50 மீட்டருக்கு கீழ் மீன் பிடிக்கும் பொழுது, இழுவலையில் பிடிபட்ட மீன்களில் கழித்து ஒதுக்கப்பட்டவை சுமார் 60 முதல் 70 விழுக்காடு வரை இருந்ததாகவும், 50 மீட்டருக்கு மேல் பிடிப்பவற்றில் 40 முதல் 50 விழுக்காடு வரை இருப்பதும் அறியப்படுகின்றது.

[2010 மே 4

நன்னீர் அலங்கார மீன்வளர்ப்புப் பயிற்சியின்மூலம் ஊரக மகளிர்க்கு தொழில் உருவாக்குதல்

தூத்துக்குடி மாவட்டத்தில், மொத்தமாக 170 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு நன்னீர் அலங்கார மீன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு சுய வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. பயிற்சியில் பங்கு பெற்ற சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு செயற்கை மீன் உணவு தயாரித்தல், கண்ணாடித் தொட்டி கட்டுதல் மற்றும் மீன் தொட்டியை பராமரித்தல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. பயிற்சியில் கலந்து கொண்ட ஐந்து சுய உதவிக் குழு உறுப்பினர்கள் சிறிய அளவில் மீன் வளர்த்தல் மற்றும் மீன் இனப்பெருக்கம் செய்து வருகின்றனர்.

2009–2010ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

★ *2009-2010 ஆம் ஆண்டில், பன்றிகளைத் தாக்கும் காய்ச்சல் நோய்க்குத் தடுப்பூசி தயாரிக்க ரூ. 32.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், வேப்பூர் மற்றும் வேங்கைவாசல் ஆகிய இடங்களில் ஏற்பட்ட பன்றிக் காய்ச்சல் நோய்க்கிளர்ச்சிகளின் போது நோய்ப் புலனாய்வு மேற்கொள்ளப்பட்ட திசு மாதிரிகள் பெறப்பட்டன. பன்முனை தொடர் சங்கிலி ஆய்வின்மூலம் பன்றிக் காய்ச்சல் நச்சுயிரி உறுதி செய்யப்பட்டது.*

★ *2009-10 ஆம் ஆண்டில், சுழற்சி முறை வெள்ளாடு மற்றும் நாட்டுக்கோழி வளர்ப்பின்மூலம் கிராம மகளிர் முன்னேற்றம் எனும் திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.18.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இத்திட்டம் செயலாக்கப்படும் கிராமங்கள் மற்றும் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.*

2010–11-க்கான புதிய பகுதி–2 திட்டங்கள்

2010-11-ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டமாக செயல்படுத்த இப்பல்கலைக்கழகம் கீழ்க்குறிப்பிட்டுள்ள மூன்று திட்டங்களை சமர்ப்பித்துள்ளது:

1. *ரூ.20.50 இலட்சம் செலவில் முயல், கோழி மற்றும் செம்மறியாடு வளர்ப்புமூலம் நீலகிரி மாவட்ட மலைவாழ்*

2010 மே 4]

பெண்கள் மற்றும் சுய உதவிக் குழு பெண்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல்.

2. ரூ.9.50 இலட்சம் செலவில் சினைப்பருவத்திற்கு வராத கறவை மாடுகளுக்கான மலிவு விலையில் ப்ரோஜெஸ்டிரான் யோனி உறிஞ்சிகள் தயாரித்தல்.

3. ரூ.20.00 இலட்சம் செலவில் மீன் பொருட்களின் தர கண்காணிப்பு மற்றும் சான்றிதழ் மையம் அமைத்தல்.

எதிர்காலத் திட்டங்கள்

கால்நடை

- கால்நடை மற்றும் கோழிகளைத் தாக்கும் நோய்களைக் கட்டுப்படுத்த உயிர்த்தொழில்நுட்பம் சார் தடுப்பூசிகளை தயாரித்தல்
- மடிவீக்க நோயைக் கட்டுப்படுத்துதல் மற்றும் முற்றிலுமாக நீக்குதல்
- திசு மருத்துவத்தை மேம்படுத்த முதல்நிலை உயிரணு திசு ஆராய்ச்சிகள்
- நாட்டின மாடுகளை அவற்றின் இருப்பிடங்களிலேயே பாதுகாத்தல்
- பழங்கால மூலிகை மருத்துவம்

மீன்வளம்

- அழிந்து வரும் கடல்வாழ் உயிரினங்களின் உயிர் வேறுபாடுகளைப் பாதுகாத்தல்
- புனித வெண்சங்கு, பவளப் பாறைகள் மற்றும் கடல் பாலூட்டிகள் போன்ற மதிப்பு மிகுந்த மீன்வள ஆதாரங்களைப் பாதுகாக்கும் வழிமுறைகளை உருவாக்குதல்
- ஏற்றுமதிக்குகந்த கடல் அலங்கார மீன்களான கிளவுன், ஊசித்தட்டான் மற்றும் அரவாணா மீன்களை உற்பத்தி செய்தல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

❖ **கல்லூரிகள்**

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை

கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்

மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி

உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்ப நிறுவனம், கொடுவள்ளி, சென்னை

❖ **உயர் கல்வி மையங்கள்**

மருத்துவ சிகிச்சையியல் மற்றும் நோய் நீக்கியல், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை

கோழியின அறிவியல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்

❖ **உயராய்வு மையம்**

கால்நடை உயிர்த் தொழில்நுட்பவியல் மற்றும் நோய் எதிரியியலில் உயராய்வு மையம், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை

❖ **ஆராய்ச்சி மையங்கள்**

கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மை நிலையம், சென்னை

கால்நடை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கம், காஞ்சிபுரம்

மேச்சேரி செம்மறியாட்டு ஆராய்ச்சி நிலையம், பொத்தனேரி, சேலம்

செம்மறியாட்டு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம், பொத்தனேரி, சேலம்

பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையம், மாதவரம், சென்னை

கால்நடை ஊட்டச்சத்தியல் நிறுவனம், காட்டுப்பாக்கம், காஞ்சிபுரம்

2010 மே 4]

❖ **கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள்**

1. கோயம்புத்தூர்
2. தருமபுரி
3. திண்டுக்கல்
4. ஈரோடு
5. கரூர்
6. மதுரை
7. மேல்மருவத்தூர்
8. பறக்கை
9. கடலூர்
10. இராஜபாளையம்
11. சேலம்
12. தஞ்சாவூர்
13. திருநெல்வேலி
14. திருப்பூர்
15. திருச்சி
16. வேலூர்

❖ **கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையம், புதுக்கோட்டை**

❖ **மீன்வள பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்**

1. தஞ்சாவூர்
2. பறக்கை, கன்னியாகுமரி மாவட்டம்

❖ **கோழியின நோய் ஆய்வுக் கூடம்**

1. நாமக்கல்
2. தலைவாசல்

❖ **ஆய்வகங்கள்**

➢ கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வுக் கூடம், நாமக்கல்

➢ கால்நடைத் தீவன மற்றும் கால்நடைப் பொருட்களின் நச்சுப்படிவறி மைய ஆய்வகம், சென்னை

➢ பல்கலைக்கழக மைய ஆய்வகம், மாதவரம் பால்பண்ணை, சென்னை

[2010 மே 4

- ➢ லெப்டோஸ்பைரோசிஸ் நோயறி ஆய்வகம், மாதவரம் பால்பண்ணை, சென்னை
- ➢ இறால் நோயறி ஆய்வகம், மாதவரம் பால்பண்ணை, சென்னை
- ➢ நுண்ணுயிரியல் தடுப்பூசி ஆராய்ச்சி மையம், மாதவரம் பால்பண்ணை, சென்னை
- ➢ நச்சுயிரித் தடுப்பூசி ஆராய்ச்சி மையம், மாதவரம் பால்பண்ணை, சென்னை
- ➢ மைய ஆய்வுக் கருவிக் கூடம், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை
- ➢ மைய சிகிச்சையியல் ஆய்வுக் கூடம், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை
- ➢ கால்நடைகளுக்கான உயிர்த்திசு பாதுகாப்புக் கூடம் / இரண்டாம் நிலை (உலக சுகாதார மையத் தரம்), மாதவரம் பால்பண்ணை, சென்னை

❖ **உழவர் பயிற்சி மையம்**

1. காஞ்சிபுரம்
2. திருவாரூர்
3. தேனி

❖ **வேளாண் அறிவியல் மையம்**

1. நாமக்கல்
2. காட்டுப்பாக்கம்
3. குன்றக்குடி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II

(136ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 7— மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011

1. முன்னுரை

மனித இனத்திற்கு தேவைப்படும் ஆரோக்கியமான உணவு ஆதாரங்களில் மீன் உணவு பெரும் பங்கு வகிக்கிறது. பண்டைக்காலம் தொட்டு, கடலோர மற்றும் உள்நாட்டு மீனவர்களின் முக்கிய வாழ்வாதாரமாக, மீன்பிடித் தொழில் திகழ்ந்து வருகிறது.

சமீபகாலங்களில், மீன்வளம் ஒரு முக்கியமான பொருளாதார செயல்பாடாக உருவெடுத்துள்ளதுடன் ஊட்டச்சத்து செறிவுள்ள உணவுப் பாதுகாப்பு, வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் அந்நியச் செலாவணி ஈட்டுதல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைய முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவின் கிழக்கு கடலோர மாநிலங்களில் முக்கிய மாநிலமாகத் திகழும் தமிழ்நாடு, பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஒரு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது.

தமிழ்நாடு, 1,076 கிலோமீட்டர் நீள கடற்கரையையும், 13 கடலோர மாவட்டங்களையும், 591 மீன்பிடி கிராமங்களையும் கொண்டுள்ளது. கடலோரப் பகுதியில் வாழும் 8.61 இலட்சம் கடல் மீனவ மக்கள்தொகையில், 2.60 இலட்சம் மீனவர்கள் தீவிர மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தமிழக கடல் மீன்வளமானது, 1.9 இலட்சம் சதுர கிலோமீட்டர் தனி உரிமைப் பொருளாதார மண்டலமும், 41,412 சதுர கிலோமீட்டர் கடற்படு நிலத்தொடரும் ஆதாரமாக அமையப்பெற்றுள்ளது. தமிழ்நாட்டில், 6,200 மீன்பிடி விசைப்படகுகளும், 49,904 பாரம்பரிய மீன்பிடிக் கலன்களும் (18,912 வள்ளங்கள் மற்றும் 30,992 கட்டுமரங்கள்) கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றன. இந்தியாவின் கடல் மீன்

உற்பத்தியில் மூன்றாம் இடத்தை வகிக்கும் தமிழ்நாட்டின் கடல் உற்பத்தியானது, ஆண்டொன்றிற்கு 3.97 இலட்சம் டன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கடல் மீன் உணவுப் பொருட்கள் ஏற்றுமதியில் பெரும் பங்கு வகிக்கும் அளவிற்கு வாய்ப்பினையும் வளத்தினையும் பெற்றுள்ள தமிழ்நாட்டிலிருந்து, 2008-2009 ஆம் ஆண்டில், 68,397 டன் எடையுள்ள ரூ.1,77,220.00 இலட்சம் மதிப்பிலான கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் உள்நாட்டு மீன்வளமானது, 3.71 இலட்சம் எக்டேர் பரப்பளவுள்ள நீர்த்தேக்கங்கள், பெரிய நீர்ப்பாசன மற்றும் நீண்ட பருவ கால ஏரிகள், குறுகிய பருவகால ஏரிகள், குளங்கள், உப்பங்கழிகள், கழிமுகங்கள் ஆகியவைகள் மீன்பிடிப்பிற்கும் மீன் வளர்ப்பிற்கும் ஏற்றவையாக உள்ளன. உள்நாட்டு மீனவ மக்கட்தொகை 2.17 இலட்சம் ஆகும். 2008-2009 ஆம் ஆண்டில், உள்நாட்டு மீன் உற்பத்தி 1.66 இலட்சம் டன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைத் திட்டத்தின்கீழ், சுமார் 6,000 எக்டேர் பரப்பளவில் நன்னீர் மீன்வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மொத்தம் 56,000 எக்டேர் பரப்பளவுள்ள கழிமுகப் பகுதிகள், உவர் நீர்வாழ் உயிரின வளர்ப்பை மேற்கொள்ள உகந்ததாக உள்ளது. இவை தவிர, 6,066 எக்டேர் பரப்பளவில் இறால் வளர்ப்பும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில், 377 உள்நாட்டு மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களை உள்ளடக்கிய 1,377 தொடக்க மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இந்த பரந்து விரிந்த உள்நாட்டு மற்றும் கடல்வள ஆதாரங்கள் இன்னமும் முழுவதுமாக பயன்படுத்தப்படாமல் உள்ளன. அண்மைக்கடல் மீன்வளம் மிகுதியாக பயன்படுத்தப்பட்ட நிலையில், தூரக்கடல் மற்றும் ஆழ்கடல் மீன்வள ஆதாரங்கள் இன்னமும் உகந்த அளவில் பயன்படுத்தப்படாமல் உள்ளன.

மீன் உற்பத்தியை அதிகரித்தல், நிலைத்த வளங்குன்றா தன்மையுடையதாக மீன்வளத்தைப் பாதுகாத்தல் மற்றும்

2010 மே 4]

மீனவர்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்துதல் ஆகியவை மீன் துறையின் முதன்மைப் பொறுப்புகளாகும்.

2. நிர்வாக அமைப்பு

மீன்வளத் துறையின் ஆணையர், துறையின் தலைவராகவும், தமிழ்நாடு அரசின் நிறுவனமான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும், தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் உட்பட அனைத்து மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பதிவாளராகவும் செயல்பட்டு வருகிறார்.

மீன்வளத் துறையானது, ஆறு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, 3 மீன் துறை மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் 3 மீன் துறை மண்டல துணை இயக்குநர்களின் தலைமையில், அந்தந்த மண்டல மீன் துறை உதவி இயக்குநர்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மற்றும் கண்காணித்து மீனவர் நலத் திட்டங்கள் உட்பட பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

2009-10 ஆம் ஆண்டில், கீழ்க்காணும் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

வ. எண்	பதவியின் பெயர்	நிரப்பப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை
1.	மீன் துறை இணை இயக்குநர்	3
2.	மீன் துறை துணை இயக்குநர்	4
3.	மீன் துறை உதவி இயக்குநர்	1
4.	நேர்முக உதவியாளர்	5
5.	மீன் துறை ஆய்வாளர்	8
6.	ஆராய்ச்சி உதவியாளர்	5
7.	கண்காணிப்பாளர்	11
8.	உதவியாளர்	10
9.	கருணை அடிப்படையிலான நியமனம் (அனைத்துப் பிரிவுகள்)	11
	மொத்தம்	58

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 4

2010-11 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் கீழ்க்கண்ட பதவிகளுக்கு நேரடி நியமன அடிப்படையில், 43 பணியிடங்களை நிரப்ப துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வ. எண்	பதவியின் பெயர்	நிரப்பப்பட வேண்டிய பதவிகளின் எண்ணிக்கை
1.	இளநிலை உதவியாளர்	22
2.	தட்டச்சர்	17
3.	சுருக்கெழுத்துத் தட்டச்சர்	4
	மொத்தம்	43

3. மீன்வளத் துறையின் நோக்கங்கள்

- *பயன்படுத்தப்படாத மீன்வள ஆதாரங்களைப் பயன்படுத்திடவும், அண்மைக்கடல் பகுதிகளில் அதிக அளவு மீன்பிடிப்பை குறைத்திடவும் மீனவர்களை ஊக்குவித்தல்.*
- *மீன் வளங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள், மீன் இருப்பை அதிகரித்தல், செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல் போன்றவற்றின்மூலம் அண்மைக்கடல் பகுதிகளில் நீர்வாழ் உயிரின உற்பத்தி ஆதாரங்களைப் பெருக்குதல்.*
- *சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலைத்த நீர்வாழ் உயிரின வளர்ப்பு நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.*
- *இடர்கள் பற்றிய ஆய்வு, தரக் கட்டுப்பாடு மதிப்பீட்டளவு (HACCP)ஐ மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) வரையறையின்படி, மீன்களை கரை இறக்குவதற்கும் விற்பனைக்குமான உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்.*
- *மீனவ மக்களுக்கான நலத் திட்டங்கள் மற்றும் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதன்மூலம் அவர்களுடைய சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்.*

2010 மே 4]

- நடைமுறையில் உள்ள மீன்வளச் சட்டங்களை மீனவர்களின் தேவைக்கேற்பவும் மீன்வளத்தைப் பாதுகாப்பதின் அடிப்படையிலும் மாற்றியமைத்தல்.
- வண்ண மீன்வளர்ப்பு மற்றும் சூரை மீன்பிடிப்பு உள்ளடக்கிய ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு ஊக்கம் அளித்தல்.

4. கடல் மீன்வளம்

4.1 மீனவர் நலத் திட்டங்கள்

4.1.1 (அ) தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

தமிழ்நாட்டு மீனவர்கள் பயன்பெறும் வகையில், மத்திய-மாநில அரசுகளின் பங்களிப்போடு தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் அரசால் ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில், ஒவ்வொரு வருடமும், எட்டு மாதங்களில் மாதமொன்றிற்கு ரூ.70/- வீதமும், ஒன்பதாவது மாதம் ரூ.40/-ம் ஆக மொத்தம் ரூ.600/- ஐ மீனவர்கள் தங்களது பங்குத் தொகையாக செலுத்துகின்றனர். இத்தொகைக்கு சமமாக, மத்திய-மாநில அரசுகளின் பங்குத் தொகையாக தலா ரூ.600/- வீதம் ரூ.1,200/-ஐயும் சேர்த்து, மொத்தத் தொகையான ரூ.1,800/-ஐ மீன்பிடிப்புக்குச் செல்ல இயலாத மூன்று மாதங்களுக்கு மீனவர்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென, 2009-10 ஆம் ஆண்டில், ரூ.2,231.62 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டு, 13 கடலோர மாவட்டங்களில் உள்ள 1,85,968 மீனவர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டம், 2010-11 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

(ஆ) கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

2006-07 ஆம் ஆண்டிலிருந்து, இத்திட்டம் மாநிலத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், ஒவ்வொரு ஆண்டும் எட்டு மாதங்களில் மாதமொன்றிற்கு ரூ.70/- வீதமும், ஒன்பதாவது மாதம் ரூ.40/-ம் ஆக மொத்தம் ரூ.600/-ஐ மீனவ மகளிர் தங்களது பங்குத் தொகையாக செலுத்துகின்றனர். மாநில அரசின் பங்காக, ரூ.1,200/- வழங்கப்பட்டு, மொத்தத் தொகையான ரூ.1,800/-ஐ கடலில் மீன்பிடிப்பு இல்லாத மூன்று மாதங்களுக்கு, மீனவ மகளிர் பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது.

[2010 மே 4

இத்திட்டத்திற்கென, அரசு, 2009-10 ஆம் ஆண்டில் ரூ.1,987.20 இலட்சம் ஒப்பளித்து, 13 கடலோர மாவட்டங்களில் உள்ள 1,43,948 மீனவ மகளிர் நிவாரணத் தொகை பெற்று பயனடைந்துள்ளனர். இத்திட்டம், 2010-11 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

4.1.2 மீன்பிடி தடை செய்யப்பட்ட காலங்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்குதல்

மீன் வளத்தைப் பெருக்கவும், மீன் வளத்தைப் பாதுகாக்கவும் தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் மீன் இனப்பெருக்க காலமான ஏப்ரல் 15 முதல் மே 29 முடிய கிழக்குக் கடற்பகுதியிலும், ஜூன் 15 முதல் ஜூலை 29 முடிய மேற்கு கடற்பகுதியிலும் 45 நாட்களுக்கு மீன் பிடிப்பதைத் தடைசெய்துள்ளது. இத்தடை உத்தரவு, 2001 ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு மீன்பிடி தடை செய்யப்பட்ட காலங்களில் மீன்பிடி படகுகளில் பணிபுரியும் மீனவர்கள் மற்றும் தொழிலாளர்கள் வேறு தொழில் புரிந்து வருமானம் ஈட்ட வழிவகையில்லாததால், அவர்கள் குடும்பத்தை நடத்த சிரமப்பட்டனர்.

இந்த ஏழை மீனவர்கள் மற்றும் தொழிலாளர்களின் துயர் துடைக்க, மீன்பிடி தடை செய்யப்பட்ட காலத்திற்கு குடும்பம் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் நிவாரணம் வழங்க அரசு ஆணையிட்டது. இதன்படி, 2009-10 ஆம் ஆண்டில், 1.43 இலட்சம் மீனவ குடும்பங்களுக்கு ரூ.719.00 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம், 2010-11 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

4.1.3 மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்

மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒவ்வொரு ஆண்டும் 2,000 வீடுகள் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு செய்து வருகிறது:-

- ➢ மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.
- ➢ மீனவர்கள் குடிசை வீட்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

2010 மே 4]

- மீனவர்கள் 3 சென்ட் பட்டா நிலம் சொந்தமாக வைத்திருக்க வேண்டும்.

இவை தவிர, மத்திய-மாநில அரசுகள் பங்களிப்புடன் (50:50 என்ற பங்கு விகிதத்தில்) "மாதிரி மீனவ கிராமம்" (Development of Model Fishermen Village Scheme) உருவாக்கும் திட்டத்தின்கீழ், வீடுகள், சமுதாய நலக்கூடங்கள் மற்றும் ஆழ்துளைக் குழாய் கிணறுகள் அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம், 2010-11 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

4.1.4 மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டம்

இத்திட்டத்தின்படி, மீனவர் செலுத்த வேண்டிய ஆண்டு காப்புறுதி சந்தாத் தொகையான ரூ.30/-ஐ, மத்திய-மாநில அரசுகள் தலா ரூ.15/-வீதம் செலுத்துகின்றன. இத்திட்டத்தின்படி, விபத்தினால் இறக்க நேரிடும்/நிரந்தர முழு ஊனமடையும் மீனவருக்கு ரூ.1,00,000/-ம், பகுதி ஊனமடையும் மீனவருக்கு ரூ.50,000/-ம் வழங்கப்படுகிறது.

2009-10 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் 6.03 இலட்சம் முழு நேர கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்/மீனவ மகளிர் பயனாளிகளுக்காக, 10-12-2009 முதல் 09-12-2010 வரையிலான ஓராண்டு காலத்திற்கு மாநில அரசின் பங்கான ரூ.90.51 இலட்சம் சந்தாத்தொகையை, புது தில்லியிலுள்ள மீனவர் கூட்டுறவு இணையத்தின் மூலமாக செலுத்தி காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. மத்திய-மாநில அரசுகளின் நிதியுதவியுடன் கூடிய குழு விபத்துக் காப்புறுதித் திட்டத்தில், அதிக அளவில் மீனவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தமைக்காக மத்திய வேளாண் அமைச்சகத்தால், தமிழ்நாட்டிற்கு இரண்டாம் பரிசு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், 2010-11 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

4.1.5 பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்குதல்

பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்கும் பொருட்டு, நாட்டுப் படகுகளில் வெளிப்பொருத்தும்/ உட்பொருத்தும் இயந்திரங்களைப் பொருத்துவதற்காக, 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.30,000/-ஐ மானியமாக மீனவர்களுக்கு அரசு வழங்கி வருகிறது. இத்திட்டமானது, மத்திய-மாநில

[2010 மே 4

அரசுகளின் சமபங்களிப்பினைக் கொண்டதாகும். இத்திட்டத்திற்கென, 2009-10 ஆம் ஆண்டில், சுமார் 1,000 வெளிப்பொருத்தும் / உட்பொருத்தும் இயந்திரம் வாங்குவதற்காக ரூ.300.00 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம், 2010-11 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

4.1.6 அதிவேக எரியெண்ணெய்க்கான (High Speed Diesel) மத்திய கலால் வரித் தொகையினை திருப்பி அளித்தல்

விசைப் படகுகளின் இயக்கச் செலவினம் அதிகரித்து மீன்பிடித் திறன் குறைந்து வருவதால் விசைப் படகு உரிமையாளர்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்டும் விதமாக, அதிவேக எரியெண்ணெய்க்காகச் செலுத்தப்படும் கலால் வரித் தொகையினை, விசைப் படகு உரிமையாளர்களுக்கு அரசு மானியமாகத் திருப்பி அளிக்கிறது. அதிவேக எரியெண்ணெய்க்கான திருப்பியளிக்கப்படும் கலால் வரியானது, லிட்டர் ஒன்றிற்கு ரூ.3/-க்கு மிகாமல் இருக்கும். கலால் வரியினைத் திருப்பியளிக்கும் இத்திட்டத்தின்கீழ், மாதம் ஒன்றிற்கு ஒவ்வொரு விசைப் படகிற்கும் அதிகபட்சம் 500 லிட்டர் எரியெண்ணெய்க்கான மானியம் வழங்கப்படுகிறது. இந்த மானியத் தொகையானது, 10-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முந்தைய காலத்தில் பதிவு செய்யப்பட்ட 20 மீட்டர் நீளத்திற்குக் குறைவான இயந்திர விசைப் படகுதாரர்களுக்கு வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயனடைய, விசைப் படகு உரிமையாளர் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவராக இருக்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ், 2009-10 ஆம் ஆண்டில் மத்திய அரசின் 100 விழுக்காடு நிதியுதவிமூலம் விசைப்படகு உரிமையாளர்களுக்கு ரூ.300.00 இலட்சம் மானியமாக வழங்கிட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம், 2010-11 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

4.1.7 மீனவர்களால் மீன்பிடிப்பிற்குப் பயன்படுத்தப்படும் அதிவேக எரியெண்ணெய்க்கான விற்பனை வரி விலக்களித்தல்

மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளில் பயன்படுத்தப்படும் அதிவேக எரியெண்ணெய்க்கு, அரசு 100 விழுக்காடு விற்பனை வரி விலக்களித்துள்ளது. இதன்படி, மீன்பிடிக் காலங்களில் விசைப் படகு ஒன்றிற்கு வருடத்திற்கு 15,000 லிட்டரும், இயந்திரமயமாக்கப்பட்ட

2010 மே 4]

நாட்டுப் படகு ஒன்றிற்கு 3,000 லிட்டரும் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட அதிவேக எரியெண்ணெயை மீனவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

2009-10 ஆம் ஆண்டில், விசைப் படகுகளுக்கு 74,187 கிலோ லிட்டரும், இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு 27,336 கிலோ லிட்டரும் விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்ட அதிவேக எரியெண்ணெய் விநியோகிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், 2010-11 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

4.1.8 மீனவ சமுதாயத்தைச் சார்ந்த 10 வது மற்றும் +2 வகுப்பு மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசு வழங்குதல்

மீனவ சமுதாயத்தைச் சார்ந்த மாணவ, மாணவிகள் கல்வி கற்பதை ஊக்கப்படுத்தும் பொருட்டு 10 வது மற்றும் +2 வகுப்புத் தேர்வில், மாவட்டம் மற்றும் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ / மாணவியருக்கு, தமிழக அரசால் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக, அரசு ரூ.4.12 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டம், 2010-11 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

4.1.9 தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறைச் சட்டம், 1983-ஐ செயல்படுத்தும் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்களின் அலுவலகங்களை கணினிமயமாக்குதல்

தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறைச் சட்டம், 1983-ன்படி, அனைத்து மீன்பிடிக் கலன்களையும் பதிவு செய்தல், மீன்பிடி உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல், மீனவர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல், மீன்பிடி விசைப் படகுகளுக்கு பாலவாடகை வசூலித்தல், விசைப் படகுகள் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளுக்குத் தேவையான விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட எரியெண்ணெய்க்கான கடவுச் சீட்டு வழங்குதல், மீன்பிடி விசைப் படகுகள் பயன்படுத்தும் எரியெண்ணெய்க்கான கலால் வரி திருப்பியளித்தல், காணாமல் போகும் மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப் படகுகளைத் தேடுதல் போன்ற பணிகளைக் கவனிக்கும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள், தீர்ப்பாளர்கள் மற்றும் மேல் முறையீட்டு அலுவலர்களின் அலுவலகங்களை கணினிமயமாக்குவது அவசியமாகிறது. எனவே, இத்திட்டத்திற்காக 2009-10 ஆம் ஆண்டில்,

ரூ.21.00 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, கணினிகளை விநியோகம் செய்திட திருவாளர்கள் "எல்காட்" (ELCOT) நிறுவனத்திற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. கணினிகள், அனைத்து அலுவலகங்களுக்கும் விரைவில் வழங்கப்பட்டு கணினிமயமாக்கப்படும்.

5.1 மீனவர்களுக்கான நிவாரணத் திட்டங்கள்

5.1.1 பிற நாடுகளில் சிறை வைக்கப்படும் மீனவரின் குடும்பத்திற்கு தினசரி உதவித் தொகை வழங்குதல்

கடலில் மீன்பிடிக்கும் மீனவர்கள், அண்டை நாட்டினரால் கைது செய்யப்படும்போது அவர்களின் குடும்பங்களுக்கு உதவும் பொருட்டு, கைதான மீனவர்கள் வீடு திரும்பும்வரை நாள் ஒன்றுக்கு ரூ.50/- வீதம் நிவாரணம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்திட, 2009-10 ஆம் ஆண்டில், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்ட ஆட்சித் தலைவர்களால், கைதான மீனவர்கள் குடும்பத்திற்கு உடனடியாக நிவாரணம் வழங்கும் பொருட்டு தலா ரூ.5.00 இலட்சம் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டம், 2010-11 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

5.1.2 கடலில் மீன்பிடிக்கையில் காணாமல் போகும் மீனவர் குடும்பத்தினருக்கு நிவாரணத் தொகை வழங்குதல்

கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்கள் மீண்டும் கரைக்குத் திரும்பும்வரை, நாளொன்றுக்கு ரூ.50/-அல்லது மாதத்திற்கு ரூ.1,500/- வீதம், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்களின் குடும்பத்திற்கு நிவாரணத் தொகை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது:-

- ➢ காணாமல் போன மீனவர் உண்மையான மீனவராகவும், மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.
- ➢ சரக காவல் துறை உதவி ஆய்வாளர் / ஆய்வாளரின் மேலொப்பமிட்ட முதல் தகவல் அறிக்கையுடன் விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட மீன் துறை உதவி இயக்குநருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

2010 மே 4]

- சம்பந்தப்பட்ட கிராமப் பஞ்சாயத்திடமிருந்து பெறப்பட வேண்டிய உறுதி ஆவணம் பின்வரும் உறுதிமொழிகளின் விவரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

அ) காணாமல் போன மீனவர், கடற்பயணம் சென்ற நாளிலிருந்து 30 நாட்கள் வரை கரைக்குத் திரும்பி இருத்தல் கூடாது.

ஆ) சம்பந்தப்பட்ட மீனவர், சட்ட விரோதமான எந்தவொரு செயல்களிலும் ஈடுபட்டவராக இருத்தல் கூடாது.

இ) காணாமல் போன மீனவர், சட்ட விரோதமான செயல்கள் எவற்றிலும் ஈடுபட்டிருப்பது தெரியவந்தாலோ அல்லது இறந்த மீனவருக்கான கருணைத் தொகை பெறுவதற்கான தகுதி பெற்றிருந்தாலோ, மீனவர் குடும்பத்திற்கு வழங்கப்பட்ட உதவித் தொகையை சம்பந்தப்பட்ட மீனவர் குடும்பத்தினர் திருப்பியளித்திடும் உறுதிமொழி ஆவணம்.

இத்திட்டத்தினைச் செயல்படுத்திட, ரூ.12.00 இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டு கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

5.1.3 இலங்கை கடற்படை தாக்குதலால் இறந்த மீனவர் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல்

நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கும்போது, படகில் இயந்திரக் கோளாறு மற்றும் இயற்கைக் கடல் சீற்றங்களினால் தவறுதலாக சர்வதேச எல்லைக் கோட்டைத் தாண்டி இலங்கைக் கடற்பகுதிக்குள் செல்லும் சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. அவ்வாறு தவறுதலாக, சர்வதேச கடல் எல்லையைத் தாண்டும் மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் பிடிக்கப்பட்டும் அல்லது சில நேரங்களில் துப்பாக்கிச் சூட்டிற்கும் ஆளாகின்றனர்.

இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டு இறக்கும் மீனவ குடும்பத்தினரின் இன்னல்களைப் போக்கும் விதமாக அரசால் வழங்கப்படும் நிவாரணத் தொகையை 2008-09 ஆம் ஆண்டில்,

[2010 மே 4

ரூ.1.00 இலட்சத்திலிருந்து உயர்த்தி ரூ.3.00 இலட்சமாகவும், இறந்த மீனவர், குடும்பத்தின் வருவாய் ஈட்டும் நபராக இருப்பின், அவருக்கு ரூ.1.00 இலட்சத்திலிருந்து உயர்த்தி ரூ.5.00 இலட்சமாக வழங்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார். மேலும், குண்டுக் காயம் ஏற்பட்டவர்களுக்கு ரூ.50,000/-ஆகவும், சிறு காயம் ஏற்பட்டவர்களுக்கு ரூ.20,000/- ஆகவும் நிவாரணத் தொகை வழங்கப்படும். இத்திட்டம், 2010-11 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

5.1.4 தலைமை அலுவலகத்தில் செயல்படும் இடர்பாடு மேலாண்மைப் பிரிவு

மீன்பிடிப்பின்போது மீனவர்கள் காணாமல் போகுதல், அயல்நாட்டினரால் சிறைப்பிடித்தல் மற்றும் குண்டுக் காயம் ஏற்படுதல் போன்ற சம்பவங்களை அறிந்து உடனுக்குடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக, மீன்வளத் துறையின் தலைமை அலுவலகத்தில் ரூ.6.00 இலட்சம் செலவில் இடர்பாடு மேலாண்மைப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (தொலைபேசி எண் 24341757) இவை தவிர, இப்பிரிவில் பெறப்படும் வானிலை சம்பந்தப்பட்ட தகவல்கள் கடலோர மீன் துறை உதவி இயக்குநர்களுக்கு அனுப்பப்பட்டு மீனவர்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்கப்படுகிறது.

5.2 ஆழிப்பேரலை (சுனாமி) மறுவாழ்வு மற்றும் மறு கட்டமைப்புத் திட்டம்

2004-ல் ஆழிப்பேரலையானது, தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களைத் தாக்கி மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பெரும் சேதத்தை விளைவித்தது. அரசு மற்ற தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து ஆழிப்பேரலையால் பாதிப்புக்குள்ளான மீனவ சமுதாயத்தின் மறுவாழ்வுப் பணியை மேற்கொண்டது.

எனவே, ஆழிப்பேரலை நிவாரணத்துக்கு, அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில் விரிவான நோக்குடன், மீன்பிடிக் கலன்கள் மற்றும் தளவாடங்களை இழந்த மீனவர்களுக்கு அதிகபட்ச நிவாரண உதவி வழங்கும்பொருட்டு பல்வேறு நிவாரண உதவிகளை வழங்கியது. மீனவர் அவர்தம் வாழ்க்கையின் மறுவாழ்விற்குப் புத்துயிர் அளித்திடும் வகையில், அரசு முதல் கட்ட நிவாரணமாக ரூ.15,216.00 இலட்சத்தை, மீன்பிடி சாதனங்களை பழுது பார்க்க மற்றும் புதியதாக வாங்குவதற்கு வழங்கியுள்ளது.

2010 மே 4]

5.2.1 ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குக் கூடுதல் நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு நிவாரண உதவி பெற்ற 13 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 42,000 மீனவர்களுக்குக் கூடுதல் நிவாரணம் வழங்கப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, இராஜீவ் காந்தி புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.11,036.00 இலட்சம் செலவில் கூடுதல் நிவாரணப் பொருட்களான கனரக மிதிவண்டிகள், உயிர் காக்கும் கவச உடைகள், மறுமின்னூட்டும் ஒளி விளக்குகள், மீன்பிடி வலைகள் மற்றும் குளிர்காப்புப் பெட்டிகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

5.2.2 ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீன்பிடி விசைப் படகுகளுக்குப் பதிலாக புதிய மீன்பிடி விசைப் படகுகள் வாங்கிட வங்கிமூலம் பெற்ற வங்கிக் கடன்களைத் தள்ளுபடி செய்தல்

ஆழிப்பேரலையால் (சுனாமி) தங்கள் விசைப்படகுகளை இழந்த மீனவர்கள், வங்கிக் கடன் பெற்று புதிய விசைப்படகுகளை வாங்கியுள்ளதாகவும், அவ்வாறு வாங்கிய வங்கிக் கடன்களை திருப்பிச் செலுத்திட இயலாமல் உள்ளனர் என்றும், தமிழக அரசு உதவி புரியவேண்டும் என்றும், விசைப்படகு மீனவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். அதன் அடிப்படையில், வங்கிகளுடன் கலந்தாலோசித்து, விசைப்படகு மீனவர்களின் கடன் சுமையைப் போக்கும் வகையில் அரசு திட்டம் ஒன்றை வகுத்தது. இத்திட்டத்தின்படி, மீனவர்கள் வங்கிகள்மூலம் பெற்ற கடன் தொகையில் அசல் முழுவதையும் அரசே வங்கிகளுக்கு செலுத்தும். இக்கடன்களின் நிலுவைத்தொகை மீதான வட்டியை இரத்து செய்ய வங்கிகள் இசைந்துள்ளன. அரசாணை (4டி) எண் 7, கால்நடைப் பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை, நாள்: 31.03.2010-ன்படி சுனாமி கடன் பெற்ற 2,715 மீனவர்களுக்கு ரூ.6,370.00 இலட்சம் தொகையை அரசு தள்ளுபடி செய்துள்ளது.

5.2.3 கம்பியில்லாத் தொலைத்தொடர்பு சாதன வசதிகள்

உலக வங்கி நிதியுதவி பெற்று செயல்படுத்த உத்தேசிக்கப்பட்ட இத்திட்டம், தற்போது ஆழிப்பேரலை மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ளது. 13 கடலோர மாவட்டங்களில் கம்பியில்லாத் தொலைத்தொடர்பு சாதனங்களை நிறுவிட தமிழ்நாடு மின்னணுக் கழகம் (ELCOT) தேர்வு செய்யப்பட்டு,

[2010 மே 4

மத்திய அரசின் நிதியுதவியுடன் ரூ.5,760.00 இலட்சம் செலவில் இரண்டு கட்டமாக செயல்படுத்தப்படவுள்ளது. முதற்கட்டமாக, இராமநாதபுரம் மாவட்டத்தில் கம்பியில்லாத் தொலைத்தொடர்பு சாதனங்களை, தமிழ்நாடு மின்னணுக் கழகம்மூலம் நிறுவிட அரசு ரூ.773.00 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

5.2.4 உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய அவசர கால ஆழிப்பேரலை மறுசீரமைப்புத் திட்டம் (ETRP)

உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய அவசர கால ஆழிப்பேரலை மறுசீரமைப்புத் திட்டத்தின்படி, கீழ்க்கண்ட பணிகளுக்காக ரூ.9,620.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:-

அ) நான்கு மீன்பிடித் துறைமுகங்களை மறுகட்டமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல்

மல்லிப்பட்டினம், நாகப்பட்டினம், பழையாறு மற்றும் சின்னமுட்டம் ஆகிய நான்கு இடங்களில், மீன்பிடித் துறைமுகங்களின் மறுகட்டமைப்பு மற்றும் நவீனமயமாக்குதல் தொடர்பாக திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த திருவாளர் "ஸ்மெக்" ஆலோசனை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. திருவாளர் "ஸ்மெக்" நிறுவனம் உரிய ஆய்வுக்குப்பின் அளித்த வரைவு இறுதித் திட்ட அறிக்கையில், இந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.11,300.00 இலட்சம் செலவீட்டில் திட்ட மதிப்பீட்டறிக்கை அளித்துள்ளது. இதனை பரிசீலனை செய்த உயர்மட்டக் குழு, பழையாறு மற்றும் நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகங்களை மட்டும் மறுகட்டமைப்பு செய்யும் பணியை மேற்கொள்ளும் வகையில் திட்டச்செலவினத்தைத் திருத்தி, செயல்படுத்த முடிவெடுத்துள்ளது. இத்திருத்திய திட்ட வரைவிற்கு, உலக வங்கி 23-11-2009 அன்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஆ) நான்கு முகத்துவாரங்களை நிரந்தரமாகத் திறந்து வைத்தல்

உப்பனாறு, வெள்ளாறு, பழவேற்காடு ஏரி மற்றும் தாமிரபரணி ஆறு ஆகிய நான்கு ஆற்று முகத்துவாரங்களை நிரந்தரமாகத் திறந்து வைக்க உரிய ஆய்வுப் பணிகளை "வாப்கோஸ்" (Water and Power Consultancy Services Ltd) என்ற ஆலோசனை நிறுவனம் மேற்கொண்டு, இறுதி விரிவான திட்ட அறிக்கை (Draft final DPR)யின் வரைவினை அளித்துள்ளது. இத்திட்டத்திற்காக, முதலில்

2010 மே 4]

மதிப்பீடு செய்யப்பட்ட தொகையான ரூ.1,960.00 இலட்சத்திற்கு மாறாக ரூ.5,800.00 இலட்சத்திற்கு மதிப்பீட்டறிக்கையை "வாப்கோஸ்" ஆலோசனை நிறுவனம் சமர்ப்பித்துள்ளது. உப்பனாறு மற்றும் வெள்ளாறு முகத்துவாரங்களை நிரந்தரமாகத் திறக்கும் பணியை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டு அதனை செயல்படுத்திட அரசு ரூ.1,544.00 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதலை வழங்கியுள்ளது.

அதன் அடிப்படையில், உப்பனாறு மற்றும் வெள்ளாறு ஆகிய ஆற்று முகத்துவாரங்களை நிரந்தரமாகத் திறந்துவைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி (Bid Document) கோரும் அறிக்கையின் வரைவு உலக வங்கியின் ஒப்புதலைப்பெறும் பொருட்டு, 23-01-2009 மற்றும் 06-03-2009 ஆகிய தேதிகளில் திட்ட கண்காணிப்புப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

வெள்ளாறு முகத்துவாரத்தினை நிரந்தரமாகத் திறந்து வைக்கும் பணியை மேற்கொள்ள, கடலோரப் பகுதிகளை ஒழுங்குபடுத்துவதற்காக அமைக்கப்பட்ட மாவட்டக் குழுவின் ஒப்புதல் 04-08-2009 அன்று பெறப்பட்டுள்ளது. மாநிலக் குழுவின் ஒப்புதல் விரைவில் பெறப்படும். உப்பனாறு முகத்துவாரத்தினை நிரந்தரமாகத் திறந்து வைக்கும் பணியைப் பொறுத்தமட்டில், மாவட்டக் குழுவின் ஒப்புதலைப் பெற வனத் துறையின் தடையில்லாச் சான்று பெறப்பட வேண்டியுள்ளது.

இ) இரண்டு புதிய மீன் இறங்கு தளங்கள் அமைத்தல்

நாகூர் மற்றும் அன்னன்கோவில் ஆகிய இடங்களில் மீன் இறங்குதளங்கள் அமைத்திட, ரூ.2,360.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாகூரில் மீன் இறங்குதளம் கட்டுவதற்கு, கடலோரப் பகுதிகளை ஒழுங்குபடுத்துவதற்காக அமைக்கப்பட்ட மாநிலக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு, ரூ.1,060.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட வரைவு ஒப்பந்தப்புள்ளி, உலக வங்கியின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அன்னன்கோவில் மீன் இறங்குதளம் கட்டுவதற்கான ரூ.1,350.00 இலட்சத்திற்கான வரைவு ஒப்பந்தப்புள்ளியும் திட்டக் கண்காணிப்புப் பிரிவின் ஒப்புதலைப் பெற அனுப்பப்பட்டுள்ளது.

உலக வங்கித் திட்டத்தின்கீழ், நாகூரில் மீன் இறங்குதளம் கட்டுவதற்காக ரூ.1,060.00 இலட்சத்திற்கு அரசு திருத்திய நிருவாக ஒப்புதலை வழங்கியுள்ளது.

[2010 மே 4

5.2.5 ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடனான ஆழிப்பேரலை அவசர கால உதவித் திட்டம்

ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவிமூலம் ரூ.76.40 இலட்சம் செலவில் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களைப் பழுது பார்த்தல் மற்றும் புனரமைப்புப் பணிகள் முடிவடைந்துள்ளன. கடலூரில் உள்ள கழிமுகங்களை முழுமையாகப் பயன்படுத்திடவும், ஏழு பகுதிகளில் தூர்வாரிடவும், ஆசிய வங்கி நிதியுதவியுடன் ரூ.117.30 இலட்சம் செலவில் ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

5.2.6 ஆழிப்பேரலை மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் பத்து மீன் இறங்கு தளங்கள் அமைத்தல்

தமிழ்நாட்டில், கீழ்க்கண்ட பத்து இடங்களில் மொத்தம் ரூ.4,997.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் பத்து மீன் இறங்குதளங்கள் அமைக்க அரசு நிருவாக ஒப்புதல் வழங்கி, கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள முதல் தவணையாக ரூ.2,000.00 இலட்சம் வழங்கியுள்ளது:

திருவள்ளூர் மாவட்டம்	:	1	அண்ணாமலைச்சேரி
	:	2	எண்ணூர் முகத்துவாரக்குப்பம்
	:	3	பெரியமாங்கோடு
காஞ்சிபுரம் மாவட்டம்	:	4	கடலூர்பெரியகுப்பம்
விழுப்புரம் மாவட்டம்	:	5	எக்கியார்குப்பம்
புதுக்கோட்டை மாவட்டம்	:	6	ஆர். புதுப்பட்டினம்
இராமநாதபுரம் மாவட்டம்	:	7	கீழக்கரை
தூத்துக்குடி மாவட்டம்	:	8	திரேஸ்புரம்
	:	9	பெரியதாழை
திருநெல்வேலி மாவட்டம்	:	10	உவரி

கடலூர் பெரியகுப்பம், எக்கியார் குப்பம், கீழக்கரை, பெரியதாழை, உவரி மற்றும் ஆர்.புதுப்பட்டினம் ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. ஏனைய கிராமங்களில், மீன் இறங்குதளம் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் கோரப்பட்டு பணிகள் தொடங்கப்படும்.

2010 மே 4]

5.2.7 சென்னை மீன்பிடித் துறைமுகத்தினை நவீனப்படுத்துதல்

சென்னை மீன்பிடித் துறைமுகத்தை நவீனமயமாக்கிட, படகு கட்டும் இடங்களைப் புனரமைத்தல், அலை தடுப்புச் சுவர் விரிவாக்கம் செய்தல், கூடுதல் படகுகள் கட்டும் இடங்களை அமைத்தல் மற்றும் படகு நிறுத்துமிடங்களை அமைத்தல் ஆகியவற்றிற்காக சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்திற்கு ரூ.1,956.90 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. கிழக்குப் பகுதியின் அலை தடுப்புச் சுவர் விரிவாக்கம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

5.3 உள்கட்டமைப்பு வசதிகள்

5.3.1 மத்திய – மாநில அரசுகளின் பங்களிப்புத் திட்டத்தின்கீழ் மீன்பிடித் துறைமுகங்கள் அமைத்தல்

(அ) குளச்சல் மீன்பிடித் துறைமுகம்

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு மத்திய அரசு ரூ.2,710.00 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் அலைத் தடுப்புச் சுவர்கள் கட்டும் பணி மற்றும் குளச்சல் மீன்பிடித் துறைமுகத்திற்கு செல்லும் சாலை ஆகிய பணிகள் முதற்கட்ட பணிகளாக எடுக்கப்பட்டு, கிழக்கு அலை தடுப்பு சுவர் அமைக்கும் பணி 105 மீட்டர் நீளத்திற்கும், மேற்கு அலை தடுப்பு சுவர் அமைக்கும் பணி 225 மீட்டர் நீளத்திற்கும் முடிவடைந்துள்ளன. 764 எண்ணிக்கையுள்ள "கோர்லாக் ஆர்மர்" உருவாக்கப்பட்டுள்ளது. கிழக்கு மற்றும் மேற்கு அலைத் தடுப்பு சுவர்களுக்கு செல்லும் சாலைப் பணி மற்றும் எடைமேடை அமைக்கும் பணிகளும் முடிவடைந்துள்ளன. இரண்டாவது கட்டமாக, படகுகட்டும் தளம் தூர்வாரும் பணிகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. மேலும், உள்ளூர் மீனவர்களின் கோரிக்கைகளுக்கிணங்க ஏற்கெனவே, அனுமதி பெற்றுள்ள திட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பாக மாதிரி ஆய்வினை மேற்கொள்ளுமாறு பூண்டி ஐ.எச்.எச் நிறுவனத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், அப்பகுதி

[2010 மே 4

மீனவர்களிடம் மீன்பிடித் துறைமுகம் கட்டுவது தொடர்பாக எழுந்துள்ள ஐயப்பாட்டினை தெளிவுபடுத்துவதற்காக அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரையின் பேரில், மேற்கு அலைத் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

(ஆ) தேங்காய்ப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம்

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டினத்தில் ரூ.4,000.00 இலட்சம் மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட மத்திய அரசு நிருவாக அனுமதி வழங்கி இத்திட்டத்தினை நிறைவேற்றிட, முதல் கட்டமாக மத்திய - மாநில அரசுகள் ரூ.400.00 இலட்சம் நிதியை விடுவித்துள்ளன. இத்திட்டத்திற்குத் தேவையான நிலம் மீன்வளத் துறையால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. பணிகள் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பரிசிலிக்கப்பட்டு, தகுதியுள்ள ஒப்பந்தக்காரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. பணி நடைபெற்று வருகிறது.

(இ) பூம்புகார் மீன்பிடித் துறைமுகம்

பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான, மாதிரி ஆய்வினை "தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிலையம்" மேற்கொண்டு, மாதிரி ஆய்வு / சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த மதிப்பீட்டறிக்கை மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்ட அறிக்கை ஆகியவற்றை அளித்துள்ளது. தொல்லியல் துறை தெரிவித்ததற்கிணங்க தொல்பொருள் கடல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தொல்பொருள் தொடர்பான எவ்விதமான அமைப்புகளோ, பொருட்களோ மீன்பிடித் துறைமுகம் அமையவிருக்கும் இடத்தில் காணப்படவில்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.5,945.00 இலட்சத்தில் தயார் செய்யப்பட்டு, தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கையைப் பெறுவதற்கு பெங்களூரில் உள்ள "மீன்வளத்திற்கான மத்திய கடல்பொறியியல் நிறுவனத்திற்கு" அனுப்பப்பட்டுள்ளது. சுற்றுலா மற்றும் கலாச்சாரத் துறையிடமிருந்து தடையில்லாச் சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. மேலும், அவர்களது ஆலோசனையின்பேரில் மத்திய அரசின் இந்திய தொல்பொருள் அளவை நிறுவனத்தின் ஆழ்கடல் ஆய்வுப் பிரிவின் ஒப்புதலைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2010 மே 4]

5.3.2 ''பூட்'' (BOOT) – கட்டுதல், சொந்தமாக்குதல், இயக்குதல் மற்றும் மாற்றி ஒப்படைத்தல் திட்டத்தின்கீழ் மீன்பிடித் துறைமுகங்கள் அமைத்தல்

கன்னியாகுமரி மாவட்டம், முட்டம் மற்றும் இராஜாக்கமங்கலத்துறையில் "பூட்" (BOOT) முறையில் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட அரசு அனுமதி அளித்துள்ளது. முட்டம் துறைமுகம் அமைக்கும் நிறுவனத்திடம் அதற்கான நிலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று பெறப்பட்டு, அலை தடுப்புச் சுவர் அமைக்கும் பணியும், கான்கிரீட்டாலான நான்முக பிளாக்குகள் தயார் செய்யும் பணியும் நடைபெற்று வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் மீன்பிடித் துறைமுகத்தைப் பொறுத்தமட்டில், மாதிரி ஆய்வு, சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த மதிப்பீட்டறிக்கை ஆய்வு மற்றும் சுற்றுச் சூழல் மேலாண்மை திட்ட அறிக்கை ஆகியவை தயாரிக்கப்பட்டு வருகின்றன. மத்திய அரசிடமிருந்து தடையில்லாச் சான்று பெற்ற பின் கட்டுமானப் பணியினை தாமதமில்லாமல் துவக்கிட சலுகைதாரருக்கு தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது.

5.3.3 கடலோர கிராமங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைத்தல்

2009-10 ஆம் ஆண்டில், கீழ்க்காணும் 5 இடங்களில் ரூ.30.00 இலட்சம் செலவில் வழிகாட்டி விளக்குகள் நிறுவிட அரசு ஒப்பளிப்பு அளித்துள்ளது:

1	காஞ்சிபுரம் மாவட்டம்	: பனையூர் சின்னகுப்பம்
2	நாகப்பட்டினம் மாவட்டம்	: தரங்கம்பாடி
3	தஞ்சாவூர் மாவட்டம்	: சோமநாதன்பட்டினம்
4	இராமநாதபுரம் மாவட்டம்	: மண்டபம் வடக்கு
5	கன்னியாகுமரி மாவட்டம்	: தூத்தூர்

இவ்வகையான புதிய வகை விளக்குகள், காற்று மற்றும் சூரிய சக்தியால், மின்சாரத்தை உற்பத்தி செய்து அதன்மூலம் இயங்கும். இதனால், மீனவர்கள் பாதுகாப்பாக கரை திரும்புவதற்கு பெரிதும் உதவுகின்றன. இவ்வகை புதிய வழிகாட்டி விளக்குகள் தங்கு தடையில்லாமல் தொடர்ந்து ஒளியினை கொடுப்பதற்கு, இதில்

TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 4

அமைக்கப்பட்டுள்ள சூரிய ஒளியினால் மின்சக்தியை உற்பத்தி செய்யும் அமைப்பு உதவுகிறது. மேலும், இதில் உள்ள "லெட்" (LED) அமைப்பானது பிரகாசமான ஒளியைத் தருவதற்கான காரணியாகவும் விளங்குகிறது. இந்த வழிகாட்டி விளக்குகள் நிறுவும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

5.4 மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்தல்

சமீபகாலங்களில், அண்மைக்கடல் மீன்வள ஆதாரத்தைச் சார்ந்துள்ள மீனவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அண்மைக்கடல் மீன்வளமானது அளவிற்கதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. கடலோர மீன்வளத்தைப் பெருக்குதல் மற்றும் மாற்று மீன்பிடிப்பினை மேற்கொள்வதன் மூலம் அண்மைக்கடல் பகுதியில் உள்ள மீன்பிடிப்பு அழுத்தத்தினை தவிர்க்கலாம்.

இதனைக் கருத்திற்கொண்டு, அரசு ஏற்கெனவே கடலில் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யும் திட்டத்தைத் தொடங்கி, 48 மில்லியன் இறால் குஞ்சுகளை வளர்த்து இராமநாதபுரம், நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் தூத்துக்குடி மாவட்ட கடற்பகுதிகளில் இருப்பு செய்துள்ளது.

கடலில் மீன்வளத்தினை அதிகரிக்கவும், பாதுகாக்கவும் செயற்கையாக மீன் உறைவிடங்கள் அமைப்பது மேலாண்மையின் ஒரு அங்கமாகும். செயற்கையான மீன் உறைவிடங்கள் ஏற்கெனவே, 14 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர, தஞ்சாவூர், கன்னியாகுமரி, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள 4 இடங்களில் செயற்கையான மீன் உறைவிடங்கள் நிறுவும் பணி, மத்திய கடல் வள ஆராய்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

6. கடல் வாழ் உயிரின வளர்ப்பு

தமிழ்நாட்டின் நீண்ட கடற்கரைப் பகுதியானது, பல்வேறு கடல் நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேற்கொள்வதற்கான அதிக வாய்ப்புகளைக் கொண்டிருந்தாலும், அவை இன்னும் முழுமையாக பயன்படுத்தப்படாமல் உள்ளன. அண்மைக்கடல் பகுதிகளில் மீன்பிடிப்பு அழுத்தம் குறைவதற்கு ஒரு மாற்று நடவடிக்கையாக, கடல்வாழ் உயிரின வளர்ப்பு மேம்பாடு அமையும்.

2010 மே 4]

6.1 கடற்பாசி வளர்த்தல்

அண்மைக்கடல் பகுதிகளில் அதிக அளவில் மீன்பிடிப்பு அழுத்தத்தினைத் தவிர்க்க, தேர்ந்தெடுக்கப்பட்ட சில இடங்களில் சுயஉதவிக் குழுக்களை ஈடுபடுத்தி கடற்பாசி வளர்ப்பு மேற்கொள்வது, மீனவ மக்களுக்கு வருவாய் ஈட்டித்தருகின்ற ஒரு வெற்றிகரமான மாற்றுத் தொழிலாக உருவெடுத்துள்ளது. ஆழிப்பேரலையால் பாதிப்புக்குள்ளான மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதாரம் அளிக்கும் வகையில், பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்பு சிறப்புத் திட்டத்தின்மூலம் 6,000 மீனவர்களுக்கு, ரூ.39.88 இலட்சம் செலவில் கடற்பாசி வளர்ப்பில் திறன்மேம்பாட்டுப் பயிற்சியளிக்கப்பட்டது. மேலும், 114 சுயஉதவிக் குழுக்களுக்கு கடற்பாசி வளர்ப்பதற்காக ரூ.88.19 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

6.2. உள்நாட்டு மீன்வளம்

தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன்வளத்திற்கென, சுமார் 3.70 இலட்சம் எக்டேர் பரப்பில் பல்வேறு நீர்நிலைகளான நீர்த்தேக்கங்கள், நீர்ப்பாசன ஏரிகள் மற்றும் பருவ காலங்களில் தண்ணீர் வசதி பெறும் பாசன ஏரிகள், சிறிய மற்றும் குறுகிய கால தண்ணீர் வசதி கொண்ட குளங்கள், ஆறுகள், கழிமுகங்கள், உவர்நீர் மற்றும் உப்பங்கழிப் பகுதிகள் ஆகியவை உள்ளன. தமிழ்நாடு நீர் ஆதாரத்திற்கு பருவமழையை சார்ந்துள்ளதால், பெரும்பாலான நீர்நிலைகளில் தண்ணீர் நிலைத்திருக்கும் காலம் குறைவாக உள்ளது. மீன் உற்பத்தியை அதிகரிக்க, வேகமாக வளரக்கூடிய, வளர்ந்த மீன் விரலிகளை குறுகிய பருவ கால நீர்நிலைகளில் வளர்த்தல், நீர்த்தேக்கங்களில் கூண்டுகளில் மீன் வளர்ப்பு செய்வதன்மூலம் உற்பத்தி அளவை பெருக்கும் முறையை அறிமுகப்படுத்துதல், இதர மீன்களுடன் நன்னீர் இறால்களை சேர்த்து வளர்த்து கூடுதல் வருவாய் ஈட்டுதல் போன்ற முன்னோடி அணுகுமுறைகளை அரசு செயல்படுத்தி வருகிறது. எல்லா நீர்நிலைகளிலும் மீன்வளர்ப்புப் பணியை மேற்கொள்ள, மீன்வளத் துறை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

7.1. நீர்த்தேக்கங்கள்

தமிழ்நாட்டில் 61 பெரிய, நடுத்தர மற்றும் சிறிய நீர்த்தேக்கங்கள் உள்ளன. இவற்றில், 53 நீர்த்தேக்கங்கள் மீன்வளத் துறையின்

[2010 மே 4

கட்டுப்பாட்டில் உள்ளன. அவற்றில், உரிமச்சீட்டு வழங்கல், அருகாமையிலுள்ள உள்நாட்டு மீன்வள கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களைக் கொண்டு பங்கு மீன்பிடித்தல் மற்றும் மீன் பாசி குத்தகைக்கு விடுதல் போன்ற முறைகளில் மீன்பிடிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களிலிருந்து வளர்த்தெடுக்கப்படும் பெரு விரலிகள் நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுகின்றன. இருப்பு செய்யப்படும் மீன்குஞ்சு விரலிகளின் பிழைப்புத் திறனை அதிகப்படுத்திட 80-100 மி.மீ. அளவுள்ள பெருவிரலிகளை இருப்பு செய்திடுவதற்கு மீன்குஞ்சு ஒன்றிற்கு ரூ.1/- வீதம், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியமானது நிதி உதவியளிக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களில் பெரு விரலிகளை இருப்பு செய்யும் பணி, பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2009-10 ஆம் ஆண்டில், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நெறிமுறைகளின்படி, 14 நீர்த்தேக்கங்களில் பெருவிரலி மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டுள்ளன.

7.2 மீன்குஞ்சு உற்பத்தி

மீன்வளத் துறை மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் 4,025 இலட்சம் நுண்மீன்குஞ்சுகள் உற்பத்தித் திறன் கொண்ட 8 மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் உள்ளன. 2009-10-ஆம் ஆண்டில், இந்த எட்டு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களிலிருந்து 1,658.05 இலட்சம் நுண்மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இந்த நுண்மீன்குஞ்சுகள், துறையில் உள்ள மீன்குஞ்சு வளர்ப்பு மையங்களில் வளர்க்கப்பட்டு, துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளில் இருப்பு செய்யப்பட்டுள்ளன.

7.3 மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள்

மீன்துறை மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகக் கட்டுப்பாட்டில் உள்ள 29 மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள், ஆண்டிற்கு 85 மில்லியன் மீன்குஞ்சு விரலிகள் உற்பத்தி செய்யும் திறனுள்ளது. மீன் பண்ணைகளில் மொத்தமுள்ள 18.50 எக்டேரில், 13.20 எக்டேர் மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 5.30 எக்டேர் பழுதடைந்த நிலையில் உள்ளது. தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களிலிருந்து நிதி உதவி பெற்று மீன்குஞ்சு வளர்ப்பிடங்களைப்

2010 மே 4]

பழுது பார்த்தல் மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2009-10 ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் ரூ.22.50 இலட்சம் செலவில் 0.30 எக்டேர் பரப்பளவில் உள்ள மீன்குஞ்சு நாற்றங்கால் தொட்டிகள் பழுது பார்ப்பு மற்றும் புனரமைப்புப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில், மீன் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களிலிருந்து 269 இலட்சம் மீன்குஞ்சு விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

7.4 மீன் பிடிப்புக்குப் பின்னர் தேவைப்படும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

மத்திய அரசின் நிதியுதவித் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில், மீன்பிடிப்புக்குப்பின் தேவைப்படும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட, ரூ.76.25 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் 5 சிறிய மீன் விற்பனை நிலையங்களும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தால் 5 நவீன சில்லறை மீன் விற்பனை அங்காடிகளும் நிறுவப்பட்டுள்ளன. மேலும், 50 விழுக்காடு மானிய உதவியுடன் ரூ.2.50 இலட்சம் செலவில் மேட்டூர் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு மீன் விற்பனை செய்திட சிறிய உந்து வண்டி வாங்கிடவும், 25 விழுக்காடு மானிய உதவியுடன் ரூ.3.75 இலட்சம் செலவில் பனிக்கட்டிப்பெட்டி (Ice Box) வசதியுடன் கூடிய இரு சக்கர வாகனம் 50 மீன் விற்பனையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

7.5 மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்

தமிழ்நாட்டில் அறிவியல் முறையில் உள்நாட்டு மீன்வளர்ப்பு செயல்பாடுகளை பரவலாக்கிட, மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் 12 மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் செயல்படுகின்றன. மீன் வளர்ப்போருக்குத் தேவையான பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் மீன் வளர்ப்பிற்கு மானியம் வழங்குதல் மூலமாக மீன் வளர்ப்போரை ஊக்குவித்தல் போன்றவை மீன்வள மேம்பாட்டு முகமையின் முக்கியப் பணிகளாகும். இவை தவிர, நீர்நிலைகளில் மீன் வளர்ப்பினை மேற்கொள்வதன்மூலம் விவசாயிகளுக்குக் கூடுதல்

[2010 மே 4

வருமானம் பெற்றுத் தருவதுடன் கிராமப்புற வேலைவாய்ப்பினை உருவாக்கவும் வழிவகை செய்கிறது. இந்தப் பணிகள், 2010-11 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.6 உவர் நீர்வாழ் உயிரின வளர்ப்பு

தமிழ்நாட்டில் தூத்துக்குடி, நாகப்பட்டினம், திருவள்ளூர், இராமநாதபுரம் மற்றும் கடலூர் ஆகிய 5 மாவட்டங்களில், உவர் நீர்வாழ் உயிரின வளர்ப்பு மேம்பாட்டு முகமைகள் அந்தந்த மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள 56,000 எக்டேர் பரப்புள்ள கழிமுகப் பகுதியும், 14,860 எக்டேர் பரப்புள்ள கடலோர பகுதியும் உவர் நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கு உகந்ததாக கண்டறியப்பட்டுள்ளன. இதில், 6,417 எக்டேர் பரப்பில் மட்டும் இறால் வளர்ப்பு செய்யப்படுகிறது. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பண்ணைகளை "கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம், 2005"-ன்படி பதிவு செய்து கொள்வது சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இறால் வளர்ப்போர் தங்களது பண்ணைகளை கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்திடம் பதிவு செய்து கொள்கின்றனர்.

இதுவரை தமிழ்நாட்டில், 1,294 இறால் பண்ணைகள் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இரண்டு எக்டேருக்குட்பட்ட சிறு இறால் பண்ணை உரிமையாளர்களுக்கு, ஒரு எக்டேர் நீர்ப்பரப்பிற்கு ரூ.60,000/- வரை அரசு மானிய உதவி அளிக்கிறது. 2009-10 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினை செயல்படுத்திட முதல் தவணையாக ரூ.100.00 இலட்சத்தை மத்திய அரசு அனுமதித்து விடுவித்துள்ளது. இத்திட்டம், 2010-11 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.7 குளிர் நீர் மீன் வளர்ப்பு மேம்படுத்துதல்

நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள உயர்மட்ட நீரோடைகளில் பொழுதுபோக்கு மீன் பிடிப்பிற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. இந்நீர்நிலைகளில், மீன்வளத் துறைமூலம் 'டிரௌட்' (Trout) இன மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு, பொழுது போக்கிற்காக தூண்டிலில் மீன்பிடிக்க உரிமங்கள் வழங்கப்படுகின்றன. தூண்டில்

2010 மே 4]

மூலம் பொழுது போக்கு மீன்பிடிப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன் அவலாஞ்சி பண்ணையில் 'டிரௌட்' இன மீன்குஞ்சுகள் வளர்க்கப்பட்டு நீரோடைகளில் தொடர்ந்து இருப்பு செய்யப்பட்டு வருகிறது.

7.8 மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

2009-10 ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டம் சிற்றார் அணை-2-ல் உள்ள 16 நாற்றங்கால்களையும், 7 வளர்ப்பு குளங்களையும் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தலுக்காக, அரசு ரூ.22.50 இலட்சம் ஒப்பளித்துள்ளது. இத்திட்டம், 2010-11 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.9 மீன் விதைப் பண்ணைகளிடையே தகவல் பரிமாற்றத்தை வலுப்படுத்துதல்

2009-10 ஆம் ஆண்டில், துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மீன் விதைப் பண்ணைகளைக் கட்டுப்பாட்டு அலுவலரோடும், தலைமையலுவலகத்திலுள்ள மைய கண்காணிப்பு அமைப்போடும், கணினி மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களுடன் இணைப்பு ஏற்படுத்திட, ரூ.13.97 இலட்சம் அரசு நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்படி, போக்குவரத்து வசதிகள் குறைவாக உள்ள 7 மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை மையங்கள் மற்றும் 28 மீன் குஞ்சுகள் வளர்ப்பு மையங்களை கணினி மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களுடன் இணைக்கப்பட்டு, துறையிலுள்ள மீன் பண்ணைகளின் மீன்குஞ்சுகள் தேவை மற்றும் விநியோகத்தை மேம்படுத்திட இயலும்.

7.10 உள்நாட்டு மீனவர்களுக்கு மானிய விலையில் மீன்பிடி வலைகள் வழங்குதல்

உள்நாட்டு மீனவர்கள், மீன்பிடிப்பின்போது தங்களது வலைகள் நீரில் மூழ்கியுள்ள பொருட்களால் அடிக்கடி சேதமடைவதால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். அந்த சேதமடைந்த வலைகளுக்குப் பதிலாக புதிய வலைகள் வாங்குவதற்கு நிதியுதவி அளிப்பதன் மூலம் அவர்களின் மீன்பிடித்திறன் அதிகமாவதோடு, அதிக வருவாய் ஈட்டிடவும் வழிகோலும். எனவே, 2009-10ஆம் ஆண்டில், பகுதி-2 திட்டத்தின் கீழ் 800 உள்நாட்டு மீனவர்கள் பயன் பெறும் வகையில், தலா ஒவ்வொருவருக்கும் 50 விழுக்காடு மானியத்தில், 10 கிலோ மீன்பிடி

[2010 மே 4

வலைகள் வழங்கிட ரூ.20.00 இலட்சம் அரசால் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

8. சிறப்புத் திட்டங்கள்

8.1 பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்பு சிறப்புத் திட்டங்கள்

தமிழ்நாட்டிலுள்ள கடலோர மாவட்டங்களில் சென்னை நீங்கலாக உள்ள 12 மாவட்டங்களில் "பொன் விழா கிராம சுயவேலைவாய்ப்பு சிறப்புத் திட்டங்கள்" ஊரக வளர்ச்சித் துறை நிதியுதவி மூலம் ரூ.2,816.00 இலட்சம் செலவில் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பல்வேறு கடல்வாழ் உயிரின வளர்ப்பு முறைகளான சிங்கி இறால் கொழுக்க வைத்தல், நண்டு கொழுக்க வைத்தல், கடற்பாசி வளர்ப்பு, வண்ண மீன் வளர்ப்பு ஆகியவற்றில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல் மற்றும் இயந்திரப் படகு பழுது பார்த்தல், வலை பழுது பார்த்தல், மீன்களைப் பதப்படுத்துதல், மதிப்பூட்டிய மீன் பொருட்களை தயார் செய்தல் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டத்தின்மூலம், 42,000 மீனவர்களின் தொழில்நுட்பத் திறமையை மேம்படுத்தி, அவர்களது பொருளாதார நிலையினை முன்னேற்றமடையச் செய்வதையும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இவை தவிர, நீர்வாழ் உயிரின வளர்ப்பில் குறிப்பிடத்தக்க உற்பத்தி அதிகரிப்பு, சுயவேலைவாய்ப்பு, மீனவர்களின் குடும்பத்தினருக்கு மாற்று வாழ்வாதாரத் தொழில் மற்றும் ஏற்றுமதி மூலம் வருவாய் அதிகரிக்க செய்வதும், இத்திட்டத்தின் மற்ற நோக்கங்களாகும்.

இத்திட்டத்தின்கீழ், 114 சுயஉதவிக் குழுக்களுக்கு, கடற்பாசி வளர்ப்பினை சுயவேலைவாய்ப்புத் தொழிலாக மேற்கொள்ள மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது. உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்தும்பொருட்டு "நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம்" மூலம் "பல்வேறு இன கடல்மீன் பொறிப்பகம்" ஒன்று அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், சூரிய சக்தியால் மீன் உலர வைக்கும் உலர் நிலையங்கள், கடலோர மாவட்டத்திற்கு ஒன்று என 12 மீன் உலர் நிலையங்களும் ஏற்படுத்தப்படவுள்ளன. பொன் விழா கிராம சுயவேலைவாய்ப்பு சிறப்புத் திட்டத்தின்மூலம் மீன் பதப்படுத்துதல் மற்றும் மதிப்பு

2010 மே 4]

கூட்டுதலில் பயிற்சி பெற்றவர்களுக்கு மீன்களை சுகாதாரமான முறையில் கையாளவும், விற்பனை செய்யவும் ரூ.175.00 இலட்சம் மதிப்புள்ள விற்பனை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

8.2 தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்

உலக வங்கி நிதியுதவி மூலம் செயல்படுத்தப்படும் "தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்" நீரின் பயன்பாடு மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்து, விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் அளித்திடும் நோக்கத்தினைக் கொண்டது. இத்திட்டத்தினை செயல்படுத்தும் துறைகளில் ஒன்றான மீன்வளத் துறை விவசாயிகள் பயன்பெறும் வகையில், கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

- பண்ணைக் குட்டைகளில் மீன்வளர்த்தல்
- பாசன நீர்நிலைகளில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு
- கூடுகளில் மீன்குஞ்சுகள் வளர்த்தெடுத்தல்
- புதிய மீன்விதை வங்கிகளை உருவாக்குதல் மற்றும் அரசு மீன்விதைப் பண்ணைகளை சீரமைத்தல்
- அலங்கார மீன் வளர்ப்பு
- கூண்டுகளில் மீன் வளர்த்தல்
- மீன்பிடி உபகரணங்கள் வழங்குதல்
- மீன் விற்பனை நிலையங்கள் அமைத்தல்
- தகவல், கல்வி, மக்கள் தொடர்பு மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல்.

2009-2010ஆம் ஆண்டில், முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களில் நிலுவையிலுள்ள பணிகளுடன் புதியதாக மூன்றாவது கட்டப் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. மூன்றாம் கட்டத்தில், 24 உபவடி நிலங்களில் மீன்வளப் பணிகளை செயல்படுத்துவதற்காக ரூ.269.37 இலட்சத்திற்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

8.3 தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டம், மத்திய வேளாண்மை அமைச்சகத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்தின் செயல்பாடுகளில் மீன்வளம் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008-2009 ஆம் ஆண்டில், ரூ.107.00 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு, கீழ்க்காணும் மீன்வளத் திட்டங்கள் 2009-2010-ல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(i) தமிழ்நாட்டில் மீன்குஞ்சு உற்பத்தியை அதிகரித்திடும் பொருட்டு, தனியாரை மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் மீன் குஞ்சு வளர்ப்பில் ஈடுபடுத்திட, 50 விழுக்காடு மானியம் வழங்கும் திட்டம்.

தமிழ்நாட்டில் போதுமான நீர் ஆதாரங்கள் இருந்தாலும், தரமான மீன்குஞ்சுகள் கிடைக்காததால், அந்த நீர் ஆதாரங்கள் முழுமையாக மீன்வளர்ப்பிற்கு உட்படுத்தப்படாத நிலையில் உள்ளன. மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் மீன்குஞ்சு வளர்ப்பில் தனியாரை ஊக்குவிப்பதன்மூலம் மீன்குஞ்சு தேவையில் தன்னிறைவை அடைய இயலும்.

இதனைக் கருத்தில்கொண்டு, மீன்குஞ்சு உற்பத்தி / மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள் தனியார்மூலம் அமைத்திட 2009-2010 ஆம் ஆண்டில், ரூ. 95.00 இலட்சம் செலவில் கீழ்க்காணும் மானிய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- ஆண்டொன்றிற்கு, 8-10 மில்லியன் மீன்குஞ்சு உற்பத்தித் திறன் கொண்ட, 10 மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணைகளுக்கு மூலதனச் செலவில் 50 விழுக்காடு மானியமாக, அதிகபட்சத் தொகையாக ஒரு மையத்திற்கு ரூ.5.00 இலட்சம் வரை வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ், 10 பயனாளிகள் தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்டு கட்டமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ஆண்டொன்றிற்கு 5 இலட்சம் மீன்விரலிகள் வளர்த்தெடுக்கும் திறன் கொண்ட 30 மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணைகளுக்கு மூலதனச் செலவில் 50 விழுக்காடு மானியமாக, அதிகபட்சத் தொகையாக ஒரு பண்ணைக்கு ரூ1.50 இலட்சம் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ், 30 பயனாளிகள் திருவாரூர், தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி மற்றும் மதுரை மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்டு கட்டமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2010 மே 4]

(ii) மீன்வளர்ப்போர் மற்றும் மீன்துறையில் உள்ள தொழில்நுட்ப பணியாளர்களின் திறன் மேம்பாடு செய்தல்

மீன் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு புதுமையான தொழில்நுட்பங்கள் உள்ளன. மத்திய மற்றும் மாநில ஆராய்ச்சி மையங்களின் மூலம் இத்தொழில்நுட்பங்கள் மேம்படுத்தப்பட்டு, மீன்வளர்ப்போரை சென்றடையும் வண்ணம் நெறிப்படுத்தப்பட்டுள்ளன. ஆந்திரப் பிரதேசம், ஒரிசா, மேற்கு வங்காளம், பஞ்சாப் மற்றும் அரியானா போன்ற மாநிலங்களில் மேம்படுத்தப்பட்ட மீன் வளர்ப்பு குறித்த தொழில்நுட்பமுறைகள் உள்ளன. எனவே, ஊக்கமுடைய மீன்வளர்ப்போர்களுக்கும், துறையில் பணிபுரிவோர்களுக்கும் நீர்வாழ் உயிரின வளர்ப்பில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத் தாக்கத்தை ஏற்படுத்தி, மீன் உற்பத்தியை அதிகரிக்க இதர மாநிலங்களில் உள்ள மத்திய/மாநில/தனியார் பண்ணைகளுக்கு அழைத்துச் செல்ல திட்டமிடப்பட்டது. 2009-2010 ஆம் ஆண்டில், ரூ.12.00 இலட்சம் செலவினத்தில், 100 மீன்வளர்ப்போரையும் மற்றும் 100 தொழில்நுட்ப மீன்வளத் துறைப் பணியாளர்களையும் இதர மாநிலங்களுக்கு அழைத்துச் சென்று மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

2009-2010 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட மீன்வளத் திட்டங்களுக்கு ரூ.112.37 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(அ) தடுப்பு அணைகளில் மீன்வளர்ப்பு

வனப் பகுதியில் உள்ள நீர்நிலைகள் இதுகாறும், மீன்வளர்ப்பிற்கு பயன்படுத்தப்படாமலோ, திறனுக்கு குறைவாகவோ பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. எனவே, வனப்பகுதியில் உள்ள தடுப்பணைகள் மற்றும் கசிவுநீர் குட்டைகளில் மீன்விரலிகளை இருப்பு செய்து, வனத் துறையுடன் இணைந்து மீன்வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்த, 300 கிராம வனக்குழு உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் பயிற்சி அளிக்கப்படும். வேலூர், தேனி, சேலம், நாமக்கல் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சுமார் 100 எக்டேர் பரப்பளவு நீர்நிலைகள் தேர்வு செய்யப்பட்டு மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்படும். 2009-2010-ஆம் ஆண்டில், இத்திட்டத்தினை செயல்படுத்திட அரசால் ரூ.4.30 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

[2010 மே 4

(ஆ) மீன்துறையில் உள்ள தொழில்—நுட்பப் பணியாளர்கள் மற்றும் மீன்வளர்ப்போரின் திறனை மேம்படுத்துதல்

ஆந்திரப் பிரதேசம், ஒரிசா மற்றும் மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் மீன்வளர்ப்பானது வணிக ரீதியில் வெற்றிகரமாக கையாளப்பட்டு வருகிறது. அறிவியல் முறையில் நீர்வாழ் உயிரின வளர்ப்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தி சமீபத்திய தொழில்நுட்பங்களைப் பின்பற்றி, உற்பத்தி இலக்கினை அடைவதற்கு, மற்ற மாநிலங்களில் உள்ள மத்திய / மாநில மற்றும் தனியார் பண்ணைகளுக்கு மீன்வளர்ப்போர் மற்றும் துறையின் தொழில்நுட்ப அலுவலர்களை நேரடியாக அழைத்துச் செல்வது அவசியமாகிறது. 2009-2010-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள 100 மீன்வளர்ப்போர்களையும், 100 துறையின் தொழில்நுட்ப அலுவலர்களையும் ரூ.12.12 இலட்சம் செலவில், இதர மாநிலங்களுக்கு அழைத்துச் செல்லும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(இ) மீன்குஞ்சு உற்பத்தியில் தனியாரை ஊக்குவித்து மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் அமைக்க 50 விழுக்காடு மானியம் வழங்குதல்

தமிழ்நாட்டின் மீன்குஞ்சு தேவைகளில் தன்னிறைவடையவும், மீன்குஞ்சு தேவை மற்றும் விநியோகத்திற்கிடையே நிலவும் இடைவெளியை குறைத்திடவும், வருடத்திற்கு 5.00 இலட்சம் மீன்குஞ்சு விரலிகளை வளர்த்தெடுக்கும் திறன் கொண்ட வளர்ப்பு நிலையம் ஒன்று அமைப்பதற்கு, மூலதன முதலீட்டில் 50 விழுக்காடு மானியமாக அதிகபட்சத்தொகையாக ரூ.1.50 இலட்சம் வீதம், 40 மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் நிறுவிட, ஆக மொத்தம் ரூ.60.60 இலட்சம் (நிர்வாகச் செலவு உள்பட) அரசால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

(ஈ) ஆயிரங்கால் தூண்டில் மூலம் சூரை மீன்கள் பிடிப்பதற்கு ஏதுவாக சிறிய மீன்பிடி கலன்களை மாற்றியமைப்பதற்கு மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கும் திட்டம்

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக, கடல் மீன் உற்பத்தி ஒரே அளவிலேயே உள்ளது. மீன்வள ஆதாரங்களை சார்ந்துள்ளோர் அதிகரித்து வருவதால், மீன்பிடித்திறன் கணிசமான அளவு குறைந்துள்ளது. அண்மைக்கடல் பகுதியில் தற்போது மீன்பிடி அழுத்தத்தைக் குறைப்பதற்கு தூரக்கடல் மற்றும் ஆழ்கடல்

2010 மே 4]

மீன்பிடிப்பினை ஊக்குவிப்பது அவசியமாகிறது. தூரக்கடல் மீன்வள ஆதாரத்தைப் பொறுத்தமட்டில், சூரை மீன் போதுமான அளவிற்கு பிடிக்கப்படவில்லை. மேலும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தை மதிப்புள்ள ஏற்றுமதி வாய்ப்புள்ள சூரை மீன்பிடிப்பில் இந்தியா இன்னமும் ஆரம்பகட்ட நிலையிலேயே உள்ளது. தமிழ்நாட்டில் குறைந்த அளவிலே பிடிக்கப்பட்டு வரும் சூரை மீன்வளத்தை முழுமையாக பயன்படுத்திடும் வகையில் தங்களது சிறிய மீன்பிடிக் கலன்களை சூரைமீன் பிடிப்பிற்கேற்றவாறு மாற்றியமைத்திடும் மீனவர்களுக்கு அரசு 50 விழுக்காடு மானிய உதவியளித்திடவுள்ளது. 2010-2011 ஆம் ஆண்டில், ரூ.35.35 இலட்சம் (நிர்வாகச் செலவு உட்பட) செலவில், 50 மீன்பிடி விசைப்படகுகளையும் 50 கண்ணாடி நாரிழை வள்ளங்களையும், சூரை மீன்பிடிப்பு மேற்கொள்ளத்தக்க வகையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. மீன்பிடி விசைப்படகுதாரர்களுக்கு, படகு ஒன்றிற்கு மூலதனச் செலவில், 50 விழுக்காடு மானியமாகவும் ரூ.40,000/-க்கு மிகாமலும், கண்ணாடி நாரிழை வள்ள உரிமைதாரர்களுக்கு வள்ளம் ஒன்றிற்கு மூலதனச் செலவில் 50 விழுக்காடு மானியமும் ரூ. 30,000/-க்கு மிகாமலும் வழங்கப்படும்.

8.4 தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம்

அ) நீர்த்தேக்க மீன்வள மேலாண்மைத் திட்டம்

நீர்த்தேக்கங்களில் உள்ள மீன்வள ஆதாரங்களை பயன்படுத்தி அதன் திறனுக்கேற்றவாறு மீன் உற்பத்தியை அதிகரித்து மீன் வளத்தினை வளம் குன்றாமல் பாதுகாத்திட, தரமான மீன்குஞ்சுகளை இருப்பு செய்தல் அவசியமாகிறது. நீர்த்தேக்க மேலாண்மைத் திட்டத்தின்கீழ், பெருவிரலி மீன்குஞ்சுகள் நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்ய மீன்குஞ்சு ஒன்றிற்கு ரூ.1/- வீதம், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் நிதியுதவி அளிக்கிறது. 2008-2009-ஆம் ஆண்டில், மீன்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள, தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்நிலைகளில் 157 இலட்சம் பெருவிரலிகள் இருப்பு செய்யப்பட்டதற்காக, தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியமானது, ரூ.157.64 இலட்சத்தை விடுவித்துள்ளது. நீர்த்தேக்க மீன்வளத்தினை தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் 2,290 உள்நாட்டு மீனவர்களுக்கு, ரூ.18.93 இலட்சம் செலவில் நிலைத்த வளங்குன்றா நீர்த்தேக்க மேலாண்மை குறித்தான

பயிற்சியளிக்கப்பட்டது. 2009-2010 ஆம் ஆண்டில், 22 நீர்த்தேக்கங்களில் பெருவிரலி மீன்குஞ்சுகளை இருப்பு செய்யவும், நீர்த்தேக்க மீன்வளத்தினை தங்களது வாழ்வாதாரமாகச் சார்ந்துள்ள 2,140 உள்நாட்டு மீனவர்களுக்கு, வளங்குன்றா நீர்த்தேக்க மீன்வள மேலாண்மையில் பயிற்சி அளித்திடவும், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் ரூ.157.40 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்து, அதில் முதல் தவணையாக ரூ.96.75 இலட்சத்தை விடுவித்துள்ளது. இத்திட்டம், 2010-2011 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

ஆ) வண்ண மீன் உற்பத்தி/வளர்ப்பு மையங்கள் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்கள் குறித்தான புள்ளி விபரம் சேகரித்தல்

தமிழ்நாட்டில் உள்ள வண்ண மீன் உற்பத்தி / வளர்ப்பு மையங்கள் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்கள் குறித்தான புள்ளி விபரங்களை சேகரித்திட தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் ரூ.2.44 இலட்சத்தை ஒப்பளிப்பு செய்து விடுவித்துள்ளது.

9. ஆராய்ச்சி

மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டில், சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் இரண்டு ஆராய்ச்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஆராய்ச்சிப் பணியைப் பொறுத்தமட்டில், மீன்வளத் துறையானது, மத்திய நன்னீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய உவர்நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய கடல்மீன்வள ஆராய்ச்சி நிலையம் மற்றும் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றோடு இணைந்து செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில மீன்வள ஆராய்ச்சிக் குழுவின் 28-வது கூட்டம், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 29-02-2008 அன்று நடைபெற்றபோது, 2008-2010 முடியவுள்ள காலத்தில்கீழ் வரும் ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது:-

- ➢ சுற்றுச்சூழல் மற்றும் உணவு மேலாண்மை மூலமாக, பல்வகையான மீன் இனப்பெருக்கத்திற்கான தொழில் நுட்பங்களை நிலைப்படுத்துதல்.
- ➢ மலைப்பகுதி நீர்நிலைகளில் "பொம்மீன்" மீன்வளர்ப்பினை மேம்படுத்துதல்.

2010 மே 4]

- இறால் பண்ணை கழிவுகளினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பினை ஆய்வு செய்தல்
- இறால்களுக்கு ஏற்படும் நோய்கள் குறித்து ஆராய்ச்சி செய்தல்
- நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சூரை மீன்வள ஆதாரங்களை ஆய்வு செய்தல்
- செயற்கை உறைவிடங்களில் மீன்களின் குழுமம் நிலை குறித்த ஆய்வுப்பணி மேற்கொள்ளுதல்
- தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சிங்கி இறால் வளம் குறித்த ஆய்வு மேற்கொள்ளுதல்
- கெலவரப்பள்ளி மற்றும் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கங்களில் மீன்வள மேலாண்மைக்கான தற்போதைய கோட்பாடுகளை வரையறுத்தல்
- கொள்ளிடம் ஆற்றில் கிடைக்கும் வணிக முக்கியத்துவம் வாய்ந்த நன்னீர் இறால் குஞ்சுகள் கிடைப்பது குறித்தான ஆய்வினை மேற்கொள்ளுதல் மற்றும் வளர்ப்புக் குளங்களில் நன்னீர் ஆற்று இறால் வளர்ப்பு குறித்தான ஆய்வு மேற்கொள்ளுதல்
- நீலகிரியில் உள்ள ''ட்ரௌட்'' மீன்வளத்தினை மேம்படுத்துதல்
- "ட்ரௌட்" சினைமீன்கள் மற்றும் குறிப்பிட்ட வகையான அலங்கார மீன்களுக்கு மீன் உணவு தயாரித்தல்
- கடல்/நன்னீர் அலங்கார மீன்களின் இனப்பெருக்கம் செய்தல்
- மண்டபம் கடலோரப் பகுதியில் "பால் மீன்வளம்" குறித்தான அளவை மேற்கொள்ளுதல்

10. விரிவாக்கம் மற்றும் பயிற்சி

விரிவாக்கம் மற்றும் பயிற்சியானது, புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் அரசின் நலத்திட்டங்கள் பற்றி பயனாளிகள் தெரிந்து கொள்ளும் வகையில் முக்கிய பங்காற்றுகிறது. மீன்துறையானது, சென்னையில் ஒரு பணியாளர் பயிற்சி நிலையத்தையும்

[2010 மே 4

நாகப்பட்டினம், மண்டபம், குளச்சல் மற்றும் தூத்துக்குடி ஆகிய நான்கு இடங்களில் மீனவர் பயிற்சி நிலையங்களையும் நடத்தி வருகிறது. பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்பு சிறப்புத் திட்டங்கள், தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் மத்திய அரசு ஆகியவற்றின் நிதி உதவியுடன், தேவை அடிப்படையில் பல்வேறு பயிற்சிகள் மீன்வளத்துறையால் நடத்தப்பட்டு வருகின்றன.

10.1 மீனவ இளைஞர்களுக்கு பயிற்சி

மீன்பிடிப்படகுகளை இயக்கவும் மற்றும் பராமரிக்கவும், நவீன மீன்பிடிக் கருவிகளை இயக்கவும் மீனவ இளைஞர்களுக்கு நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி மற்றும் குளச்சல் ஆகிய நான்கு இடங்களில் நவீன மீன்பிடிப்பு குறித்த 10 மாத பயிற்சியை மீன்துறை வழங்கி வருகிறது. ஒவ்வொரு மையத்திலும், 50 முதல் 60 மீனவ இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இது மட்டுமின்றி, இந்தப் பயிற்சி நிலையங்களில், இளநிலை இயந்திரக் கம்மியர்களுக்கான பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது. தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ஒன்றிற்கு ரூ.400/- வீதம் உதவித் தொகையாக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

10.2 கடல் சார் கல்வியில் படித்த மீனவ இளைஞர்களின் செயல்திறனை மேம்படுத்துதல்

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேறிய மீனவ இளைஞர்களின் வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டு, கடல்சார் கல்வியில் தொடர்ந்து படித்திட தமிழக அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 2007-2008-ஆம் ஆண்டில், 100 மீனவ இளைஞர்கள் பயன்பெறும் வகையில் தலா ஒவ்வொருவருக்கும், ரூ.50,000/- வீதம் ரூ.50.00 இலட்சத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இத்திட்டத்தில், குறைவான எண்ணிக்கையுள்ள பயிற்சிகளே சேர்க்கப்பட்டிருந்ததால், 9 மீனவ இளைஞர்கள் மட்டுமே பயனடைந்தனர். தற்போது, மேலும் 4 பயிற்சிகளை கூடுதலாக சேர்த்து அரசு ஆணையிட்டுள்ளதால், இத்திட்டத்தில் பயனடைய, 50 மீனவ இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இத்திட்டம், 2010-2011 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2010 மே 4]

10.3 மீன்வளத் தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி நிலையம்

சட்டமன்றத்தில் அறிவித்தபடி, மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்திட உலகத்தரம் வாய்ந்த மீன்வளத் தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி நிலையம் ஒன்று டாடா குழுமத்தின் பங்களிப்புடன் தொடங்கப்பட்டுள்ளது. இந்த மீன்வள தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட, முட்டுக்காட்டில் 2.6 ஏக்கர் நிலம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தால், 2,390 மீனவர்களுக்கு கடற்பாசி வளர்ப்பு மற்றும் சூரை மீன்பிடிப்பில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், 2010-2011 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

11. புதிய திட்டங்கள் 2010–2011

11.1 ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீன்பிடி விசைப்படகுகளுக்கு பதிலாக புதிய மீன்பிடி விசைப்படகுகள் வாங்கிட பெற்ற வங்கிக் கடன்களை தள்ளுபடி செய்தல்

ஆழிப்பேரலையால் (சுனாமி) தங்கள் விசைப்படகுகளை இழந்த மீனவர்கள், வங்கிக்கடன் பெற்று புதிய விசைப்படகுகளை வாங்கியுள்ளதாகவும், அவ்வாறு வாங்கிய வங்கி கடன்களை திருப்பி செலுத்திட இயலாமல் உள்ளனர் என்றும், தமிழக அரசு உதவி புரியவேண்டும் என்றும், விசைப்படகு மீனவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். அதன் அடிப்படையில், வங்கிகளுடன் கலந்தாலோசித்து, விசைப்படகு மீனவர்களின் கடன் சுமையை போக்கும் வகையில் அரசு திட்டம் ஒன்றை வகுத்தது. இத்திட்டத்தின்படி, மீனவர்கள் வங்கிகள் மூலம் பெற்ற கடன் தொகையில் அசல் முழுவதையும் அரசே வங்கிகளுக்கு செலுத்தும். இக்கடன்களின் நிலுவைத்தொகை மீதான வட்டியை ரத்து செய்ய வங்கிகள் இசைந்துள்ளன. அரசாணை (4டி) எண் 7, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை நாள்: 31-03-2010-ன்படி, சுனாமி கடன் பெற்ற 2,715 மீனவர்களுக்கு ரூ.6,370.00 இலட்சம் தொகையை அரசு தள்ளுபடி செய்துள்ளது.

11.2 இணையதளத்தின் வாயிலாக மீன்பிடிக் கலன்களை பதிவு செய்தல்

கடந்த 26-11-2008 அன்று தீவிரவாதிகளால் மும்பை நகரம் தாக்கப்பட்டதற்குப் பிறகு கடலோரப் பாதுகாப்பினை கடுமையாக்கிட, அனைத்து கடலோர மாநிலங்களில் உள்ள

[2010 மே 4

மீனவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் பொருட்டு, மீன்பிடிக்கலன்களுக்கு ஒரே மாதிரியான பதிவினை மேற்கொள்ள மத்திய அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மத்திய அரசினால் வகுக்கப்பட்ட மீன்பிடிக்கலன்களுக்கான பொதுவான இணையதளப் பதிவினை மேற்கொள்ளும் கருத்தினை தமிழக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்தியாவின் அனைத்து கடலோர மாநிலங்களில் உள்ள மீன்பிடிக்கலன்களைப் பதிவு செய்திடும் பொருட்டு, 2009-2010-ஆம் ஆண்டிற்காக, ரூ.498.30 இலட்சம் மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதில் முதல் தவணையாக ரூ.120.00 இலட்சத்தை புது தில்லியிலுள்ள தேசிய தகவல் மையத்திற்கு (National Informatics Centre) மத்திய அரசு விடுவித்துள்ளது. இதில், தமிழகத்திற்காக ரூ.70.90 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இணையதளம் மூலம் பதிவு செய்யப்படும் மீன்பிடிக்கலன்களுக்கு, பதிவுச் சான்றிதழ் இரு மொழிகளில் வழங்கப்படும். இத்திட்டம், விரைவில் தேசிய தகவல் மையத்தின் மூலமாக செயல்படுத்தப்படவுள்ளது.

11.3 மீனவர்களுக்கு உயிர் தொழில்நுட்ப (BIOMETRIC) அடையாள அட்டை வழங்குதல்

கடலோர கிராமங்களில் வசிக்கும் மீனவர்களுக்கென ஒரே மாதிரியான உயிர் தொழில்நுட்ப (BIOMETRIC) அடையாள அட்டை வழங்கும் திட்டத்திற்கு மத்திய அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. கடலோர மாநிலங்களில் உள்ள அனைத்து மக்களுக்கும் பன்னாட்டு தேசிய அடையாள அட்டையை இந்திய பதிவுத்துறைத் தலைவராலும், தீவிர மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களுக்கான உயிர் தொழில்நுட்ப அடையாள அட்டையை மீன்வளத்துறையாலும் வழங்கப்படவுள்ளன. 2009-2010-ஆம் ஆண்டில், இத்திட்டத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்திட, மத்திய அரசானது ரூ.116.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

11.4 ஆயிரங்கால் தூண்டில் மூலம் சூரை மீன்கள் பிடிப்பதற்கு ஏதுவாக சிறிய மீன்பிடிக்கலன்களை மாற்றியமைப்பதற்கு மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கும் திட்டம்

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக, கடல் மீன் உற்பத்தி ஒரே அளவிலேயே உள்ளது. மீன்வள ஆதாரங்களை சார்ந்துள்ளோர் அதிகரித்து வருவதால், மீன்பிடித்திறன் கணிசமான அளவு

2010 மே 4]

குறைந்துள்ளது. அண்மைக்கடல்பகுதியில் தற்போது மீன்பிடி அழுத்தத்தைக் குறைப்பதற்கு தூரக்கடல் மற்றும் ஆழ்கடல் மீன்பிடிப்பினை ஊக்குவிப்பது அவசியமாகிறது. தூரக்கடல் மீன்வள ஆதாரத்தைப் பொறுத்தமட்டில், சூரை மீன் போதுமான அளவிற்கு பிடிக்கப்படவில்லை. மேலும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தை மதிப்புள்ள ஏற்றுமதி வாய்ப்புள்ள சூரை மீன்பிடிப்பில் இந்தியா இன்னமும் ஆரம்பகட்ட நிலையிலேயே உள்ளது. தமிழ்நாட்டில் குறைந்த அளவில் பிடிக்கப்பட்டு வரும் சூரை மீன்வளத்தை முழுமையாக பயன்படுத்திடும் வகையில் தங்களது சிறிய மீன்பிடிக் கலன்களை சூரைமீன் பிடிப்பிற்கேற்றவாறு மாற்றியமைத்திடும் மீனவர்களுக்கு அரசு 50 விழுக்காடு மானிய உதவியளித்திடவுள்ளது. 2010-2011 ஆம் ஆண்டில், ரூ.35.35 இலட்சம் செலவில், 50 மீன்பிடி விசைப்படகுகளையும் 50 கண்ணாடி நாரிழை வள்ளங்களையும், சூரை மீன்பிடிப்பு மேற்கொள்ளத்தக்க வகையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. மீன்பிடி விசைப்படகுதாரர்களுக்கு, படகு ஒன்றிற்கு மூலதனச்செலவில், 50 விழுக்காடு மானியமாகவும் ரூ.40,000/-க்கு மிகாமலும், கண்ணாடி நாரிழை வள்ள உரிமைதாரர்களுக்கு வள்ளம் ஒன்றிற்கு மூலதனச்செலவில் 50 விழுக்காடு மானியமும் ரூ.30,000/-க்கு மிகாமலும் வழங்கப்படும்.

11.5 கடலூர் மாவட்டத்திலுள்ள வெள்ளாறு, பில்லமேடு மற்றும் சின்னவாய்க்கால் ஆகிய பகுதிகளில் முகத்துவாரங்களை தூர்வரும் பணி மேற்கொள்ளல்

கடலூர் மாவட்டமானது, சுமார் 57.5 கி.மீ நீளமுடைய கடற்கரையினையும், 49,113 மீனவ மக்கள் தொகை கொண்ட 49 கடல் மீனவ கிராமங்களையும் கொண்டுள்ளது. இம்மாவட்டத்தில், 656 மீன்பிடி விசைப்படகுகளும், 1,111 கண்ணாடி நாரிழை வள்ளங்களும், 5,538 கட்டுமரங்களும் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. இங்குள்ள மீனவர்கள், கடலில் மீன்பிடித் தொழில் செய்ய வெள்ளாறு, பில்லமேடு மற்றும் சின்னவாய்க்கால் முகத்துவாரங்களை பயன்படுத்துகின்றனர். அம்முகத்துவாரங்களில் பருவமழை பொய்ப்பதனால், தேவையான நீர்வரத்து இல்லாமல் முகத்துவாரத்திற்கு செல்லும் வாய்க்கால்களும் முகத்துவாரமும் மணல்மேடு உருவாகி மூடும் நிலை ஏற்படுகிறது. இதனால் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 4

இம்மாதிரியான இடர்பாடுகளை களைந்து, மீன்பிடிக்கலன்கள் துரிதமாக கடல் பயணத்தினை மேற்கொள்ள அப்பகுதிகளிலுள்ள முகத்துவாரங்களையும், கடலுக்குச் செல்லும் வாய்க்கால்களையும் தூர்வாருவது இன்றியமையாததாகும். 2010-2011 ஆம் ஆண்டில், ரூ.29.04 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் வெள்ளாறு, பில்லமேடு மற்றும் சின்னவாய்க்கால் ஆகிய பகுதிகளிலுள்ள கடலுக்கு செல்லும் வாய்க்கால் மற்றும் முகத்துவாரங்களில் தூர்வாரும் பணி மீன்பிடித்துறைமுக திட்ட கோட்டத்தின் மூலமாக செயல்படுத்தப்படும்.

11.6 தலைமை அலுவலகத்திலுள்ள நிர்வாகப் பிரிவுகளை கணினி மூலம் உள்வட்ட இணைப்பு செய்தல்

மீனவர் நலன் மற்றும் மீன்வள மேம்பாட்டுக்கான பல்வேறு திட்டங்கள், தலைமை அலுவலகத்திலுள்ள 18 நிர்வாகப்பிரிவுகள் மூலம் செயல்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன. தலைமை அலுவலகத்திலுள்ள நிர்வாகப் பிரிவுகளிடமிருந்து அறிக்கையினைப் பெற்று, ஒருங்கிணைத்து, அரசு மற்றும் தொடர்புடைய பிற நிறுவனங்களுக்கு அனுப்புவதில் கால விரயமும், கண்காணிப்பதில் சிரமமும் ஏற்படுகிறது.

எனவே, மென்பொருள் மூலம் நிர்வாகப் பிரிவுகளை இணைத்து கணினிமயமாக்குவதனால், மீனவ நலத்திட்டங்கள் உரிய காலத்திற்குள் பயனீட்டாளர்களை சென்றடைய ஏதுவாக இருக்கும். இதனால், திட்டங்களை செம்மையாகவும், திறமையாகவும் செயல்படுத்துவது உறுதி செய்யப்படும். இத்திட்டத்தினை, 2010-2011 ஆம் ஆண்டில், ரூ.25.50 இலட்சத்தில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

11.7 தமிழ்நாடு கடல் மீனவ மக்கள் தொகை கணக்கெடுப்பு – 2010

தமிழ்நாடு சுமார் 1,076 கி.மீ நீளமுடைய கடற்கரையினையும், 591 கடல் மீனவ கிராமங்களையும், 363 மீன்இறங்குதளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இதற்குமுன், கடந்த 2000 ஆம் ஆண்டில் கடல் மீனவ மக்கட்தொகை கணக்கெடுப்பு மீன்வளத்துறையால் மேற்கொள்ளப்பட்டது. மாறி வரும் சூழ்நிலைக்கேற்ப, பத்து வருடத்திற்கு ஒரு முறை மீனவ மக்கள்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ள வேண்டியுள்ளது. கொள்கை வகுப்பாளர்கள், திட்ட அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகத்தினர்களுக்கு பல்வேறு மீனவர் நலன் மற்றும் திட்டங்கள்

2010 மே 4]

செயல்படுத்துவதற்கு, இக்கணக்கெடுப்பு பெரிதும் உதவிகரமாக அமையும். இவை தவிர, இக்கணக்கெடுப்பு, சுனாமிக்குப் பின் ஏற்பட்டுள்ள மாறுதல்களை அறியவும் உதவிகரமாக இருக்கும். எனவே, 2010-2011 ஆம் ஆண்டில், ரூ.21.01 இலட்சம் செலவில் மீனவ மக்கள்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும்.

11.8. திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு மீன்பண்ணையில் பணிபுரியும் மீனவர்களின் பணியாளர் குடியிருப்பினை மறுகட்டமைத்தல்

மணிமுத்தாறு மீன் விதைப்பண்ணையில் பணிபுரியும் மீனவர்களுக்காக, கடந்த 1950-ஆம் ஆண்டில் கட்டப்பட்ட 8 பணியாளர் குடியிருப்புகள் பழுதடைந்துள்ளதால், 2010-2011 ஆம் ஆண்டில் ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் மறு கட்டமைக்கப்படவுள்ளது.

11.9 திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள பூண்டி மீன்துறை ஆய்வாளர் அலுவலகத்தினை பழுது பார்த்தல்

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள சத்தியமூர்த்தி நீர்த்தேக்கத்தில் செயல்படுத்தும் மீன்வளப்பணிகளை மேற்கொள்ளவும், தூண்டுதல் முறையில் மீன்குஞ்சு உற்பத்தி செய்தல் மற்றும் மீன் குஞ்சுகள் வளர்த்தெடுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும், 1960 - ஆம் ஆண்டில் மீன்துறை ஆய்வாளர் அலுவலகம் ஒன்று பூண்டியில் கட்டப்பட்டது. இவ்வலுவலகக் கட்டடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை ரூ.4.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 2010-2011-ம் ஆண்டில் சீரமைத்திட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

11.10 தமிழ்நாடு மீன்வளத்துறையின் நூற்றாண்டு கால வியத்தகு செயல்பாடுகள் குறித்த ஆவணப் படம் தயாரித்தல்.

1907-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட தமிழ்நாடு மீன்வளத்துறையானது, நாட்டிலேயே மிகவும் பழமையான துறையாகும். பல்வேறு மீன்வளமேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் மீனவ நலத்திட்டங்களை செயல்படுத்துவதில், இத்துறை ஒரு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. மீன்வளத்துறையில், கடந்த நூறு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளை பதிவு செய்வது இன்றியமையாததாகும். எனவே, தமிழ்நாடு மீன்வளத்துறையின் நூறு ஆண்டுகால வியத்தகு செயல்பாட்டினை பதிவு செய்திட ஆவணப்படம் ஒன்று ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில், 2010-2011 ஆம் ஆண்டில் தயாரிக்கப்படவுள்ளது.

[2010 மே 4

11.11 மன்னார் வளைகுடாப் பகுதியில் மீனவர் சந்தை அமைத்தல்

236.8 கி.மீ நீளமுள்ள கடற்கரையைக் கொண்ட மன்னார் வளைகுடா மற்றும் பாக்ஜலசந்தியின் ஒரு பகுதியை உள்ளடக்கிய இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 184 கடலோர மீனவ கிராமங்களில் 1,41,948 மீனவ மக்கள் வசிக்கின்றனர். இம் மாவட்டத்தில், 1,705 மீன்விசைப்படகுகளும், 5,266 பாரம்பரிய மீன்பிடிக்கலன்களும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. மன்னார் வளைகுடாவில் மீன் விற்பனையை மேம்படுத்தும் பொருட்டு, முன்னோடித் திட்டமாக மீனவர் சந்தை ஒன்று 2010-2011 ஆம் ஆண்டில், ரூ.10.00 இலட்சம் செலவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

12. மீனவர் கூட்டுறவு சங்கங்கள்

மாநிலத்திலுள்ள மீனவர் மற்றும் மீனவ மகளிர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி, அவர்தம் வாழ்வை மேன்மையடையச் செய்வதில் மீனவ கூட்டுறவு சங்கங்கள் பெரும் பங்காற்றுகின்றன. மீனவர் கூட்டுறவு சங்கங்களில், சுமார் 5.56 இலட்சம் மீனவர் / மீனவ மகளிர் உறுப்பினர்களாக சேர்ந்து உள்ளனர். 54 நியாய விலைக் கடைகள் மீனவர் கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

கூட்டுறவு சங்கங்கள் மற்றும் உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:

கூட்டுறவு சங்கங்கள்	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர்களின் எண்ணிக்கை
கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்கள்	560	3,22,121
கடல் மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள்	417	1,49,140
உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள்	299	71,214
உள்நாட்டு மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள்	68	6,178

2010 மே 4]

இதர வகை சங்கங்கள்	21	6,028
மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையம்	11	727
தமிழ்நாடு தலைமை மீன்வள கூட்டுறவு இணையம்	1	598
மொத்தம்	1,377	5,56,006

12.1 தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் (வரையறுக்கப்பட்டது)

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக்கூட்டுறவு இணையம் (வரையறுக்கப்பட்டது) 1983 ஆம் ஆண்டில், தமிழ்நாடு கூட்டுறவு சட்ட விதிகளின்படி பதிவு செய்யப்பட்டு, 06-11-1991 முதல் இயங்கி வருகிறது. தற்போது 589 தொடக்க மீனவர் கூட்டுறவு சங்கங்களும், 9 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்களும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் உறுப்பினர்களாக இணைந்து, ரூ.89,095.00 இலட்சத்தை பங்குத் தொகையாக செலுத்தியுள்ளனர்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக்கூட்டுறவு இணையமானது, அதன் திட்ட குறிக்கோளின்படி தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் நிதியினைப் பெற்று, ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தினை இரண்டு கட்டங்களாக செயல்படுத்தி வந்தது. இத்திட்டத்தின்படி, தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையமானது, அதன் உறுப்பு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்களுக்கு மீன்பிடிக்கலன்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வழங்கியுள்ளது. இதன்படி, 147 மீனவக் கூட்டுறவுச் சங்கங்களின் 5,669 பயனாளி உறுப்பினர்களுக்கு 2,736 மீன்பிடி உபகரணங்களை வாங்கிட ரூ.1,979.00 இலட்சம் கடன் உதவி அளித்தது.

26-12-2004 அன்று ஏற்பட்ட சுனாமி நிகழ்விற்குப் பின்னர், மீனவர்களின் கடன் சுமைகளை குறைக்கும் வகையில் 31-7-2005 அன்றைய நிலவரப்படி நிலுவையாக இருந்த ரூ.1,956.00 இலட்சம் மதிப்பிலான அசல், வட்டி, அபராத வட்டி மற்றும் பங்கு

[2010 மே 4

மூலதனத் தொகையை தமிழ்நாடு அரசு தள்ளுபடி செய்துள்ளது. இத்தொகை, பாரதப் பிரதமரின் தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டது. இதனால், 147 மீனவக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 5,635 கடல் மீனவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் மூலமாக செயல்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 1 மற்றும் 2 ஆகியவை 30-06-2006 அன்றுடன் முடிவுற்றுள்ளன. இணையத்திற்கு வருமானம் ஈட்டும் வகையில், தற்போது எரியெண்ணெய் விநியோக மையங்கள் ஏற்படுத்தப்பட்டு மீனவர்களுக்கு வரிவிலக்களிக்கப்பட்ட எரியெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மீனவர்களுக்கு அரசு மானிய விலையில் உள் பொருத்தும் / வெளிப் பொருத்தும் இயந்திரம் விற்பனை செய்தல் போன்ற பல்வேறு பணிகளில் இணையம் ஈடுபட்டு வருகிறது.

12.2 எரியெண்ணெய் விற்பனை நிலையங்கள்

இணையத்தின் சேவைகளினால் தரத்துடன் நல்ல விலையில் ஒவ்வொரு மீனவரும் பயன்பெற உறுதி செய்யும் வகையிலும், இணையத்தின் பொருளாதாரத்தை உயர்த்திடும் நோக்குடனும், பின்வரும் இடங்களில் எரியெண்ணெய் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது:

மாவட்டம்	கிராமத்தின் பெயர்
திருவள்ளூர்	பழவேற்காடு
காஞ்சிபுரம்	நீலாங்கரை
கடலூர்	அன்னன்கோயில்
நாகப்பட்டினம்	நாகூர்
தஞ்சாவூர்	சேதுபாவாசத்திரம்
தூத்துக்குடி	வேம்பார்
தூத்துக்குடி	தருவைக்குளம்
கன்னியாகுமரி	சின்னமுட்டம்
இராமநாதபுரம்	கீழக்கரை

மேலும், விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்திலும் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினத்திலும் எரியெண்ணெய் விற்பனை நிலையங்களை நிறுவிட திட்டமிடப்பட்டுள்ளது.

2010 மே 4]

12.3 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் விற்பனை செய்தல்

மத்திய-மாநில அரசுகளின் பங்களிப்புடன் மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ், கடல் மீனவர்களுக்கு வெளிப்பொருத்தும் இயந்திரங்களை விற்பனை செய்து வருகிறது. இத்திட்டத்தில், ஒவ்வொரு மீனவ பயனாளிக்கும் இயந்திரம் ஒன்றிற்கு ரூ.30,000/- மானியம் வழங்கப்படுகிறது.

12.4 சேவை மையங்கள்

கடல் மீனவர்களுக்குத் தேவையான இயந்திர உதிரி பாகங்கள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் இஞ்சின் ஆயில் ஆகியவற்றை விற்பனை செய்வதற்காக தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மல்லிப்பட்டினத்தில் சேவை மையம் ஒன்று இயங்கி வருகிறது.

12.5 மீன் விற்பனை நிலையம்

மத்திய அரசின் நிதியுதவி மூலம் மீன்பிடிப்புக்குப் பின்னர் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தும் திட்டத்தின்கீழ், நெய்வேலியில் நவீன மீன் விற்பனை நிலையம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

12.6 தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் தொடங்குவதற்கு முன் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக மீனவர்களுக்கு வழங்கப்பட்ட கடனை தள்ளுபடி செய்தல்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் தொடங்குவதற்கு முன்னர், மீனவர் கூட்டுறவு சங்கங்களில், 31.12.2007-அன்றுள்ளவாறு நிலுவையிலுள்ள கடனில் அசல் தொகையான ரூ.337.00 இலட்சம், அதற்கான வட்டி மற்றும் அபராத வட்டி ரூ.637.00 இலட்சம் ஆகியவை, அரசாணை நிலை எண்.101, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, நாள்: 27-08-2009-ன்மூலம், தமிழக அரசினால் தள்ளுபடி செய்யப்பட்டு அதன்படி, 119 மீனவக் கூட்டுறவு சங்கங்களில் உள்ள 5,877 மீனவர்கள் பயனடைந்துள்ளனர்.

13. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் (வரையறுக்கப்பட்டது)

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், 1974-ஆம் ஆண்டு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.500.00 இலட்சங்களாகும். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.445.52 இலட்சங்களாகும்.

[2010 மே 4

செயல்படுத்தும் திட்டங்கள்

1. *கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் வணிக ரீதியாக தரமான மீன் குஞ்சுகளை இருப்பு செய்து மீன் பிடித்தல்.*

2. *தூண்டுதல் முறை இனவிருத்தி மூலம் தரமான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்து நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்தல் மற்றும் மீன் வளர்ப்போருக்கு விற்பனை செய்தல்.*

3. *மண்டபம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மீன்களைப் பதப்படுத்தும் வசதிகளைக் கொண்ட குளிர்பதன நிலையங்கள் மற்றும் பனிக்கட்டி நிலையங்களை பராமரித்தல்.*

4. *மீன்பிடித்துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களில் அமைக்கப்பட்டுள்ள எரியெண்ணெய் வழங்கும் நிலையங்கள் மூலம் மீன்பிடி விசைப்படகுகளுக்கு மானிய விலையில் எரியெண்ணெய் வழங்குதல்.*

5. *சென்னை, மதுரை, கோயம்புத்தூர், பொள்ளாச்சி, திருவண்ணாமலை மற்றும் இதர முக்கிய நகரங்களில் பொது மக்களுக்கு தரமான மீனை நியாயமான விலையில் விற்பனை செய்தல்.*

6. *கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் இராஜீவ் காந்தி நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையத்திற்குத் தேவையான வசதிகளை அளித்து இறால் குஞ்சு உற்பத்தி செய்திடல் மற்றும் சினை இறால் பராமரிப்பு மற்றும் நோய் கண்காணிப்பு திட்டங்களுக்காக நீலாங்கரையில் அமைந்துள்ள இறால் பொறிப்பகத்தினை நிர்வகித்தல்.*

7. *காரங்காடு மாதிரி இறால் பண்ணையை நிர்வகித்தல்.*

8. *வண்ண மீன் உற்பத்தி செய்து விற்பனை செய்தல், வண்ண மீன்காட்சியகங்களை பல இடங்களில் அமைத்து நிர்வகித்தல் மற்றும் மண்டபத்தில் கடல் மீன் காட்சியகத்தை நிர்வகித்தல்.*

9. *நாட்டுப்படகுகளை இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ் மானியத்தில் வழங்கப்படும் வெளிப்பொருத்தும் உட்பொருத்தும் இயந்திரங்களை விற்பனை செய்தல்.*

2010 மே 4]

13.1 நீர்த்தேக்கங்கள்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக பராமரிப்பில் உள்ள கீழ்க்கண்ட நீர்த்தேக்கங்களில் முறையாக மீன் குஞ்சு இருப்பு செய்யப்பட்டு, மூன்றில் ஒரு பங்கு என்ற அடிப்படையில் உள்ளூர் மீனவர்களைப் பணியமர்த்தி தினசரி மீன் பிடிப்பு நடத்தப்படுகிறது.

அ. சாத்தனூர் அணை

ஆ. பவானிசாகர்

இ. ஆழியார்

ஈ. அமராவதி

உ. திருமூர்த்தி நகர்

ஊ. உப்பாறு

எ. பாலாறு - பொறந்தலாறு

ஏ. பெரும்பள்ளம்

கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் இருந்து, 2009-10 ஆம் ஆண்டில், 621 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ.293.81 இலட்சம் (குத்தகை வருவாய் உட்பட) வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. பவானிசாகர், உப்பாறு மற்றும் பெரும்பள்ளம் நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமையை தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

13.2 மீன் குஞ்சு உற்பத்தி

இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் சாத்தனூர் அணையில் மீன் குஞ்சு உற்பத்தி நிலையமும் மற்றும் ஆழியார், அமராவதி, திருமூர்த்தி நகர் மற்றும் பாலாறு-பொறந்தலாறு ஆகிய 4 இடங்களில் மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களும் 3.79 எக்டேர் பரப்பளவில் செயல்பட்டு வருகின்றன. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகளின் பெரும் பகுதி, கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவதோடு மீன்துறை மற்றும் தனியார்களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. 2009-10 ம் ஆண்டில், 198 இலட்சம் நுண்மீன் குஞ்சுகள் மற்றும் 32.07 இலட்சம் வளர்ந்த விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 4

13.3 மீன் பதனீட்டு நிலையங்கள்

இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் பனிக்கட்டி மற்றும் மீன் பதப்படுத்தும் நிலையங்கள் உள்ளன. அவற்றில் மண்டபத்தில் உள்ள பனிக்கட்டி நிலையம் ஆண்டொன்றிற்கு ரூ.8.35 இலட்சத்திற்கு தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

13.4 எரியெண்ணெய் விற்பனை நிலையங்கள்

இக்கழகம், கடலோரப் பகுதியில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களில் 27 எரியெண்ணெய் விற்பனை நிலையங்களை நிறுவி, இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்படகு மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களுக்கு மானியத்துடன்கூடிய எரியெண்ணெயை வழங்கி வருகிறது. 2009-10 ஆம் ஆண்டில், 77,543 கிலோ லிட்டர் எரியெண்ணெய் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

13.5 மீன் விற்பனை அங்காடிகள்

இக்கழகம், சென்னை, மதுரை, கோவை, திருப்பூர், திருச்சி, திருவண்ணாமலை மற்றும் பொள்ளாச்சி போன்ற நகரங்களில் சில்லரை மீன் விற்பனை நிலையங்கள் மூலமாக மீன் மற்றும் பொறித்த மீன்களையும் விற்பனை செய்து வருகிறது. 2009-10 ஆம் ஆண்டில், 785 டன் மீன் விற்பனை செய்யப்பட்டு ரூ.996.18 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

13.6 இறால் குஞ்சு பொறிப்பகம்

நீலாங்கரையிலுள்ள இறால் குஞ்சு பொறிப்பகம், கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டிலுள்ள இராஜீவ் காந்தி நீர்வாழ் உயிரின மையத்திற்கு, நீர்வாழ் உயிரினங்கள் உற்பத்தி செய்திடும் பொருட்டு 24-1-2004 அன்று முதல் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

13.7 மாதிரி இறால் வளர்ப்பு பண்ணை, காரங்காடு

காரங்காடு மாதிரி இறால் பண்ணையை குத்தகைதாரரிடமிருந்து மீளப் பெற்று பால்மீன் வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 4]

13.8 வண்ண மீன் உற்பத்தி மற்றும் விற்பனை

தமிழ்நாடு அரசு அளித்த நிதியுதவியின்கீழ், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ஆழியார் மற்றும் திருமூர்த்தி ஆகிய இடங்களில் வண்ண மீன் உற்பத்தி நிலையங்களை அமைத்துள்ளது. மேலும், ஆழியார் மற்றும் திருமூர்த்தி நகரில் வண்ண மீன் விற்பனையுடன் கூடிய வண்ண மீன் காட்சியகங்களை நிறுவி பராமரித்து வருகிறது. சென்னை மாநகரில், வண்ண மீன் விற்பனை நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. வண்ண மீன் மற்றும் உபகரணங்கள் விற்பனை செய்யப்பட்ட வகையில் 2009-10 ஆம் ஆண்டில் ரூ.29.69 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

13.9 நாட்டுப்படகுகளை மானியத்துடன் இயந்திரமயமாக்குதல் திட்டம்

நாட்டுப்படகுகளை இயந்திரமயமாக்குதல் திட்டத்தின்கீழ், மானியத்துடன்கூடிய வெளிப்பொருத்தும் / உட்பொருத்தும் இயந்திரங்கள் மீனவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

13.10 தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் பல்வேறு அரசு நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்று செயல்படுத்தும் திட்டங்கள்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால், கீழ்க்காணும் திட்டங்கள் பல்வேறு அரசு நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்று செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்டச் செலவு (ரூ. இலட்சங்களில்)
I	மீன்பிடிப்பிற்கு பின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்	
(அ)	மத்திய அரசின் வேளாண்மை அமைச்சகத்தின் மீன்பிடிப்பிற்குப் பின் உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தும் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் நான்கு இடங்களில் தலா ரூ.4.00 இலட்சம் செலவில் மீன் விற்பனை அங்காடிகள் அமைத்தல்	16.00
(ஆ)	மீன் விற்பனைக்காக குளிரூட்டப் பட்ட மூன்று "டாடா 407" ஊர்திகள் கொள்முதல் செய்தல்	15.00

(இ)	மத்திய வேளாண்மை அமைச்சகத்தின் மீன்பிடிப்பிற்குப்பின் உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தும் திட்டத்தின் கீழ் தேனாம்பேட்டையில் மீன்விற்பனை — மீன்காட்சியகம் மற்றும் மதிப்பூட்டிய பொருட்கள் விற்பனை நிலையம் நிறுவுதல்	10.00
II	தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்	
(அ)	ரூ.6.00 இலட்சம் செலவில் 5 இடங்களில் நவீன மீன் அங்காடிகள் அமைத்தல்	30.00
(ஆ)	நான்கு மீன்பிடித் துறைமுகங்கள் / மீன் இறங்குதளங்களில் தலா ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் குளிரூட்டும் அறைகள் நிறுவுதல்	60.00
(இ)	நீர்த்தேக்கங்களில் கூடுகளில் மீன் வளர்த்தல்	10.80
III	தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத் திட்டங்கள்	
(அ)	தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தால் நிர்வகிக்கப்படும் நீர்த்தேக்கங்களில் நீர்த்தேக்க மேலாண்மைத் திட்டத்தின்கீழ் மீன்விரலிகள் இருப்பு செய்தல் (2008—09)	75.12
(ஆ)	2009—2010 நீர்த்தேக்கங்களில் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் வளர்ந்த மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல் (2009—10)	21.80
(இ)	சென்னை இராயபுரம் மீன்பிடித் துறைமுகத்தில் மதிப்பூட்டிய மீன் உணவுப் பொருட்கள் தயாரித்தல் மற்றும் விற்பனை செய்திட மீன்களை சுத்தம் செய்யும் மையம் நிறுவுதல்	100.00
(ஈ)	கோயம்புத்தூரில் உள்ள உக்கடம் பகுதியில் மொத்த மீன் விற்பனை சந்தையை நவீனமயமாக்குதல்	250.00
(உ)	திருமூர்த்தி நகரில் கூடுதல் மீன்குஞ்சு வளர்ப்பிடங்களை உருவாக்கிட மீன் குட்டைகள் வெட்டுதல்	3.50

2010 மே 4]

14. தமிழ்நாடு மீனவர் நல வாரியம்

- மீனவர்களின் நலன் மற்றும் அவர்களது சமூக பாதுகாப்பை கருத்தில் கொண்டு மீன்பிடித் தொழில் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலாளர்களின் நலனுக்காக, 29-06-2007 அன்று தமிழ்நாடு மீனவர் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டு, 04-10-2008 முதல் நீலாங்கரை, சென்னை-41ஐ தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது.
- 2007-08 ஆம் ஆண்டில், பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்திட ரூ.500.00 இலட்சத்தை அரசு வழங்கியுள்ளது.
- தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் கீழ்க்கண்டவாறு:

வ. எண்	நிவாரணம் / உதவி			தொகை (ரூபாயில்)	
1	விபத்து தீர்வழி நிவாரணம்				
	(அ) விபத்தில் மரணம்				1,00,000
	(ஆ) இரண்டு கைகள் இழப்பு				1,00,000
	(இ) இரண்டு கால்கள் இழப்பு				1,00,000
	(ஈ) ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு				1,00,000
	(உ) இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு				1,00,000

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 4

	(ஊ) மேலே கண்ட இனங்களில் குறிப்பிடாத வேறு கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு				50,000
2	மீன்பிடிக்கையில் இறத்தல் அல்லது அதற்குப் பின்பு உடனடியாக விபத்தின் காரணமாக அல்லாமல்				20,000
3	மீன்பிடிக்கையில் காணமற்போன மீனவர்				1,00,000
4	இயற்கை மரணம்				10,000
5	ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை				2,500
6	உறுப்பினரின் மகன் அல்லது மகள் கல்வி உதவித் தொகை	விடுதியில் தங்காதோர்		விடுதியில் தங்கிப் படிப்பவர்	
		மாணவர்	மாணவியர்	மாணவர்	மாணவியர்
	அ) பத்தாம் வகுப்பு தேர்ச்சி	1,250	1,500	..	..
	ஆ) பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி	1,750	2,000	..	..
	இ) தொழிற் கல்வி (ITI) மற்றும் பல் தொழில்நுட்பப் பயிற்சி (Polytechnic)_ (ஆண்டு ஒன்றிற்கு)	1,250	1,750	1,450	1,950
	ஈ) இளங்கலை பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு)	1,750	2,250	2,000	2,500

2010 மே 4]

	உ) முதுகலைப் பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு)	2,250	2,750	3,250	3,750
	ஊ) சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் கல்விகள் இளங்கலை (ஆண்டு ஒன்றிற்கு)	2,250	2,750	4,250	4,750
	எ) முதுகலை தொழிற் கல்விகள் (ஆண்டு ஒன்றிற்கு)	4,250	4,750	6,250	6,750
7	திருமண உதவி	ஆண்		பெண்	
	அ) உறுப்பினர் திருமண உதவி	3,000		5,000	
	ஆ) உறுப்பினரின் மகன் அல்லது மகள் திருமணம்	3,000		5,000	
8	மகப்பேறு / கருச்சிதைவு / கருக்கலைப்பு உதவித்தொகை (மகளிர் உறுப்பினர்களுக்கு மட்டும்)				
	மகப்பேறு		6,000		
	கருச்சிதைவு/ கருக்கலைப்பு		3,000		
9	முதியோர் ஓய்வூதியம் மாதம் ஒன்றிற்கு (65 வயதிற்கு மேல்)		400		

[2010 மே 4

➢ *31-03-2010* முடிய, *2,55,790* மீன்பிடித் தொழிலாளர்கள் வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்துள்ளனர். இதுவரை, *3,848* கேட்புகள் பரிசீலிக்கப்பட்டு, பல்வேறு நலத்திட்டங்களுக்காக, வாரியத்தால் ரூ.*1,51,70,200/-* வழங்கப்பட்டுள்ளது. நல வாரியச் சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள பல்வேறு முகமைகள் மூலம் பங்குத் தொகையாக ரூ.*65,81,270/-* வசூலிக்கப்பட்டுள்ளது.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாட்டில் மீன் உற்பத்தி 2005 - 2009 (டன்களில்)



வருடம்	கடல்	உள்நாடு	மொத்தம்
2005-2006	389714	155944	545658
2006-2007	392191	160172	552363
2007-2008	393266	164504	557770
2008-2009	397117	166456	563573

மாவட்ட வாரியான கடல் மீன் உற்பத்தி - 2008 - 2009 (டன்களில்)



மாவட்டங்கள்	மீன் உற்பத்தி (டன்களில்)	மாவட்டங்கள்	மீன் உற்பத்தி (டன்களில்)
சென்னை	32086.60	புதுக்கோட்டை	40948.80
திருவள்ளூர்	9011.20	இராமநாதபுரம்	81569.65
காஞ்சிபுரம்	14675.90	தூத்துக்குடி	48510.27
விழுப்புரம்	19182.10	திருநெல்வேலி	8976.50
கடலூர்	23667.10	கன்னியாகுமரி	39627.50
நாகை திருவாரூர் மற்றும் தஞ்சாவூர்	78881.50	மொத்தம்	397117.22

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் (எக்டேரில்)



மீன்வள ஆதாரங்கள்	பரப்பளவு (எக்டேரில்)
நீர்த்தேக்கங்கள்	52055
மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை குளங்கள்	5386
பெரிய நீர்ப்பாசன ஏரிகள்	92304
பருவகால குளங்கள் மற்றும் குட்டைகள்	158100
கழிமுகங்கள்	56000
பயன்பாட்டிற்கு உதவாத நீர் நிலைகள்	7000
நீர் வாழ் உயிரின வளர்ப்பு பண்ணைகள்	2851
மொத்தம்	373696

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாட்டில் ஆதாரம் வாரியாக உள்நாட்டு மீன் உற்பத்தி 2008 - 2009 (டன்களில்)



மீன்வள ஆதாரங்கள்	மீன் உற்பத்தி (டன்களில்)
நீர்த்தேக்கங்கள்	1449.09
மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை குளங்கள்	606.02
பெரிய நீர்ப்பாசன ஏரிகள்	67151.37
பருவகால குளங்கள் மற்றும் குட்டைகள்	79604.36
கழிமுகங்கள்	7062.84
பயன்பாட்டிற்கு உதவாத நீர் நிலைகள்	1522.31
நீர் வாழ் உயிரின வளர்ப்பு பண்ணைகள்	9059.85
மொத்தம்	166455.84

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS


மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மீன் பண்ணைகளில் மீன்குஞ்சு உற்பத்தி 2005 - 2010

அ. நுண்மீன்குஞ்சு உற்பத்தி (இலட்சங்களில்)



வருடம்	நுண்மீன்குஞ்சுகள் (இலட்சங்களில்)
2006-07	1560.35
2007-08	1135.06
2008-09	1617.00
2009-10	1690.00

ஆ. மீன் விரலிகளின் உற்பத்தி (இலட்சங்களில்)



வருடம்	விரலிகள் (இலட்சங்களில்)
2006-07	151.76
2007-08	187.88
2008-09	193.66
2009-10	270.00

TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 4

இணைப்பு III

(136 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 8 - பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011

முன்னுரை

பால் வளத் தொழிலில் பிரதான பொருள் பால் ஆகும். இந்தியா, உலகிலேயே அதிகமாக பால் உற்பத்தி செய்யும் நாடாக விளங்குகிறது. பால் உற்பத்தி செய்யும் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் திகழ்கிறது. மொத்த வருவாய்க் கிராமங்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமான கிராமங்களில் பால் கூட்டுறவு சங்கங்கள் அமைத்து இந்திய அளவில் தமிழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. 22.29 இலட்சம் உறுப்பினர்கள் அடங்கிய 8,246 பிரதம பால் கூட்டுறவு சங்கங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் பால் வளத்தை மேலும் மேம்படுத்தவும், கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தவும், கால்நடைப் பெருக்கம், உள்கட்டமைப்பு ஏற்படுத்துதல், தூய பால் உற்பத்தி முறையினை செயல்படுத்துதல், கால்நடை எண்ணிக்கையை நிலைப்படுத்துதல், தரமான கால்நடை மருத்துவம் மற்றும் தொழிநுட்ப மனித வளம் ஆகியவை உந்து சக்திகளாக செயல்படுகின்றன.

பால் வளத் தொழிலில், தமிழக கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பதுடன் சமூக பொருளாதார மாற்றங்களை உருவாக்கி வருகிறது. பால் உற்பத்தியாளர்களில் பெரும்பாலோர், சிறிய, நடுத்தர மற்றும் ஏழை விவசாயிகள் ஆவர். பால் வளம், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கி, கிராம மக்களின் வறுமையைப் போக்குகிறது. பால் வளம், ஆண்டு முழுவதும் ஆயிரக்கணக்கான கிராமப்புறக் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி நிலையான வருமானத்துடன் கிராம மக்களின், குறிப்பாக கிராமப்புற பெண்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துகிறது. கூட்டுறவு அமைப்புகளில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு பால் ஊற்றுவதன் மூலம், பால் கொள்முதல் விலையாக சராசரி நாளொன்றுக்கு ரூ.396.20 இலட்சம்

2010 மே 4]

பெறுகின்றனர். இதன் வாயிலாக, கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் இத்துறையின் முக்கியத்துவம் தெரிய வருகிறது.

மத்திய திட்டக் குழுவினால் அமைக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளம் குறித்த ஆலோசனைக் குழுவினால் ஜனவரி 2010-ல் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கையில், தமிழ்நாட்டில் கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளம் ஆகியவற்றின் வளர்ச்சி நல்ல முன்னேற்றம் பெறும் வகையில் உள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக, பால் உற்பத்தியில் “ஆண்டு மொத்த வளர்ச்சி 2.87 சதவீதத்தில் இருந்து 5 முதல் 6 சதவீதம் வரை உயர்ந்துள்ளது” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பால் வளத் துறை

தமிழகத்தில், 1958 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட பால் வளத் துறையின் இன்றைய வளர்ச்சி, சிறப்பானதும் மற்றும் குறிப்பிடத்தக்கதுமாகும். பால் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் மற்றும் சட்டரீதியான செயல்பாடுகள், 01-08-1965 முதல் பால் வளத் துறைக்கு மாற்றப்பட்டது. பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர், இத்துறையின் தலைவராகவும், சங்கங்களின் செயல் பதிவாளராகவும் செயல்படுகிறார். மேலும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிர்வாக இயக்குநராகவும் இருந்து வருகிறார். இவை தவிர, மாநில அளவில் பால் மற்றும் பால் உபபொருட்களின் ஆணை 1992-ன்கீழ் மாநில பதிவு அதிகாரியாகவும் இருந்து வருகிறார்.

புதிய சங்கங்களை பதிவு செய்தல், செயலிழந்த சங்கங்களை புதுப்பித்தல், சங்கங்களை ஆய்வு செய்தல், தகராறுகளின்மீது நடவடிக்கை எடுத்தல், தேர்தல் நடத்துதல், நிர்வாகக் குழு அமைத்தல் மற்றும் பொது மக்களின் நலன் கருதி சங்கங்களுக்கு ஆணைகள் பிறப்பித்தல் போன்ற நடவடிக்கைகளை, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள், 1988 ஆகியவற்றின்படி செயல்படுத்தி வருகின்றார்.

பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் அவர்களின் சட்டரீதியான கூட்டுறவுப் பணிகளை மண்டல அளவில் நடைமுறைப்படுத்துவதற்கு, துணை பால் ஆணையர் (கூட்டுறவு) மற்றும் மாவட்ட வாரியாக

[2010 மே 4

நியமிக்கப்பட்டுள்ள 25 துணை பதிவாளர்கள் (பால்பதம்) ஆகியோர் உதவியாக உள்ளனர்.

அ) தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழகத்தில், 8,246 தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், பெண்களால் நடத்தப்படும் 1,474 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் 62 தொடக்க பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களும் அடங்கும். 2009-10 ஆம் ஆண்டில், 206 புதிய சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில், 66 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மகளிர் சங்கங்களாகும். இவையில்லாமல், 226 செயலிழந்த சங்கங்களும் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

பால் உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்கள் பயன்பெறும் பொருட்டு, விவசாயிகளையும் பால் உற்பத்தியாளர்களாக்கும் திட்டங்களை செயல்படுத்துவதுடன், உயர்ரக கலப்பின கறவையினங்களை உருவாக்கும் வகையில் தொலை நோக்குத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் அங்கத்தினராக உள்ளபடியால், சங்கங்கள் இலாபம் ஈட்டும்பொழுது, உறுப்பினர்களுக்கு இலாபத்திலிருந்து ஈவுத்தொகை, போனஸ் மற்றும் கூடுதல் கொள்முதல் விலை ஆகியவை வழங்கப்படுகின்றன. சங்கங்கள் ஈட்டும் இலாபம், உறுப்பினர்களுக்கே மீண்டும் சென்றடைவது, கூட்டுறவுச் சங்கங்களின் தனிச் சிறப்பாகும். தனியார் நிறுவனங்களைப் போலல்லாமல், சங்கங்கள் ஈட்டும் இலாபம் உற்பத்தியாளர்களைச் சென்றடைவதால் உற்பத்தியாளர்களுக்கும் சங்கங்களுக்கும் இடையே நல்லுறவு நீடிக்கிறது.

ஆ) மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள்

தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி, 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட ஒன்றியங்களின் உறுப்பினர்களாக செயல்படுகின்றன. அந்தந்த மாவட்டங்களின் ஆட்சியர், ஒன்றியங்களின் தனி அலுவலராகச் செயல்படுகிறார்.

தூய பால் உற்பத்தி வழிமுறைகளைப் பின்பற்றி, சங்கங்களில் பால் கொள்முதல் செய்தல், தரத்தின் அடிப்படையில் பால்பணம்

2010 மே 4]

வழங்குதல், கால்நடைகளுக்கான இடுபொருள் உதவி வழங்குதல், கால்நடைகளின் நலம் பேணுதல், கால்நடைத் தீவனம் மற்றும் பசும்புல் வழங்குதல், பால் உற்பத்தியாளர்கள் நலனைக் கருத்தில் கொண்டு மாநில மற்றும் மத்திய அரசுத் திட்டங்களை மாவட்ட அளவில் செயல்படுத்துதல், பால் விற்பனை செய்தல், பெருநகர பால் விற்பனை நிலையங்கள் மூலமும், உள்ளூர் பால் விற்பனை நிலையங்கள் மூலமும் உபரி பாலிலிருந்து கொழுப்பு நீக்கி, மதிப்புக்கூட்டிய பால் உபபொருட்களைத் தயாரித்தல் ஆகியவை மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களின் முக்கிய பணிகளாகும்.

இ) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

17 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின் தலைமை நிறுவனமான தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், 01-02-1981 அன்று ஏற்படுத்தப்பட்டது. இணையத்தின் மூன்று பால்பண்ணைகள் சென்னையில் செயல்பட்டு வருகின்றன. மாநகர பால்பண்ணைகள், கூட்டுறவு ஒன்றியங்களிலிருந்து பாலினைப் பெற்று பதப்படுத்தி, பால்பைகளில் நிரப்பி சென்னை மாநகரம் மற்றும் புறநகர் பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கின்றன. தமிழகத்தில், பால் விற்பனையில், கூட்டுறவுகளின் "சந்தை பங்களிப்பு" கணிசமான அளவு உயர்ந்து தமிழகத்தின் சந்தை பங்களிப்பில் "ஆவின்" பெரும்பங்கு வகிக்கிறது. அம்பத்தூரிலுள்ள பால்பண்ணையில், பால் உபபொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

பால் மற்றும் பால் உபபொருட்கள் ஆணை, 1992

அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955, பிரிவு 3-ன் கீழ், நுகர்வோர்க்குத் தேவையான, தரமான பால் சரியாகக் கிடைக்கவும், பால் விநியோகத்தை அதிகரிக்கவும், மத்திய அரசு, பால் மற்றும் பால் உபபொருட்கள் ஆணை, 1992-ஐ அமல்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் செயல்பட்டு வருகின்ற அனைத்து தனியார் பால்பண்ணைகளும், அரசு பால்பண்ணைகளும், நாளொன்றுக்கு 10,000 லிட்டர் பால் அல்லது பால் பொருட்களிலுள்ள மொத்த பால் திடச்சத்து வருடத்திற்கு 500 மெட்ரிக் டன்னுக்கு மேலாக கையாளும்பொழுது, அவை பால் மற்றும் பால் உபபொருட்கள் ஆணை, 1992-ன்கீழ் பதிவுச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

[2010 மே 4

ஆணையர் அவர்களின் நேரடி கட்டுப்பாட்டில், துணை பால் ஆணையர் (கூட்டுறவு), அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் 24 சரக துணைப் பதிவாளர்கள் (பால்பதம்) ஆகியோருக்கு பதிவு பெற்ற பால்பண்ணைகளின் செயல்பாட்டினைக் கண்காணிக்கவும், காலமுறை ஆய்வினை மேற்கொள்ளவும், பால் மற்றும் பால் உபபொருட்கள் ஆணை, 1992-ஐ நடைமுறைப்படுத்தவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தேசிய உற்பத்திக் கழகம் (National Productivity Council) மற்றும் இந்திய ஏற்றுமதிக் கழகம் (Export Council of India) ஆகியவற்றிற்கு இவ்வாணையின்கீழ் சட்டபூர்வ ஆய்வுகள் செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியைப் பெருக்குவதோடு, நுகர்வோருக்குத் தேவையான தரமான பாலை விநியோகம் செய்யும் நோக்கத்துடன், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் அவர்களின் நேரடி கட்டுப்பாட்டில், தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம், மாதவரம் பால் பண்ணை, சென்னை-51-ல் இயங்கி வருகிறது. தரமான பாலை விற்பனை செய்வதனை உறுதி செய்யும் நோக்குடன், 1,441 பால் மற்றும் பால் உபபொருட்களின் மாதிரிகள் இப்பரிசோதனைக் கூடத்தில் பரிசோதிக்கப்பட்டுள்ளன. இவ்வாணையின்கீழ், நாளது தேதி வரை, 51 பால் பண்ணைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பால் வளத் துறையின் குறிக்கோள்கள்:

1) அமைப்பு சாரா பால் தொழிலை ஒருங்கிணைத்து அமைப்பு சார்ந்த தொழிலாக மாற்ற படிப்படியாக நடவடிக்கை மேற்கொள்ளுதல்

2) பால் பண்ணைகளின் செயல்பாடுகளை வழி நடத்துதல், கண்காணித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்

3) பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக, இடுபொருள் உதவியுடன் கால்நடை மருத்துவ உதவியும் அளிக்கப்படுவதை உறுதி செய்தல்.

4) பால் உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்க உத்தரவாதம் செய்தல்

5) நுகர்வோருக்கு, பதப்படுத்தப்பட்ட, தூய மற்றும் உணவு பாதுகாப்பு வழிமுறைகளின்படி தயாரிக்கப்பட்ட தரமான

SATYAMEVA JAYATE TRUTH ALONE TRIUMPHS

2010 மே 4]

பால் நியாயமான விலையில் கிடைக்கச் செய்தல் மற்றும் திரவ நிலைப் பால் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்தல்

6) சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட தரக் குறியீடுகளுடன் சரியான அளவுகளில் பால் மற்றும் பால் பொருட்கள் தரமானதாகக் கிடைக்க உறுதி செய்தல்

7) பால் பண்ணைத் தொழிலில் நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் வெளிப்படையான நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்

குறிக்கோள்களை நிறைவேற்ற பின்பற்றப்படும் நடவடிக்கைகள்

1) கறவை மாடுகளின் மேம்பாடு, நிலையான பால் உற்பத்தி மற்றும் பால் உற்பத்தியை அதிகரித்தல் ஆகிய பணிகளை நீண்ட கால அடிப்படையில் மேற்கொள்ளுதல்

2) பால் உற்பத்தியாளர்களுக்கு சொந்தமான கறவைமாடுகளுக்கு மருத்துவ சிகிச்சை, இனவிருத்தி, பசும்புல் தீவனம் வழங்குதல் மற்றும் காப்பீடு செய்தல் போன்ற மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்

3) மேம்படுத்தப்பட்ட உயர் தரமான பசும்புல் அதிகம் பயிர் செய்து பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையில் வழங்குதல்

4) நவீன கால்நடை பராமரிப்பு மற்றும் நடைமுறைப் பயிற்சியினை, கல்விச் சுற்றுலா மூலம் விவசாயிகளுக்கு பயிற்றுவித்து ஊக்குவித்தல்.

5) தரமான பரிசோதனை மூலம் கிராம அளவில் தூய பால் உற்பத்தித் திட்டத்தை செயல்படுத்துதல் மற்றும் பாலின் தரத்தை உயர்த்தும் பொருட்டு பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல்

6) துருவுறா எஃகினாலான பால் கேன்கள், பால் சேகரிக்கும் உபகரணங்கள், செயற்கைமுறை கருவூட்டல் உபகரணங்கள், பால் பரிசோதனைக் கருவிகள், தானியங்கி பால் சேகரிக்கும் நிலையம், பால் கறவை இயந்திரம் மற்றும் பால் குளிர்விப்பான்கள் ஆகிய வசதிகளை ஏற்படுத்துதல்.

7) சங்கப் பணியாளர்களுக்கு கூட்டுறவு நிர்வாகம், கால்நடைகளுக்கு முதலுதவி மற்றும் செயற்கைமுறை கருவூட்டல் ஆகியவற்றில் திறன் பெற பயிற்சி அளித்தல்

[2010 மே 4

8) பால் வளத் துறை, இணையம், மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் சங்கங்களுக்குத் தேவையான மனித வளத்தினைக் கண்டறிந்து காலிப் பணியிடங்களை நிரப்புதல்.

9) பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய நேரத்தில் பால் பணம் பட்டுவாடா செய்வதை உறுதிப்படுத்துதல்

10) குளிரூட்டப்பட்ட பாலை, பால் பதப்படுத்தும் பண்ணைக்கு பால் டேங்கர்கள் மூலம் கொண்டு செல்லுதல்

11) கூட்டுறவு பால் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை நவீனப்படுத்தி, தூய பால் மற்றும் பால் உபபொருட்களைத் தயாரித்து நுகர்வோருக்கு வழங்குதல்.

12) அமைப்பு சார்ந்த பால்பண்ணைகளில் 'உணவுப்பாதுகாப்பு' கொள்கையை நடைமுறைப்படுத்துதல்

13) உபரியாக உள்ள பாலைப் பயன்படுத்தி பால்பவுடர், வெண்ணெய் மற்றும் நெய் ஆகிய பால் உபபொருட்களாக மாற்றுதல்

14) மதிப்புக் கூட்டப்பட்ட பால் உபபொருட்களாகிய ஐஸ்கிரீம், குலோப்ஜாமூன், பன்னீர், பாலாடைக்கட்டி மற்றும் இதர பால் உபபொருட்களைத் தயாரித்தல்.

15) தமிழகத்தில் பால் வள மேம்பாட்டுக்கான மத்திய / மாநில அரசின் நேரடியான மற்றும் பங்களிப்புத் திட்டங்களை செயல்படுத்துதல்

16) நலிவடைந்த பால் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு நிதி உதவி அளித்து புனரமைத்தல்

17) சீரிய முறையில் பால் மற்றும் பால் உபபொருட்கள் ஆணை, 1992-ஐ அமல்படுத்தி தரமான பால் மற்றும் பால் உபபொருட்கள் நுகர்வோர்களுக்கு கிடைக்கச் செய்தல்

18) பால் வளத் துறையின் அனைத்துப் பிரிவுகளையும் மின்னணு மயமாக்கி நிர்வாகத்தை திறம்படச் செய்தல்

19) தகவல் அறியும் உரிமை சட்டம் 2005-ஐ சிறப்பாக அமல்படுத்துவதன் மூலம் விழிப்புணர்வை அதிகரித்தல்

2010 மே 4]

பால் உற்பத்தியாளர்கள் நலன்

1. ஒரே சீரான பால் கொள்முதல் விலை பின்பற்றப்படுகிறது.

2. அதிகபட்சமாக, 28.50 இலட்சம் லிட்டர் பால் 04.10.2009 அன்று கூட்டுறவு அமைப்புகளின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

3. கால்நடை மருத்துவ வசதியினை மேலும் வலுப்படுத்துவதற்காக, ரூ.315 இலட்சம் நிதி மதிப்பீட்டில் கூடுதலாக 70 நடமாடும் கால்நடை மருத்துவ அலகுகள் நிறுவப்பட உள்ளன.

4. இணையதளத்தின் மூலம் பால்பணப் பட்டுவாடா பரிமாற்றம், இணையத்திலிருந்து ஒன்றியத்துக்கு செயல்படுத்தப்பட்டது. மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு இணையதளத்தின்மூலம் பணப்பரிமாற்றம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

5. மொத்தமுள்ள 8,246 சங்கங்களின் உத்தேச நிதிநிலை அறிக்கையின்படி, 7,163 சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன. மேலும், 1,374 சங்கங்களில் உள்ள 1,24,407 பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.549.70 இலட்சம் ஈவுத் தொகையாகவும், உறுப்பினர் ஊக்கத்தொகையாகவும் மற்றும் கூடுதல் கொள்முதல் விலையாகவும் இலாபத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

6. கோயம்புத்தூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின், உபரி நிதியிலிருந்து ரூ.370.28 இலட்சம் ஊக்கத்தொகையாக 20,065 பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது.

7. 206 புதிய தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில், 66 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் மகளிர் சங்கங்களாகும்.

8. 226 செயலிழந்த சங்கங்கள் புத்துயிரூட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன.

9. பால் உற்பத்தியாளர்களுக்கு தரமான மாட்டுத் தீவனங்கள் வழங்கப்படுகின்றன. ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் புரதச்சத்து மிகுந்த கால்நடை

[2010 மே 4

தீவனத்தை தயாரித்து வழங்க, பைபாஸ் புரதச்சத்து கால்நடை தீவனம் தயாரிக்கும் ஆலை நிறுவப்பட்டுள்ளது.

10. ஈரோடு, திருச்சி, விழுப்புரம் மற்றும் திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் ரூபாய் 70 இலட்சம் மதிப்பில் 4 தாது உப்புக்கலவை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

11. ஒரு உறுப்பினருக்கு ஒரு கிலோ வீதம் 2.77 இலட்சம் உறுப்பினர்களுக்கு 277 மெட்ரிக் டன் தாது உப்புக் கலவை 50 சதவீத மான்யத்தில் வழங்கப்பட்டு உள்ளது.

12. பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு, கால்நடை பராமரிப்புத் துறையின் ஒத்துழைப்புடன் நோய்த் தீர்ப்பு ஊசிகள் போடப்பட்டுள்ளன.

13. நீலகிரி மாவட்டத்தில் உள்ள கருவூல ஜெர்சி பொலிகாளை பண்ணையில் (Nucleus Jersey Farm) ரூ.23.92 இலட்சம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இப்பண்ணை ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் பெற்றுள்ள நிலையில், இந்திய அளவில் சிறப்பாகச் செயல்படும் பண்ணையாக மத்திய அரசின் மைய கண்காணிப்புப் பிரிவினால் தேர்வு செய்யப்பட்டு 'A' தரச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

14. எருமைக் கன்றுகள் வளர்ப்புத் திட்டம் மூலம் 24 மாவட்டங்களில் 2,015 எருமைக் கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு அவற்றிற்கு தீவனம் மற்றும் கால்நடை மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டு எருமை மாடுகளின் எண்ணிக்கை குறையாமலிருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

15. சங்கங்கள் அளவில் 'கால்நடை பாதுகாப்புத் திட்டம்' மற்றும் 'சிறப்பு மலட்டுத் தன்மை நீக்கம் முகாம்கள்' உறுப்பினர்களின் நலனை முன்னிட்டு முறையாக நடத்தப்படுகின்றன.

16. பால் உற்பத்தியாளர்களின் கலப்பின கறவை மாடுகளுக்கு காப்பீடு வசதி செய்யும் திட்டம் தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டுக் கழகம் மூலம் தருமபுரி, விழுப்புரம், திருவண்ணாமலை, திருச்சி, வேலூர், கடலூர், ஈரோடு, நாமக்கல், சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திண்டுக்கல், மதுரை, கிருட்டிணகிரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

2010 மே 4]

17. தகுதிவாய்ந்த பால் உற்பத்தியாளர்கள், நலத்திட்டங்களின் பயன்களைப் பெறுவதற்காக விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்படுகின்றனர்.

18. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 243 கணினி மயமாக்கப்பட்ட தானியங்கி பால் கொள்முதல் நிலையங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் வெளிப்படையாக பால் பரிசோதனை செய்யப்பட்டு, தரத்திற்கேற்ப பாலுக்குரிய தொகை கணக்கிடப்படுகிறது.

19. தற்போது தமிழகத்தில் 166 மொத்த பால் குளிர்விப்பான்கள் செயல்பட்டு வருகின்றன.

20. பால் கறவைக்கு மனித பற்றாக்குறையை ஈடுகட்ட, தூய பால் உற்பத்தி செய்ய 183 தானியங்கி பால் கறவை இயந்திரங்கள், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

21. மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில், 2,600 செயற்கை கருவூட்டல் மையங்களும், இதனைச் சார்ந்த 5,304 சங்கங்களில் சுமார் 9.50 இலட்சம் கறவை மாடுகள் உள்ளன. 2,394 நடமாடும் செயற்கை முறை கருவூட்டல் நிலையங்கள் செயல்படுகின்றன. 14.80 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டு 4.88 இலட்சம் கலப்பின கன்றுகள் பிறந்துள்ளன.

22. 6,407 பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, கால்நடை மருத்துவர்களால் கால்நடை பராமரிப்பு வசதி ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. 1,210 சங்கங்களில் கால்நடை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

23. நடப்பாண்டில், 6.77 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், அவசர கால சிகிச்சைப் பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின்கீழ் 118 முழு நேர கால்நடை சிகிச்சைப் பிரிவுகளும், 82 அவசர கால்நடை சிகிச்சைப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன.

24. 2009-10 ஆம் ஆண்டில் பால்வளத்தொழில் அறிவை மேம்படுத்துவதற்காக, 685 பால் உற்பத்தியாளர்கள், குஜராத்,

ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநிலங்களுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர்.

25. 2009-10 ஆம் ஆண்டில் தொழில்நுட்பத் திறமையை மேம்படுத்துவதற்காக, 21,741 பால் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

26. பால் உற்பத்தியாளர்களிடமிருந்து நிருவாகச் செலவினமாக பிடிக்கப்படும் 1 லிட்டருக்கு 10 பைசாவில், 2½ பைசா கால்நடைகளுக்கு மருத்துவ வசதிகள் வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

27. மாநில அளவில் நடந்த +2 தேர்வில் அதிக மதிப்பெண் வாங்கிய ஒவ்வொரு ஒன்றியத்தின் சங்கங்களைச் சார்ந்த பால் உற்பத்தியாளர்களின் குழந்தைகளுக்கு தலா ஒரு கணினி வீதம் 17 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

28. தமிழ்நாட்டில், பால் உற்பத்தியை அதிகரிக்கவும், பால் உற்பத்தி செய்யும் விவசாயக் குடும்பங்கள் கூடுதல் வருவாயைப் பெறவும், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் பால்பண்ணைத் திட்டத்தின்கீழ் 200 கிராமங்ளைச் சார்ந்த மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு இரண்டு கட்டங்களாக ரூ.22 கோடி மதிப்பீட்டில் பத்தாயிரம் கலப்பின கறவை மாடுகள் வழங்கப்பட உள்ளது. முதல்கட்டமாக, இத்திட்டம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் தஞ்சாவூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

29. பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் பால்பண்ணைத் திட்டத்தின் கீழ் 500 ஏக்கர் நிலப்பரப்பில் கோயம்புத்தூர், மதுரை மற்றும் தஞ்சாவூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களீல் பசுந்தீவனத்தை வளர்க்க சுய உதவிக் குழுக்கள் ஊக்கப்படுத்தப்பட்டுள்ளனர்.

30. 2009-10 ஆம் ஆண்டில் பசுந்தீவனத்தின் பயன்பாட்டை முழுமையாக்கும் வகையில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு 125 பசும்புல் வெட்டும் கருவிகள் வழங்கப்பட்டு உள்ளன.

2010 மே 4]

பால் வளத் துறை மற்றும் பால் கூட்டுறவுப் பணியாளர்கள் நலன்

1) 2009-10 ஆம் ஆண்டில், 28 பால்வளத் துறைப் பணியாளர்களுக்கும், 26 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் / மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் சங்கப் பணியாளர்களுக்கும் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

2) பால்வளத் துறையைச் சார்ந்த மூன்று இலகுவாகன ஓட்டுநர்களுக்கு 20 ஆண்டு காலம் விபத்தில்லாமல் பணி புரிந்தமைக்காக தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டன.

3) கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் திட்டத்தில், பணிக்காலத்தில் மரணமடைந்த பணியாளர்களின் வாரிசு தாரர்களுக்கு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் 12 பணி நியமனங்களும், மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் 44 பணி நியமனங்களும் செய்யப்பட்டுள்ளன.

4) இணையம் மற்றும் ஒன்றியப் பணியாளர்களுக்கு, 8.33 சதவிகிதம் போனஸ் மற்றும் 11.67 சதவிகிதம் கருணைத் தொகையாகவும் மொத்தம் ரூ.568.09 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

5) கூட்டுறவு பணியாளர்களுக்கு, தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பால் உப்பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

6) கூட்டுறவு அமைப்புகளின் பணியாளர்களுக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகையாக ரூ.229.74 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

7) இணையம் மற்றும் ஒன்றியங்களில் பணியாற்றி வரும் பணியாளர்களின் குழந்தைகளில் +2 வகுப்பு தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் 10 குழந்தைகளை (5 ஆண் மற்றும் 5 பெண்) ஊக்குவிக்கும் வகையில் மடிக்கணினி வழங்கப்பட்டது.

8) சிறப்பாக செயல்படும் பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் செயலர்கள், மாநில மற்றும் மாவட்ட அளவுகளில் தேர்வு செய்யப்பட்டு, ஊக்கப் பரிசுகளும், பாராட்டு பத்திரங்களும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

[2010 மே 4

9) பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றி வரும் பணியாளர்களின் குழந்தைகளுக்கு +2 வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் 5 குழந்தைகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டது.

10) இணையம் மற்றும் ஒன்றியங்களில் பணிபுரியும் கால்நடை மருத்துவர்களுக்கு பணி இடர்ப்படியாக மாதம் ரூ.200 வீதம் வழங்கப்பட்டது.

11) கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் பணியாளர்களுக்கு இரவு பணிப்படி, சீருடை தையற்கூலி மற்றும் சலவைப்படி உயர்த்தி வழங்கப்பட்டது.

12) பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு சீருடை தையற்கூலி உயர்த்தி வழங்கப்பட்டது.

13) திடீரென்று ஏற்படும் நெருக்கடிகளை கையாளுதல், தொழில்நுட்ப அறிவு மற்றும் திறமையை மேம்படுத்தவும் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில், இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் பணிபுரியும் 282 தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

14) இணையம் மற்றும் மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியங்களில் சம்பள விகிதம் திருத்தம் குறித்த அலுவலர் குழுவின் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டு, இதன்மூலம் 7,026 பணியாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

15) தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் 16,588 பணியாளர்களுக்கு 1-10-2009 முதல் ரூ.200 முதல் ரூ.850 வரை சம்பள உயர்வு வழங்கப்பட்டது.

16) பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, பிரதம பால் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

நுகர்வோர் நலன்

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் நுகர்வோரின் தேவைகளுக்கும், விருப்பத்திற்கும் முன்னுரிமை

2010 மே 4]

அளித்து, "ஆவின்" வணிகச் சின்னத்தில் தூய பால் மற்றும் தரமான பால் உபபொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன. இணையத்தின் நுகர்வோர் பிரிவைத் தொடர்பு கொண்டு, புகார்களைப் பதிவு செய்வதற்காக நந்தனம் விற்பனைப் பிரிவில் "24 மணி நேரம் நுகர்வோர் சேவை மையம்" செயல்பட்டு வருகிறது. நுகர்வோர் தொடர்புகொள்ள கட்டணமில்லா தொலைபேசி எண் 18004253300 நந்தனம் அலுவலகத்தில் நிறுவப்பட்டு நுகர்வோர் குறைகளைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. நுகர்வோர்களுக்கு தரமான பால் விநியோகம் செய்யும் பொருட்டு, சுமார் 16 மணி நேரம் பாலகங்கள் செயல்படுகின்றன.

2009-10 ஆம் ஆண்டில், நுகர்வோர் நலனை முன்னிட்டு மதுரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் பால் மற்றும் பால் உபபொருட்களின் தரத்தை பரிசோதனை செய்வதற்காக ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மதுரையில் சிறிய அளவிலான பால் மற்றும் பால் உபபொருட்கள் தர பரிசோதனை ஆய்வகம் நிறுவப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரில் உள்ள அனைத்து பால் பண்ணைகளுக்கும் ISO மற்றும் HACCP சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்பொழுது, அம்பத்தூர் பால் பண்ணையில், ISO மற்றும் HACCP சான்றிதழ்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 2009-10 ஆம் ஆண்டில், சுற்றுப்புற சூழல் மேலாண்மையை செயல்படுத்தியமைக்காக சென்னை பெருநகர பால் பண்ணைகள் ISO 14001 சான்று பெற்றுள்ளன. இதனால் ஆவின்மூலம் விற்பனை செய்யப்படும் பால் மற்றும் பால் உபபொருட்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரம் உறுதி செய்யப்படுகிறது.

மாநில மற்றும் மைய அரசின் திட்டங்கள்

மாநில அரசுத் திட்டங்கள்

பகுதி–2 திட்டம், 2009–2010

பகுதி-2 திட்டத்தின்கீழ் பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.137.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் செயல்திட்டங்கள் நிறைவேற்ற ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதில், தமிழக அரசின் பங்கு ரூ.110.00 இலட்சம் ஆகவும், பயனாளி நிறுவனத்தின் பங்கு ரூ.27.00 இலட்சம் ஆகவும் உள்ளது. கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு உள்ளன:

[2010 மே 4

அ) 500 சங்கங்களுக்கு, 2,000 துருவுறா எஃகினாலான கேன்களை ரூ.54 இலட்சம் செலவில் வழங்குதல். இதில் ரூ.27.00 இலட்சம் அரசு மானியமாகும். மீதமுள்ள தொகை ரூ.27.00 இலட்சம் பயனாளிகள் பங்காகும்.

ஆ) 100 சங்கங்களுக்கு பால் சேகரிக்கும் உபகரணங்கள் ரூ.6.50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்குதல்.

இ) 100 சங்கங்களுக்கு, மின்னணு எடை கருவிகள் ரூ. 18.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்குதல்.

ஈ) 5 சங்கங்களுக்கு கடின நீரை மென்நீராக்கும் 5 அலகுகள் மற்றும் பால்கேன்களை சுத்திகரிக்கும் அலகுகள் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்குதல்.

உ) 23 சரக துணைப் பதிவாளர் (பால்பதம்) அலுவலகங்களுக்கு ரூ.13.80 இலட்சம் செலவில், புதிய கணினி மற்றும் தொலை அச்சு நகல் (Fax) இயந்திரங்களை நிறுவி கணினிமயமாக்குதல்.

ஊ) ஆணையர் அலுவலகத்தில் ரூ.17.00 இலட்சம் மதிப்பில் அனைத்துப் பிரிவுகளுக்கும் பணி நிலையம் (Work Station) ஏற்படுத்துதல்.

எ) பல்வேறு பால் பண்ணைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பால் மற்றும் பால் உபபொருட்களின் தரத்தை அந்தந்த இடங்களில் வைத்து பரிசோதனை செய்ய ஏதுவாக ரூ. 15.00 இலட்சம் மதிப்பீட்டில் நடமாடும் பரிசோதனை ஊர்தி வாங்குதல்.

ஏ) ரூ.4.40 இலட்சம் மதிப்பீட்டில் ஆணையர் அலுவலகத்தில் சிறப்பு மராமத்து பணிகளை மேற்கொள்ளுதல்.

ஐ) ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆணையர் அலுவலகத்தின் சுற்றுச்சுவர் கட்டுதல்.

ஒ) ரூ.0.30 இலட்சம் மதிப்பீட்டில் மாதவரம் பால்பண்ணையில் குடியிருப்பு பகுதியின் உபயோகத்திற்காக மின்மோட்டார் நிறுவுதல்.

திருவண்ணாமலை பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தொழிற்சாலை

திருவண்ணாமலையில், நாளொன்றிற்கு 2 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுள்ள பால் பண்ணை மற்றும் 20 டன்

2010 மே 4]

பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலையை ரூ.6,018.03 இலட்சம் (நபார்டு வங்கிக் கடன் ரூ.5,693.15 இலட்சம் மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.324.88 இலட்சம்) மதிப்பீட்டில் நிறுவ அரசு அனுமதி அளித்துள்ளது. இதில், நிலத்தின் மதிப்பு, கட்டடம் கட்டுதல், இயந்திரங்களை கொள்முதல் செய்தல் ஆகியவை உள்ளடங்கும். அரசு இதுவரை ரூ.2,503 லட்சம் அனுமதித்து அதில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.1,897 இலட்சம் தேசிய பால் வள வாரியத்திற்கு வழங்கப்பட்டு உள்ளது.

கிராமப்புற பெண்களுக்கு ஒருங்கிணைந்த பால்பண்ணைகள் உருவாக்குதல்

தமிழகத்தில் பால் உற்பத்தியைப் பெருக்கவும், பால் உற்பத்தியாளர்களின் வருமானத்தை அதிகரிக்கவும் "பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் பால்பண்ணைத் திட்டம்" செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 200 கிராமங்களிலுள்ள சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.22 கோடி செலவில் பத்தாயிரம் கலப்பின கறவை மாடுகள் இரண்டு கட்டமாக வழங்கப்படவுள்ளன. இத்திட்டத்தில், முதல் கட்டமாக, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக பிற மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் விரிவுபடுத்தப்பட உள்ளது.

மத்திய அரசுத் திட்டங்கள்

1. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள்

(அ) தாது உப்புக் கலவை

அதிகபட்ச பால் உற்பத்தியை பெருக்கவும், இனவிருத்தித் தன்மையை அதிகரிக்கவும், கால்நடைகளின் ஆரோக்கியத்தை பாதுகாக்கவும் தாது உப்புக் கலவை கறவை மாடுகளுக்கு கொடுக்கப்படல் வேண்டும். சிறிய பலவீனம் கூட, இனப்பெருக்கம், சுகாதாரம் மற்றும் பால் உற்பத்தி சம்மந்தப்பட்ட பிரச்சினைகளை ஏற்படுத்தும். எனவே, தாது உப்புக்கலவையின் தன்மையைப்பற்றி விளம்பரம் செய்யும் வகையில் ஒரு உறுப்பினருக்கு ஒரு கிலோ கிராம் தாது உப்புக்கலவை வீதம் நாளது தேதிவரை 2.77 இலட்சம் பால் கறவை செய்யும் உறுப்பினர்களுக்கு 50 சதவீத மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டு உள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 4

(ஆ) கால்நடை சுகாதாரம் மற்றும் நடமாடும் கால்நடை அலகுகள்

தொற்றுநோய், கால்நடைகளின் ஒட்டுநோய் ஆகியவற்றை அறவே நீக்குவது மிகவும் முக்கியமானது. "வருமுன் காப்போம்" என்னும் பழமொழிக்கு ஏற்ப, முழுநேர கால்நடை மருத்துவ சேவை அலகு, அவசர கால சிகிச்சை அலகு மற்றும் கால்நடை முகாம்கள் நடத்துவதன்மூலம் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி செய்யப்பட்டு உள்ளது. அவசர சிகிச்சை தவிர இதர நோய்களுக்கு இலவச அடிப்படையில் முறையான உள்ளீட்டு அலகுகள் மற்றும் கால்நடை முகாம்கள் நடத்துவதன்மூலம் மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மேலும், கால்நடை பராமரிப்பினை வலுப்படுத்தும் பொருட்டு ரூ.315 இலட்சம் மதிப்பீட்டில் 70 புதிய நடமாடும் கால்நடை அலகுகள் உருவாக்கப்பட்டு உள்ளன. 40 முதல் 50 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ஒரு கால்நடை மருத்துவர் வீதம் நியமனம் செய்யப்பட்டு விவசாயிகளின் வீட்டிற்கே உரிய நேரத்தில் நேரிடையாகச் சென்று கால்நடைகளுக்கு மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது.

(இ) கணினியுடன் கூடிய தானியங்கி பால் கொள்முதல் நிலையம்

தானியங்கி பால் கொள்முதல் நிலையத்தில், மின்னணு பால் எடைக் கருவி, மின்னணு பால் பரிசோதனைக் கருவி மற்றும் பால் கொள்முதல் செய்த விவரங்கள் தயாரிக்கும் கருவி ஆகியவை உள்ளன. உறுப்பினர் விபரங்களை மின்னணு தட்டச்சுப் பலகை மூலம் தானியங்கி பால் கொள்முதல் நிலையத்துடன் இணைக்கப்பட்டு உள்ள கணினியில் பதிவுகள் செய்யப்படுகின்றன. இதன்மூலம் தொடக்க கூட்டுறவு சங்கத்தின் அனைத்து விவரங்களும் மற்றும் வரவு-செலவு கணக்குகளும் கணினியில் பதிவு செய்யப்படுகின்றன. இந்த நிலையம் மூலம் பாலில் உள்ள கொழுப்பு மற்றும் இதர சத்துகளின் அளவு தானியங்கி முறையில் சோதனையிடப்படுவதால் உற்பத்தியாளர்களுக்கு தரம் உறுதி செய்யப்படுகிறது. சங்கங்களின் வேலைப்பளு குறைகிறது. இதுவரை, 243 கணினியுடன் கூடிய பால் கொள்முதல் நிலையங்கள் தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களில் நிறுவப்பட்டுள்ளன.

(ஈ) பால் கறவை இயந்திரம்

கறவையாளர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும், சுகாதாரமற்ற முறையில் பால் கையாளப்படுவதைத் தவிர்க்கவும்.

2010 மே 4]

பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சுத்தமான முறையில் கைபடாமல் பால் கறக்கும் பொருட்டு பால் கறவை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வசதிகளை செய்து கொடுப்பதன்மூலம் பால் கூட்டுறவுச் சங்கங்களில் குறைந்த அளவு நுண்ணுயிர் அடங்கிய தூய பாலினை முழுமையாகக் கறவை செய்ய இயலும். இவ்வியந்திரம் நிறுவுவதால், தூய பால் உற்பத்தி செய்வதுடன் முழுவதுமாக பாலை கறத்தல், குறைவான மனிதவளம், மடிநோய் தவிர்த்தல், கலப்படத்தை தவிர்த்தல், நேரத்தை மிச்சப்படுத்துதல், போன்ற பயன்களும் கிடைக்கின்றன. இதுவரை, 183 பால் கறவை இயந்திரங்கள் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

(உ) எருமைக்கன்று வளர்ப்புத் திட்டம்

கால்நடை கணக்கெடுப்பின்படி, எருமையினம் குறைந்துகொண்டு வருகிறது. இத்திட்டம், கால்நடை வளர்ப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் செயல்முறைப் பயிற்சி மற்றும் தீவனத்தின் அவசியத்தையும் உணர்த்துகிறது. இவ்வாறு தீவிரமான முறையில் கன்றுகள் வளர்க்கப்பட்டால் வருமானம் பெருகும். செறிவூட்டப்பட்ட கால்நடை தீவனங்கள் போதுமான அளவு விவசாயிகளுக்கு கிடைக்காததால் கால்நடை உற்பத்தியை முழு அளவில் அடைய முடியாத நிலை ஏற்படுகிறது. கால்நடைகள் கன்றுகளாக இருக்கும் போது சிறந்த கால்நடை வளர்ப்பு முறைகளைப் பின்பற்றி வளர்க்கப்பட்டால் அதன் வாழ்நாள் முழுவதும் முழு உற்பத்தியை எதிர்பார்க்க முடியும். எனவே, எருமையினம் அழிவதைத் தடுக்கவும், நிலைப்படுத்தவும், எருமையினம் வளர்ப்போருக்கு எருமைக்கன்று வளர்ந்து முதல் கன்று ஈனும் வரை உதவி செய்வது அவசியம் எனக் கருதப்பட்டது. மேலும், மோசமான தட்பவெப்ப நிலையிலும்கூட எருமையினம் செறிவூட்டம் இல்லாத தீவனத்தை அதிக கொழுப்பு வாய்ந்த பாலாக மாற்றித் தரவல்லது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. நமது நாட்டில், உலக அளவில் தரம் வாய்ந்த முர்ரா இனமானது நாள் ஒன்றுக்கு 25 லிட்டர் பால் கறக்கும் தன்மையுடையது. முர்ரா இன எருமைகளைப் பிரபலப்படுத்துவது விவசாயிகளுக்கு அதிக வருமானத்தை உறுதி செய்யும். இத்திட்டத்தின்கீழ் 2,015 கறவை இன எருமைக் கன்றுகள் 24 மாவட்டங்களில் வளர்க்கப்பட்டு தேவையான கால்நடை பராமரிப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட கால்நடைத் தீவனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

[2010 மே 4

(ஊ) தாது உப்புக்கலவை அலகுகள்

கால்நடைகளின்மூலம் பெறப்படும் பாலின் தன்மை, கால்நடைத் தீவனங்களில் அடங்கியுள்ள தாது கலவையைப் பொறுத்தே அமைகிறது. பால் கறக்கும் கால்நடைகளுக்கு, கால்சியம், பாஸ்பரஸ், மெக்னீசியம், சோடியம், பொட்டாசியம், குளோரின் மற்றும் சல்பர் போன்ற தாது உப்புக்கள் மிகவும் தேவையானதாகும். வளர்ந்துவரும் கால்நடைகளுக்கு கால்சியமும் பாஸ்பரசும் குறிப்பிட்ட அளவில் தேவைப்படுகிறது. சில தாது உப்புக்கள் குறைந்த அளவில் தேவைப்படுகிறது. அவை மிகக் குறைந்த அல்லது நுண் தாது உப்புக்கள் என அழைக்கப்படுகின்றன. இவ்வகை நுண்ணுப்புக்களின் அளவுகள் குறைவாக தேவைப்பட்டாலும், சரியான முறையில் முழு வளர்ச்சியைப் பெருக்குவதற்கும் அதன் வம்சாவழியின் தரத்தைப் பெருக்குவதற்கும் கால்நடைத் தீவனங்களில் சரியான பங்கு சேர்க்கப்படுதல் வேண்டும். தாது உப்புக்களின் அளவு குறைக்கப்படுவதால் கால்நடைகளின் இன விருத்தி, ஆரோக்கியம் மற்றும் பால் உற்பத்தியின் அளவு ஆகியவை குறைய வாய்ப்புகள் உள்ளன.

பால் உற்பத்தியைப் பெருக்கவும், கால்நடைத் தீவனத்தை வழங்கி கன்று ஈனும் இடைக்கால அளவை குறைக்கவும் தாது உப்புக் கலவை மிகவும் அவசியம். இதற்காக ஈரோடு, திருநெல்வேலி, விழுப்புரம் மற்றும் திருச்சி ஆகிய 4 இடங்களில் தாது உப்புக்கலவை இயந்திரங்கள் நிறுவப்பட்டு உள்ளன. இதுவரையில், 277 மெட்ரிக் டன் தாது உப்புக்கலவை பால் ஊற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(எ) மதுரையில் சிறிய அளவிலான பால் மற்றும் பால் உபபொருட்கள் பரிசோதனை நிலையம் நிறுவுதல்

முறையான ஆய்வுகள் செய்யவும், பால்பண்ணைகள், விற்பனை நிலையங்கள் போன்றவற்றில் பால் மாதிரிகளை சேகரித்து அவற்றின் தரத்தை பரிசோதிக்கவும், சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள தரத்தின் அளவுகளை உறுதிப்படுத்தும் வகையில் பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டில் சிறப்புத் தகுதிகளைப் பெற்ற பணியாளர்களுடன் கூடிய பால் மற்றும் பால் உபபொருட்கள் பரிசோதனை நிலையம் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மதுரையில் நிறுவப்பட உள்ளது.

2010 மே 4]

(ஏ) திறன் மேம்பாடு

2009-2010 ஆம் ஆண்டில், பால்பண்ணையில் ஏற்படும் சவால்களை சந்திக்கும் வகையில், தொழில்நுட்பத் திறமை மற்றும் அறிவை மேம்படுத்த இணையம் மற்றும் ஒன்றியங்களைச் சேர்ந்த 282 தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

(ஐ) கல்விச் சுற்றுலா

2009-2010 ஆம் ஆண்டில், பால்வளத்தொழில் தொடர்பான அறிவினை மேம்படுத்தும் வகையில், 685 பால் உற்பத்தியாளர்கள் கல்விச் சுற்றுலா சென்று வந்துள்ளனர்.

(ஒ) பசுந்தீவன அரைவை இயந்திரம்

பால்கறவை மாடுகளின் பராமரிப்பு மற்றும் பால் உற்பத்தியினை பெருக்குவதில் பசும்புல் தீவனத்தின் பங்கு முக்கியமானது. கால்நடைகளின் ஆரோக்கியத்தை பேணிக்காக்க விகிதச்சாரா அளவிலான பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனம் (2/3 மற்றும் 1/3 பங்கு) மிகவும் முக்கியமானதாகும். பசுந்தீவனத்தை சிறு சிறு துண்டுகளாக்காமல் முழுமையான அளவில் கறவை பசுமாடுகளுக்கு வழங்கும்போது அவை அவற்றில் உள்ள இலைகள் மற்றும் மெல்லிய தண்டுகளை மட்டும் உண்டு கனமான அடித்தண்டுகளை சாப்பிடாமல் விட்டுவிடும் நிலை ஏற்படுகிறது. இதன்மூலம், கால்நடைத் தீவனம் வீணாகும் நிலை ஏற்படுகிறது. புல்வெட்டும் கருவிமூலம் பசுந்தீவனத்தையும், உலர் தீவனத்தையும் விகிதாசார அடிப்படையில் கலந்து கால்நடைகளுக்கு வழங்கலாம். இதன்மூலம் உணவு வழங்கும் நேரம் குறைக்கப்பட்டும், தீவனங்களின் சேதாரத்தை குறைக்கும் நிலையில் ஒரு லிட்டர் பாலுக்கு ஏற்படும் கால்நடை தீவனத்திற்கான செலவும் குறையும். இதுவரையில், பால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு 125 பசுந்தீவன அரைவை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2. தீவிர பால் பெருக்குத் திட்டம்

மாவட்ட அளவில் பால் உற்பத்தியைப் பெருக்குதல், பால் விற்பனையை உயர்த்துதல், பால் விற்பனைக்கும் பால் பதப்படுத்துவதற்கும் தேவையான உட்கட்டமைப்புகளை விரிவாக்குதல், இடு பொருட்கள் வழங்கப்படுவதை அதிகரித்தல்

[2010 மே 4

மற்றும் மனித வளத்தை மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும். இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் நிதி உதவி 100 சதவிகிதம் மானியமாகும். இத்திட்டத்தின் காலஅளவு ஐந்து ஆண்டுகள் ஆகும்.

இத்திட்டத்தின்கீழ் சிவகங்கை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களுக்கு ரூ.2,025.61 இலட்சம் நிதியுதவி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில், ரூ.1,085.51 இலட்சம் விடுவிக்கப்பட்டு மீதி ரூ.940.10 இலட்சம் வரவேண்டிய நிலுவை உள்ளது.

இத்திட்டத்தினை செயல்படுத்துவதன்மூலம், 8 வருவாய் மாவட்டங்களில் 861 செயல்படும் சங்கங்களில் உள்ள 2.42 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன் அடைந்து உள்ளனர். மேற்குறிப்பிட்ட ஒன்றியங்களில் 124 புதிய பால் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டும் 74 செயலிழந்த சங்கங்களை செயல்பட வைத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2009-10 ஆம் ஆண்டில், புதுக்கோட்டை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தில் இத்திட்டத்தை செயல்படுத்த ரூ.299.65 இலட்சங்கள் மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

தரமான தூய பால் உற்பத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

இத்திட்டத்தின் குறிக்கோள், 100 சதவிகித மானியத்தில், கிராமப்புற விவசாயிகளுக்கு தூய பால் உற்பத்தி குறித்து பயிற்சி அளித்தல், பால் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான எவர்சில்வர் பாத்திரங்கள், நுண்மத்தடை திரவங்கள் (Antiseptic) வழங்குதல், ஒன்றியங்கள் மற்றும் குளிரூட்டும் நிலையங்களில் உள்ள பரிசோதனைக் கூடங்களை மேம்படுத்துதல், பாலின் முதன்மைத் தரத்தை அதிகரிக்க தேவைப்படும் மொத்த பால் குளிர்விப்பான்களை சங்கத்தில் நிறுவுதல் ஆகியவை ஆகும். இத்திட்டத்தின் கால அளவு இரண்டு முதல் நான்கு ஆண்டுகள் ஆகும்.

இத்திட்டத்தின் வாயிலாக, பால் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் நுண்மத்தடை திரவம் வழங்குதல், பரிசோதனைக் கூடத்தை நவீனப்படுத்தல் மற்றும்

2010 மே 4]

பால் குளிர்விப்பான்களை நிறுவுதல் ஆகிய பணிகளுக்கு நிதி பயன்படுத்தப்படுகின்றது. மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுவதற்கு மட்டும் மத்திய அரசு 75 சதவீதம் மானியம் வழங்குகின்றது. மீதமுள்ள 25 சதவீதம் செலவினத்தை பயனாளி ஒன்றியங்கள் ஏற்றுக்கொள்ளும்.

இத்திட்டத்தினை வேலூர், விழுப்புரம், திருச்சி, தருமபுரி, சேலம், ஈரோடு, நீலகிரி, காஞ்சிபுரம்-திருவள்ளூர், மதுரை மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் ரூ.1351.38 இலட்சம் செலவில் செயல்படுத்த, மைய அரசு அனுமதி அளித்துள்ளது.

இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீட்டில், மத்திய அரசின் பங்கு ரூ.1102.45 இலட்சம் மற்றும் ஒன்றியங்களின் பங்கு ரூ.248.93 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசு ரூ.1014.04 இலட்சங்களை விடுவித்துள்ளது. மீதித் தொகையான ரூ.88.41 இலட்சம் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. 2009-2010 ஆம் ஆண்டில், கோயம்புத்தூர் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தில் இத்திட்டத்தை செயல்படுத்த ரூ.488.721 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மகளிர் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம்

மத்திய அரசின் பெண்கள் மேம்பாட்டுத் துறையின் மூலம் கிராமப்புற நலிவடைந்த தாழ்த்தப்பட்ட / பிற்படுத்தப்பட்ட சுய உதவி குழுக்களின் பெண்களின் முன்னேற்றத்திற்காக மகளிர் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசால் ரூ.649.464 இலட்சத்திற்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டு, இதில் 90 சதவீத பங்கான, ரூ.584.518 இலட்சம் மத்திய அரசு மானியமாகவும், மீதமுள்ள 10 சதவீத பங்கான ரூ.64.946 இலட்சம் நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தின் பங்கு என்ற விகிதத்திலும் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம், தமிழகத்தில் 15 மாவட்டங்களை உள்ளடக்கிய சேலம், ஈரோடு, தருமபுரி, வேலூர், விழுப்புரம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய 7 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது.

[2010 மே 4

மத்திய அரசு, இதுவரை ரூ.520.865 இலட்சம் அரசு மானியமாக முதல் மற்றும் இரண்டாம் தவணையாக விடுவித்து பயன்படுத்தப்பட்டு உள்ளது. மீதமுள்ள மூன்றாம் தவணைத் தொகை ரூ.158.680 இலட்சத்தில், மத்திய அரசு ரூ.95.27 இலட்சத்தை விடுவித்துள்ளது. ரூ.63.413 இலட்சம் இந்திய அரசிடமிருந்து விடுவிக்கப்பட வேண்டியுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 145 மகளிர் கூட்டுறவுச் சங்கங்களில், 10,150 மகளிர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, நாளொன்றிற்கு சராசரியாக 26,134 லிட்டர் பால் சேகரிக்கப்படுகிறது.

புனரமைப்புத் திட்டம்

மத்திய-மாநில அரசுகளின் கூட்டுத் திட்டம் "கூட்டுறவுகளுக்கு உதவுதல்"

மத்திய அரசு "கூட்டுறவுகளுக்கு உதவுதல்" என்னும் திட்டம், நட்டத்தில் இயங்கும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் இணையங்களை சீரமைப்பதற்காக செயல்படுத்துகிறது.

இத்திட்டத்தின்கீழ், நட்டத்தில் செயல்படும் ஒன்றியங்கள் மற்றும் இணையம் ஆகியவற்றின் நட்டத்தை சரிசெய்து கொள்வதற்காக, மத்திய மற்றும் மாநில அரசுகள் சரிசமமாக 50 விழுக்காடு தொகையை மானியமாக வழங்கும்.

ஈரோடு, விழுப்புரம் மற்றும் தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் ஒன்றியங்களைச் சார்ந்த மாவட்டங்களில் இத்திட்டம் மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் முறையே ஈரோடு ஒன்றியத்திற்கு ரூ.9 கோடியும், விழுப்புரம் ஒன்றியத்திற்கு ரூ.4 கோடியும், தருமபுரி ஒன்றியத்திற்கு ரூ.9.70 கோடியும் வழங்கப்பட்டு உள்ளது.

கூட்டுறவுகளுக்கு உதவுதல் திட்டத்தின்கீழ் திண்டுக்கல் ஒன்றியத்திற்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

களவெளி ஜெர்சி கலப்பினப் பசு செயல்திறன் பதிவுத் திட்டம்

களவெளி ஜெர்சி கலப்பினப் பசு செயல்திறன் திட்டம், மத்திய அரசின் நிதி உதவியுடன், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி

2010 மே 4]

முகமையின் மூலமாக இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், முதல் கட்டமாக, வேலூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஏழு மாவட்ட ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பால் உற்பத்தியாளர்களிடையே உள்ள பசுக்களில், உயர்ந்த அளவாக நாளொன்றுக்கு 12 லிட்டருக்கும் அதிகமாக பால் கறக்கும் கறவைகளில், நோயற்ற கறவைகளை தேர்வு செய்து, உயர்ரக காளை விந்தினைக் கொண்டு கருத்தரிக்கச் செய்து, கன்று ஈன்றவுடன், அதன் பால் அளவைக் கணக்கிட்டு, அதிக பால் கறந்த கறவைகளை எதிர்வரும் காலங்களில் கலப்பின காளைக் கன்றுகள் உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் தாய்ப் பசுக்களாகத் தேர்வு செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், 1,801 கறவைகளின் பால் அளவு பதிவு செய்து முடிக்கப்பட்டு உள்ளது. இக்கறவைகளின்மூலம் பிறந்த 297 காளைக்கன்றுகளில் 61 காளைக்கன்றுகள் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் மூலம் வளர்க்கப்பட்டு வருகின்றன.

வம்சாவழி சோதனைத் திட்டம்

வம்சாவழிச் சோதனைத் திட்டம், மத்திய அரசின் நிதி உதவியுடன் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் மூலமாக இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், மரபுத் திறன் மிகுந்த காளைகளைத் தேர்ந்தெடுப்பதற்காக, ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 20 முதல் 25 கலப்பின பொலிகாளைகளின் விந்தை சேகரித்து, செயற்கை முறை கருவூட்டல் மூலம் வேலூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்ட ஒன்றியங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளை கருத்தரிக்கச் செய்து, அக்கறவைகளுக்குப் பிறந்த கிடாரிகளின், முதல் ஈற்று பால் அளவு, கொழுப்புச் சத்து, இதர சத்து மற்றும் முதல் கன்று ஈனுகையில் அவற்றின் வயது போன்ற பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த குணநலன்களை ஆராய்ந்து, அவற்றின் அடிப்படையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட கலப்பின காளைகளில், அதிக பால் கொடுக்கும் மரபுத்திறனுடைய பொலிகாளைகள் இனப்பெருக்கத்திற்காக தேர்வு செய்யப்பட்டு, இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆறாவது தொகுப்பு காளைகளின் வம்சாவழிச் சோதனை நடைமுறை

ஆய்வில் உள்ளது. தேசிய பால்வள வாரியத்தின் மூலம் வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் வம்சாவழிச் சோதனைத் திட்டத்தினை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கால்நடை காப்பீட்டுத் திட்டம்

கால்நடை காப்பீட்டுத் திட்டம், மத்திய அரசின் நிதி உதவியுடன், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் மூலமாக, இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரையில், தருமபுரி, திருச்சி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, வேலூர், கடலூர், ஈரோடு, நாமக்கல், சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திண்டுக்கல், மதுரை, கிருட்டிணகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில், மொத்தம் 2,40,941 பசு மற்றும் எருமை கறவையினங்கள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன. மொத்த காப்பீட்டுக் கட்டணத்தில் 50% மானியமாகவும், மீதமுள்ள 50% பயனாளிகளாலும் வழங்கப்படும்.

2010–2011 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

புதிய சங்கங்கள் உருவாக்குதல்/செயலிழந்த சங்கங்களைச் செயல்படுத்துதல்

150 புதிய சங்கங்கள் பதிவு செய்யவும், 100 செயலிழந்த சங்கங்களை புத்துயிரூட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பால் கொள்முதல்

பிரதம கூட்டுறவு சங்கங்களிலிருந்து நாளொன்றிற்கு 28.00 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

பால் விற்பனை

சென்னை மாநகரில், நாளொன்றுக்கு 10.40 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யவும், மாவட்ட ஒன்றியங்களில் நாளொன்றுக்கு 10.00 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பால் பதப்படுத்தும் திறனை அதிகரித்தல்

2010-2011 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்ட அளவில் பால்வளம் கையாள, பால் பதப்படுத்துதல், பால் பைகளில் அடைத்தல் ஆகிய

2010 மே 4]

பணிகளுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட உள்ளன.

மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல்

2010-2011 ஆம் ஆண்டில், உயர்த்தப்பட்ட அளவில் பால்வளம் கையாள, 20 மொத்த பால் குளிர்விப்பான்களை அமைத்து அதன் மூலம் கூடுதலாக நாளொன்றிற்கு 87,000 லிட்டர் பாலை குளிர்விக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பகுதி–2 திட்டம், 2010–2011

மொத்த மதிப்பீடு ரூ.172 இலட்சத்தில் கீழே குறிப்பிட்ட பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன. இதில், ரூ.47.00 இலட்சம் நிறுவனங்களின் பங்கு ஆகும்.

அ) 400 சங்கங்களுக்கு, 2,000 அருவுறா எஃகினாலான கேன்கள் ரூ.2,700 வீதம் ரூ.54 இலட்சம் செலவில் வழங்கப்படவுள்ளன. இதில், ரூ.27.00 இலட்சம் அரசு மானியமாகும். மீதமுள்ள தொகை ரூ.27.00 இலட்சம் நிறுவனங்கள் பங்காகும்.

ஆ) 150 சங்கங்களுக்கு, ரூ.7,200 மதிப்புள்ள 150 பால் சேகரிக்கும் உபகரணங்கள் ரூ.10.80 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படவுள்ளன.

இ) 200 மின்னணு பால் எடை போடும் இயந்திரங்கள், ஒன்று ரூ.20,000 வீதம் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் 200 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படவுள்ளன. இதில், ரூ.20.00 இலட்சம் அரசு மானியமாகும். மீதமுள்ள தொகை ரூ.20.00 இலட்சம் நிறுவனங்களின் பங்காகும்.

ஈ) 150 சங்கங்களுக்கு, ரூ.35,000 மதிப்புள்ள 150 மின்னணு பால் பரிசோதனைக் கருவிகள் ரூ.52.50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படவுள்ளன.

உ) கணினி மூலம் மின்னணு ஆளுமையை ஆணையர் அலுவலகத்தில் உருவாக்குவதற்காக ரூ.6.80 இலட்சம் செலவில் கணினிகள் மற்றும் அச்சு இயந்திரங்கள் வாங்கப்பட உள்ளன.

ஊ) ரூ.6.30 இலட்சம் மதிப்பீட்டில் மாதவரம் பால்பண்ணையில் உள்ள பழத்தோட்டத்தைச் சுற்றி முள்கம்பி வேலி அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

[2010 மே 4

எ) ரூ.1.60 இலட்சம் மதிப்பீட்டில் பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் அலுவலகத்தின் முன்புறம் மற்றும் பக்கவாட்டில் மின்சக்தியை சேகரிக்கும் வகையில், சூரிய ஒளி விளக்குகளை அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

மைய அரசின் தேசிய வளர்ச்சிக் கழகம், சிறப்புத் திட்டமான தேசிய விவசாய வளர்ச்சித் திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம், 100 சதவிகிதம் மானிய அடிப்படையில் செயல்படுத்தப்படுவதால், 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண் துறை மற்றும் அதைச் சார்ந்த துறைகள் 4 சதவிகித நிலையான வளர்ச்சியை அடைவதே இதன் முக்கிய குறிக்கோளாகும். மத்திய அரசு, 2009-2010 ஆம் ஆண்டிற்கு 100 சதவிகித மானியத்தின் அடிப்படையில் கீழ்க்கண்ட திட்டங்களுக்காக ரூ.689.00 இலட்சம் அளித்துள்ளது.

அ) எருமைக்கன்று வளர்ப்புத் திட்டம் ரூ.156.40 இலட்ச மதிப்பீட்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஆ) ரூ.192.00 இலட்சம் மதிப்பீட்டில் கூட்டுறவு அமைப்புகளின்கீழ் உள்ள பால் கறவை மாடுகளுக்கு கால்நடைகளின் ஆரோக்கியத்தை பேணிக்காக்க 50 நடமாடும் கால்நடை அலகுகளை நிறுவ திட்டமிடப்பட்டு உள்ளது.

இ) ஒருங்கிணைந்த பால் பண்ணை கிராமங்களுக்கு 100 தானியங்கி பால் கறவை இயந்திரங்களை ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஈ) ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் பால் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 500 விவசாயிகளுக்கு கல்விச் சுற்றுலா செல்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

உ) பால்வளத் துறையின் கட்டுப்பாட்டில், திருச்சி மற்றும் சேலம் நகரங்களில் ரூ.40 இலட்சம் செலவில் இரண்டு பால் மற்றும் பால் உப பொருட்கள் தரக்கட்டுப்பாடு ஆய்வகங்கள் நிறுவப்படவுள்ளன.

2010 மே 4]

ஊ) ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில், 400 தொழில் நுட்பப் பணியாளர்களின் திறமையை வளர்க்க பயிற்சி அளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது

எ) ஒருங்கிணைந்த பால் பண்ணைகளுக்கு ரூ.70 இலட்சம் செலவில் 100 பசுந்தீவன அரவை இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

ஏ) எரிசக்தி திறன் சேமிப்புத் திட்டம், ரூ.75.60 இலட்சம் மதிப்பீட்டில் 7 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் செயல்படுத்தப்படும்.

ஐ) ஒருங்கிணைந்த பால் பண்ணை கிராமங்களில் உள்ள 500 ஏக்கர் நிலத்தில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் பசுந்தீவனம் வளர்க்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 4

அட்டவணை—I

முக்கியத் தகவல்கள்

பால் பண்ணை தொடர்பான சில முக்கிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

வ. எண்	விவரம்	31-03-2010 ஆம் தேதி நிலவரப்படி
1	மொத்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்	8,246
2	2009–2010–ல் புதிதாக பதிவு செய்யப்பட்ட சங்கங்கள்	206
3	தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் (இலட்சத்தில்)	22.29
4	பால் வழங்கும் உறுப்பினர்கள் (இலட்சத்தில்)	4.15
5	சங்கங்களில் பால் கொள்முதல் (நாளொன்றிற்கு) (இலட்சம் லிட்டரில்)	26.34
6	மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை	17
7	மாநில அளவிலான இணையம்	1
8	பதிவு செய்யப்பட்ட தனியார் பால் பண்ணைகளின் எண்ணிக்கை	32
9	ஒன்றியங்களில் பால் கொள்முதல் (நாளொன்றிற்கு) (இலட்சம் லிட்டரில்)	22.37
10	சென்னை மாநகரில் பால் விற்பனை (நாளொன்றிற்கு) (இலட்சம் லிட்டரில்)	10.32
11	மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் பால் விற்பனை (நாளொன்றிற்கு) (இலட்சம் லிட்டரில்)	9.83
12	ஒன்றியங்களில் பால் பதப்படுத்தும் பால் பண்ணைகளின் எண்ணிக்கை	15

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 4]

வ. எண்	விவரம்	31-03-2010 ஆம் தேதி நிலவரப்படி
13	இணையத்தின் பால் பண்ணைகள் எண்ணிக்கை	4
14	மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றிற்கு) (இலட்சம் லிட்டரில்)	19.42
15	இணையத்திலுள்ள பால் பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றிற்கு) (இலட்சம் லிட்டரில்)	10.00
16	பதிவு செய்யப்பட்ட தனியார் பால் பண்ணைகளின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) (இலட்சம் லிட்டரில்)	47.64
17	செயல்படும் குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை	36
18	குளிரூட்டும் நிலையங்களின் கையாளும் திறன் (நாளொன்றிற்கு) (இலட்சம் லிட்டரில்)	13.55
19	செயல்படும் மொத்த பால் குளிர்விப்பான்கள்	166
20	மொத்த பால் குளிர்விப்பான் கையாளும் திறன் (நாளொன்றுக்கு) (இலட்சம் லிட்டரில்)	6.56
21	கிராம பால் கொள்முதல் வழித்தடங்கள்	528
22	ஒன்றியங்களில் பால் விநியோக வழித்தடங்கள்	230
23	சென்னை மாநகர பால் விநியோக வழித்தடங்கள்	107
24	பால் பவுடர் பண்ணைகள்	4
25	பால் பவுடர் உற்பத்தித்திறன் (நாளொன்றிற்கு) (மெட்ரிக்டன்)	70
26	சென்னையில் உள்ள தானியங்கி பால் விநியோக நிலையங்களின் எண்ணிக்கை	157

அட்டவணை—II

மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் கொள்முதல் (31-3-2010 அன்று)

(நாளொன்றுக்கு ஆயிரம் லிட்டரில்)

வ. எண்	ஒன்றியத்தின் பெயர்	2009—2010
1	காஞ்சிபுரம்— திருவள்ளூர்	48
2	விழுப்புரம்	158
3	வேலூர்	280
4	தருமபுரி	149
5	சேலம்	437
6	ஈரோடு	228
7	கோயம்புத்தூர்	227
8	நீலகிரி	21
9	மதுரை	208
10	திண்டுக்கல்	45
11	திருச்சி	282
12	தஞ்சாவூர்	30
13	புதுக்கோட்டை	13
14	சிவகங்கை	30
15	விருதுநகர்	11
16	திருநெல்வேலி	64
17	கன்னியாகுமரி	6
	மொத்தம்	2,237

2010 மே 4]

அட்டவணை—III

மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் சென்னை மாநகர பால் விற்பனை (31-3-2010 அன்று)

(நாளொன்றுக்கு ஆயிரம் லிட்டரில்)

வ. எண்	ஒன்றியத்தின் பெயர்	2009–2010
1	காஞ்சிபுரம்—திருவள்ளூர்	1
2	விழுப்புரம்	33
3	வேலூர்	74
4	தருமபுரி	17
5	சேலம்	153
6	ஈரோடு	70
7	கோயம்புத்தூர்	168
8	நீலகிரி	18
9	மதுரை	193
10	திண்டுக்கல்	13
11	திருச்சி	108
12	தஞ்சாவூர்	15
13	புதுக்கோட்டை	7
14	சிவகங்கை	33
15	விருதுநகர்	5
16	திருநெல்வேலி	57
17	கன்னியாகுமரி	18
	மொத்தம்	983
18	சென்னை மாநகர பால் விற்பனை	1,032
	ஆக மொத்தம்	2,015

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை, 1-1-1987 முதல் செயல்பட்டு வருகிறது. தொடக்க நிலையில், 9,389 பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில், 17 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் மாநில அளவில், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் ஆகியவற்றின் சட்டபூர்வத் தணிக்கை இத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்துறையில், 307 பணியாளர்கள் கூட்டுறவுத் துறை, நிதித் துறை மற்றும் கருவூலம் மற்றும் கணக்குத் துறையிலிருந்து வேற்றுப்பணியிலும், மேலும் 28 இத்துறைப் பணியாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள்.

அரசு வருவாய்

2009-2010 ஆம் ஆண்டில் தணிக்கைக் கட்டண கேட்பு ரூ.102.98 இலட்சத்தில் ரூ.100.00 இலட்சம் வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், இவ்வாண்டில் அடிப்படை விதிக்கட்டண கேட்பு ரூ.115.75 இலட்சத்தில் ரூ.113.01 இலட்சம் வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS